Visit **Dwarkadheeshvastu.com** For

FREE **Vastu Consultancy, Music, Epics, Devotional Videos**
Educational Books, Educational Videos, Wallpapers

****

All Music is also available in **CD** format. **CD Cover** can also be print with your Firm Name

****

We also provide this whole Music and Data in **PENDRIVE** and **EXTERNAL HARD DISK.**

Contact : Ankit Mishra (+91-8010381364, dwarkadheeshvastu@gmail.com)

Shrimad-Bhagwat-Geeta

Tatva-Vivechni

(Tamil)

ஸ்ரீ ஹரி:

கீதா-தத்வவிவேசனீ உரையுடன் கூடிய ஸ்ரீமத்பகவத்கீதையின்

பொருளடக்கம்

வரிசை எண்	பொருள்	பக்கம் எண்
அ)	பணிவான வேண்டுகோள்	13–35
ஆ)	கீதையின் பெருமை	35
இ)	ஸ்ரீ ஜயதயால் கோயந்தகா அவர்களின் அறிவுரை	36–37
ஈ)	பாராயண விதி	38–39

முதல் அத்யாயம்

1.	அத்யாயத்தின் பெயரும், சுருக்கமும்	41–42
2.	முதல் அத்யாயத்தின் பொருத்தம்; கீதையின் தொடக்கத்தில் மஹாபாரதப் போரின் ஆரம்ப வரலாறு	43–44
3.	த்ருதராஷ்டிரரின் கேள்வி	45
4.	தர்மக்ஷேத்ரமான குருக்ஷேத்ரம் பற்றிய குறிப்பு; துர்யோதனன் த்ரோணாசாரியரிடம் செல்லுதல்	45–46
5.	துர்யோதனன் பாண்டவப் படையை வர்ணித்தல்	47–48
6.	யுயுதானன், விராடன், த்ருபதன் இவர்களின் அறிமுகம்	49–50
7.	த்ருஷ்டகேது, சேகிதானன், காசிராஜன், புருஜித், குந்திபோஜன், சைப்யன், யுதாமன்யு, அபிமன்யு, த்ரௌபதி குமாரர்கள் இவர்களின் அறிமுகம்	50–51
8.	மஹாரதிகளின் இலக்கணம்; த்ரோணர், பீஷ்மர், கர்ணன், க்ருபர், அச்வத்தாமா, விகர்ணன், பூரிச்ரவஸ் என்ற கௌரவப் படை பிரமுகர்களின் அறிமுகம்	51–56
9.	துர்யோதனன் தன் தரப்பைச் சார்ந்த வீரர்களைப் புகழ்தல். பீஷ்மர் சங்கம் முழக்குதல்	56–59
10.	அர்ஜுனனுடைய பெரும் ரதம், கொடி, ஹ்ருஷீகேசன் பெயர் விளக்கம்; பாஞ்சஜந்யம், தேவதத்தம் என்னும் சங்கங்கள், சிகண்டியின் அறிமுகம்; இருதரப்புவீரர்களும் சங்கம் முழக்குதல்	59–64
11.	அர்ஜுனன் கேட்டுக் கொண்டவாறு பகவான் இருபடைகளுக்குமிடையே ரதத்தைக் கொண்டு நிறுத்துதல்; அர்ஜுனன் எல்லோரையும் பார்வையிடுதல் ('குடாகேச:' விளக்கம் 67)	64–67
12.	இருபுறமும் தம் உற்றார்-உறவினரைப் பார்த்து, அவர்கள் மரணமுறுவார்களே எனக் கருதி அர்ஜுனன் வருந்துதல்; குலநாசம், தர்மநாசம், வர்ணக்கலப்பு முதலிய தீய விளைவுகளைக் கூறுதல் – வில்லையும், அம்பையும் துறந்து அர்ஜுனன் உட்கார்தல்	68–83
	(ஆததாயியின் இலக்கணங்கள்; அவனைக் கொல்வது தவறன்று என்ற விளக்கம் 75)	
13.	அத்யாய முடிவுரை விளக்கம்	83–84

இரண்டாவது அத்யாயம்

14.	அத்யாயத்தின் பெயர்; சுருக்கம்; பொருத்தம்	85–87
15.	பகவான் ஊக்குவித்த பிறகும் அர்ஜுனன் போருக்கு முனையாதது. செய்வதறியாது பகவானிடம் தக்க வழிகாட்ட வேண்டுதல், யுத்தம் செய்யேன் என்று உட்கார்தல்	88–97
	(சீடனின் இலக்கணங்கள் 95–96)	
16.	பகவான் ஆத்மதத்வத்தை நிரூபித்தல்; ஸாங்க்யயோக நோக்கில் அர்ஜுனனைப் போர் செய்ய ஊக்கமளித்தல்	98–119
17.	கூடித்திய தர்மத்தைக் கருதியும் தர்மயுத்தம் செய்யத்தான் வேண்டும் என்று அர்ஜுனனை பகவான் ஊக்குவித்தல்	119–125

வரிசை எண்	பொருள்	பக்கம் எண்
18.	காம்ய கர்மத்தின் தாழ்வையும், நிஷ்காம கர்மத்தின் சிறப்பையும் கூறி, அர்ஜுனனைக் கர்மயோகம் செய்யத் தூண்டுதல்	125–145
19.	யோகம், யோகி – சொற்கள் பல பொருட்களில் உபயோகப்படுதல்	146–147
20.	அர்ஜுனன் வேண்டிக் கொண்டபடி பகவான் ஸ்திதப்ரக்ஞனுடைய இலக்கணங்கள்; ஸ்திதப்ரக்ஞனின் நிலையை அடைவதற்கான ஸாதனங்கள்; ஸ்திதப்ரக்ஞ நிலையின் பயன் கூறுதல்	147–175

மூன்றாவது அத்யாயம்

21.	அத்யாயத்தின் பெயர்; சுருக்கம்; பொருத்தம்	177–178
22.	அர்ஜுனனின் வேண்டுகோளுக்கிணங்க ஸாங்க்ய, கர்மயோக நிஷ்டைகள் பற்றிய விவரங்களைக் கூறி, பகவான் அர்ஜுனனுக்குக் கடமையைச் செய் என்று ஆணையிடுதல்	179–191
23.	யக்ஞத்திற்கான கர்மத்தின் பெருமை; யக்ஞ சக்ர வர்ணனை; கடமையைச் செய்ய வலியுறுத்தல்	192–203
24.	ஞானி கர்மம் செய்ய வேண்டியதில்லையாயினும் உலகத்திற்கு வழிகாட்டியாக ஞானியும், பகவானுமே கடமைகளைச் செய்கிறார்கள் என்பது; அஞ்ஞானி, ஞானி இவர்களின் இலக்கணங்கள்; விருப்பு–வெறுப்பற்றுக் கடமையாற்றத் தூண்டுதல்; ராஜா திலீபன், ஸிபி, ப்ரஹ்லாதன் இவர்களின் உதாரணங்கள்.	203–234
25.	அர்ஜுனன் கேள்வி; காமத்தின் வடிவத்தையும், இருப்பிடத்தையும் கூறி, அதை ஒழிக்க பகவான் கட்டளையிடுதல்	234–248
	(காமம் ஜீவனை மோஹிக்கச் செய்வது பற்றி விளக்க சேதனஸிம்மனின் கதை 240–241)	
	(மஹாபாஹு – சொல் விளக்கம் 248)	

நான்காவது அத்யாயம்

26.	அத்யாயத்தின் பெயர்; சுருக்கம்; பொருத்தம்	249–250
27.	பகவான் கர்மயோகம் பற்றிய முன்னோர் வழிமுறையைச் சுட்டிக்காட்டுதல்.	250–254
28.	அர்ஜுனனுடைய கேள்விக்கு விடையாக பகவான் அவதார ரஹஸ்யம், நால்வர்ண வகுப்பு; கர்மரஹஸ்யம்; பெரியோர் பெருமை இவை பற்றிக் கூறுதல்.	254–283
29.	பற்பல யக்ஞங்களின் வர்ணனை	284–302
30.	ஞானத்தின் பெருமை	302–318
	(ஞானம் என்ற சொல் கீதையில் பல பொருட்களில் பயன்படுதல் 315–316)	

ஐந்தாவது அத்யாயம்

31.	அத்யாயத்தின் பெயர்; சுருக்கம்; பொருத்தம்	319–320
32.	அர்ஜுனன் கேள்வி; பகவான் கூறும் ஸாங்க்ய யோக, கர்மயோக நிர்ணயம்; ஸாங்க்ய யோகி, கர்மயோகி இவர்களின் இலக்கணங்கள்; பெருமை	320–335
33.	ஸாங்க்ய யோகம்; ஸாங்க்யயோகியின் நிலையை நிரூபித்தல்	336–355
	(நரன் என்ற சொல் விளக்கம் 351)	
	(ரிஷி என்ற சொல் விளக்கம் 355)	
34.	இரண்டு நிஷ்டைகளிலுமுள்ள ஸாதகர்களுக்குரிய த்யான யோக வர்ணனை; பகவான் யக்ஞங்களை ஏற்பவர், ஸர்வலோக மஹேசுவரன், நண்பர் என்றறிதலின் பயன் பரமசாந்தி என்று கூறுதல்	356–363

ஆறாவது அத்யாயம்

35.	அத்யாயத்தின் பெயர்; சுருக்கம்; பொருத்தம்	365–366

வரிசை எண்	பொருள்	பக்கம் எண்
36.	கர்மயோகியின் பெருமை; யோகாரூடனின் இலக்கணம்; தன்னைத் தானே உயர்த்திக் கொள்ளத் தூண்டுதல்; பகவானை அடைந்தவனின் இலக்கணம். . .	367–378
37.	த்யானயோகம், அதன் பயன் இவற்றின் வர்ணனை	379–419
	(சிவபெருமான், பகவான் விஷ்ணு, ஸ்ரீராமன், ஸ்ரீக்ருஷ்ணன் இவர்களின் த்யானம் 387–388)	
	(ப்ரம்மா கன்றுகளையும், சிறுவர்களையும் மறைத்தல். கோபிகைகளின் பெருமை யசோதைக்குக் கண்ணன் தன் வாயில் விசுவரூபம் காட்டுதல்; ஸ்ரீராமன் காகபுசுண்டிக்குத் தம் வயிற்றில் விசுவரூபம் காட்டுதல் ஆகிய கதைகள் 410–414)	
38.	அர்ஜுனனின் கேள்விக்கு விடையாக, மனவடக்கம், யோகப்ரஷ்டனின் கதி இவற்றின் வர்ணனை	420–438
39.	யோகியின் பெருமை. யோகி ஆவாய் என்ற ஆணை. உள்ளத்தில் பகவானைப் பூஜிக்கும் யோகியின் மிகச் சிறந்த பெருமை	438–442

ஏழாவது அத்யாயம்

40.	மூன்று ஷட்கங்களின் விளக்கம்; அத்யாயத்தின் பெயர்; சுருக்கம்; பொருத்தம்	443–445
41.	விஞ்ஞானத்துடன் கூடிய ஞானத்தின் பெருமை; பகவத் ஸ்வரூபத்தின் தத்வ ஞானம் கிடைப்பது அரிது என்று விளக்குதல்; பகவானின் அபரா, பரா ப்ரக்ருதிகளின் தன்மை; அவற்றிலிருந்து எல்லா ப்ராணிகளின் உற்பத்தி; அனைத்திற்கும் பகவான் ஆதி காரணம்; பகவானுடைய ஸமக்ர (அனைத்து) உருவ விளக்கம்	445–458
42.	அஸுர இயல்புடைய மனிதரின் நிந்தை; பலதரப்பட்ட பகவத் பக்தர்களைப் புகழ்ந்துரைத்தல்; பிற தெய்வங்களின் உபாஸனை பற்றிய வர்ணனை	458–473
	(பக்த த்ருவன், த்ரௌபதி, உத்தவர், ப்ரஹ்லாதன் ஆகியோரின் கதைச் சுருக்கம் 460–463)	
43.	பகவானின் ப்ரபாவம் அறியாமையின் காரணம்; முழுமையான ஸ்வரூபத்தை உணர்ந்தவரின் பெருமை	473–482

எட்டாவது அத்யாயம்

44.	அத்யாயத்தின் பெயர்; சுருக்கம்; பொருத்தம்	483–484
45.	அர்ஜுனன் கேள்வி; பகவான் – ப்ரம்மம், அத்யாத்மம், கர்மம், அதிபூதம், அதிதைவம், அதியக்ஞம் என்பன பற்றிக் கூறுதல். மரணத்தறுவாயில் உள்ள நிலையின் பெருமையை நிரூபித்தல்	484–493
46.	ஸகுண–நிராகார ஸ்வரூபத்தை த்யானிக்கும் யோகிகளுக்கும், நிர்குண–நிராகார ப்ரம்மத்தை உபாஸிப்பவர்களுக்கும் மரணத்தறுவாயில் ஏற்படும் கதியின் வர்ணனை	494–503
47.	பகவத் பக்தியின் பெருமை; கல்ப வர்ணனை; எல்லா உபாஸகர்களும் சென்றடையும் பரமதாமத்தை அடைவிக்கும் பக்தி வடிவான ஸாதனங்கள் பற்றிய வர்ணனை	504–515
48.	சுக்ல–க்ருஷ்ண மார்க்கங்களின் வர்ணனை	515–526

ஒன்பதாவது அத்யாயம்

49.	அத்யாயத்தின் பெயர்; சுருக்கம்; பொருத்தம்	527–528
50.	விஞ்ஞானத்துடன் கூடிய ஞானம்; பகவானுடைய ஐசுவர்யத்தின் பெருமை; உலகம் தோன்றியதன் வர்ணனை	528–541
51.	பகவானுடைய ப்ரபாவத்தை அறியாமையால், அவரைப் புறக்கணிப்பவர்களை இகழ்ந்து கூறுதல்; பக்தியின் பெருமை; ஸமக்ர ஸ்வரூபம், அதன் பெருமை பற்றிய வர்ணனை; ஸ்வர்கத்தை விரும்புபவரின் கதி	541–557

வரிசை எண்	பொருள்	பக்கம் எண்
	(ஸ்ரீக்ருஷ்ணனின் பெருமை பற்றி ப்ரம்மா தேவர்களுக்குச் செய்த உபதேசம் 542–543)	
52	அநன்ய பக்தியின் பெருமை	557–596
	(விதுரர், குசேலர், த்ரௌபதி, கஜேந்த்ரன், சபரி, ரந்திதேவர் இவர்களின் கதைச் சுருக்கங்கள் 565–574)	
	(பில்வமங்களர் (லீலா சுகர்) சரிதம் 581–585)	
	(குஹன், யாக பத்னிகள், ஸமாதி வைசியன், ஸஞ்ஜயன் இவர்களின் கதைச் சுருக்கங்கள் 586–589)	
	(ஸுதீக்ஷ்ணர், ராஜரிஷி அம்பரீஷர் ஆகியோரின் சரிதம் 591–593)	
	பத்தாவது அத்யாயம்	
53.	அத்யாயத்தின் பெயர்; சுருக்கம்; பொருத்தம்	597
54.	பகவானுடைய விபூதி, யோகசக்தி இவற்றின் விளக்கம். அவற்றை அறிவதன் பயன்	598–609
	(ஸப்தரிஷிகள், தேவரிஷிகள் இவர்களின் இலக்கணங்கள்; பெயர்கள்; செயல்கள் 603)	
	(மரீசி, அங்கிரஸ், அத்ரி, புலஸ்த்யர், புலஹர், க்ரது, வஸிஷ்டர் ஆகியோரின் கதைகள்; ஸத்ஸங்கத்தின் பெருமை 604–607)	
	(யுகம், மந்வந்தரம், கல்பம் இவற்றின் காலக்கணக்கு 607–608)	
55.	பக்தியின் விளக்கம்; பக்தியின் ப்ரபாவம்	610–614
56.	அர்ஜுனன் பகவானைத் துதித்தல், விபூதி யோகசக்திகளை விளக்க வேண்டுதல்.	615–624
	(ரிஷிகள் பற்றிய விவரங்கள்; தேவரிஷிகளின் இலக்கணம்; பீஷ்மர், துர்யோதனனுக்கு ஸ்ரீக்ருஷ்ணனின் ப்ரபாவத்தைக் கூறுதல் 616)	
	(தேவரிஷி நாரதர், அஸிதர், தேவலர் – கதைகள் 617–618)	
	(வேதவ்யாஸரின் பெருமை; ஸ்ரீக்ருஷ்ணனின் பெருமை பற்றிப் பல மஹரிஷிகள் மனம் விட்டுக் கூறியவை 619–620)	
57.	பகவானது விபூதிகள் – யோக சக்தி பற்றிய வர்ணனை	625–654
	(ருத்ரர், வஸுக்கள் முதலிய விபூதிகள் பற்றிய சுருக்கம்; வாயு புராணத்திற்கிணங்கு வெவ்வேறு அதிகாரி வர்க்கத்தின் குறிப்பு; நாற்பத்தொன்பது மருத்துக்களின் பெயர்கள் 625–627)	
	(பன்னிரண்டு ஆதித்யர்களின் பெயர்கள்; மருத்கணங்களின் உற்பத்தி 627–628)	
	(பதினொரு ருத்ரர்களின் பெயர்கள்; குபேரன் கதைச் சுருக்கம் 629–630)	
	(எட்டு வஸுக்களின் பெயர்கள்; ப்ருஹஸ்பதி, ஸ்கந்தர் பற்றிய சுருக்கமான அறிமுகம் 630–631)	
	(மஹரிஷி இலக்கணம்; முக்யமான பத்து மஹரிஷிகளின் பெயர்கள். ப்ருகுவின் கதை ஜபயக்ஞத்தின் பெருமை 632–633)	
	(அரச மரத்தின் பெருமை 633–634)	
	(கந்தர்வர்கள் பற்றிய குறிப்பு. சித்ரரதன் பெருமை. ஸித்தர்களின் நிலை; கபிலர் கதை 634–635)	
	(ஆதிசேஷனின் பெருமை 637)	
	(ஏழு பித்ருக்களின் பெயர்; யமராஜன் பற்றிய குறிப்பு; பக்தன் கீர்த்திமானின் கதை 637–638)	
	(கங்கையின் பெருமை; தோற்றம் 640–641)	
	(ஸமாஸம் (தொகை, தொடர்) பற்றிய சுருக்கமான அறிமுகம்; த்வந்த்வ ஸமாஸத்தின் (உம்மைத்தொகையின்) தனிச்சிறப்பு 642)	
	(கால ஸ்வரூபத்தைப் பற்றிய ஆராய்ச்சி 643)	

வரிசை எண்	பொருள்	பக்கம் எண்
	(ப்ருஹத் ஸாமம் பற்றிய குறிப்பு; காயத்ரியின் பெருமை 645–646)	
	(கேநோபநிஷத நிகழ்ச்சி – யக்ஷ உருவம் எடுத்த ப்ரம்மத்தினால் தேவர்கள் அடைந்த அவமானம் 647–648)	
	(அர்ஜுனனின் பெருமை; சுக்ராசார்யர் பற்றிய சுருக்கமான அறிமுகம் 649–650)	
	பதினொன்றாவது அத்யாயம்	
58.	அத்யாயத்தின் பெயர்; சுருக்கம்; பொருத்தம்	655–656
59.	விசுவரூப தர்சனம் காட்டும்படி அர்ஜுனனின் வேண்டுகோள்	656–660
60.	பகவான் விசுவரூபத்தை விளக்குதல்; தெய்விகப் பார்வை அளித்தல்	661–665
	(அச்வினிகுமாரர்கள் பற்றிய குறிப்பு 662)	
61.	ஸஞ்ஜயன் விசுவரூபத்தை வர்ணித்தல்	666–671
62.	அர்ஜுனன் கண்ட விசுவரூபம்; துதி	671–688
	(ஸாத்யர்கள், விச்வேதேவர்கள் பற்றிய குறிப்பு 679–680)	
63.	பகவான் தம் ப்ரபாவம் கூறுதல்; அர்ஜுனனைப் போர் புரிய உற்சாகமூட்டுதல்.	688–693
	(ஜயத்ரதன் பற்றிய குறிப்பு 692)	
	(அர்ஜுனன் கிரீடீ என்ற பெயர் பெற்றமை 693)	
64.	அர்ஜுனன் பகவானைத் துதித்தல்; நான்கு கைகளுடன் தர்சனம் அளிக்க வேண்டுகோள்	694–708
65.	பகவான் விசுவரூபத்தின் பெருமையைக் கூறுதல்; நான்கு கைகள் கூடிய ஸ்வரூப தர்சனம்; ஸ்ரீக்ருஷ்ணனுடைய இயல்பான தோற்றம்	708–711
66.	பகவானின் நான்கு கை ஸ்வரூபத்தின் பெருமை; அநன்ய பக்தியின் விளக்கம்.	712–718
	பன்னிரண்டாவது அத்யாயம்	
67.	அத்யாயத்தின் பெயர்; சுருக்கம்; பொருத்தம்	719–720
68.	அர்ஜுனன் கேள்வி; உருவமுள்ள–உருவமற்ற ஸ்வரூபத்தை உபாஸிப்பவர் பெருமை; பகவானை அடையப் பல ஸாதனைகள்	720–737
	(கோபிகைகள் பகவானை உள்ளத்தில் நிலைநிறுத்திய பெருமை 722)	
69.	பகவானை அடைந்துவிட்ட பக்தர்களின் இலக்கணம்	737–749
70.	மிகச்சிறந்த பகவத் பக்தர்களான ஸாதகர்களின் நிலை	749–750
	பதின்மூன்றாவது அத்யாயம்	
71.	அத்யாயத்தின் பெயர்; சுருக்கம்; பொருத்தம்	751–752
72.	க்ஷேத்ரம்; க்ஷேத்ரக்ஞன்; ஞானம்–க்ஞேயம் (அறியத்தக்கது) பற்றிய வர்ணனை.	752–774
73.	ஞானம், ப்ரக்ருதி, புருஷர்கள் – பற்றிய வர்ணனை	775–795
	(ஸாதன சதுஷ்டயம் – நான்குவிதமான ஸாதனைகள், ஷட் ஸம்பத்தி – ஸாதகனுக்கு இன்றியமையாத ஆறு விசேஷ குணங்கள் இவை பற்றிய விளக்கம் 782–784)	
	பதினான்காவது அத்யாயம்	
74.	அத்யாயத்தின் பெயர்; சுருக்கம்; பொருத்தம்	797–798
75.	ஞானத்தின் பெருமை; ப்ரக்ருதி–புருஷன் மூலம் படைப்பு – இதன் வர்ணனை.	798–801
76.	ஸத்வ, ரஜஸ், தமோ குணங்களை வெவ்வேறு வகைகளில் வர்ணித்தல்	802–816
	(குணப்பெருக்கத்தின் பத்துக் காரணங்கள் 807)	

வரிசை எண்	பொருள்	பக்கம் எண்
77.	குணாதீத நிலையடைவதற்கான உபாயம்; அவர் இலக்கணம், பகவான் பெருமை இவற்றின் வர்ணனை	816–828

பதினைந்தாவது அத்யாயம்

78.	அத்யாயத்தின் பெயர்; சுருக்கம்; பொருத்தம்	829–830
79.	ஸம்ஸார மரத்தின் வர்ணனை; பகவானை அடையச் செய்யும் ஸாதனை; பரமதாமம் என்பது பற்றிய குறிப்பு	830–839
80.	ஜீவாத்மா பற்றிய குறிப்பு	839–844
81.	பகவானின் ப்ரபாவம்; ஸ்வரூபம், க்ஷரன், அக்ஷரன், புருஷோத்தம விளக்கம்	844–854

பதினாறாவது அத்யாயம்

82.	அத்யாயத்தின் பெயர்; சுருக்கம்; பொருத்தம்	855–856
83.	தெய்வ அஸுர ஸம்பத் விளக்கம்	856–863
84.	அஸுர ஸம்பத்துடையவர்களின் இலக்கணங்கள்; அவர்களின் வீழ்ச்சி	863–875
85.	காமம், க்ரோதம், லோபம் என்கிற நரக வாயிலைத் தவிர்க்க உபதேசம்; சாஸ்த்ர முறைப்படி கடமைகளை ஆற்றத் தூண்டுதல்	876–879

பதினேழாவது அத்யாயம்

86.	அத்யாயத்தின் பெயர்; சுருக்கம்; பொருத்தம்	881–882
87.	ச்ரத்தைக்கும், அறநூல் நெறிக்கும் விரோதமாகத் தவம் செய்பவர்கள் பற்றிய குறிப்பு	882–888
88.	முக்குணங்களுக்கு ஏற்ப உணவு, யக்ஞம், தவம், தானம் இவற்றின் வேற்றுமை	889–906
89.	'ஓம் தத் ஸத்' என்பதன் விளக்கம்	906–911

பதினெட்டாவது அத்யாயம்

90.	அத்யாயத்தின் பெயர்; சுருக்கம்; பொருத்தம்	913–915
91.	அர்ஜுனன் கேள்வி; பகவான் கூறும் த்யாக தத்வம் நிர்ணயம்	915–928
92.	ஸாங்க்ய ஸித்தாந்தத்தின்படி கர்மத்தின் காரணங்கள் கூறுதல்	928–936
93.	முக்குணங்களுக்கேற்ப ஞானம், கர்மம், கர்த்தா, புத்தி, த்ருதி, ஸுகம் இவற்றின் வேற்றுமை	936–962
	(தர்மத்தின் பெருமை, தயை, அஹிம்ஸை இவற்றின் விளக்கம் 950–953)	
94.	வர்ண தர்மங்களும், அவற்றின் பயன்களும்	962–982
	(விசுவாமித்ரர், வஸிஷ்டர் இவர்களின் கதைகள் 965–966)	
	(பாட்டனார் பீஷ்மரின் கதை 967–971)	
	(துலாதார வைசியரின் கதை 973)	
	(வர்ணாசிரம தர்மங்களைப் பின்பற்றுவதன் அவசியம் 974–977)	
95.	ஞான நிஷ்டை விளக்கம்	982–990
96.	பக்தியுடன் கூடிய கர்மயோக வர்ணனை; ஶரணாகதியின் பெருமை; பகவான் தம்மைத் தஞ்சமடையுமாறு அர்ஜுனனுக்குக் கட்டளையிடுதல்	990–1008
	(அர்ஜுனனின் பெருமை; பகவானுக்கு அவரிடமுள்ள பேரன்பு 1004–1007)	
97.	ஸ்ரீமத்பகவத்கீதையின் பெருமை	1008–1022
98.	ஸ்ரீமத்பகவத்கீதை மங்கல ஆரத்தி	1023

* * * * *

பணிவான வேண்டுகோள்

த்வமேவ மாதா ச பிதா த்வமேவ த்வமேவ ப₃ந்து₄ஶ்ச ஸகா₂ த்வமேவ ।
த்வமேவ வித்₃யா த்₃ரவிணம் த்வமேவ த்வமேவ ஸர்வம் மம தே₃வதே₃வ ॥

ஆருயிர் அன்னையும் நீயே, அருமைத் தந்தையும் நீயே,
உறவும் சுற்றமும் நீயே, உற்ற நண்பனும் நீயே,
கற்கும் கல்வியும் நீயே, சேர்க்கும் செல்வமும் நீயே,
அனைத்தும் ஆன என்றன், ஆதிதேவனும் நீயே!

வஸு²தே₃வஸு²தம் தே₃வம் கம்ஸசாணூரமர்த₃நம் ।
தே₃வகீபரமாநந்த₃ம் க்ருஷ்ணம் வந்தே₃ ஜக₃த்₃கு₃ரும் ॥

வஸு²தேவன் மைந்தனும், கம்ஸனையும், சாணூரனையும் உருக்குலைத்துக் கொன்றவரும், தேவகிக்குப் பரமானந்தம் அளிப்பவரும், ஜகத்குருவானவரும், தெய்வமானவருமான ஸ்ரீக்ருஷ்ணனை வணங்குகிறேன்.

கீதையின் பெருமை

ஸ்ரீமத்பகவத்கீதை ஸாக்ஷாத் ஸ்ரீபகவானுடைய திருவாய்மொழி. அதன் பெருமை எல்லையற்றது; அளவற்றது. அதை உள்ளபடி வர்ணிக்க யாராலும் முடியாது. ஆதிசேஷன், சிவபெருமான், மஹாகணபதி ஆகியவரும்கூட இதன் பெருமையை முழுமையாகக் கூற முடியாது என்றால் மனிதர்களைப் பற்றிச் சொல்வானேன்? இதிஹாஸங்களிலும், புராணங்களிலும் ஆங்காங்கு இதன் பெருமையைப் பாடியிருக்கிறார்கள். இப்படி இதுவரை கூறியுள்ள பெருமை அவ்வளவையும் ஒன்று திரட்டினால் கூட அதன் பெருமை இவ்வளவுதான் என்று கூற முடியாமலிருக்க, அதன் பெருமையை முழுமையாகக் கூறிவிட முடியும் என்பது எங்ஙனம் பொருந்தும்? ஒரு விஷயத்தை நன்கு விவரிக்க முடியுமானால் அதை அளவற்றது என்று எங்ஙனம் கூற முடியும்? அளவுக்குள் அடங்கியதாகத்தானே இருக்க முடியும்?

கீதை உயர்ந்த ரஹஸ்யங்கள்‡ பொதிந்த நூல். இதில் எல்லா வேதங்களின் ஸாரமும் திரட்டிக் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதன் அமைப்பு எளிமையும், அழகும் பொருந்தியது. சிறிது காலப் பயிற்சியினாலேயே யாரும் இதை எளிதாகப் புரிந்து கொள்ளலாம். ஆனால், இதன் கருத்துக்கள் ஆழம் மிக்கவை; உட்பொருள் பொதிந்தவை. ஒருவர் வாழ்க்கை முழுவதும் இடைவிடாது இதைப் படித்துக் கொண்டே இருந்தாலும் இதை முழுமையாகக் கற்றுத் தேர்ந்துவிட்டதாக நினைக்க முடியாது. நாள்தோறும் புதிய புதிய கருத்துக்கள் தோன்றிக் கொண்டே இருக்கும். அதனால் கீதை என்றும் புதிதாகவே திகழ்கிறது. இவ்விதம் ஒரே முனைப்புடன் நம்பிக்கையும், பக்தியும் கொண்டு ஆராய்ந்து கொண்டே இருந்தால், இதனுடைய ஒவ்வொரு சொல்லிலும் நுண்ணிய ரஹஸ்யங்கள் பொங்கி வருவதை நேரிடையாக அனுபவிக்கலாம். பகவானுடைய கல்யாண குணங்கள், ப்ரபாவங்கள்,

---

‡ உயர்ந்த ஆன்மிகத் தத்வங்களை 'ரஹஸ்யம்' என்று குறிப்பிடுவார்கள். தகுதியும், நாட்டமும் உடையவர்களுக்குத் தனிமையில் உபதேசிக்கப்பட வேண்டியவை நிறைந்த பெரு நூல் என்பதால் ரஹஸ்யம், குஹ்யம் என்று விவரிக்கப்படுகின்றது.

ஸ்வரூபம், தத்வம், ரஹஸ்யம், உபாஸனை, கர்மம், ஞானம் இவற்றைப் பற்றியெல்லாம் கீதாசாஸ்த்ரத்தில் கூறப்பட்டுள்ளவாறு வேறு எந்த ஒரு நூலிலும் ஒருங்கே காண்பது அரிது. பகவத்கீதைக்கு இணையான நூலே கிடையாது. நன்னெறி புகட்டாத ஒரு சொல் கூட கீதையில் கிடையாது. கீதையில் எந்த ஒரு சொல்லும் வெறும் சுவையூட்டுவதற்காக மட்டுமே அமைந்ததில்லை. இதில் வருகின்ற அத்தனை விஷயங்களும் உண்மையானவை. ஸத்ய ஸ்வரூபனான பகவானுடைய பேச்சிலே சுவையைக் கற்பனை செய்து பார்ப்பது அவரது சொல்லை அவமதிப்பது போலாகும்.

கீதையில் எல்லா சாஸ்த்ரங்களும் அடங்கும். எல்லா சாஸ்த்ரங்களுமே கண்ட முடிவுகளின் ஸாரம் இதில் நிறைந்திருக்கின்றது. எல்லா சாஸ்த்ரங்களுக்கும் இது கருவூலம் என்று சொன்னால் அது மிகையன்று. கீதா சாஸ்த்ரத்தை ஒருவன் தெளிவாகப் புரிந்து கொண்டுவிட்டால் பிற சாஸ்த்ரங்களில் உள்ள தத்வங்களின் அறிவு, தானே வந்து அமையும். அதற்காகத் தனியாக உழைக்க வேண்டியதில்லை.

மஹாபாரதத்தில், 'ஸர்வஶாஸ்த்ரமயீ கீ₃தா' (பீ₄ஷ்ம. 43/2) என்று கூறப்படுகிறது. இவ்வளவு சொன்னாலும் போதாது. எல்லா சாஸ்த்ரங்களும் வேதங்களினின்றும் தோன்றியவை. வேதங்கள் ப்ரம்மதேவனின் திருமுகத்திலிருந்து வெளிவந்தவை. அந்த ப்ரம்மதேவன் பகவானுடைய உந்தித்தாமரையில் உதித்தவன். இவ்வாறு சாஸ்த்ரங்களுக்கும், பகவானுக்கும் இடையே மிக அதிகமான இடைவெளி உள்ளது. ஆனால் கீதையோ ஸாக்ஷாத் பகவானுடைய முகத்தாமரையிலிருந்து நேராக வெளி வந்தது. ஆகவே மற்ற சாஸ்த்ரங்களைவிடச் சிறந்தது என்று கூறுவதில் மிகை ஒன்றுமில்லை. பகவான் வேதவ்யாஸரே கூறுகிறார்—

கீ₃தா ஸு-கீ₃தா கர்தவ்யா கிமன்யை: ஶாஸ்த்ரஸங்க்₃ரஹை: ।
யா ஸ்வயம் பத்₃மநாபா₄ஸ்ய முக₂பத்₃மாத்₃விநி:ஸ்ருதா ॥
(மஹா. பீ₄ஷ்ம. 43/1)

கீதையை நல்ல முறையில் கேட்க வேண்டும், பாட வேண்டும், படிக்க வேண்டும், சுற்பிக்க வேண்டும், மனனம் செய்ய வேண்டும், மனதில் தரிக்க வேண்டும். கீதை பகவான் பத்மநாபனின் முகத்தாமரையிலிருந்து வெளிவந்தது. எனவே, கீதையைச் செவ்வனே ஓதுதல் வேண்டும். பிற சாஸ்த்ர நூல்கள் எதற்கு?

இந்த ச்லோகத்தில் 'பத்மநாப:' என்ற சொல் வருகிறது. எல்லா சாஸ்த்ரங்களுக்கும் ஆணிவேரான வேதங்களைத் தம் முகத்திலிருந்து வெளியிட்ட அந்த ப்ரம்மதேவரே பகவானின் உந்தித்தாமரையிலிருந்து உதித்தவர். அந்த பகவானுடைய திருவாயிலிருந்து வெளி வந்தது கீதை என்பது கருத்து.

கீதை கங்கையைக் காட்டிலும் சிறந்தது. கங்கையில் நீராடுவதற்குப் பயன் முக்தி என்று சாஸ்த்ரங்கள் கூறுகின்றன. கங்கையில் நீராடுபவன் வேண்டுமானால் முக்தி அடையலாம். அவன் பிறரைக் கரையேற்ற முடியாது. ஆனால் கீதை வடிவான கங்கையில் மூழ்கி எழுபவன் தான் மட்டும் முக்தியைப் பெறுவதில்லை. பிறரையும் கரையேற்றும் தகுதி படைத்தவன் ஆகிறான். கங்கை பகவானுடைய திருவடித் தாமரையிலிருந்து பெருகியது. ஆனால் கீதை ஸாக்ஷாத் பகவானுடைய திருமுகத் தாமரையிலிருந்து வெளிவந்தது. கங்கைக்குச் சென்று அதில் நீராடுபவனுக்கு மட்டுமே கங்கை முக்தியை அளிக்கிறது. கீதையோ ஒவ்வொரு வீடாகச் சென்று அங்குள்ளவருக்கு முக்தி மார்க்கத்தை போதிக்கிறது. ஆகவே கீதை கங்கையைக் காட்டிலும் சிறந்தது.

கீதை காயத்ரியை விடச் சிறந்தது. காய்த்ரி ஜபம் செய்தால் மனிதன் முக்தி பெறுவான். அது சரிதான். காயத்ரியை ஜபம் செய்பவன் ஒருவன் மட்டுமே முக்தி பெற முடியும். கீதாபாராயணம் செய்பவன் தானும் கரையேறிப் பிறரையும் கரையேற்றுவானே! முக்தியை அளிக்கும் பகவானே அவனைச் சார்ந்து விடுகிறான் என்றால் அப்புறம் முக்தியைப் பற்றிச்

சொல்வதற்கு என்ன இருக்கிறது? முக்தி அவனுடைய திருவடித் தூசியில் வாழ்ந்து கொண்டிருக்கிறது. அவன் முக்தியெனும் சத்திரத்தைத் திறந்து விடுகிறான்.

கீதை பகவானைவிடப் பெருமை வாய்ந்தது என்று சொல்வோமேயானால் அதுவும் மிகையாகாது. அவரே சொல்கிறார்—

கீதாஶ்ரயேऽஹம் திஷ்டா₂மி கீதா மே சோத்தமம் க்₃ருஹம் ।
கீதாஜ்ஞானமுபாஶ்ரித்ய த்ரீம்ல்லோகாந் பாலயாம்யஹம் ॥

(வராஹபுராணம்)

(கீதையை அண்டி நான் வாழ்கிறேன். கீதைதான் என்னுடைய சிறந்த வீடு. கீதையின் ஞானத்தைக் கைக்கொண்டு நான் மூவுலகங்களையும் காக்கிறேன்.)

இதைத் தவிர கீதையிலேயே பகவான் மனம் விட்டுக் கூறுகிறார்— 'இந்த கீதை என்ற ஆணையை நிறைவேற்றுபவர் ஐயமின்றி முக்தி பெறுவர்' (3/31). இது மட்டுமன்று. 'இதை ஒருவர் கருத்தூன்றிப் படித்தாலே போதும். அவர் செய்யும் ஞான யக்ஞத்தால் நான் வழிபடப்பட்டவனாக ஆவேன்' (18/70) என்கிறார். கீதையை ஊன்றிப் படிப்பதற்கே இவ்வளவு பெருமை உண்டென்றால், அதில் கூறியுள்ளபடி ஒருவர் வாழ ஆரம்பித்துவிட்டால் – இதன் ரஹஸ்யத்தை பக்தர்கள் மனதில் ஊன்றச் செய்துவிட்டால் – அவர்களிடையே விரிவாகப் பரவச் செய்துவிட்டால், அவரைப் பற்றிச் சொல்லவும் வேண்டுமா? அவர் என் ஆருயிர் அன்பர் ஆவார் என்று பறைசாற்றுகிறாரே! பகவானுடைய உயிரைவிட ப்ரியமானவர் என்று சொல்வதுகூட மிகையாகாது. பகவான் இப்படிப்பட்ட பக்தர்களுக்குக் கட்டுப்பட்டு விடுகிறார்.

தங்களுடைய ஸித்தாந்தங்களை (கொள்கைகளை)க் கடைப்பிடித்து ஒழுகுபவர்களிடம் எவ்வளவு ப்ரியம் நற்குணமுள்ள பெரியோர்களுக்கு இருக்கிறதோ, அவ்வளவு ப்ரியம் தங்கள் உயிர் மீது கூட அவர்களுக்கு இல்லை என்பதை நாம் காண்கிறோம். கீதையோ பகவானுடைய ரஹஸ்யங்கள் பொதிந்த முக்யமான கட்டளை. இதை ஒருவர் ஏற்றுக் கடைப்பிடிக்கிறார் என்றால் அவரை பகவான் தம் உயிரைவிட அதிகமாக நேசிப்பதில் வியப்பென்ன?

கீதை பகவானுடைய மூச்சுக் காற்று. பகவானுடைய இதயம், பகவானுடைய சொல்லாலான வடிவம். ஒருவருடைய உள்ளத்தில் கீதை, சொல்லில் கீதை, செயலில் கீதை, புலன்களிலும், உடலிலும் ஸாக்ஷாத் கீதை என்று இப்படி அழகுற அமைந்து விட்டால், அவர் ஸாக்ஷாத் கீதையின் வடிவினர்தான். அவரை தர்சனம் செய்வது, தொடுவது, அவருடன் உரையாடுவது, அவரை நினைப்பது இவை பிறரைக்கூடத் தூய்மையாக்கிவிடும் என்றால் கீதையின் ஆணையைக் கடைப்பிடிப்பவரைப் பற்றிக் கேட்பானேன்? உண்மையில் கீதைக்கு இணையாக உலகில் யக்ஞத்தையோ, தானத்தையோ, தவத்தையோ, புண்ய தீர்த்தத்தையோ, வ்ரதத்தையோ, அடக்கத்தையோ, உபவாஸம் முதலிய நற்பழக்கங்களையோ சொல்ல முடியாது.

கீதை ஸாக்ஷாத் பகவான் **ஶ்ரீ**க்ருஷ்ணனுடைய முகத்தாமரையிலிருந்து வெளி வந்த திருவாய்மொழியாகும். இதைத் தொகுத்தவர் **ஶ்ரீ**வ்யாஸ பகவான். பகவான் **ஶ்ரீ**க்ருஷ்ணன் தம் உபதேசங்களின் எவ்வளவு பகுதிகளை ச்லோகங்கள் வாயிலாக வெளியிட்டாரோ, அவற்றை உள்ளது உள்ளவாறே **ஶ்ரீ**வ்யாஸர் அப்படியே தம் நூலில் பதித்து விட்டார். பகவான் கூறிய சில வசன உபதேசங்களை ச்லோகங்களாகச் செய்து அதோடு சேர்த்துக் கொண்டு, அர்ஜுனன், ஸஞ்ஜயன், த்ருதராஷ்ட்ரர் இவர்கள் தங்கள் முறையில் கூறிய அனைத்தையும் கூட ச்லோகங்களாகச் செய்து அவற்றையும் சேர்த்துக் கொண்டார். ஆக இந்த எழுநூறு ச்லோகங்களான முழு நூலும் பதினெட்டு அத்யாயங்களாகப் பிரிக்கப்பட்டு மஹாபாரதத்தில் சேர்ந்துள்ளது. இன்று இவ்வுபதேசங்கள் நமக்கு இந்த வடிவில் கிடைத்துள்ளன.

கீதையின் உட்கருத்து

கீதை ஆழம் காண முடியாத ஞானக்கடல். இதற்குள் எல்லையில்லா ஞானக் கருவூலம் நிரம்பி நிற்கிறது. இதன் தத்வத்தைத் தெளிவாகச் சொல்வதற்குத் திக்கெல்லாம் சென்று தம் புலமையினால் வெற்றி பெற்ற அரிய பெரிய வித்வான்கள், ஆராய்ச்சியாளர்கள், மஹாத்மாக்கள் ஆகியவர்கள்கூடத் தங்கள் சொற்களால் இதன் தத்வத்தை விளக்க இயலாமல் போய் விடுகிறது. ஏனெனில் இதன் ரஹஸ்யத்தை முழுமையாக அறிந்தவர் **ஸ்ரீ**க்ருஷ்ணன் ஒருவர்தாம். அவருக்குப் பிறகு இதைத் தொகுத்த வேதவ்யாஸரைச் சொல்லலாம். அடுத்து இதனைச் செவிமடுத்த அர்ஜுனனைச் சொல்லலாம். இத்தகைய ஆழம் காண முடியாத ரஹஸ்யமயமான கீதையின் கருத்தையும், பெருமையையும் என்னைப் போன்றவர் புரிந்து கொள்வது என்பது ஒரு ஸாதாரணப் பறவை எல்லையில்லா ஆகாயத்தைப் பறந்து அளந்துவிட முனைவது போலத்தான்.

கீதை எண்ணிலடங்காக் கருத்துக்கள் கொண்ட ஆழமான கடல். கடலின் ஆழத்தில் மூழ்கி மூழ்கி எழுந்தால் ரத்னங்களைக் கண்டெடுப்பதுபோல கீதையாகிய கடலின் ஆழத்தில் மூழ்கி எழுந்திருப்பதால், ஞான வேட்கை உள்ளவர்களுக்குப் புத்தம் புதியனவும், தனிச்சிறப்பு உள்ளவையுமான கருத்துக்கள் வடிவான ரத்னக் குவியல்கள் கிடைக்கும். ஆகாயத்தில் கருடனும் பறக்கிறது; கொசுவும் பறக்கிறது. அவ்வாறே (கீதையிலிருந்து) எல்லோரும் தங்கள் தங்கள் கருத்துக்களுக்கு ஏற்பச் சில அனுபவங்களைப் பெற்றே வருகிறார்கள்.

ஆகவே ஆராய்ந்து பார்க்கும்போது, அநாதிகாலமாக அஞ்ஞானத்தால் கட்டுண்டு, ஸம்ஸாரக் கடலில் அமிழ்ந்து வரும் ஜீவன் பரமாத்மாவை அடையச் செய்வதுதான் கீதையின் முக்ய நோக்கம் என்று தெரிய வருகிறது. அதற்கான உபாயங்களைக் கீதை கூறுகிறது. அவற்றைக் கடைப்பிடித்துத் தம் உலகியல் கடமைகளை மனிதர் சரிவர ஆற்றிக் கொண்டு, பரமாத்மாவை அடைய முடியும். பரமார்த்த தத்வத்தை நடைமுறையில் கையாளும் அற்புதமான உத்தியை கீதை புகட்டுகிறது. தகுதிக்கேற்றவாறும், திறமைக்கேற்றவாறும் அவரவருக்குரிய இரண்டு நிஷ்டைகளை கீதை எடுத்துக்காட்டுகிறது. அவையாவன: *(1)* ஞான நிஷ்டை அதாவது ஸாங்க்யயோகம், *(2)* யோக நிஷ்டை அதாவது கர்மயோகம் *(3/3)*.

இங்கு ஒரு கேள்வி எழுகிறது. ஸாதாரணமாக எல்லா சாஸ்த்ரங்களிலும் பகவானை அடைவதற்கு *(1)* கர்மம், *(2)* உபாஸனை, *(3)* ஞானம் என்ற மூன்று முக்யமான வழிகள் காட்டப்படுகின்றன. கீதையில் மட்டும் இந்நிலையில் எப்படி இரண்டே நிஷ்டைகள் சொல்லப்படுகின்றன. கீதைக்கு பக்தி ஸித்தாந்தத்தில் மதிப்பு இல்லையா? பெரும்பாலோர் கீதை பக்தியையே சிறப்பாக எடுத்துக் கூறுவதாகக் கொள்கிறார்களே! பகவானும் பக்தியின் பெருமையை ஆங்காங்கு தெளிவாகச் சொல்லியிருக்கிறாரே *(6/47)*. பக்தியின் மூலம் பகவானை அடைவது எளிது என்கிறாரே *(8/14)* என்ற கேள்வி எழுகிறது.

அதற்குப் பதில் இதுதான். சாஸ்த்ரங்களில் கர்மம், ஞானம் என்ற இரண்டைத் தவிர மூன்றாவதாக உபாஸனை என்று சொல்லப்படுகிறதே, அது இந்த இரண்டிற்குள் அடங்கும். பகவானும் தானும் வேறல்ல, ஒன்றே என்ற பாவனையுடன் செய்யும் உபாஸனை ஸாங்க்ய நிஷ்டையில் அடங்கும். ஒருவர் பகவானைத் தமக்கு வேறாக எண்ணிக் கர்ம மார்க்கத்தில் ஈடுபடுகிறாரே, அது யோக நிஷ்டையில் அடங்கும். ஸாங்க்ய நிஷ்டைக்கும், யோக நிஷ்டைக்கும் இதுதான் முக்யமான வேறுபாடு. இவ்வாறே *13/24*ல் த்யானத்தினால் மட்டும் பகவானை அடைந்துவிடலாம் என்று கூறப்பட்டுள்ளது. அந்த த்யானயோகம் பகவானும் தானும் ஒன்று என்ற பாவனையுடன் செய்யப்படுமானால், ஸாங்க்ய நிஷ்டையில் அடங்கும். தான் வேறு பகவான் வேறு என்ற நோக்கில் செய்யப்படுமானால், அது 'யோக நிஷ்டை'யில் உள்ளடங்கியது. கீதை, பகவானை அடைவதற்கு முக்ய ஸாதனமாக பக்தியைக் கூறுகிறது என்று மக்கள் நினைப்பது சரிதான். கீதையில் பக்திக்கு மிக உயர்ந்த ஸ்தானம் கொடுக்கப்பட்டுள்ளது. அநேக இடங்களில் பகவான் அர்ஜுனனை பக்தன் ஆகிவிடுமாறு ஆணையிடுகிறார் *(9/34; 12/8; 18/57,65,66)*. ஆனால் கீதை நிஷ்டைகள் என்று

இரண்டைத்தான் மதிக்கிறது. இவ்விரண்டில் பக்தி என்பது யோக நிஷ்டையில் உள்ளடங்கியது. ஏனெனில் பக்தியில் பகவான் வேறு, பக்தன் வேறு என்ற த்வைத பாவனை உள்ளது. பக்தி, யோக நிஷ்டையில் அடங்கியது என்பது யுக்திக்குப் பொருந்தாத விஷயமன்று. யோக நிஷ்டையில் பக்தி எவ்விதம் அடங்கியுள்ளதென்பது பற்றி மேலே ஆராயப் போகிறோம். நிற்க!

கீதையில் பஜனை-பூஜையால் மட்டுமே அல்லது த்யானத்தினால் மட்டுமே தம்மை அடைந்துவிடலாம் என்று பகவான் கூறுகிறார். அதற்கு என்ன பொருள்? யோக நிஷ்டையை முழுமையாகக் கடைப்பிடித்தால், பகவத் ப்ராப்தி நிச்சயமே. அதன் பகுதிகளுள் ஏதேனும் ஒன்றைக் கடைப்பிடித்தாலும்கூட பகவானை அடைந்துவிடலாம். பகவான் ஜீவர்களுக்கு இவ்வளவு சுலபமாகத் தம்மை ஆக்கியுள்ளது அவரது திருவருளேயாகும்.

மேலும் கீதையில் வரும் ஞானம், கர்மம் என்ற சொற்கள் என்னென்ன பொருள்களில் வருகின்றன என்பதே மிகவும் உட்பொருள் பொதிந்த ஆழமான விஷயம். கீதையில் வரும் கர்மமும், கர்மயோகமும், அதே போன்று ஞானமும், ஞானயோகமும் ஒன்றல்ல. கீதையின்படி சாஸ்த்ரங்களில் விதிக்கப்பட்ட கர்மங்கள் – ஞான நிஷ்டை, யோக நிஷ்டை என்ற இருநோக்குகளிலும் இருக்க முடியும். கர்மங்களுக்கு ஞான நிஷ்டையில் விரோதம் கிடையாது. யோக நிஷ்டையிலோ கர்மங்களைச் சரிவர ஆற்றுவதே சிறந்த ஸாதனம் என ஏற்கப்பட்டுள்ளது (6/3). மாறாகக் கர்மங்களைச் செய்யாமல் கைவிடுவது பகவத் ப்ராப்திக்கு இடைஞ்சல் எனக் கருதப்படுகிறது (3/4). 2/47 முதல் 2/51 வரையிலும், 3/19லும், 4/42லும் அர்ஜுனனை 'யோக நிஷ்டையில் நிலை பெற்றுக் கர்மங்களைச் செய்' என்று ஆணையிடுகிறார். அதுபோல 3/28லும், 5/8,9,13வது ச்லோகங்களிலும் ஸாங்க்ய (அதாவது ஞான) நிஷ்டையில் நிலைபெற்றுக் கர்மங்கள் செய்வது பற்றிக் கூறுகிறார். காம்ய கர்மங்களுக்கு இரண்டு நிஷ்டைகளிலுமே இடம் இல்லை. காம்ய கர்மங்களில் ஈடுபடுபவர்களை பகவான் கீழ்த்தர அறிவுடையோர் எனக் கூறியுள்ளார் (2/42–44,49; 7/20–23; 9/20,21,23,24).

கீதையில் ஞானம் என்ற சொல்லுக்கு ஞானயோகம் என்று மட்டும் பொருள் அன்று. அதன் பயனாக விளையும் தத்வஞானம் என்றும் பொருள். அதுதான் எல்லா ஸாதனைகளுக்கும் பயன். ஞானநிஷ்டைக்கும், யோக நிஷ்டைக்கும் எது பயனோ, அதையும் உண்மை ஞானம் (தத்வஞானம்) என்று கூறுவர். அதுவும் ஞானம் என்ற சொல்லாலே குறிப்பிடப்பட்டுள்ளது. 4/24லும், 4/25ன் பின்பாதியிலும் ஞானயோகம் பற்றிக் கூறுகிறார். 4/36 முதல் 39 வரை ஞானத்தின் பயனான தத்வஞானம் பெறுவது பற்றிக் கூறுகிறார். இவ்விதம் மற்ற இடங்களிலும் ஸந்தர்பத்திற்கேற்றவாறு பொருள் காண வேண்டும்.

இனி ஸாங்க்ய நிஷ்டை என்றால் என்ன? யோக நிஷ்டை என்றால் என்ன? இவற்றினிடையே என்ன வேறுபாடு? இரண்டும் தனித்தனி வழிகளா? ஒன்றையொன்று சார்ந்து நிற்குமா? இந்த நிஷ்டைகளுக்குத் தகுதி பெறுகிறவர் யார் என்பன பற்றிச் சுருக்கமாக ஆராய்வோம்.

ஞான நிஷ்டை (ஸாங்க்யயோகம்), யோக நிஷ்டை (கர்மயோகம்) – இவற்றின் தன்மை

(1) **ஞான நிஷ்டை:** உலகில் உள்ள பொருட்கள் எல்லாம் கானல் நீரைப் போலவும், கனவுகளில் காணப்படுவன போலவும் மாயத் தோற்றங்களே; மாயையின் செயல் வடிவமானவை; முக்குணங்களின் விரிவுகள். அக்குணங்களே அந்தந்த குணங்களில் விரவி இருக்கின்றன. இவ்விதம் அறிந்து கொண்டு மனம், உடல், புலன்களின் மூலம் ஆக்கப் பெறும் எல்லாச் செயல்களிலும் தான் கர்த்தா (செய்பவன்) என்ற அபிமானம் இல்லாது (5/8,9), எங்கும் நிறை பரம்பொருளான ஸத் சித் ஆனந்தமயமான பரமாத்ம ஸ்வரூபத்தில் இரண்டற ஒன்றிநின்று ஸத் சித் ஆனந்தமயனான வாஸுதேவனைத் தவிர வேறொன்றுக்கும் 'இருப்பு'

என்பதே கிடையாது (13/30) என்ற நிலை தான் ஸாங்க்ய நிஷ்டை. ஞானயோகம், கர்மஸந்யாஸம் என்றெல்லாம் இதற்குப் பெயர்.

(2) **யோக நிஷ்டை:** உலகில் உள்ளவை எல்லாமே பகவானுடையவை என்று அறியவேண்டும். நம் செயல்கள் வெற்றி பெற்றாலும், வெற்றி பெறாவிட்டாலும், ஸமநிலையில் இருக்க வேண்டும். எதிலும் பற்றின்றி, பயனைக் கருதாமல் பகவானின் ஆணை என்று எல்லாக் கர்மங்களையும் ஆற்றவேண்டும் (2/47-51). அல்லது நம்பிக்கையுடனும், பக்தியுடனும் மனம், சொல், உடல் எல்லாவற்றுடனும் பகவானைத் தஞ்சம் அடைந்துவிட வேண்டும். அவருடைய திருநாமங்கள், கல்யாண குணங்கள், ப்ரபாவங்கள் இவற்றுடன் கூட அவருடைய ஸ்வரூபத்தைச் சிந்தித்திருக்க வேண்டும் (6/47). இது யோக நிஷ்டை. இதையே பகவான் ஸமத்வயோகம், புத்தியோகம், ததர்த்த கர்மம், மதர்த்த கர்மம், ஸாத்விக த்யாகம் முதலிய பெயர்களால் குறிப்பிடுகிறார்.

யோக நிஷ்டையில் ஸாமான்ய ரூபத்திலும், முக்யமாகவும் பக்தி இருக்கத்தான் இருக்கிறது. கீதையில் சொல்லப்படுகிற யோக நிஷ்டை பக்திக்குப் புறம்பானதன்று. பக்தி என்ற சொல்லோ, பகவான் என்ற சொல்லோ வராவிட்டாலும்கூட (2/47-51) பகவானுடைய ஆணையின்படி நடக்கவேண்டும் என்னும்போது பக்தியும் அங்குச் சேரத்தான் சேர்கிறது.

ஞான நிஷ்டையின் ஸாதனைக்கு பகவான் பல யுக்திகளைக் கூறுகிறார். அவை எல்லாவற்றிற்கும் பயன் ஸத் சித் ஆனந்தமயனான பரமாத்மாவை அடைவதுதான். ஞானயோகத்தில் உட்பிரிவுகள் பல இருந்தாலும் அவற்றில் நான்கு முக்யமானவை.

(1) உள்ளதெல்லாம் பரப்ரம்மமே.

(2) காணப்படுவனவெல்லாம் மாயைப் பொருட்களே. உண்மையில் ஸத் சித் ஆனந்தமயமான பரப்ரம்மம் தவிர வேறொன்றும் இல்லை.

(3) தோன்றுவனவெல்லாம் என் ஸ்வரூபம்தான், நானே அவை.

(4) தோற்றமெல்லாம் மாயைதான், அழியக்கூடியவை. உண்மையில் இல்லவே இல்லை. நித்யனான உணர்வுள்ள ஒன்றே ஒன்றுதான் ஆத்மா. அதுதான் நான்.

இப்படி நான்குவிதமான உட்பிரிவுகளில் முதல் இரண்டும் 'தத்த்வமஸி' என்ற உபநிஷத் மஹாவாக்கியத்தில் உள்ள 'தத்' என்ற சொல்லின் விளக்கமாகவும், பின் இரண்டும் 'த்வம்' என்பதன் விளக்கமாகவும் அமைகின்றன. இதை இவ்வாறு விளக்கலாம்.

(1) சராசரமான இந்த உலகில் காணப்படுவன எல்லாம் ப்ரம்மமே. ஒரு பொருள் கூட ஸத் சித் ஆனந்தமயமான ப்ரம்மத்தைத் தவிர வேறானதன்று. கர்மம், கர்மத்திற்குரிய கருவிகளும், பொருட்களும், கர்மத்தைச் செய்பவன் எல்லாமே ப்ரம்மம்தான் (4/24). எப்படிக் கடலில் மிதக்கின்ற பனிக்கட்டிகளின் உள்ளும், புறமும் எங்கும் நீரே நிறைந்திருக்கிறதோ, நீரைத் தவிர வேறொன்றும் இல்லையோ அதுபோல எல்லாவிதமான சராசரங்களான ப்ராணிகளின் உள்ளும், புறமும் ஒரே பரமாத்மாதான் நிறைந்துள்ளார். அந்த அனைத்து ப்ராணிகளின் வடிவங்களிலும் ப்ரம்மமேதான் இருக்கிறது (13/15).

(2) காணப்படுவனவெல்லாம் மாயைத் தோற்றங்களே, நிலையற்றவை, அழியக் கூடியவை, அவை இல்லவே இல்லை என்றும், இவற்றிற்கு ஆதாரம் ஸத் சித் ஆனந்தமயமான பரமாத்மாவைத் தவிர வேறொன்றும் இல்லை என்றும் அறிந்து கொண்டு மனதையும், புத்தியையும் ப்ரம்ம மயமாக்கிப் பரமாத்மாவிடமே ஒன்றி நின்று அந்த நேரிடை அனுபவத்தின் மூலம் ப்ரம்மத்துடன் ஐக்யமாகிவிடுவது (5/17).

(3) சராசரமெல்லாம் ப்ரம்மம்தான். அந்த ப்ரம்மம் நான்தான். இவையெல்லாம் என் ஸ்வரூபமே என்று ஆராய்ந்து சராசரங்களனைத்தும் தனது ஆத்மாவே என்று பாவிப்பது.

இப்படி ஸாதனை புரிபவரின் நோக்கில் ப்ரம்மம் ஒன்றைத் தவிர வேறொன்றுக்கும் இருப்பே கிடையாது. தம்முடைய விஞ்ஞான ஆனந்தமயமான ஸ்வரூபத்தில் ஆனந்தத்தை அனுபவித்துக் கொண்டிருப்பார் (5/24, 6/27, 18/54).

(4) மாயையினால் உருவாகி முக்குணங்களின் விளைவுகளான பொருட்களாகத் தோற்றமளிக்கின்றனவே -- இவற்றிற்கும், இவற்றின் செயற்பாட்டிற்கும், தமக்கும் எத்தகைய ஸம்பந்தமும் இல்லை. இவையெல்லாம் அழியக்கூடியன. எப்பொழுதும் இல்லாதன என்று அறிந்து, எல்லாம் வாஸ்தவத்தில் இல்லாதவை என்று ஒதுக்கி, எப்பொழுதும் உள்ள ஆத்மாவின் அனுபவத்தைப் பெறுவது (13/27,34).

இந்த நிலையை அடைவதற்கு பகவான் கீதையில் பல யுக்திகளையும், உபாயங்களையும் ஆங்காங்கே ஸாதகனுக்குச் சொல்கிறார். ஆத்மா என்பவன் மட்டுமே பார்க்கிறவன், ஸாக்ஷீ, சேதநன் (உணர்வு உள்ளவன்), நித்யன் (என்றுமுள்ளவன்). மேலும் உடல் முதலிய காணப்படுவன எல்லாமே ஜடங்கள், வெறும் தோற்றங்கள், அநித்யமானவை. ஆதலால் அவை 'அஸத்'. ஆத்மா ஒன்றுதான் இருப்பது, 'ஸத்'. இதை உறுதிப்படுத்தவே பகவான் 2/11 முதல் 2/30 வரை ஆத்மா நித்யன், சுத்தன், விழிப்புள்ளவன், உருவமற்றவன், விகாரமற்றவன், செயலற்றவன், குணங்களுக்கு அப்பாற்பட்டவன் என்றெல்லாம் வர்ணித்துச் சொல்கிறார். பகவான் வேறு தான் வேறு என்ற பேதபாவனையின்றி ஸாதனை புரிபவர் ஆத்மாவின் ஸ்வரூபத்தை இவ்விதம் உணர்ந்து ஸாதனை புரிந்தால், ஆத்மாவைக் காண்கிறார் (அதாவது ஆத்மானுபவம் பெறுகிறார்). எந்தச் செயல் நடைபெறுகிறதோ, அது குணங்களால் குணங்களில் ஏற்படுவது. ஆத்மாவுக்கும், அதற்கும் ஸம்பந்தமில்லை (5/8,9; 14/19). ஆத்மா ஏதும் செய்வதுமில்லை (கர்த்தா அல்ல), செய்விப்பதும் இல்லை. இவ்விதம் உணர்ந்து அவர் எப்பொழுதும் தன்னிடமே – ஆத்மாவிடமே – மிகுந்த ஆனந்தத்தை அனுபவிக்கிறார் (5/13).

மேலே சொன்ன ஞானயோக ஸாதனை முறைகள் நான்கில் முதல் இரண்டும் ப்ரம்மத்தை ('தத்த்வமஸி' என்று) உபாஸனை செய்வதாகும். மூன்றும், நான்கும் 'நானே ப்ரம்மம்' (அஹம் ப்ரஹ்மாஸ்மி) என்று அஹங்க்ரஹ உபாஸனை செய்வதாகும்.

இங்கே ஒரு கேள்வி: மேலே சொன்ன நான்கு ஸாதனைகளைப் புரியவேண்டியது வ்யுத்தான அவஸ்தை நேரத்திலா? அல்லது வ்யவஹார தசையிலா? அல்லது இந்த இரண்டு அவஸ்தைகளிலும் செய்ய வேண்டுமா? இதற்குப் பதில் இதுதான். மேலே சொன்ன நான்காவது – ஸாதனை முற்றிய நிலையில் 5/9ல் கூறப்பட்டபடி ஸாதனை புரிவது வ்யவஹார தசையில் (ப்ரபஞ்சம் தெரிகின்ற நேரத்தில்) செய்யப்படுவது. மேலே சொன்ன இரண்டாவது – ஸாதனையின் ஆரம்பத்தில் 5/17ல் கூறியபடி ஸாதனை புரிவது த்யான காலத்தில். மற்றவற்றை அநேகமாக இரண்டு நிலைகளிலும் புரியலாம்.

இங்கே ஒரு கேள்வியைக் கேட்கலாம். 'முதல் ஸாதனையிலேயே வாஸுதேவனே எல்லாம்' (வாஸுதேவ: ஸர்வம்) என்று காணப்படுவதெல்லாம் வாஸுதேவனுடைய ஸ்வரூபமே (7/19). மேலும் **'ஸர்வபூதஸ்திதம் யோ மாம் பஜத்யேகத்வமாஸ்தித:'** (6/31) – எவன் ஒன்றிய உணர்வில் உறுதிபெற்று அனைத்து உயிரினங்களிலும் ஆத்மாவாக விளங்கும் ஸத் சித் ஆனந்தமயமான வாஸுதேவனான என்னை வழிபடுகிறானோ என்பன பற்றி ஏன் இங்குக் குறிப்பிடவில்லை என்றால் இவ்விரண்டு ச்லோகங்களும் பக்தியைப் பற்றிக் கூறும் ஸந்தர்பத்தில் வருவன. பக்தி மூலம் பகவானை அடைந்துவிட்டவனைப் பற்றிப் பேசுவன. எனவே, இவற்றை இந்தக் கட்டத்தில் குறிப்பிடவில்லை. ஆனால் எவரேனும் இவற்றை ஞானம் பற்றியதாகக் கொண்டு, இவற்றின்படி ஸாதனை புரிய விரும்பினால் அவ்வாறு செய்யத் தடை ஏதுமில்லை.

இவ்விதம் ஸாங்க்ய நிஷ்டையை நான்குவிதங்களாகப் பிரித்துச் சொன்னோம். அதுபோல யோக நிஷ்டையையும் மூன்றுவிதமாகப் பிரிக்கலாம்.

(1) கர்மத்தை முக்யமாகக் கொண்டுள்ள கர்மயோகம்.

(2) பக்தி கலந்த கர்மயோகம்.

(3) பக்தியை முக்யமாகக் கொண்ட கர்மயோகம்.

(1) எல்லாக் கர்மங்களிலும், உலகியல் பொருட்களிலும் பயனையும், பற்றையும் முழுமையாக த்யாகம் செய்துவிட்டு, தமது வர்ணம், ஆசிரமம் இவற்றிற்கேற்ப சாஸ்த்ரங்களில் விதிக்கப்பட்ட கடமைகளை ஆற்றவேண்டும். இதுதான் கர்மத்தை முக்யமாகக் கொண்ட கர்மயோகம். இதைப் பற்றிச் சொல்லும்போது பகவான் சில இடங்களில் பயனை மாத்திரம் த்யாகம் செய்யவேண்டும் என்கிறார் (5/12, 6/1, 12/11, 18/11). சில இடங்களில் பற்றை தயாகம் செய்யவேண்டும் என்கிறார் (3/19; 6/4). மற்றும் சில இடங்களில் பயன், பற்று இரண்டையும் த்யாகம் செய்யவேண்டும் என்கிறார் (2/47,48; 18/6,9). பயனை த்யாகம் செய்யவேண்டும் என்று சொல்லுமிடத்தில் பற்றையும் த்யாகம் செய்யவேண்டும் என்று சேர்த்து அறிந்து கொள்ளவேண்டும். அதுபோலப் பற்றை த்யாகம் செய்யவேண்டும் என்ற இடத்தில் பயனையும் த்யாகம் செய்யவேண்டும் என்று அறிந்து கொள்ளவேண்டும். பயனையும், பற்றையும் அறவே த்யாகம் செய்தால்தான் கர்மயோக ஸாதனை முழுமையாகப் புரிந்ததாக ஆகும்.

(2) பக்தி கலந்த கர்மயோகம் என்பதில் 'அகில ப்ரபஞ்சத்திலும் பகவான் நிறைந்திருக்கிறார்' என்ற நினைப்போடு, தன் வர்ணத்துக்குரிய கடமைகளைச் செய்து அவரையே வழிபடுதல் கூறப்படுகிறது. ஆகவே, இதை பக்தி கலந்த கர்மயோகம் எனலாம் (18/46).

(3) பக்தியை முக்யமாகக் கொண்ட கர்மயோகம்: இதில் இரண்டு உட்பிரிவுகள் உண்டு. (அ) பகவானுக்கு அர்ப்பணம் என்ற கர்மம். (ஆ) பகவானுக்காகச் செய்யப்படும் கர்மம்.

(அ) பகவானுக்கு அர்ப்பணம் என்ற கர்மம்கூட இரு வகைகளில் செய்யப்படும். மமகாரம், பற்று, பயனில் கருத்து இவற்றை த்யாகம் செய்து, இவையெல்லாம் பகவானுடையவை; நானும் பகவானுடையவன்; என் மூலம் நடைபெறும் செயலும் பகவான் செய்வதே; பகவான் தம் கைப்பாவை போல என்னை ஆட்டுவிக்கிறார் என்ற எண்ணத்துடன், அவருடைய ஆணைப்படி பகவானுடைய த்ருப்திக்காகவே சாஸ்த்ரங்களில் விதிக்கப்பட்ட கடமைகள் ஆற்றப் பெறுகின்றன (3/30; 12/6; 18/57,66).

இது தவிர வேறு விதமாக பகவானுக்கு அர்ப்பணம் செய்யக் கூடிய கர்மம் உண்டு. வேறு ஒரு லக்ஷ்யத்துடன் ஒரு கர்மத்தைச் செய்துவிட்டு முடிவில் அதை பகவானுக்கு அர்ப்பணம் செய்வது; கர்மம் செய்து கொண்டிருக்கும் போதே இடையில் பகவானுக்கே அர்ப்பணம் செய்வது; கர்மம் முடிந்ததும் பகவானுக்கு அர்ப்பணம் செய்வது அல்லது கர்மத்தின் பயனை பகவானுக்கு அர்ப்பணம் செய்வது. இதுவும் பகவானுக்கு அர்ப்பணம் செய்வதன் ஆரம்பநிலையே. இவ்வாறு செய்யச் செய்ய மேலே கூறிய முழுமையான பகவத் அர்ப்பண நிலை வந்துவிடும்.

(ஆ) பகவானுக்காகச் செய்யப்படும் கர்மங்களும் இரு வகைப்படும்.

1) சாஸ்த்ரங்களில் விதிக்கப்பட்ட கடமைகளை, பகவானை அடைவதற்காக, பகவானின் அன்பைப் பெறுவதற்காக அல்லது பகவானுடைய த்ருப்திக்காக, பகவானுடைய ஆணைப்படி செய்கிறோம் என்று நினைத்துச் செய்வதும் ஒருவிதத்தில் பகவானுக்காகச் செய்யப்படும் கடமையே.

2) மற்றொன்று பகவானிடம் உள்ள பக்தியினால், ப்ரேமையினால், தானே மனமுவந்து பகவானின் விக்ரஹம் முதலியவற்றிற்குப் பூஜை செய்வது, உபசாரம் செய்வது, நாம பஜனை செய்வது, த்யானம் செய்வது முதலிய உபாஸனைகள். இவையும் வெளிப்பார்வையிலும்கூட பகவான் ஸம்பந்தமாக பகவானுக்காகவே செய்யப்படுபவை. ஆகவே இவ்விரண்டும் பகவதர்த்த கர்மத்திற்கு உட்பட்டவை (பகவானுக்காகவே செய்யப்படுபவை). இவற்றை

பகவான் 'மத்கர்மம்' என்றும், 'மதர்த்த கர்மம்' என்றும் பெயரிட்டுக் கூறுகிறார் *(11/55; 12/10)*.

இதைத்தான் அநன்ய பக்தி என்றும், பக்தியோகம் என்றும் கூறுவர் *(8/14,22; 9/13,14,22,30,34; 10/9; 13/10; 14/26)*. இதுகூட பகவானுக்கு அர்ப்பணம் என்ற கர்மம், பகவானுக்காகச் செய்யப்படும் கர்மம் என்ற இரண்டு வகையிலும் சேரும். இவையெல்லாவற்றிற்கும் பயன் பகவானை அடைவதுதான்.

இங்கே ஒரு கேள்வி: யோக நிஷ்டை தனியாகவே பகவானை அடையச் செய்யுமா? அல்லது ஞானநிஷ்டையின் ஒரு பகுதியாக இருந்து பகவானை அடையச் செய்யுமா? இதற்குப் பதில் கீதையின் பிரகாரம் இரண்டுமே என்பதுதான். அதாவது யோக நிஷ்டை தனியாகவும் பகவானிடம் கொண்டு சேர்க்கும். மோக்ஷம் அடையத் தனியாகவே உதவும் என்று கொள்ளப்படுகிறது. அத்துடன் ஞான நிஷ்டைக்கு உதவியாக இருந்தும், பகவானிடம் கொண்டு சேர்க்கும். ஸாதகன் விரும்பினால் ஞான நிஷ்டையின் உதவியின்றியே நேரே கர்மயோக நிஷ்டையில் ஊன்றி நின்று பரமஸித்தியைப் பெற முடியும். அல்லது கர்மயோக நிஷ்டையின் மூலம் ஞான நிஷ்டையைப் பெற்று, பிறகு அந்த ஞான நிஷ்டையின் மூலமும் பகவானை அடைய முடியும். இவை இரண்டில் எதைக் கடைப்பிடிக்கலாம் என்பது ஸாதகனின் விருப்பத்தை பொறுத்தது. யோக நிஷ்டை என்பது தனியான, சுதந்திரமான ஸாதனை என்று பகவான் *5/4,5; 13/24*வது ச்லோகங்களில் தெளிவாகச் சொல்லியிருக்கிறார். பகவானிடம் உள்ளத்தை நிலைநிறுத்தி பகவானுக்காகவே கர்மங்களைச் செய்பவனுக்கு பகவானுடைய க்ருபையாலே பகவான் கிடைத்துவிடுகிறார். இதையும் பகவான் பல இடங்களில் கூறுகிறார் *(8/7; 11/54,55; 12/6–8)*.

இதுபோலவே நிஷ்காம கர்மமும், உபாஸனையும்கூட ஞான நிஷ்டையின் பகுதிகளாக அமைந்துவிட முடியும் *(5/6; 14/26)*. ஆனால் ஞானயோகம் பகவானுடன் இரண்டற ஒன்றிவிடுகின்ற உபாஸனை. யோக நிஷ்டைக்கு அல்லது பக்தியோகத்திற்கு உதவியாக அது அமைய முடியாது. ஏனெனில் பக்தியோகத்திலும், கர்மயோகத்திலும் ஸாதகன் வேறு, பகவான் வேறு என்ற பாவனை ஊடுருவி நிற்கும். ஆனால் ஞான நிஷ்டையில் ஸாதனை புரிபவன் ஸாதனையின் நடுவில் தன் கருத்து மாறுவதாலோ, ஆர்வம் மாறுவதாலோ ஞான நிஷ்டையை விட்டுவிட்டு யோக நிஷ்டை புரிய ஆரம்பிக்கலாம். அது வேறு விஷயம்.

எவரேனும் கர்மயோக ஸாதனை புரிந்து பிறகு ஸாங்க்ய யோக ஸாதனை மூலம் ஸத் சித் ஆனந்தமயமான பரமாத்மாவை அடைவதற்கு முறை என்ன என்று கேட்கலாம். இதை அறிந்து கொள்ளும் பொருட்டு, அது த்யாகம் என்ற பெயரால் ஏழு படிகளாகப் பிரித்துக் கூறப்பட்டுள்ளது. அவற்றை வரிசையாகப் பார்ப்போம்:–

(1) தகாத செயல்களை முற்றும் துறத்தல்

திருட்டு, விபசாரம், பொய், கபடம், சூது, பலாத்காரம், ஹிம்ஸை, தகாததை உண்பது, தடுமாற்றம் முதலிய சாஸ்த்ரங்களில் தடுக்கப்பட்ட கீழ்ச் செயல்களை மனம், சொல், உடலினால் செய்யாமலேயே இருக்கவேண்டும். இது முதல் நிலையிலுள்ள த்யாகம்.

(2) காம்ய (பயனில் ஆசை கொண்ட) கர்மங்களைத் துறத்தல்

மனைவி, மக்கள், செல்வம் முதலிய ப்ரியமான பொருட்களை அடைவதற்காகவும், நோய் முதலிய தொல்லைகள் நீங்குவதற்காகவும் செய்யப்படும் யாகம், தானம், தவம், உபாஸனை இவையெல்லாம் காம்ய கர்மங்கள். இவற்றைத் தன்னலம் கருதிச் செய்யாமல் இருக்கவேண்டும். இது இரண்டாவது நிலையிலுள்ள த்யாகம். ஆனால் உலகியலிலோ, சாஸ்த்ர முறைப்படியோ எதிர்பாராது வந்தமைந்த ஒரு கர்மம், பார்ப்பதற்குப் பயனைத் தரக்கூடியதாகத் தோன்றி, ஆனால் அதைச் செய்யாததால் யாருக்காவது கஷ்டமோ அல்லது

கர்ம உபாஸனைத் தொடரில் எவ்விதமாவது இடையூறோ வருமேயானால், தன்னலத்தை விட்டுவிட்டு உலக நன்மைக்காக அதைச் செய்தால் அது காம்ய கர்மமன்று.

(3) வேட்கையை முற்றும் துறத்தல்

ப்ராரப்தத்தின் வசமாக வந்து சேரும் மானம், தற்பெருமை, புகழ், மனைவி, மக்கள், செல்வம் முதலிய அநித்யமான பொருட்கள் மேன்மேலும் வளரவேண்டும் என்ற வேட்கை பகவானை அடைவதற்குத் தடை (இடையூறு) என்று உணர்ந்து, அவற்றை த்யாகம் செய்யவேண்டும். இது த்யாகத்தின் மூன்றாவது நிலை.

(4) தன்னலத்திற்காகப் பிறரைத் தனக்குத் தொண்டு செய்யத் தூண்டுதலை ஒழித்தல்

தன்னுடைய ஸுகத்திற்காகப் பிறரிடம் செல்வம் முதலியவற்றையோ, அவர்களது ஊழியத்தையோ எதிர்பார்ப்பது, கேட்டுப் பெறுவது, கேட்காமல் இருந்தாலும் அவர்களாகக் கொடுப்பதை ஏற்றுக் கொள்வது, இவ்விதம் பிறரைக் கொண்டு தன் தேவைகளையும், விருப்பங்களையும் நிறைவேற்றிக் கொள்ள விரும்புவது – இவற்றை அறவே த்யாகம் செய்யவேண்டும். இது த்யாகத்தின் நான்காவது நிலையாகும்.

ஏதாவது ஒரு சமயத்தில் பிறர் நமக்கு உடலால் உழைக்க வேண்டிய வாய்ப்பு நேரலாம். அவர்கள் இடும் உணவை ஏற்கும்படி நேரலாம். அவற்றைத் தவிர்ப்பதால் எவருக்காவது மனத்தாங்கல் நேரிடலாம். அல்லது உலகிற்கான வழிமுறைகளில் இடையூறு ஏற்படலாம். அப்பொழுது தன்னலம் இல்லாது அவர்களுடைய த்ருப்திக்காக அவர்களுடைய ஊழியத்தை ஏற்றுக் கொள்வது தவறன்று. ஏனென்றால் மனைவி–மக்கள், சேவகர்களின் பணிகளைப் புறக்கணிப்பதோ, அவர்கள் அன்புடன் அளிக்கும் உணவு முதலியவற்றை ஏற்றுக் கொள்ளாமல் இருப்பதோ, அவர்கள் உள்ளத்திற்குக் கஷ்டத்தை விளைவிக்கலாம். உலகியல் நெறிமுறைகள் பாதிக்கப்படலாம்.

(5) கடமைகளைச் செய்வதில் சோம்பலையும், பயனில் நாட்டத்தையும் அறவே விட்டொழித்தல்

பகவானிடம் பக்தி செலுத்துதல், தேவபூஜை, தாய்–தந்தையர் மற்றும் குருமார்களுக்குப் பணிவிடை, யாகம், தானம், தவம் முதலிய வர்ணாசிரமங்களை அனுஸரித்த கடமைகளையும், வாழ்க்கையை நடத்துவதற்கும், உடலைப் பேணுவதற்கும் உரிய உண்பது, அருந்துவது ஆகிய கடமைகளையும் ஆற்றும்போது சோம்பலுக்கு இடம் கொடுக்கக் கூடாது. சிறிதுகூடப் பயனைக் கருதக் கூடாது. இது த்யாகத்தின் ஐந்தாவது படி.

(6) உலகியல் பொருட்கள், செய்கைகள் அனைத்திலும் மமதை, ஈடுபாடு இவையிரண்டையும் துறத்தல்

செல்வம், வீடு, துணிமணிகள், மனைவி–மக்கள், நண்பர்கள், சுற்றத்தார் மற்றும் மானம், தற்பெருமை, புகழ் என்ற பலவிதமான இவ்வுலக, பரலோக போகப் பொருட்கள் எத்தனை உண்டோ அத்தனையும் நொடியில் அழியக் கூடியவை, அநித்யமானவை என்றறிந்து, அவற்றில் அகந்தையும், நாட்டமும் இல்லாது ஒன்றேயான பரமாத்மாவிடம், தூயதான ப்ரேமையுடன் மனம், சொல், உடல் இவற்றின் மூலம் ஆக்கப் பெறும் செயல்களிலும், உடலின் மீதும் துளிகூட மமகாரமும், பற்றும் இல்லாதிருத்தல் த்யாகத்தின் ஆறாவது நிலையாம்.

இந்த ஆறாவது நிலையிலுள்ள த்யாகம் செய்தவருக்கு உலகியலில் உள்ள எல்லாப் பொருட்களிலும் வைராக்யம் உண்டாகி, அன்பே வடிவமாகிய பகவானிடம் அநன்ய ப்ரேமை உண்டாகும். ஆகவே, பகவானுடைய கல்யாண குணங்கள், ப்ரபாவங்கள், ரஹஸ்யங்கள் நிறைந்த தூயதான ப்ரேமையை விஷயமாகக் கொண்ட கதைகளைக் கேட்பது, சொல்வது,

மனனம் செய்வது, தனிமையில் அமர்ந்து இடைவிடாது பகவானை பஜனம் செய்வது, த்யானம் செய்வது, சாஸ்த்ரங்களின் மர்மங்களை ஆராய்வது ஆகியவற்றில் ஆவல் உண்டாகும். சிற்றின்பங்களில் ஈடுபட்டவர்களுடன் கூடி விளையாட்டு, கேளிக்கை, வேடிக்கை, அசட்டை, பிற நிந்தை, சிற்றின்ப போகம் முதலிய வீணான செயல்களில் தமது அருமையான விலைமதிப்பற்ற நேரத்தை ஒரு கணம்கூடச் செலவழிப்பது பிடிக்காமல் போகும். அவர்களுடைய செயல்கள் எல்லாம் பகவானுடைய ஸ்வரூபம், திருநாமங்கள் இவற்றின் சிந்தனையிலேயே விழைந்து பற்றின்றி பகவானுக்காக ஆனவையாகவே மலரும். இது கர்மயோக ஸாதனை. இந்த ஸாதனையைச் செய்யச் செய்ய ஸாதகன் பரமாத்மாவினுடைய அருளினால் பகவானுடைய ஸ்வரூபத்தைத் தத்வரீதியாக உணர்ந்து அழிவற்ற பரமபதத்தை அடைவான் *(18/56)*.

ஸாங்க்யயோகத்தின் மூலம் பரமாத்மாவை ஒருவன் அடைய விரும்பினாலும், மேலே சொன்ன ஸாதனைகளைப் புரிந்த பிறகு கீழே கூறப்படும் ஏழாவது நிலையில் உள்ள முறைப்படி ஸாங்க்யயோக ஸாதனை புரியவேண்டும்.

(7) உலகியல், உடல், கர்மங்கள் இவற்றின் நுண்ணிய வாஸனைகளையும் *(முன் தொடர்புகளையும்)*, அஹம்பாவத்தையும் *(நான் எனும் எண்ணத்தையும்)* முற்றும் துறத்தல்

உலகியல் பொருட்கள் அனைத்தும் மாயையின் செயற்பாடுகளே. எனவே அநித்யமானவை. ஒன்றேயான ஸத் சித் ஆனந்தமயனான பரமாத்மாதான் எங்கும் ஸமமாக நிறைந்திருக்கிறார் என்ற திடநிச்சயம் கொண்டு உடல் உட்பட எல்லா உலகியல் பொருட்களிலும், செயல்களிலும் ஏற்பட்டிருக்கும் வாஸனைகள் வெளிப்படையாக மறைந்தாலும், உள்ளே ஒட்டிக் கொண்டிருக்கும் நுண்ணிய வாஸனைகளை அறவே ஒழிக்கவேண்டும். உள்ளத்தில் மனப்பதிவாகப் பதிந்திருக்கும் அவற்றின் சித்திரங்களையும் அழிக்கவேண்டும். உடலிலும் தான் என்ற அஹங்காரம் அழியவேண்டும். மனம், சொல், உடல்களால் ஆக்கப் பெறுகின்ற செயல்களுக்கு நான் கர்த்தா அல்லவே அல்ல என்று உறுதியான எண்ணம் கொள்ளவேண்டும். இவ்விதம் வாஸனையையும், அஹங்காரத்தையும் துறந்து ஒன்றேயான ஸத் சித் ஆனந்தமயமான பரமாத்ம ஸ்வரூபத்தில் இரண்டற ஒன்றாக இடைவிடாது ஒன்றியிருக்கவேண்டும். இது த்யாகத்தின் ஏழாவது நிலை.

இவ்விதம் ஸாதனை புரியும் ஒரு ஸாதகன், அதே நேரத்தில் ஸத் சித் ஆனந்தமயமான பரமாத்மாவை ஸுகமாக அடைகிறான் *(6/28)*. மேலே சொன்னவிதம் கர்மயோகத்தைக் கடைப்பிடிக்காமல் நேரே ஆரம்பத்திலேயே ஸாங்க்யயோக ஸாதனையில் இறங்குபவன் பரமாத்மாவை மிகவும் அல்லல்பட்டு அடைகிறான்.

'ஸந்ந்யாஸஸ்து மஹாபா3ஹோ து3:கு2மாப்துமயோகத:' *(5/6)*

இங்கே ஒரு கேள்வி. ஒரு ஸாதகன் ஒரே நேரத்தில் இரண்டு நிஷ்டைகளையும் கடைப்பிடிக்க முடியுமா, முடியாதா? முடியாதென்றால் ஏன்? இதற்குப் பதில் – ஸாங்க்யயோகம், கர்மயோகம் இரண்டையும் ஒரே நேரத்தில் ஒருவரால் கடைப்பிடிக்க முடியாது. ஏனெனில் கர்மயோகி கர்மத்தில் ஈடுபடும்போது கர்மத்தையும், கர்ம பயனையும், பரமாத்மாவையும், தன்னையும் வெவ்வேறென மதித்துக் கர்மத்தின் பயனையும், பற்றையும் மனப்பூர்வமாக த்யாகம் செய்து, பகவானுக்காக என்றோ அல்லது பகவானுக்கு அர்ப்பணம் என்ற எண்ணத்தாலோ கர்மத்தைச் செய்கிறான் *(3/30; 5/10; 11/55; 12/10; 18/56,57)*. ஸாங்க்யயோகியோ மாயையில் உண்டான குணங்கள் எல்லாமே குணங்களில் இயங்குகின்றன. அல்லது புலன்கள் புலன்களின் பொருட்களில் ஈடுபடுகின்றன என்று எண்ணி மனதாலும், உடலாலும், புலன்களாலும் ஆக்கப்பெறும் செயல்களுக்குத் தான் கர்த்தா என்ற அஹந்தை இல்லாது, எங்கும் நிறை பரம்பொருளான பரமாத்மாவிடம் இரண்டறக் கலந்து நிற்கிறான் *(3/28; 5/13; 13/29; 14/19,20; 18/49-55)*. கர்மயோகி தன்னைக் கர்த்தாவாகக் கணிக்கிறான்

(5/11). ஸாங்க்யயோகி தன்னைக் கர்த்தா என்று நினைப்பதில்லை (5/8,9). கர்மயோகி தான் செய்யும் கர்மங்களை பகவானுக்கு அர்ப்பணம் செய்கிறான் (9/27,28). ஸாங்க்யயோகியோ மனம், புலன்களினால் நடைபெறும் அஹந்தை இல்லாச் செயல்களைக் கர்மம் என்றே ஏற்பதில்லை (18/17). கர்மயோகி பரமாத்மாவைத் தன்னிலிருந்து வேறாக மதிக்கிறான் (12/10). ஸாங்க்யயோகி எப்போதும் பேதமற்ற நிலையை மதிக்கிறான் (18/20). கர்மயோகி ப்ரக்ருதியையும், ப்ரக்ருதியில் உண்டானவற்றையும் இருப்பதாக ஏற்கிறான் (18/61). ஸாங்க்யயோகி ப்ரம்மம் தவிர வேறொன்றுக்கும் 'இருப்பு' உள்ளதென்று நினைப்பதில்லை (13/30). கர்மயோகி கர்மம் உண்டு, கர்மத்திற்குப் பயன் உண்டு என்று நினைக்கிறான். ஸாங்க்யயோகியோ ப்ரம்மம் தவிரக் கர்மமோ, கர்மத்தின் பயனோ கிடையாது என நினைக்கிறான். அப்படித் தோன்றுவனவற்றில் தனக்கு ஸம்பந்தம் இல்லை என நினைக்கிறான். இவ்விதம் இருவருக்கும் மதிப்பீட்டிலும், ஸாதனை முறையிலும் கிழக்கு, மேற்கு போன்ற பெருத்த இடைவெளி உண்டு. இந்த நிலையில் இரண்டு நிஷ்டைகளையும் ஒரே நேரத்தில் ஒரு மனிதன் பின்பற்றுவது என்பது முடியாத செயல். ஒருவன் பாரத பூமியிலிருந்து நியூயார்க் போக வேண்டுமானால் ஒன்று கிழக்கு முகமாகவே செல்ல வேண்டும். அல்லது மேற்கு முகமாகவே சென்று கொண்டிருந்தாலும் நியூயார்க்கை அடையலாம். அதுபோலவே ஸாங்க்யயோகிக்கும், கர்மயோகிக்கும் ஸாதனை முறைகளில் வேறுபாடு இருந்தாலும் ஏதாவது ஒன்றை விடாது பிடித்துக் கொண்டு முன்னேறினால் இருவருமே ஒரே லக்ஷ்யமான பரமாத்மாவை விரைவில் அடைந்து விடலாம் (5/4).

அதிகாரி (தகுதிபெற்றவர்)

கீதையில் சொல்லப்படும் ஸாங்க்யயோகத்தையும், கர்மயோகத்தையும் கடைப்பிடிக்கும தகுதியுள்ளவர் யார் என்ற கேள்வி எழுகிறது. எல்லா வர்ணங்களிலும், எல்லா ஆசிரமங்களிலும் உள்ளவர்களும், எல்லா ஜாதியினரும் இவற்றைக் கடைப்பிடிக்கலாமா அல்லது குறிப்பிட்ட வர்ணத்தார், ஆசிரமத்தார், ஜாதியினர்தான் இந்த ஸாதனைகளைப் புரிய முடியுமா? கீதையில் காட்டப்பட்டுள்ள வழிமுறை எல்லாவிதங்களிலும் இந்திய நாட்டைச் சார்ந்ததாகவும், பண்டைய முனிவர்களால் கைக்கொள்ளப்பட்டதாகவும் இருப்பினும், கீதையின் போதனைகளைப் பற்றிச் சிந்தித்துப் பார்த்தால், கீதை கூறும் ஸாதனைகளின்படி ஒழுகுவதற்குத் தகுதி மனித குலம் முழுவதற்குமே உண்டு என்பது விளங்கும். ஜகத்குருவான பகவான் செய்த உபதேசம் மனித இனத்திற்கே உரியது. குறிப்பிட்ட வர்ணத்தாருக்கோ, ஆசிரமத்தாருக்கோ குறிப்பாகச் சொல்லப்பட்டதன்று. இதுதான் கீதையின் தனிச்சிறப்பு. பகவான் ஆங்காங்கு தன் உபதேசத்தினிடையே 'மாநவ:', 'நர:', 'தேஹப்ருத்', 'தேஹீ' என்ற மனிதர்க்குரிய பொதுவான சொற்களையே உபயோகித்து இதைத் தெளிவாக விளக்கி இருக்கிறார். ஸாங்க்யயோகத்தின் முக்ய ஸாதனை பற்றிப் பேசும்போது, பகவான் 'தேஹீ' என்று சொல்லி மனிதர் எல்லோருக்கும் அதற்குத் தகுதியுண்டு என்று காட்டுகிறார் (5/13). இதுபோலத் தெளிவான சொற்களால், 'மனிதன் தனக்கு சாஸ்த்ரங்களில் விதிக்கப்பட்ட கடமைகளை ஆற்றி நீக்கமற நிறைந்து நிற்கும் பரமாத்மாவை அடையலாம்' என்கிறார் (18/46). அதுபோலப் பெண்கள், நான்காம் வர்ணத்தவர், ஈனப்பிறவியில் பிறந்தவர்கூட பக்தி செய்யத் தகுதியுள்ளவர் என்கிறார் (9/32). பகவான் தனிப்பட்ட ஸாதனை பற்றிப் பேசுகிற போதும், அந்த ஸாதனையைப் பற்றிக் குறிப்பிடும் இடங்களிலும், ஏதோ ஒரு வர்ணத்தாருக்கோ, ஆசிரமத்தாருக்கோ, ஜாதிக்காரருக்கோதான் தகுதியுண்டு; மற்றவர்க்கில்லை என்று சொல்லவே இல்லை.

இவ்வளவு சொன்ன பிறகும் ஒன்று நினைவில் இருக்க வேண்டும். எல்லாக் கர்மங்களும் எல்லோருக்கும் பயன்படுவன அல்ல. அதனால்தான் பகவான் வர்ண தர்மத்தை வலியுறுத்திச் சொல்கிறார். எந்த வர்ணத்திற்கு எந்தக் கடமை விதிக்கப்பட்டதோ, அதை அந்த வர்ணத்தாரே

கடைப்பிடிக்க வேண்டும். மற்றவர் செய்யக் கூடாது. இதை மனதில் வைத்துக் கவனத்துடன் கர்மத்தைச் செய்யவேண்டும். இவ்வாறு வர்ண தர்மத்தின்படி விதிக்கப்பட்ட கடமைகளைத் தத்தம் தகுதிக்கும், விருப்பத்திற்கும் ஏற்ப மனிதர் எல்லோரும் ஆற்றவேண்டும். வர்ண தர்மத்தைத் தவிரவும் பிற மனிதப் பண்புகள் – நன்னடத்தை, பகவத் பக்தி ஆகிய வழிமுறைகளையும் எல்லோரும் கடைப்பிடிக்க வேண்டும்.

ஸாங்க்யயோக ஸாதனை புரிவதற்கான தகுதி ஸந்யாஸிகளைத் தவிர மற்ற ஆசிரமத்தாருக்குக் கிடையாது என்று சிலர் நினைக்கிறார்கள். இது யுக்திக்குப் பொருந்தாது. பகவான் ஸாங்க்யயோக நோக்கிலும்கூடப் போர் புரியுமாறு அர்ஜுனனுக்கு ஆணையிடுகிறார் *(2/18)*. ஸாங்க்யயோகம் ஸந்யாஸிக்கு மட்டும்தான் உகந்தது என்று பகவான் நினைத்திருந்தால் அர்ஜுனனை அந்த நிலையில்கூடப் போர் புரிய ஆணையிட்டிருக்க மாட்டார். ஸந்யாஸ ஆசிரமத்தில் உள்ளவர்கள் எந்தவிதக் கர்மங்களையும் செய்யவேண்டாம் என்னும்போது போர் என்ற கோரச் செயலைப் பற்றிய ப்ரஸ்தாபம் எப்படி வரும்? அர்ஜுனனோ ஸந்யாஸி அல்லர். அவனைப் பார்த்து ஞானிகளிடம் சென்று ஞானம் பெறுவாயாக என்று உபதேசிக்கிறார் *(4/34)*.

மேலும் *3/4*ல் கர்மங்களைச் செய்யாமல் துறப்பதால் ஸாங்க்யயோகம் கைகூடாது என்று கூறுகிறார். ஸாங்க்யயோகத்திற்குத் தகுதியுள்ளவர் ஸந்யாஸிகள் மட்டும்தான் என்று பகவான் நினைத்திருந்தால் ஸாங்க்யயோகி கர்மங்களைச் செய்யாமல் விட்டுவிட வேண்டும் என்று கூறியிருப்பார். கர்மங்களைச் செய்யாமல் விட்டால் மட்டும் ஸாங்க்யயோகம் கூடி வராது என்று கூறியிருக்க மாட்டார். இது மட்டுமன்று. *13/7* முதல் *11* வரை ஞான ஸாதனை பற்றிக் கூறும்போது மனைவி–மக்கள், செல்வம், வீடு இவற்றில் பற்றையும், மமகாரத்தையும் த்யாகம் செய்வதை ஒரு ஸாதனையாகச் சொல்கிறார் – **'அஸக்திரநபி₄ஷ்வங்க₃: புத்ரத₃ாரக்₃ருஹாதி₃ஷு'**. மனைவி–மக்கள், செல்வம், வீடு இவற்றில் தொடர்பு இருந்தால்தானே, அவற்றைக் குறித்த பற்று மற்றும் மமதை இவற்றை த்யாகம் செய்ய வேண்டும் என்று சொல்ல வேண்டி வரும். ஸந்யாஸ ஆசிரமத்தில்தான் இவற்றின் தொடர்பு கிடையாதே! இந்த நிலையில் ஸந்யாஸிகளுக்கு மட்டும்தான் ஞானயோக ஸாதனையில் தகுதி உண்டு என்றால், அவர்களுக்கு இந்தப் பற்று, மமகாரம் ஆகியவற்றை த்யாகம் செய்யவேண்டும் என்று சொல்லத் தேவையில்லை.

மூன்றாவது விஷயம் – பதினெட்டாவது அத்யாயத்தில் அர்ஜுனன் முக்யமாக ஸந்யாஸம், த்யாகம் இவற்றைப் பற்றிக் கேள்வி கேட்கிறார். அங்கு ஸந்யாஸம் என்ற இடத்தில் ஸாங்க்யயோகத்தையே வர்ணிக்கிறார் *(13* முதல் *40* வரை). ஸந்யாஸ ஆசிரமத்தைப் பற்றிய பேச்சே இல்லை. ஸந்யாஸம் என்ற சொல்லுக்கு ஸந்யாஸ ஆசிரமம் என்ற பொருளோ அல்லது ஸாங்க்யயோகத்திற்குத் தகுதி பெற்றவர் ஸந்யாஸிதான் என்ற எண்ணமோ, பகவானிடம் இருந்திருந்தால் அதை இங்கு அவர் தெளிவாகச் சொல்லியிருப்பார். ஆகவே ஸாங்க்யயோகத்தில் ஈடுபடுவதற்கு ஸந்யாஸி, இல்லறத்தார் இருவருக்கும் தகுதி ஸமம்தான் என்பது தெளிவு. ஸாங்க்யயோக ஸாதனை புரிவதற்கு ஸந்யாஸ ஆசிரமத்தில் ஸௌகர்யங்கள் அதிகம். இந்த நோக்கில் இல்லறத்தைக் காட்டிலும் ஸாங்க்யயோக ஸாதனை புரிவதற்கு ஸந்யாஸ ஆசிரமம் அதிகப் பொருத்தமானது என்று கூற இயலும்.

கர்மயோக ஸாதனையில் கர்மம் முக்யமானது. தனது வர்ணத்திற்கு ஏற்பட்ட கடமைகளை ஆற்றியே தீரவேண்டும் என்ற கட்டாயம் உண்டு *(3/8; 18/45,46)*. அது மட்டுமன்று. கடமைகளை ஆற்றாமல் விடுவது கர்மயோகத்திற்குத் தடை ஆகும் *(3/4)*. ஆகவே ஸந்யாஸ ஆசிரமத்தில் கர்மத்திற்கு முக்யத்வம் உள்ள கர்மயோகத்தைக் கடைப்பிடிப்பது ஸாத்யமன்று. ஏனெனில் ஸந்யாஸ ஆசிரமத்தில் பொருட்களையும், யாகம், தானம் முதலிய கர்மங்களையும் துறக்க வேண்டியிருக்கிறது. ஆனால் பகவானை பக்தி செய்வது எல்லா ஆசிரமங்களிலும் முடியும். எனவே, பக்தியை முக்யமாகக் கொண்ட கர்மயோகத்தை எல்லா ஆசிரமத்தாரும் கடைப்பிடிக்கலாம்.

சிலருக்கு கீதை பற்றி ஒரு தவறான எண்ணம் இருக்கிறது. கீதை ஸாதுக்களுக்கும், ஸந்யாஸிகளுக்கும்தான் உரியது. அது இல்லறத்தாருக்கு உபயோகப்படாது என்று நினைத்து கீதையைப் படித்துவிட்டு இல்லறத்தைத் துறந்து விடுவார்களோ என்று பயந்து சிறுவர்களுக்கு கீதை கற்றுத்தர அஞ்சுகிறார்கள். இது முற்றிலும் தவறான கருத்து. மேலே சொன்னவற்றைக் கவனித்தால் இது தவறு என்பது புரியும். மோஹத்தின் காரணமாக தம்முடைய க்ஷத்ரிய தர்மத்தை விடுத்துப் பிச்சை எடுத்துப் பிழைப்பேன் என்று துணிந்துவிட்ட அர்ஜுனனுக்கு இந்த ரஹஸ்யம் நிறைந்த கீதையை உபதேசம் செய்து, பகவான் அர்ஜுனனை வாழ்க்கை முழுவதும் இல்லறத்தில் ஈடுபடுத்திக் கடமைகளை ஆற்றச் செய்தார் என்றால் இந்த கீதையில் இத்தகைய விபரீதமான கருத்து எப்படி இருக்க முடியும் என்பதை ஆலோசிக்க வேண்டும். இது மட்டுமன்று. கீதையை உபதேசித்த பகவான் **ஸ்ரீ**க்ருஷ்ணன் இந்த பூமியில் அவதாரம் எடுத்து, தாம் இருந்தவரை கடமைகளைச் சரிவர ஆற்றி வந்தார். நல்லோரைக் காத்துத் தீயோரை மாய்த்துக் கரையேற்றி, அறம் ஓங்கச் செய்தார். தர்மத்தை நிலைநாட்டினார். அது மட்டுமன்று. அவரே கூறுகிறார்: "நான் கவனமாகக் கடமைகளை ஆற்றாமல் விட்டால் மக்கள் என்னைப் பின்பற்றித் தம் கடமைகளை ஆற்றாது சோம்பேறிகளாகி விடுவர். உலகக் கட்டுக்கோப்பு சீர்குலைந்துவிடும். அதற்கான பொறுப்பு என் தலை மீது விழும்" *(3/23,24)* என்கிறார். இதிலிருந்து கீதை ஸந்யாஸிகளுக்காக மட்டும் ஏற்பட்டதன்று. எல்லா வர்ணத்தாருக்கும், ஆசிரமத்தாருக்கும் பொதுவானது என்பது புரியும். எல்லோரும் தத்தம் வர்ணாசிரமத்திற்குரிய கடமைகளைக் கடைப்பிடித்து ஸாங்க்யம் அல்லது யோகம் என்ற இரண்டு நிஷ்டைகளில் தமது தகுதிக்கேற்றவாறு ஒன்றில் நிலைத்து ஸாதனை புரியவேண்டும் என்பதுதான் முடிவு.

கீதையில் பக்தி

கீதையில் பக்தி, ஞானம், கர்மம் அனைத்துமே தெளிவாக ஆராயப்பட்டுள்ளன. எல்லா வழிகளிலும் செல்பவர்களுக்கு இங்கு விருப்பம்போல வேண்டியன கிடைக்கும். ஆனால், அர்ஜுனன் பகவானுடைய பக்தன். எல்லா விஷயங்களையும் விளக்குகின்ற பகவான், பக்தி ப்ரதானமான கர்மயோகத்தைத்தான் அர்ஜுனன் கடைப்பிடிக்க வேண்டுமென்று வலியுறுத்துகிறார் *(3/30; 8/7; 12/8; 18/57,62,65,66)*. சிற்சில இடங்களில் கர்மத்தைச் செய்யவேண்டும் என்றும் கூறுகிறார் *(2/48,50; 3/8,9,19; 4/42; 6/46; 11/33,34)*. அங்கு கூடப் பிற இடங்களிலிருந்து பக்தியை இணைத்துக் கொள்ளத்தான் வேண்டும். *4/34*ல் அர்ஜுனனை பகவான் ஞானிகளிடம் சென்று ஞானம் பெற்றுக் கொள் என்று கூறும் போதும் ஞானத்தைப் பெறும் முறையை அர்ஜுனனுக்கு எச்சரிக்கையாகவே கூறுகிறார். உண்மையில் பகவானுடைய எண்ணம் அர்ஜுனன் வேறொருவரிடம் சென்று ஞானம் பெற்று வரவேண்டும் என்பதற்காக அவரை அனுப்புவது அன்று. அர்ஜுனனும் எங்கும் சென்று ஞானம் பெற்று வரவில்லை. ஆரம்பம், முடிவு (உபக்ரமம், உபஸம்ஹாரம்) என்ற வகையில் பார்த்தாலும் கீதையின் முடிவு ஶரணாகதியில்தான் உள்ளது. அதற்காகவே 'அஶோச்யானந்வஶோசஸ்த்வம்' *(2/11)* என்று கீதா உபதேசத்தை ஆரம்பிக்கிறார். இந்த ஆரம்பத்தின் வித்து 'கார்பண்யதோ3ஷோபஹதஸ்வபா4வ:' *(2/7)* என்கிற அர்ஜுனனின் கூற்றில் உள்ளது. 'ப்ரபந்நம்' *(2/7)* என்பதில் ஶரணாகதியின் பொருள் தெளிவாகத் தெரிகிறது. ஆகவே 'ஸர்வத4ர்மாந் பரித்யஜ்ய' *(18/66)* என்று ஶரணாகதியில்தான் தம் உபதேசத்தை நிறைவு செய்கிறார்.

கீதையில் பக்தியைப் பற்றிப் பேசாத ஓர் அத்யாயம் கூடக் கிடையாது. (உ-ம்) *2/61; 3/30; 4/11; 5/29; 6/47; 7/14; 8/14; 9/34; 10/9; 11/54; 12/2; 13/10; 14/26; 15/19; 16/1* (இதில் 'ஜ்ஞாநயோக3வ்யவஸ்தி2தி:' என்று பகவான் த்யானம் செய்வது பற்றிச் சொல்கிறார்), *17/27; 18/66*. ஒவ்வொரு அத்யாயத்திலும் பக்தி பற்றிச் சொல்கிறார். அத்யாயம் ஏழு முதல் பன்னிரண்டு வரை பக்தியோகமே நிறைந்து இருக்கிறது. ஆகவே, அந்த ஆறு அத்யாயங்களை மட்டும் பக்தி ப்ரதானம் என்றே கூறுகின்றனர். இங்கு உதாரணத்திற்காக ஒவ்வொரு அத்யாயத்திலும் ஒவ்வொரு ச்லோகம் எடுத்துக் காட்டப்பட்டது.

இவ்விதம் ஞானத்தைப் பற்றிச் சிறப்பாகப் பேசும் ச்லோகங்களும் பல அத்யாயங்களில் வருகின்றன. உதாரணமாக 2/29; 3/28; 4/24; 5/13; 6/29; 8/13; 9/15; 12/3; 13/34; 14/19; 18/49 – இந்த ச்லோகங்களைக் கவனிக்கவும். இவற்றோடு 2,5,13,14,18வது அத்யாயங்களில் ஞானம் பற்றிச் சிறப்புரைகள் அதிகம் காணக் கிடைக்கின்றன.

கீதையில் பக்தியையும், ஞானத்தையும் பற்றிய ரஹஸ்யங்கள் வெளிப்படுத்தப்பட்டுள்ள அளவு கர்மத்தின் ரஹஸ்யங்களும் வெளிப்படையாகச் சொல்லப்பட்டுள்ளன. 2/39–53, 3/4–35, 4/13–32, 5/2–7, 6/1–4 ஆகிய ச்லோகங்களில் கர்மத்தின் ரஹஸ்யங்களே நிரம்பியுள்ளன. அதிலும் 2/47, 4/16,17,18 ஆகிய ச்லோகங்களில் கர்ம ரஹஸ்யம் சிறப்பாக விளக்கப்பட்டுள்ளது. மற்ற இடங்களிலும் கர்மத்தைப் பற்றிய விவரங்களைக் காணலாம்.

இங்கு முன்னுரையில் அதிக இடமின்மையால் மேலும் சான்றுகள் காட்டப்படவில்லை. கீதையில் பக்தி மட்டுமன்று. ஞானம், கர்மம், பக்தி மூன்றுமே நன்றாக விளக்கப்பட்டுள்ளன.

ஸகுண–நிர்குண உபாஸனையும், தத்வமும்

தான் வேறு பரமாத்மா வேறு என்று நினைத்தும் உபாஸனை செய்யலாம். தானும், பரமாத்மாவும் ஒன்றே என்றும் உபாஸனை செய்யலாம். இரண்டுக்கும் பயன் ஒன்றுதான் என்று முன்பே சொன்னோம். பகவானை வேறு என்று உபாஸிப்பவனுக்கு பகவான் உருவம் உள்ளவராக தர்சனம் அளிக்கிறார். இவ்வுடல் பிரிந்த பிறகு பக்தன் பகவானின் பரமபதத்தை அடைவான். ஆனால் அபேத பாவனையுடன் உபாஸனை புரிபவன், தானே ப்ரம்மம் ஆகிவிடுகிறான். அவன் போவதும் இல்லை, வருவதும் இல்லை என்று சொன்னால் இரண்டுக்கும் பயன் ஒன்றுதான் என்று எப்படிச் சொல்ல முடியும் என்ற கேள்வி உண்டு. கேள்வியும் சரிதான். அதற்குப் பதிலும் உண்டு. இரண்டையும் எப்படிப் பொருத்துவது என்பதை இனி விவரிப்போம்.

ஸாதனைக் காலத்தில் ஸாதகன் எந்த மனப்பாங்குடனும், ச்ரத்தையுடனும் பரமாத்மாவை உபாஸிக்கிறானோ, அதை அனுஸரித்து அவன் பரமாத்மாவை அடைகிறான். இரண்டறக் கலந்து தன்னையே பரமாத்மாவாகப் பாவித்து உபாஸனை செய்பவனுக்கு இரண்டறக் கலந்துவிட்ட ப்ரம்மநிலை கிடைத்துவிடுகிறது. பகவான் உபாஸிக்கப்பட வேண்டியவர், வேறானவர் என்று கருதி உபாஸிப்பவனுக்கு பகவானும் தனியாக நின்று காட்சியருளுகிறார். ஸாதகனுடைய கொள்கைப்படி பகவான் வெவ்வேறு ஸ்வரூபங்களில் அவனால் அடையப் பெறுகிறார்.

பேத உபாஸனை, அபேத உபாஸனை இரண்டுமே பகவானுக்குரிய உபாஸனைகள்தாம். ஏனெனில், பகவான் ஸகுணர்–நிர்குணர், உருவமுள்ளவர்–உருவமற்றவர், வெளிப்பட்டவர்–தோன்றா நிலையிலிருப்பவர். எல்லாமே அவர்தான். பரமாத்மாவை நிர்குணர் என்றும், உருவமற்றவர் என்றும் நினைப்பவனுக்கு அப்படியே விளங்குகிறார் (12/3). ஸகுணர் ஆனால் உருவமற்றவர் என்பவனுக்கு அப்படியே விளங்குகிறார் (8/9). ஸர்வவல்லமை படைத்தவர்; எல்லாவற்றிற்கும் ஆதாரமானவர்; எங்கும் நிறைந்தவர்; எல்லோரையும்விடச் சிறந்தவர்: எல்லாவித கல்யாண குணங்களும் நிறைந்தவர் (15/15,17,19‡) என்று நினைப்பவர்களுக்கு ஸகல குணங்களும் நிறைந்தவராகக் காட்சி அளிக்கிறார். எவன் பகவானை எல்லாமாகவும் கொண்டாடுகிறானோ, அவனுக்கு அவர் எல்லாமானவர் (7/7–12; 9/16–19). எவன் பகவானை ஸகுணராகவும், உருவமுள்ளவராகவும் பாவிக்கிறானோ, அவனுக்கு பகவான் அந்தந்த உருவமுள்ளவராகக் காட்சி அளிக்கிறார் (4/8, 9/26).

மேலே கூறியது பொருத்தம்தான். ஆயினும் அடிப்படைக் கேள்விக்குச் சரியான பதில் சொல்லவில்லை. ஸந்தேஹம் அப்படியே தொடர்கிறது. பகவான் வெவ்வேறு ரூபங்களில் தர்சனம் கொடுப்பாரானால் எல்லோருக்கும் ஒரேவிதமான பயன் என்பது எப்படிப்

---

‡ மேலே சொன்ன ச்லோகங்களில் பகவானுடைய சிறப்பான பண்புகள் வர்ணிக்கப்படுகின்றன. அதனால்தான் 15/15ன் உரையில் 'அபோஹநம்' என்ற சொல்லுக்குப் பொருள் அறிவு, நினைவு இவற்றின் அழிவு என்று கூறாமல் ஸந்தேஹம், விபரீத எண்ணங்களைப் போக்குதல் என்று கூறுகிறோம்.

பொருந்தும் என்பதுதான் ஸந்தேஹம். இதற்குப் பதில் பரமாத்மா ஸாதகனுக்கு அவனுடைய மனப்பாங்குக்கு ஏற்றவாறு அருள்வார். பிறகு, பகவானுடைய உண்மையான தத்வத்தை அறிந்த பிறகு அதை வாய்விட்டுச் சொல்ல முடியாது. சொற்களால் விவரிக்க முடியாது. பேதமாகவோ, அபேதமாகவோ எவ்விதமாகப் பரமாத்மாவை உபாஸித்தாலும், அதன் முடிவான பயன் ஒன்றாகத்தான் இருக்க முடியும். இதைத் தெளிவாகத் தெரிவிக்கவே பகவான் அபேத உபாஸகர்களுக்குத் தம்மை அடைவது பயன் என்று கூறினார் (12/4; 14/19; 18/55). பேதோபாஸனை செய்பவன் ப்ரம்மத்தை அடைவான் என்றார் (14/26). நிரந்தரமான அமைதியை அடைவான் (9/31). ப்ரம்மத்தை அறிவான் (7/29). அழிவற்ற சாச்வதப் பதத்தை அடைவான் (18/56) என்றெல்லாம் கூறினார். அபேத உபாஸனைக்கும், பேத உபாஸனைக்கும் ஒரே பயன்தான் என்பதைத்தான் இப்படிப் பல முறைகளில் சொன்னார்.

பேதோபாஸகனோ, அபேதோபாஸகனோ அடையவேண்டிய நிலை – உண்மைப் பொருள் ஒன்றுதான். அதைத்தான் பரமசாந்தி, சாச்வத நிலை (18/62), பரமதாமம் (15/6), அம்ருதம் (13/12), மாம் (என்னை) (9/34), பரமகதி (8/13), ஸம்ஸித்தி (18/45), அவ்யயபதம் (அழிவற்ற இடம்) (15/5), ப்ரஹ்ம நிர்வாணம் (5/24), நிர்வாண பரமசாந்தி (6/15) என்று ஆங்காங்கே தனித்தனிப் பெயரிட்டு அழைக்கிறார். இவற்றைத் தவிர வேறு சொற்களும் கீதையின் அந்த முடிவான பயனைக் குறிப்பிடப் பயன்படுத்தப்படுகின்றன. எல்லா ஸாதனைகளுக்கும் பயன் அந்தப் பரம்பொருள் என்று சொல்வதைத் தவிர வேறு ஒன்றும் சொல்ல இயலாது. அது சொல்லுக்கு அப்பாற்பட்டது. அதை அடைந்தவருக்குத்தான் அது என்ன என்பது தெரியும். அவரும் வாய்விட்டுச் சொல்ல முடியாது. அதோ என்று மரக்கிளையில் (இல்லாத) சந்த்ரனைக் காண்பிப்பதுபோல, அதன்பால் திசைகாட்டத்தான் முடியும். ஆகவே, எல்லா ஸாதனைகளாலும் பெறக்கூடிய பயனான முக்யப் பொருள் அந்த பரமாத்மா ஒருவர்தான் என்பது யுக்திக்கும் பொருத்தம்தான்.

பரமாத்மாவின் இந்த உண்மைத் தத்வம் உலகியலுக்கு அப்பாற்பட்டது; மிகவும் ரஹஸ்யமானது; மறைத்துப் போற்றப்பட வேண்டியது. யார் அதை அடைந்துவிட்டாரோ அவர் அதை அறிவார். இப்படிச் சொல்வதுகூட அதைப் பற்றித் திசை காட்டுவதுதான். யுக்தியுடன் ஆராய்ந்து பார்த்தால் இப்படிச் சொல்வதும் பொருந்தாது.

கீதையில் ஸமபாவனை

கீதையில் ஸமபாவனை முக்யமாகப் பேசப்படுகிறது. பகவானை அடைந்தவனுடைய உரைகல் இந்த ஸமபாவனைதான். ஞானம், கர்மம், பக்தி என்ற மூன்று வழிகளிலும் ஸாதனைக்கு அவசியமானது ஸமபாவனைதான். இந்த மூன்று வழிகளாலும் பரமாத்மாவை அடைந்துவிட்டவர்களுக்குத் தனிப்பட்ட இலக்கணம் இந்த ஸமபாவனைதான். ஸாதனையும் ஸமபாவனையில்லாமல் பூர்த்தியாகாது. அது இல்லாமல் ஸித்தியும் ஏற்படாது. ஸமபாவனை இல்லாதவன் எப்படி ஸித்தன் ஆகமுடியும்? 'ஸமத்வம் யோக உச்யதே' என்ற சொல்லைக் கொண்டு ஞானமார்க்க ஸாதகர்களில் ஸமபாவனை உள்ளவருக்குத்தான் அம்ருதத்வம் (இறவாப் பெருநிலை) கிடைக்கும் (2/15) என்று சொல்லப்படுகிறது. அவன்தான் முக்திக்குத் தகுதி பெறுகிறான் என்கிறார். 'ஸித்த்யஸித்த்யோ: ஸமோ பூத்வா ஸமத்வம் யோக உச்யதே' (2/48). ஸித்தி, அஸித்திகளில் ஸமமாக இருக்கவேண்டும். ஸமத்வமேதான் யோகம் என்று கர்மயோக ஸாதனை புரிபவரும் ஸமபாவனையுடன் கர்மம் செய்யவேண்டும் என்று ஆணையிடுகிறார். பக்திமார்க்க ஸாதகரும் இந்தப் பண்புகளை மேற்கொள்ள வேண்டும் என்று கூறுகிறார் (12/20). இவ்விதமே குணாதீதனான ஸித்த ஞானயோகியின் இலக்கணங்களில் ஸமத்வத்தை முக்யமாகக் கூறியுள்ளார் (14/24,25). ஸித்த கர்மயோகியைத்தான் ஸமபுத்தியுள்ளவன் என்கிறார் (6/7–9). ஸித்த பக்தர்களின் இலக்கணத்திலும் ஸமத்வம் காணப்படுகிறது (12/18,19). இந்த ஸமபாவனை என்ற தத்வத்தை எளிய முறையில் புலப்படுத்துவதற்காக பகவான் கீதையில் எல்லா ப்ராணிகளிலும், செயல்களிலும், மனப்பாங்கிலும், பொருட்களிலும் ஸமபாவனையைப் பலவிதமாக விளக்கி இருக்கிறார். அதாவது—

மனிதர்களிடையே ஸமத்வம்

ஸுஹ்ருந்மித்ரார்யுதா3ஸீநமத்4யஸ்த2த்3வேஷ்யப3ந்து4ஷு ।
ஸாது4ஷ்வபி ச பாபேஷு ஸமபு3த்3தி4ர்விஶிஷ்யதே ॥ *(6/9)*

நண்பர்கள், பகைவர்கள், ஒருசார்பற்றவர், நன்மனம் படைத்தவர், நல்லோர், மத்தியஸ்தர், வெறுக்கத்தக்கவர், உறவினர்கள், தீயோர்கள், இவர்களிடமும்கூட ஸமபாவனை வைத்திருப்பவன் சாலச் சிறந்தவன்.

மனிதர்களிடமும், விலங்குகளிடமும் ஸமபாவனை

வித்3யாவிநயஸம்பந்நே ப்3ராஹ்மணே க3வி ஹஸ்தினி ।
ஶுநி சைவ ஶ்வபாகே ச பண்டி3தா: ஸமத3ர்ஶிந: ॥ *(5/18)*

கல்வியும், பணிவும் உடைய அந்தணனையும், பசுவையும், யானையையும், நாயையும் மேலும் சண்டாளனையும் கூட ஞானிகள் ஸமமாகப் பார்ப்பார்கள்.

எல்லா உயிரினங்களிடமும் ஸமபாவனை

ஆத்மௌபம்யேந ஸர்வத்ர ஸமம் பஶ்யதி யோऽர்ஜுந ।
ஸுக2ம் வா யதி3 வா து3:க2ம் ஸ யோகீ3 பரமோ மத: ॥ *(6/32)*

அர்ஜுன! எந்த ஒரு யோகி தன்னைப் போல அனைத்து உயிரினங்களையும் ஸமமாகப் பார்க்கிறானோ, மேலும் ஸுகத்தையும், துக்கத்தையும் அனைத்திலும் ஸமமாகப் பார்க்கிறானோ, அவனே சிறந்த யோகியாகக் கருதப்படுகிறான்.

பல இடங்களில் **ஶ்ரீ** பகவான் தனி மனிதர், செயல், பொருட்கள், மனப்பாங்கு இவற்றில் ஸமபாவனையையும் சேர்த்தே கூறுகிறார்—

ஸம: ஶத்ரௌ ச மித்ரே ச ததா2 மாநாபமாநயோ: ।
ஶீதோஷ்ணஸுக2து3:கே2ஷு ஸம: ஸங்க3விவர்ஜித: ॥ *(12/18)*

பகைவரிடமும், நண்பரிடமும், பெருமையிலும், சிறுமையிலும், தட்பத்திலும், வெப்பத்திலும், ஸுகத்திலும், துக்கத்திலும் ஸம புத்தியுடன் பற்றற்று இருக்கிறவனே பக்தன்.

இங்கு பகைவர்–நண்பர் என்ற தொடர் தனி மனிதர்களைக் குறிக்கிறது. மானம்–அவமானம் என்பது பிறரால் ஏற்படும் செயல்கள். தட்பம்–வெப்பம் என்பது பொருட்களின் தன்மைகளை விளக்குகின்றது. ஸுகம்–துக்கம் என்பது மனப்பாங்கைக் குறிக்கிறது.

ஸமது3:க2ஸுக2: ஸ்வஸ்த2: ஸமலோஷ்டாஶ்மகாஞ்சந: ।
துல்யப்ரியாப்ரியோ தீ4ரஸ்துல்யநிந்தா3த்மஸம்ஸ்துதி: ॥ *(14/24)*

எப்பொழுதும் இடைவிடாது ஆத்ம ஸ்வரூபத்திலேயே உள்ளவன்; இன்ப–துன்பங்களை ஸமமாகக் கருதுபவன்; மண்ணையும், கல்லையும், பொன்னையும் ஸமமாகக் கருதுபவன்; வேண்டியவனையும், வேண்டாதவனையும் ஸமமாகக் கணிப்பவன்; தனக்கு வரும் இகழ்ச்சியையும், புகழ்ச்சியையும் ஒன்றெனக் கருதுபவன் (அவனே குணாதீதன்).

இதில் ஸுக–துக்கம் என்பது மனப்பாங்கு; பொன்னும், மண்ணும் பொருட்கள்; இகழ்ச்சியும், புகழ்ச்சியும் பிறரால் ஏற்படுவன, வேண்டியது, வேண்டாதது என்பவை ப்ராணிகள், மனப்பாங்கு, பொருள், பிறர் செயல் இவை எல்லாவற்றையும் குறிக்கின்றன.

இவ்விதம் எங்கும் ஸமநோக்குடையவர், நடைமுறையில் வெறும் பேச்சில் நான், எனது என்று சொன்னாலும் எல்லாவற்றிலும் ஸமமாகப் பழகுவார். முழுமையான ப்ரபஞ்சத்திலும் இப்படி ஸமபாவனை இருந்துவிட்டால், அவர் ஸமத்வ புத்தியுடையவர். அவரே உண்மையான ஸாம்யவாதி (ஸம தர்மத்தைக் கடைப்பிடிப்பவர்).

கீதையின் ஸாம்யவாதத்திற்கும், இன்று பேசப்படும் ஸாம்யவாதத்திற்கும் மிகுந்த வேறுபாடு உண்டு.

இன்றைய ஸாம்யவாதி	கீதையின் ஸாம்யவாதி
1. பகவானுக்கு விரோதமானவர்.	1. எங்கும் பகவானைப் பார்ப்பவர்.
2. தர்மத்தை அழிப்பவர்.	2. ஒவ்வொரு நிலையிலும் தர்மத்தைப் பேணுபவர்.
3. ஹிம்ஸையே உருவானவர்.	3. அஹிம்ஸையின் ஆதர்ச புருஷர்.
4. தன்னலவாதி.	4. தன்னலத்தைத் தன்னிடம் அணுகவே விட மாட்டார்.
5. உணவு, உடைப் பழக்கங்களில் வெளிப்படையாக ஸமபாவனை காட்டிவிட்டு உள்ளத்தில் வேற்றுமை பாராட்டுவார்.	5. உணவு, ஸ்பர்சம் இவற்றில் சாஸ்த்ர முறைப்படி உலகியலில் சில வேற்றுமைகளைப் பாராட்டினாலும் உள்ளத்தில் வேற்றுமை பாராட்டுவதில்லை. மேலும் எங்கும் பரமாத்மாவையே ஸமமாகப் பார்ப்பதற்கு வழி காட்டுகிறார்.
6. லக்ஷ்யம் உலகாயதப் பொருளை அடைவதே.	6. லக்ஷ்யம் பரம்பொருளை அடைவதே.
7. தன் கட்சியில் பிடிப்பும், பிறரைப் பொருட்படுத்தாமையும் உண்டு.	7. அபிமானமே கிடையாது, எங்கும் பரமாத்மாவையே பார்த்து எல்லோரையும் மதிப்பார்.
8. வெளி நடத்தை முக்யம்.	8. உள்ள மனப்பாங்குதான் முக்யம்.
9. உலகியல் இன்பத்தில் நாட்டம்.	9. ஆன்மிக ஸுகத்தில் நாட்டம்.
10. பிறர் செல்வத்திலும், கொள்கையிலும், கருத்திலும் பொறாமை.	10. ஸமமான பரந்த மனப்பான்மை.
11. விருப்பு–வெறுப்பு உண்டு.	11. எல்லோரிடமும் விருப்பு–வெறுப்பில்லாத ஸமமான நடைமுறை.

ஜீவர்களின் கதி

ஜீவர்களுடைய குணங்களுக்கும், கர்மங்களுக்கும் ஏற்பச் சிறந்தது, நடுத்தரமானது, தாழ்ந்தது என்று மூன்றுவிதமான கதிகள் அவர்களுக்கு ஏற்படுகின்றன என்று கீதையில் கூறப்படுகிறது. கர்மயோகம், ஞானயோகம் என்ற நோக்கில் சாஸ்த்ரங்களில் விதிக்கப்பட்ட கடமைகளையும், உபாஸனையையும் செய்கின்ற ஸாதகர்களின் கதி 8/24ல் கூறப்பட்டது. அவர்களில் யோக ப்ரஷ்டர்களின் கதி 6/40 முதல் 6/45 வரை கூறப்படுகிறது. இறந்த பிறகு அவர்கள் ஸ்வர்கம் முதலிய லோகங்களை அடைகிறார்கள். வெகுகாலம் அந்த தேவலோகங்களில் ஸுகத்தை அனுபவித்துவிட்டு நல்ல நடத்தையுள்ள சீமான்களின் வீட்டில் பிறப்பார்கள். அல்லது ஸ்வர்கம் புகாமல் யோகிகளின் குலத்தில் பிறப்பார்கள். அங்கு முன் செய்த பயிற்சியின் விளைவாக யோக ஸாதனையில் ஈடுபட்டுப் பரமகதியை அடைவார்கள் என்று கூறப்படுகிறது.

விதிக்கப்பட்ட கடமைகளையோ, உபாஸனையையோ பயனில் பற்று வைத்துச் செய்பவர்களின் கதி 9/20,21களில் கூறப்படுகிறது. அங்கு ஸ்வர்கத்தை விரும்பி யக்ஞும் முதலான வேதத்தில் கூறப்பட்ட கர்மங்களைச் செய்பவர்கள் ஸ்வர்கலோகத்திலுள்ள போகங்களைப் பெறுவார்கள். புண்யங்கள் தீர்ந்ததும் மறுபடியும் மனித உலகிற்குத் தள்ளப்படுவார்கள் என்று கூறப்படுகிறது. அவர்கள் எவ்விதம், எவ்வழியில் ஸ்வர்கத்தை அடைவார்கள் என்பதைப் பற்றி 8/25ன் உரையில் விரிவாகக் காணலாம்.

14/14,15,18வது ச்லோகங்களில் பொதுவாக எல்லோருடைய கதியும் சுருக்கமாகக் கூறப்படுகிறது. ஸத்வகுணம் மிகுந்து இறப்பவர்கள் உத்தமலோகத்தை அடைவார்கள். ரஜோகுணம் மிகுந்து இறப்பவர்கள் மனித உலகில் பிறப்பார்கள். தமோகுணம் மிகுந்து

இறப்பவர்கள் விலங்கு, பகூஷி, புழு, பூச்சி, மரம், செடி, கொடி முதலிய ஈனப்பிறவிகளாகப் பிறப்பார்கள். ஸத்வகுணமுடையோர் இறந்ததும் மேல் உலகங்களிலும், ரஜோ குணமுடையோர் இறந்ததும் மனித உலகிலும், தமோகுணமுடையோர் இறந்ததும் நரகத்திலும், மேலும் புழு-பூச்சி முதலிய ஈனப்பிறவிகளிலும் பிறக்கிறார்கள். *16/19,20* ச்லோகங்களில் அஸுர ப்ரக்ருதி உடைய தாமஸ மனிதர்களைப் பற்றிக் கூறும்போது, 'அவர்களை நான் மறுபடியும், மறுபடியும் அஸுரப்பிறவிகளிலும், இழிந்த நாய், பன்றி முதலிய பிறவிகளிலும் வீழ்த்துகிறேன். பிறகு அவர்கள் கோர நரகத்தில் வீழ்வார்கள்' என்று கூறுகிறார். இவ்வாறு, இன்னும் பல இடங்களில் குணங்களுக்கும், கர்மங்களுக்கும் ஏற்றவாறு கீதையில் ஜீவர்களின் போக்கை விவரிக்கிறார். ஸாங்க்யயோகம், கர்மயோகம் இவற்றின் பயனாக முக்தி கிடைக்கிறது என்ற ஸந்தர்பங்களில் முக்தர்களின் கதியை ஆங்காங்கே விரிவாகக் கூறுகிறார். ஜீவன்முக்தர் எங்கும் போவதும் இல்லை, வருவதும் இல்லை. அவர் இங்கேயே பரமாத்மாவை அடைவார்.

கீதை கூறும் சில முக்யமான விஷயங்கள்

(1) குணங்களை அடையாளம் கண்டு கொள்வது

கீதையில் ஸாத்விக, ராஜஸ, தாமஸப் பொருட்கள், மனப்பாங்குகள், செயல்கள் இவை முக்யமாக இனம் பிரித்துக் கூறப்படுகின்றன. அவை வருமாறு—

அ) எந்த மனப்பாங்கில், செயலில் தன்னலம் சிறிதுகூட இல்லையோ, பற்றும், மமகாரமும் இல்லையோ, எதன் பயன் பகவானை அடைவதோ அது ஸாத்விகம் ஆகும்.

ஆ) எந்த மனப்பாங்கில் அல்லது செயலில் பேராசை, தன்னலம், பற்று இவை உள்ளனவோ, எதன் பயன் கணப்பொழுது ஏற்படும் உலகியல் இன்பமோ, விளைவில் துயரமோ அது ராஜஸம் ஆகும்.

இ) எந்த மனப்பாங்கில் அல்லது செயலில் ஹிம்ஸை, மோஹம், தடுமாற்றம் உள்ளனவோ, எதன் விளைவுகள் துன்பமும், அஞ்ஞானமுமோ அது தாமஸம் ஆகும்.

இவ்விதம் மூன்றுவிதமான மனப்பாங்குகள், செயல்கள் இவற்றின் வேறுபாடுகளைக் கூறி, பகவான் ஸாத்விகமான மனப்பாங்கையும், செயல்களையும் ஏற்றுக் கொள்ளவேண்டும் என்றும், ராஜஸ, தாமஸ மனப்பாங்கையும், செயல்களையும் தவிர்க்கவேண்டும் என்றும் ஆணையிடுகிறார்.

(2) கீதையில் நடத்தையைக் காட்டிலும் மனப்பாங்கிற்குத்தான் முக்யத்வம்

உயர்ந்த நடத்தை, உயர்ந்த உள்ளப்பாங்கு இரண்டுமே மேன்மைக்குக் காரணம் என்றாலும் மனப்பாங்குக்குத்தான் கீதையில் முக்யத்வம் கொடுக்கப்படுகிறது. *2,12,14*வது அத்யாயங்களின் முடிவில் வரிசையாக ஸ்திதப்ரக்ஞன், பக்தன், குணாதீதன் இவர்களின் இலக்கணங்களைக் கூறும் இடங்களில் மனப்பாங்குக்குத்தான் முக்யத்வம் கொடுக்கப்படுகிறது *(2/55–71; 12/13–19; 14/22–25* ச்லோகங்களைப் பார்க்கவும்). *2,14*வது அத்யாயங்களில் அர்ஜுனன் நடத்தையை முக்யமாகக் கருதிக் கேள்வி கேட்கிறார். ஆனால் பகவான் அதற்கு மனப்பாங்கிற்கு முக்யத்வம் அளித்து விடை அளிக்கிறார்.

கீதையின் கருத்துப்படி பயனில் கருத்துடன் செய்யப்படும் யாகம், தானம், தவம், ஸேவை, பூஜை என்ற மிகச் சிறந்த கார்யங்களைக் காட்டிலும் நிஷ்காமமாகச் செய்யப்படுகின்ற போர், வாணிபம், விவசாயம், சில்பம், ஸேவை முதலிய சிறிய சிறிய செயல்கள்கூட முக்தியை அளிக்கக்கூடியனவாகையால் சிறந்தவை *(2/40,49; 12/12; 18/46)*. *4/24* முதல் *32* வரை கூறப்பட்டுள்ள பலவிதமான யக்ஞும் என்ற ஸாதனைகளில்கூட மனப்பாங்குதான் முக்திக்குக் காரணம் எனக் கூறப்படுகிறது.

கீதையும், வேதமும்

கீதை வேதங்களுக்குச் சிறப்பான மதிப்புக் கொடுக்கிறது. பகவான் தம்மையே ஸகல வேதங்களாலும் அறியத்தக்கவர்; தாமே வேதாந்தத்தை வகுப்பவர்; வேதங்களை அறிந்தவர்

என்று கூறி, வேதங்களின் பெருமையை உயர்த்திப் பேசுகிறார் (15/15). ஸம்ஸாரத்தை அரச மரமாக உருவகப்படுத்திக் கூறும்போது, 'வேருடன் கூடிய அந்த மரத்தின் தத்வத்தை அறிந்தவனே உண்மையில் வேதத்தின் தத்வமறிந்தவன்' என்று கூறுகிறார் (15/1). ப்ரபஞ்சத்திற்குக் காரணமான பரமாத்மாவுடன் கூட உலகின் உண்மை ஸ்வரூபத்தைத் தத்வரீதியாக அறிவதுதான் வேதங்களின் உட்கருத்து. 'வேதங்களில் எது வகுத்துப் பிரித்துச் சொல்லப்பட்டிருக்கிறதோ, அதையே நான் கூறுகிறேன்' (13/4) என்கிறார். இப்படித்தாம் சொல்வதற்கெல்லாம் சான்றாக வேதங்களை எடுத்துக்காட்டி பகவான் வேதங்களின் பெருமையை உயர்த்துகிறார். ருக்வேதம், யஜுர்வேதம், ஸாமவேதம் மூன்றும் தமது ஸ்வரூபமே என்று கூறி, மேலும் மதிப்பு அளிக்கிறார் (9/17). வேதங்கள் தம்மிடமிருந்தே வெளிப்பட்டன (3/15; 17/23) என்கிறார். பரமாத்மாவை அடைவதற்கான பல வழிகள் வேதங்களில் கூறப்பட்டுள்ளன (4/32). என்கிறார். வேதங்களில் வெறும் போகங்களைப் பெறும் ஸாதனங்கள் மட்டும் கூறப்படவில்லை. அப்படிச் சில விவேகமற்றவர்கள் நினைக்கிறார்கள். மாறாகத் தம்மை அடைவதற்கு ஒன்றல்ல, இரண்டல்ல, பல ஸாதனைகள் நிறைந்துள்ளன என்பதை பகவான் தெளிவாக விளக்கியுள்ளார். பகவான் பரமபதம் என்ற தம் ஸ்வரூபத்தை வர்ணிக்கும்போது வேதமறிந்தவர்கள், அதை 'அக்ஷரம்' (ஓம்) என்பார்கள் (8/11) என்று கூறுகிறார். ஆகவே, வேதங்களில் காம்ய கர்மங்கள் மூலம் அடையத்தக்க இவ்வுலக, பரலோக நிலையற்ற போகங்களின் விளக்கம் மட்டும் கூறப்படவில்லை. பரமாத்மாவின் அழியாத பெருநிலை பற்றிய தெளிவான விளக்கமும் உண்டு என்பது தெரிகிறது. இதிலிருந்து பகவான் வேதங்களுக்குச் சிறந்த மதிப்பளிக்கிறார் என்பதை அறியலாம்.

இங்கு ஒரு ஸந்தேஹம் எழுகிறது. பிறகு ஏன் பல இடங்களில் பகவான் வேதங்களைக் குறை கூறுகிறார்? உதாரணமாக, காம்ய கர்மம் செய்பவர்களை வேதவாதங்களில் ஈடுபடுகின்ற அவிவேகிகள் (2/42) என்று கூறுகிறாரே! வேதங்கள் முக்குணங்களால் ஆன உலகியல் போகங்களையும், ஸாதனைகளையும் கூறுகின்றன. அவற்றில் விருப்புக் கொள்ளாதே என்று அர்ஜுனனை எச்சரிக்கின்றாரே (2/45). மூன்று வேதங்களில் கூறப்பட்ட கர்மங்களை அடிப்படையாகக் கொண்டு ஆசையுடன் கர்மம் செய்பவர்கள் திரும்பத் திரும்பப் பிறந்து இறப்பார்கள். ஸம்ஸாரச் சுழலில் சிக்குவார்கள் (9/21) என்றெல்லாம் கூறுகிறாரே, அது எப்படிப் பொருந்தும்? இதற்குப் பதில்: மேலே சொன்ன கூற்றுகள் வேதங்களை இகழ்வது போலத்தான் தோன்றுகின்றன. உண்மையில் அவை வேத நிந்தை அல்ல. பயனில் கருத்துள்ள கர்மத்தைவிட நிஷ்காம கர்மத்திற்குத்தான் கீதையில் அதிகப் பெருமை கொடுக்கப்பட்டிருக்கிறது. பகவானை அடைவதற்கு அதுவே சிறந்த வழி, அவசியமானது என்றும் கூறுகிறார். ஆகவே, அதைவிடப் பயனில் கருத்துள்ள கர்மம் தாழ்ந்தது, அழிவது, சிற்றின்பத்தை அளிப்பது, விலக்கத்தக்கது என்றுதான் கூறுகிறார். செய்யத்தகாத பாவ கர்மங்களைப்போல அவற்றை இகழவில்லை. வேதங்களின் பயனைக் கடந்து செல்ல வேண்டுமென்பதற்குப் பொருள், காம்ய கர்மங்களை விலக்க வேண்டும் என்பதுதான் (8/28). ஆகவே, கீதையில் வேத நிந்தை கிடையாது. ஆங்காங்கு வேதங்களின் பெருமைதான் கூறப்படுகிறது.

கீதை மற்றும் ஸாங்க்ய தர்சனம், யோக தர்சனம்

கீதையில் ஸாங்க்யம் என்ற சொல் வருகிறது. அதற்குக் கபில முனிவரால் வகுக்கப்பட்ட ஸாங்க்ய சாஸ்த்ரம் என்று பொருள் என்று சிலர் நினைக்கிறார்கள். ஆனால் அது யுக்திக்குப் பொருந்தாது. கீதையில் தொடர்ந்து 13/19,20,21வது ச்லோகங்களிலும், மற்ற இடங்களிலும் ப்ரக்ருதி, புருஷன் என்ற சொற்கள் சேர்ந்தே வருகின்றன. இவை ஸாங்க்ய சாஸ்த்ரங்களில் வரும் முக்யமான சொற்கள். இதனால் கீதைக்குக் கபிலருடைய ஸாங்க்ய சாஸ்த்ரம் ஏற்புடையது என்று நினைக்கிறார்கள். அதுபோல 'யோக' என்ற சொல்லும் பதஞ்ஜலியின் யோக சாஸ்த்ரச் சொல்லாக நினைக்கிறார்கள். ஐந்தாவது அத்யாயத்தின் ஆரம்பத்திலும், மற்ற இடங்களிலும் ஸாங்க்யம் மற்றும் யோகம் என்ற சொற்கள் சேர்ந்தே

வருகின்றன. ஆகவே, இவை முறையே கபில ஸாங்க்யம் என்றும், பாதஞ்ஜல யோகமென்றும் நினைக்கிறார்கள். ஆனால், இது யுக்திக்குப் பொருந்தாது. கீதையில் கூறப்படும் ஸாங்க்யம் கபில ஸாங்க்யமன்று. கீதையில் கூறப்படும் யோகம் பதஞ்ஜலி யோகமுமன்று.

கீழே வருவனவற்றைக் கவனித்தால் இவை தெளிவாகத் தெரியும்.

(1) கீதையில் ஈசுவரனுக்கு என்ன மதிப்பீடோ, அந்த மதிப்பீடு ஸாங்க்ய தர்சனத்திற்கு ஒப்புதல் அன்று.

(2) ப்ரக்ருதி என்ற சொல் கீதையில் பல இடங்களில் வந்தாலும், கீதையின் ப்ரக்ருதிக்கும், ஸாங்க்யத்தில் வரும் ப்ரக்ருதிக்கும் மிகுந்த வேற்றுமை உண்டு. கபில ஸாங்க்யத்தின் ப்ரக்ருதி முக்குணங்களின் ஸமமான நிலையைக் கூறும். கீதையின் ப்ரக்ருதி முக்குணங்களுக்கும் காரணமானது. குணங்கள் ப்ரக்ருதியின் விளைவுகள் *(14/5)*. ஸாங்க்ய சாஸ்த்ரம் ப்ரக்ருதியை அநாதி – நித்யம் என்கிறது. கீதை ப்ரக்ருதியை அநாதி *(13/19)* என்று சொன்னாலும் நித்யம் என்று கூறுவதில்லை.

(3) கீதையின் 'புருஷனு'க்கும், ஸாங்க்ய சாஸ்த்ர 'புருஷனு'க்கும் இடையே மிகுந்த வேறுபாடு உண்டு. கபில மதத்தில் புருஷர்கள் பலர் உண்டு. கீதையில் வரும் ஸாங்க்ய புருஷன் ஒருவனே *(13/22,30; 18/20)*.

(4) கீதையில் கூறப்படும் முக்திக்கும், ஸாங்க்ய சாஸ்த்ரத்தில் கூறப்படும் முக்திக்கும் மிகுந்த வேற்றுமை உண்டு. ஸாங்க்ய மதத்தில் துக்கங்கள் முழுவதும் அழிவதே 'முக்தி' எனப்படும். கீதையின் முக்தியில் துக்கங்கள் அறவே முடிந்துவிடும் என்பது மட்டுமல்ல; பரமானந்த ஸ்வரூபனான பகவானை அடைவதும் உண்டு *(6/21,22)*.

(5) மேலே சொன்ன ஸித்தாந்த வேற்றுமை தவிர, பதஞ்ஜலியின் யோகசாஸ்த்ரத்தில் 'யோக' என்ற சொல்லுக்கு 'மனதின் செயல்பாட்டைத் தடை செய்வது' என்று பொருள். ஆனால் கீதையில் 'யோகம்' என்ற சொல் ஸந்தர்பத்தை அனுசரித்துப் பல பொருட்களில் உபயோகப்படுகிறது. *(2/53* உரையில் விவரம் காண்க.)

இவ்விதம் கீதை மற்றும் ஸாங்க்ய தர்சனம், யோக தர்சனம் இவற்றின் இடையே நிறைய ஸித்தாந்த வேறுபாடுகள் உள்ளன.

இந்த உரையின் பயன்

வெகுநாட்களாகவே பல நண்பர்கள், நான் என் கருத்துக்களுக்கு ஏற்றவாறு கீதைக்கு ஒரு விரிவான உரை எழுதவேண்டுமென வற்புறுத்தி வந்தார்கள். கீதைக்கு மதிப்பிற்குரிய பல ஆசார்யர்கள், ஸாதுக்கள், மஹாத்மாக்கள், சாஸ்த்ரங்களின் மர்மம் அறிந்தவர்களான வித்வான்கள் எழுதியுள்ள பல பாஷ்யங்கள், சிற்றுரைகள், பேருரைகள் ஏற்கனவே உள்ளன. அவை எல்லாமே பெருமதிப்புடையனவே. எல்லோரும் தத்தம் கண்ணோட்டத்தில் கீதையின் மர்மத்தை விளக்கி இருக்கிறார்கள். ஆனால் அவை பெரும்பாலும் ஸம்ஸ்க்ருதத்தில் உள்ளன. அறிஞர்களுக்கே புரியக்கூடியவை. ஆகவே எளிய மொழியில் எல்லோருக்கும் புரியும்படியாக, பயன்படும்படியாக கீதையின் உட்கருத்தை விளக்கி நான் ஓர் உரை எழுதவேண்டும் என நண்பர்கள் விரும்பினார்கள். இந்த நோக்கத்துடன், இதனால் எல்லோரையும் விட எனக்குத்தான் பயன் அதிகம் என்று நினைத்து, இக்கார்யத்தில் இறங்கினேன். ஆனால் மேலெழுந்தவாரியாக இது எவ்வளவு எளிது என்று தோன்றியதோ, கார்யத்தில் இறங்கின பிறகுதான், இது எவ்வளவு கடினமானது என்பது புரிந்தது.

என்னுடைய ஆற்றலையும், தகுதியையும் கணித்துப் பார்த்தால், இந்த என் முயற்சி தகுதிக்கு மீறிய துணிச்சல்தான் என்பது புரியும். பிறப்பினால் நான் ஒரு வைசியன். கல்வி,

அறிவு என்ற நோக்கிலும் நான் மிகவும் தகுதியற்றவன். எல்லோரும் மதித்துப் போற்றுகின்ற கீதை என்ற மஹத்தான நூலுக்கு உரை எழுத நான் தகுதியற்றவன்தான். பகவானுடைய உபதேசம் முழுவதையும் அறிந்து கொள்வது என்பது ஒருபுறம் இருக்கட்டும். அதில் நூறில் ஒரு பங்காவது எனக்குத் தெரியுமா என்றால் அதுவே என்னுடைய தகுதிக்கு மீறிய செயல்தான். பகவானுடைய உபதேசத்தைச் சிறிதேனும் புரிந்து கொண்டு அதைச் செயலாக்குவது என்பது கடினமான கார்யம்தான். பகவான் யாருக்கு அந்தத் தனிப்பட்ட க்ருபை புரிகிறாரோ, அவருக்கு அது ஸாத்யம் ஆகலாம். உபதேசம் முழுவதையும் கைக்கொள்வது என்பது எங்கே? யாராவது ஒருவர் ஏதாவது ஒரு கீதா ச்லோகத்தின் கருத்தை ஏற்று அதன்படி தன் வாழ்க்கையை நடத்தி வந்தால், அந்த மனிதரைக் கொண்டாடத்தான் வேண்டும். அவருடைய திருவடிகளில் பல கோடி முறை நான் வீழ்ந்து வணங்குகிறேன். கீதையை விரித்துரைப்பதற்கும் அவர்களே தகுதி பெற்றவர்கள்.

நிற்க. என்னுடைய முயற்சி எல்லாவிதத்திலும் தகுதிக்கு மீறிய சிறுபிள்ளைத்தனமான ஸாஹஸம்தான். ஆனால், இந்த முறையில் கீதையின் உட்கருத்தைப் பற்றிச் சிந்திக்க வாய்ப்புக் கிடைத்ததே! பகவானுடைய திவ்ய உபதேசங்களை மனனம் செய்ய நேர்ந்ததே! ஆத்ம விஷயமாகச் சிந்திக்க முனைந்தோமே! வாழ்க்கையின் இந்த சமயம் நற்செயலில் ஈடுபட்டதே! அதற்காக இந்த அளவு நான் கொடுத்து வைத்தவன் என்று நினைக்கிறேன். இதனால் எனக்கு கீதையைப் பற்றிய அறிவு பெருகியது. பல தவறான கருத்துக்கள் களையப்பட்டன. ஆயினும் பலவிடங்களில் தவறுகள் நேர்ந்திருக்கலாம். ஏனெனில் கீதையின் உட்கருத்தில் நூறில் ஒரு பங்காவது நான் அறிவேன் என்று கூடச் சொல்லிக் கொள்ள முடியாது. கீதையின் உண்மைக் கருத்தை பகவான்தான் அறிவார். சிறிதளவு அர்ஜுனன் அறிந்திருக்கலாம். அவருக்காகத்தானே பகவானே கீதையைத் திருவாய் மலர்ந்து அருளினார். அல்லது பரமாத்மாவை அடைந்துவிட்டவர்கள், பகவானுடைய க்ருபையைப் பூரணமாக அனுபவித்தவர்கள் கொஞ்சம் அறியலாம். இவ்விஷயத்தில் நான் என்ன சொல்ல? மதிப்பிற்குரிய, பூஜிக்கத்தக்க பெரியோர்கள் கீதைக்கு விரிவுரைகள் எழுதியிருக்கிறார்களே – அவர்களுக்கெல்லாம் நான் கடன்பட்டிருக்கிறேன். நன்றியுடையவனாகவும் இருக்கிறேன். இந்த உரை எழுத அந்த பாஷ்யங்களின் மற்றும் உரைகளின் உதவியை நாடி இருக்கிறேன். ஆகவே, வணக்கத்திற்குரிய பெரியோர்களின் திருவடிகளில் நன்றியுடன் இதயபூர்வமாய்க் கோடிகோடி வணக்கங்களைச் செய்கிறேன். நமஸ்கரிக்கிறேன்.

இதைப் பற்றித் தயக்கமின்றி ஒன்று கூறுவேன். இது முழுமையான உரை அன்று. பகவானுடைய கருத்தை விளக்குவது ஒருபுறம் இருக்கட்டும். அதைப் புரிந்து கொள்வதிலேயே பல இடங்களில் தவறுகள் இருக்கலாம். பல இடங்களில் நேர்மாறான கருத்துக்கள் வந்திருக்கலாம். அந்தத் தவறுகளுக்காகக் கருணைக்கடலான பகவானிடமும், கீதையன்பர்களிடமும் கைகூப்பி மன்னிப்புக் கேட்கிறேன். நான் எழுதியது என் சிறிய புத்திக்கு ஏற்றவாறுதான். இப்படி என்னுடைய சிற்றறிவை வெளிப்படுத்துகின்ற சிறுபிள்ளைத்தனத்தை அறிஞர்கள் மன்னிக்க வேண்டும்.

இவ்வுரையில் எந்த ஆசார்யர்களுடைய கருத்துக்களையோ, உரையாளர்களுடைய கருத்துக்களையோ எடுத்து ஆளவும் இல்லை, விமர்சிக்கவும் இல்லை, கண்டிக்கவும் இல்லை. ஆனால், என் கருத்தைக் கூறுமிடத்துப் பிறர் கருத்துக்கு வேறுபாடு இருந்தால், அதற்கும் நான் மன்னிப்புக் கேட்கிறேன். கண்டனம் செய்வதோ, கொண்டாடுவதோ, ஒரு ஸித்தாந்தத்துடன் மற்றொரு ஸித்தாந்தத்தை ஒப்பிட்டு நோக்குவதோ என்னுடைய நோக்கமன்று. கூடியவரை முன்னுக்குப்பின் முரணில்லாமல் உரை எழுதப்பட்டிருக்கிறது. ஆயினும் உரையின் வடிவம் வளர்ந்து விட்டபடியால் எங்கேயாவது இந்தக் குறை ஏற்பட்டிருக்கலாம். இப்புத்தகத்தைப் படிக்கும் அறிஞர்கள் இவ்விதம் இருக்கும் குறையைச் சுட்டிக்காட்டி எழுதக்கோருகிறேன்.

இவ்வுரையை எழுதுவதற்கு, மதிப்பிற்குரிய மஹானுபாவர்கள், நண்பர்கள், உறவினர்கள் எனக்கு விலைமதிப்பற்ற உதவி செய்திருக்கிறார்கள். இன்றைய வழிமுறையில் அவர்களுடைய பெயர்களைக் குறிப்பிடுவது அவசியமானாலும், அப்படிச் செய்தால் அது

அவர்களுக்குத் தொல்லையாக இருக்கும். அவர்களுடன் கூட எனக்கு உள்ள ஸம்பந்தத்தைக் கூறும்போது என்னைப் பற்றியும் பெருமையாகச் சொல்லிக் கொள்வதாக முடியும். அதனால், அவர்களுடைய பெயர்களைக் குறிப்பிடவில்லை. அவர்கள் மனமுவந்து எனக்கு உதவி செய்திராவிட்டால், இந்த உரை இவ்விதம் வெளி வந்திருக்காது என்று மட்டும் கூறுகிறேன்.

இந்த **ஸ்ரீ**மத்பகவத்கீதா தத்வவிவேசனீ உரைநூலுக்கு **ஸ்ரீ**மத்பகவத்கீதையின் மிக முக்யமான ஸம்ஸ்க்ருத பாஷ்யங்களிலிருந்தும், சிற்றுரைகளிலிருந்தும் மற்றும் கீழ்க்காணும் நூல்களிலிருந்தும் உதவி பெறப்பட்டது.

ருக்வேதஸம்ஹிதை, ஐதரேய ப்ராம்மணம், சதபத ப்ராம்மணம், ஈஶ, கேந, கட, முண்டக, தைத்திரீய, சாந்தோக்ய, ப்ருஹதாரண்யக, ஶ்வேதாஶ்வதர, ப்ரம்ம, நாராயண. ப்ருஹஜ்ஜாபால உபநிஷத்துக்கள், பதஞ்ஜலியோக தர்ஶனம், ஸாங்க்யகாரிகை, மனு, வஸிஷ்ட, ஸம்வர்த்த, ப்ருஹத்யோகியாக்ஞவல்க்ய, ஶங்க, அத்ரி ஸ்ம்ருதிகள், உத்தரகீதை, **ஸ்ரீ**மத்பாகவதம், அக்நி, வாயு, வாராஹ, கருட, மார்க்கண்டேய, ப்ரம்மவைவர்த்த, ஸ்கந்த, ப்ருஹத்தர்ம, மத்ஸ்ய, ப்ரம்மாண்ட, ஶிவ, பத்ம, ப்ரம்ம, விஷ்ணு, கூர்ம புராணங்கள், **ஸ்ரீ**மத் தேவீபாகவதம், மஹாபாரதம், ஹரிவம்சம், **ஸ்ரீ**மத் வால்மீகி ராமாயணம், நாரத பக்தி ஸூத்ரம், ஶாண்டில்யஸூத்ரம், ஸூர்யஸித்தாந்தம், **ஸ்ரீ**ராமசரிதமாநஸம், விநயபத்ரிகா, க்ருஷ்ணகர்ணாம்ருதம், பக்தமாலா முதலிய பலபல.

பணிவுள்ள,

ஜயதயால் கோயந்தகா

--- * * * ---

ஸ்ரீமஹாபாரதத்திலே ஸ்ரீமத்பகவத்கீதையின் பெருமை

கீ॒தா ஸுகீ॒தா கர்தவ்யா கிமந்யை: ஶாஸ்த்ரஸங்க்₃ரஹை: ।
யா ஸ்வயம் பத்₃மநாப₄ஸ்ய முக₂பத்₃மாத்₃விநி:ஸ்ருதா ॥
ஸர்வஶாஸ்த்ரமயீ கீ॒தா ஸர்வதே₃வமயோ ஹரி: ।
ஸர்வதீர்த₂மயீ க₃ங்கா₃ ஸர்வவேத₃மயோ மநு: ॥
கீ॒தா க₃ங்கா₃ ச கா₃யத்ரீ கோ₃விந்தே₃தி ஹ்ருதி₃ ஸ்தி₂தே ।
சதுர்கா₃ரஸம்யுக்தே புநர்ஜந்ம ந வித்₃யதே ॥
பா₄ரதாம்ருதஸர்வஸ்வகீ॒தாயா மதி₂தஸ்ய ச ।
ஸாரமுத்₃த்₄ருத்ய க்ருஷ்ணேந அர்ஜுநஸ்ய முகே₂ ஹுதம் ॥
(மஹாபா₄ரதம், பீ₄ஷ்மபர்வம் 43/1,2,3,5)

வேறு சாஸ்த்ரங்கள் எதற்கு? **ஸ்ரீ**மத்பகவத்கீதையை மட்டும் படித்தால் போதுமே! ஏனெனில் இது ஸாக்ஷாத் **ஸ்ரீ**பகவான் பத்மநாபனின் திருமுகத்தாமரையிலிருந்து வெளிவந்ததாயிற்றே! கீதையிலே அனைத்து சாஸ்த்ரங்களும் அடக்கம். **ஸ்ரீ**ஹரியோ அனைத்து தேவர்களுக்கும் இருப்பிடம். கங்கையுள் எல்லா புண்ய தீர்த்தங்களும் அடக்கம். மனு நூலோ வேதத்தின் ஸாரம். கீதை, கங்கை, காயத்ரி, கோவிந்தன் என்கிற நான்கு 'க$_3$' காரங்கள் எவன் மனதில் பதிந்துள்ளனவோ அவனுக்கு மறுபிறவியே கிடையாது. **ஸ்ரீ**மஹாபாரதமாகிற அமுதக் கடலைக் கடைந்து, அதன் ஸாரமாகிய கீதையை எடுத்து **ஸ்ரீ**க்ருஷ்ணன் அர்ஜுனனுக்கு ஊட்டினார்.

* * * * *

ஒம் ஸ்ரீபரமாத்மநே நம:

பாராயண விதி:

ஒம் அஸ்ய ஸ்ரீமத்³ப⁴க³வத்³கீ³தாமாலாமந்த்ரஸ்ய ப⁴க³வாந்வேத³வ்யாஸ ருஷி: । அநுஷ்டுப் ச²ந்த³: । ஸ்ரீக்ருஷ்ண: பரமாத்மா தே³வதா । அஸோச்யாநந்வஸோசஸ்த்வம் ப்ரஜ்ஞாவாதா³ம்ஸ்ச ப⁴ாஷஸே இதி பீ³ஜம் ॥ ஸர்வத⁴ர்மாந் பரித்யஜ்ய மாமேகம் ஸரணம் வ்ரஜ இதி ஸக்தி: ॥ அஹம் த்வா ஸர்வபாபேப்⁴யோ மோக்ஷயிஷ்யாமி மா ஸுச இதி கீலகம் ॥

அத² கரந்யாஸ:

நைநம் சி²ந்த³ந்தி ஸஸ்த்ராணி நைநம் த³ஹதி பாவக இத்யங்கு³ஷ்டா²ப்⁴யாம் நம: ॥ ந சைநம் க்லேத³யந்த்யாபோ ந ஸோஷயதி மாருத இதி தர்ஜநீப்⁴யாம் நம: ॥ அச்சே²த்³யோঽயமத³ாஹ்யோঽயமக்லேத்³யோঽஸோஷ்ய ஏவ ச இதி மத்⁴யமாப்⁴யாம் நம: ॥ நித்ய: ஸர்வக³த: ஸ்தா²ணுரசலோঽயம் ஸநாதந இத்யநாமிகாப்⁴யாம் நம: ॥ பஸ்ய மே பார்த² ரூபாணி ஸதஸோঽத² ஸஹஸ்ரஸ இதி கநிஷ்டி²காப்⁴யாம் நம: ॥ நாநாவித⁴ாநி தி³வ்யாநி நாநாவர்ணாக்ருதீநி ச இதி கரதலகரப்ருஷ்டா²ப்⁴யாம் நம: ॥ இதி கரந்யாஸ: ॥

அத² ஹ்ருத³யாதி³ந்யாஸ:

நைநம் சி²ந்த³ந்தி ஸஸ்த்ராணி நைநம் த³ஹதி பாவக இதி ஹ்ருத³யாய நம: ॥ ந சைநம் க்லேத³யந்த்யாபோ ந ஸோஷயதி மாருத இதி ஸிரஸே ஸ்வாஹா ॥ அச்சே²த்³யோঽயமத³ாஹ்யோঽயமக்லேத்³யோঽஸோஷ்ய ஏவ ச இதி ஸிகா²யை வஷட் ॥ நித்ய: ஸர்வக³த: ஸ்தா²ணுரசலோঽயம் ஸநாதந இதி கவசாய ஹும் ॥ பஸ்ய மே பார்த² ரூபாணி ஸதஸோঽத² ஸஹஸ்ரஸ இதி நேத்ரத்ரயாய வௌஷட் ॥ நாநாவித⁴ாநி தி³வ்யாநி நாநாவர்ணாக்ருதீநி ச இதி அஸ்த்ராய ப²ட் ॥

ஸ்ரீக்ருஷ்ணப்ரீத்யர்தே² பாடே² விநியோக:

அத² த்⁴யாநம்

ஒம் பார்தா²ய ப்ரதிபோ³தி⁴தாம் ப⁴க³வதா நாராயணேந ஸ்வயம்
வ்யாஸேந க்³ரதி²தாம் புராணமுநிநா மத்⁴யேமஹாபா⁴ரதம் ।
அத்³வைதாம்ருதவர்ஷிணீம் ப⁴க³வதீமஷ்டாத³ஸாத்⁴யாயிநீ–
மம்ப³ த்வாமநுஸந்த³தா⁴மி ப⁴க³வத்³கீ³தே ப⁴வத்³வேஷிணீம் ॥ 1 ॥

நமோঽஸ்து தே வ்யாஸ விஸாலபு³த்³தே⁴ பு²ல்லாரவிந்தா³யதபத்ரநேத்ர ।
யேந த்வயா பா⁴ரததை²லபூர்ண: ப்ரஜ்வாலிதோ ஜ்ஞாநமய: ப்ரதீ³ப: ॥ 2 ॥

ப்ரபந்நபாரிஜாதாய தோத்ரவேத்ரைகபாணயே ।
ஜ்ஞாநமுத்³ராய க்ருஷ்ணாய கீ³தாம்ருதது³ஹே நம: ॥ 3 ॥

வஸுதே³வஸுதம் தே³வம் கம்ஸசாணூரமர்த³நம் ।
தே³வகீபரமாநந்த³ம் க்ருஷ்ணம் வந்தே³ ஜக³த்³கு³ரும் ॥ 4 ॥

பீ⁴ஷ்மத்³ரோணதடா ஜயத்³ரத²ஜலா க³ாந்தா⁴ரநீலோத்பலா
ஸல்யக்³ராஹவதீ க்ருபேண வஹநீ கர்ணேந வேலாகுலா ।
அஸ்வத்தா²மவிகர்ணகோ⁴ரமகரா து³ர்யோத⁴நாவர்திநீ
ஸோத்தீர்ணா கலு பாண்ட³வை ரணநதீ கைவர்தக: கேஸவ: ॥ 5 ॥

பாராஶர்யவச:ஸரோஜமமலம் கீ₃தார்த₂கந்தே₄த்கடம்
நாநாக்₂யாநககேஸரம் ஹரிகத₂ாஸம்பே₃த₄நாபே₃தி₄தம் ।
லோகே ஸஜ்ஜநஷட்பதை₃ரஹரஹ: பேபீயமாநம் முத₃ா
பூ₄யாத்₃பா₄ரதபங்கஜம் கலிமலப்ரத்₄வம்ஸி ந: ஶ்ரேயஸே ॥ 6 ॥

மூகம் கரோதி வாசாலம் பங்கு₃ம் லங்க₄யதே கி₃ரிம் ।
யத்க்ருபா தமஹம் - வந்தே₃ பரமாநந்த₃மாத₄வம் ॥ 7 ॥

ஶாந்தாகாரம் பு₄ஜக₃ஶயநம் பத்₃மநாப₄ம் ஸுரேஶம்
விஶ்வாதா₄ரம் க₃க₃நஸத்₃ருஶம் மேக₄வர்ணம் ஶுபா₄ங்க₃ம் ।
லக்ஷ்மீகாந்தம் கமலநயநம் யோகி₃ஹ்ருத்₃த்₄யாநக₃ம்யம்
வந்தே₃ விஷ்ணும் ப₄வப₄யஹரம் ஸர்வலோகைகநாத₂ம் ॥

யம் ப்₃ரஹ்மா வருணேந்த்₃ரருத்₃ரமருத: ஸ்துந்வந்தி தி₃வ்யை: ஸ்தவைர்—
வேதை₃: ஸாங்க₃பத₃க்ரமோபநிஷதை₃ர் கா₃யந்தி யம் ஸாமகா₃: ।
த்₄யாநாவஸ்தி₂ததத்₃க₃தேந மநஸா பஶ்யந்தி யம் யோகி₃நோ
யஸ்யாந்தம் ந விது₃: ஸுராஸுரக₃ணா தே₃வாய தஸ்மை நம: ॥

வம்ஶீவிபூ₄ஷிதகராந்நவநீரதா₃ப₄த் பீதாம்ப₃ராத₃ருணபி₃ம்ப₃ப₂லாத₄ரோஷ்டா₂த் ।
பூர்ணேந்து₃ஸுந்த₃ரமுகா₂த₃ரவிந்த₃நேத்ராத் க்ருஷ்ணாத்பரம் கிமபி தத்த்வமஹம் ந ஜாநே ॥

அத₂ கீ₃தாமாஹாத்ம்யம்

கீ₃தாஶாஸ்த்ரமித₃ம் புண்யம் ய: படே₂த்ப்ரயத: புமாந் ।
விஷ்ணோ: பத₃மவாப்நோதி ப₄யஶோகாதி₃வர்ஜித: ॥ 1 ॥

கீ₃தாத்₄யயநஶீலஸ்ய ப்ராணாயாமபரஸ்ய ச ।
நைவ ஸந்தி ஹி பாபாநி பூர்வஜந்மக்ருதாநி ச ॥ 2 ॥

மலநிர்மோசநம் பும்ஸாம் ஜலஸ்நாநம் தி₃நே தி₃நே ।
ஸக்ருத்₃கீ₃தாம்ப₄ஸி ஸ்நாநம் ஸம்ஸாரமலநாஶநம் ॥ 3 ॥

கீ₃தா ஸுகீ₃தா கர்தவ்யா கிமந்யை: ஶாஸ்த்ரவிஸ்தரை: ।
யா ஸ்வயம் பத்₃மநாப₄ஸ்ய முக₂பத்₃மாத்₃விநி:ஸ்ருதா ॥ 4 ॥

ப₄ாரதாம்ருதஸர்வஸ்வம் விஷ்ணோர்வக்த்ராத்₃விநி:ஸ்ருதம் ।
கீ₃தாக₃ங்கே₃தி₃கம் பீத்வா புநர்ஜந்ம ந வித்₃யதே ॥ 5 ॥

ஸர்வோபநிஷதோ₃ கா₃வோ தோ₃க்₄தா₄ கோ₃பாலநந்த₃ந: ।
பார்தோ₂ வத்ஸ: ஸுதீ₄ர்போ₄க்தா து₃க்₃த₄ம் கீ₃தாம்ருதம் மஹத் ॥ 6 ॥

ஏகம் ஶாஸ்த்ரம் தே₃வகீபுத்ரகீ₃த—
மேகோ தே₃வோ தே₃வகீபுத்ர ஏவ ।
ஏகோ மந்த்ரஸ்தஸ்ய நாமாநி யாநி
கர்மாப்யேகம் தஸ்ய தே₃வஸ்ய ஸேவா ॥ 7 ॥

* * * * *

॥ ஓம் ஸ்ரீபரமாத்மநே நம: ॥

ஓம் பூர்ணமத3: பூர்ணமித3ம் பூர்ணாத்பூர்ணமுத3ச்யதே ।
பூர்ணஸ்ய பூர்ணமாதா3ய பூர்ணமேவாவஸிஷ்யதே ॥
வஸுதே3வஸுதம் தே3வம் கம்ஸசாணூரமர்த3நம் ।
தே3வகீபரமாநந்த3ம் - க்ருஷ்ணம் வந்தே3 ஜக3த்3கு3ரும் ॥

நாராயணம் நமஸ்க்ருத்ய நரம் சைவ நரோத்தமம் ।
தே3வீம் ஸரஸ்வதீம் வ்யாஸம் ததோ ஜயமுதீ3ரயேத் ॥

ஸ்ரீமத்பகவத்கீதை

(தத்வவிவேசனீ – ஹிந்தி விளக்கவுரையின் தமிழாக்கம்)

அத2 ப்ரத2மோऽத்4யாய:

முதல் அத்யாயம்

அர்ஜுந விஷாத யோகம்

அத்யாயத்தின் பெயர்

அர்ஜுனனை நிமித்தமாகக் கொண்டு ஸ்ரீபகவான் ஸ்ரீபகவத்கீதை என்ற பெயரில் அகில உலகிற்கும் ஓர் அரிய உபதேசம் செய்தார். அதன் முகவுரையாக இந்த முதல் அத்யாயம் அமைகிறது. இதில் இரு பக்கங்களிலும் ப்ரதான வீரர்கள் கூடியிருப்பதைக் குறிப்பிட்ட பிறகு உற்றார்-உறவினர்களுடைய அழிவு ஏற்படுமே என்ற ஐயத்தினால் கலக்கம் ஏற்பட்டு, அதனால் அர்ஜுனனுக்கு வருத்தம் உண்டாவது முக்யமாக வர்ணிக்கப்படுகிறது. நல்ல சேர்க்கை கிடைக்குமேயானால், உலக இன்பங்களில் வைராக்யம் பெறுவதன் மூலமாக, இவ்வித வருத்தம்கூட மேலான நலனை நோக்கி வழிகாட்டிச் செல்வதாக ஆகிறது. அதனால், இதனுடைய பெயர் 'அர்ஜுந விஷாத‡ யோகம்' என்று வைக்கப்பட்டிருக்கிறது.

அத்யாயச் சுருக்கம்

முதல் ச்லோகத்தில் த்ருதராஷ்ட்ரர், ஸஞ்ஜயனிடம் யுத்தத்தைப் பற்றிய விவரத்தைக் கேட்கிறார். இதற்குப் பதிலாக 2ல் த்ரோணாசார்யரிடம் சென்று துர்யோதனன் உரையாட ஆரம்பித்த விவரத்தை ஸஞ்ஜயன் கூறுகிறார். 3ல் துர்யோதனன், விசாலமான பாண்டவ ஸேனையைப் பார்க்கும்படி த்ரோணாசார்யரிடம் கூறிவிட்டு, 4 முதல் 6 வரை அந்தப் பாண்டவ ஸேனையில் உள்ள முக்யமான வீரர்களின் பெயர்களைக் கூறுகிறான். 7ல் 'நம்முடைய ஸேனையில் உள்ள முக்ய

---

‡ விஷாதம் — மனச்சோர்வு, துக்கம்.

படைத்தலைவர்களைத் தெரிந்து கொள்ளுங்கள்' என்று, அவரிடமே கூறுகிறான் துர்யோதனன். 8, 9ல் அவர்களில் சிலருடைய பெயர்களைக் கூறி, அவர்களது பராக்ரமம், போர்த்திறமை இவற்றை எடுத்துக் கூறுகிறான். 10ல் 'நம்முடைய படையை யாரும் வெல்ல முடியாது. பாண்டவர் படை நம்முடையதைக் காட்டிலும் பலம் குறைந்தது' என்று கூறியபின், 11ல் வீரர்கள் அனைவரையும் பார்த்து, 'எல்லா முனைகளிலும் பீஷ்மரைப் பாதுகாக்க வேண்டும்' என்று வேண்டுகோள் விடுக்கிறான். 12ல் பீஷ்மர் சங்கு முழங்குவது பற்றியும், 13ல் கௌரவர் படையில் சங்கு, பேரிகை, தம்பட்டம், பறை, கொம்பு முதலியவை ஒருங்கே முழங்குகின்றன என்றும் ஸஞ்ஜயன் கூறுகிறார். 14 முதல் 18 வரை வரிசையாக பகவான் ஸ்ரீக்ருஷ்ணன், அர்ஜுனன், பீமஸேனன், யுதிஷ்டிரன், நகுலன், ஸஹதேவன், பாண்டவர் படையில் மற்ற சிறந்த வீரர்கள் தத்தம் சங்குகளை முழங்குவது கூறப்படுகிறது. 19ல் சங்கு முழக்கத்தின் பயங்கர ஒலி விண்ணிலும், மண்ணிலும் எதிரொலித்ததன் விளைவாக துர்யோதனன் முதலானோர் கலங்குகின்றனர் என்று கூறப்படுகிறது. 20, 21ல் த்ருதராஷ்ட்ர குமாரர்களின் யுத்த முனைப்பைப் பார்த்து அர்ஜுனன் தம் ரதத்தை இரு படைகளுக்கும் மத்தியில் கொண்டு போய் நிறுத்தும்படி ஸ்ரீக்ருஷ்ணனிடம் கூறுகிறார். 22, 23ல் படைகள் முழுவதையும் பார்வையிடும்வரை ரதத்தை அங்கேயே நிறுத்தி வைக்குமாறு சைகையினால் குறிப்பிட்டு, அனைவரையும் பார்க்க வேண்டும் என்ற தம் விருப்பத்தை வெளியிடுகிறார். 24, 25ல் அர்ஜுனனது வேண்டுகோளுக்கு இணங்க, ரதத்தை இரு படைகளுக்கும் இடையே கொண்டு போய் நிறுத்தி, ஸ்ரீக்ருஷ்ணன் 'யுத்தத்திற்காக ஒன்றாகக் கூடியிருக்கும் கௌரவர்களைப் பார்' என்கிறார். பிறகு 30 வரை எங்கும் தம்முடையவர்களே கூடியிருப்பதைப் பார்த்து அர்ஜுனன் கலங்குவதும், அவர் சோகமுற்றிருப்பதும் கூறப்படுகின்றன. 31ல் யுத்தத்தின் முடிவு விபரீதம் ஆகலாம் என்கிறார். 32, 33ல் அர்ஜுனன் வெற்றி கொள்வதிலோ, அரச ஸுகத்திலோ தமக்கு விருப்பு இல்லை என்று யுக்தியுடன் கூடிய வாதங்களை எடுத்துரைக்கிறார். 34, 35ல் ஆசார்யர் முதலியவர்களைக் குறிப்பிட்டு, 'நானே அடிபட்டு விழுந்தாலும், மூவுலகு அரசு கிடைத்தாலும்கூட, இந்த ஆசார்யர்கள், தந்தை, தனயர் ஆகிய நம் உற்றாரை வதைக்க விரும்பவில்லை' என்று குறிப்பிட்டு, 36, 37ல் 'உறவினர்களான துர்யோதனாதியர் ‡ஆததாயிகளாக இருந்தாலும்கூட, அவர்களைக் கொல்வதால் பாவம்தான் ஏற்படும். ஸுகமோ, மகிழ்ச்சியோ ஏற்படாது' என்கிறார். 38, 39ல் குலநாசம், மித்ர த்ரோஹம் (நண்பனுக்குக் கெடுதி செய்வது) இவற்றினால் ஏற்படக்கூடிய பாவங்களிலிருந்து மீள்வதற்கு யுத்தம் செய்யாமல் இருப்பதே நல்லது என்று கூறிவிட்டு, 40 முதல் 44 வரை குலநாசத்தினால் ஏற்படும் தீமைகளை விரிவாக விளக்குகிறார். 45, 46ல் ராஜ்யத்திலும், ஸுகத்திலும் ஆசை கொண்டு தம் உற்றார்களைக் கொல்வதற்காகச் செய்யப்படும் இப்போரில் ஈடுபட்டுப் பாவம் செய்ய ஆரம்பிக்கிறோமே என்று வருந்தி, இதைக் காட்டிலும் துர்யோதனாதியர் நம்மைக் கொல்வது மேல் என்றும், 47ல் 'ஆகவே, நான் யுத்தம் செய்யமாட்டேன்' என்றும் தீர்மானித்து, சோகத்தில் ஆழ்ந்த அர்ஜுனன் ஆயுதங்களைக்

‡ ஆததாயீ — கொடிய பாவத்தைச் செய்தவன்.

களைந்துவிட்டு ரதத்தில் உட்கார்ந்துவிட்டார் என்று கூறி ஸஞ்ஜயன் அத்யாயத்தை முடிக்கிறார்.

பொருத்தம்: மஹாபாரதத்தில் கீதை உபதேசம் செய்ய வேண்டிய ஸந்தர்ப விளக்கம் இனி கூறப்படுகிறது—

பாண்டவர்கள் ராஜஸூய யாகம் செய்தபோது, அவர்களுடைய அளவற்ற செல்வத்தைக் கண்டு துர்யோதனன் உள்ளத்தில் மிகுந்த பொறாமை ஏற்பட்டது. சகுனி முதலானோரின் ஒப்புதலைப் பெற்று துர்யோதனன் யுதிஷ்டிரரைச் சூதாட்டத்திற்கு அழைத்தான். வஞ்சனை மூலம் அவரை வென்று, அவர்களுடைய செல்வம் அனைத்தையும் கவர்ந்து கொண்டான். யுதிஷ்டிரர் முதலிய ஐவரும் த்ரௌபதியுடன்கூடப் பன்னிரண்டு ஆண்டுகள் வனத்தில் வசிக்கவேண்டும்; பின்னர் ஓராண்டு யாரும் கண்டுபிடிக்க முடியாதபடி மறைந்து வசிக்கவேண்டும்; இவ்விதம் பதின்மூன்றாண்டுகள் முடியும்வரை துர்யோதனன் ராஜ்யம் முழுவதையும் ஆளவேண்டும்; அஞ்ஞாதவாஸத்தின்போது பாண்டவர்கள் யாருக்கும் புலப்படாமல் ஓராண்டு முழுவதையும் கழித்து முடித்துவிட்டால், பதின்மூன்றாண்டுகளுக்குப் பிறகு பாண்டவர்களின் ராஜ்யம் அவர்களுக்குத் திருப்பி அளிக்கப்படும் என்று சூதாட்டத்தின் முடிவில் தீர்மானம் செய்யப் பட்டது. பதின்மூன்றாண்டுகள் கழித்துப் பாண்டவர்கள் தமது ராஜ்யத்தைக் கேட்டபோது, துர்யோதனன் திருப்பிக் கொடுப்பதற்கு அடியோடு மறுத்துவிட்டான். அவனுக்கு அறிவுரை கூறுவதற்காக த்ருபத ராஜன் அறிவிலும், வயதிலும் முதிர்ந்த தம் புரோஹிதரை அனுப்பினார். அவரது அறிவுரை ஒன்றையும் துர்யோதனன் கேட்கவில்லை. பிறகு இரு தரப்பிலும் யுத்த ஏற்பாடுகள் தொடங்கின.

போரில் பகவான் ஸ்ரீக்ருஷ்ணனுடைய உதவியைப் பெறுவதற்காக துர்யோதனன் த்வாரகை சென்றான். அன்றைய தினமே அர்ஜுனனும் அங்கு போய்ச் சேர்ந்தார். இருவரும் அங்கு பகவான் தம் மாளிகையில் தூங்குகிறார் என்றறிந்தனர். அவர் தூங்குமிடத்தில் துர்யோதனன் தலைமாட்டில் ஒரு விலையுயர்ந்த ஆஸனத்தில் அமர்ந்து கொண்டான். அர்ஜுனன் இரு கைகளையும் கூப்பிக் கொண்டு, வணக்கத்துடன் பகவானுடைய திருவடியின் அருகில் நின்று கொண்டிருந்தார். கண்ணன் கண் விழித்ததும் எதிரே நின்று கொண்டிருந்த அர்ஜுனனைப் பார்த்தார். பிறகு பின்னால் திரும்பிய பொழுது தலைமாட்டில் அமர்ந்திருந்த துர்யோதனன் தென்பட்டான். கண்ணன் இருவரையும் வரவேற்று உபசரித்து அவர்கள் வந்த காரணத்தைக் கேட்டார். அப்பொழுது துர்யோதனன்— "உங்களுக்கு என்னிடமும், அர்ஜுனனிடமும் அன்பு ஒரேவிதம் உள்ளது. இருவரும் உங்களுடைய உறவினர்கள். உங்களைக் காண நான் முன்னால் வந்தேன். முன்னால் வந்தவனுக்குத்தான் நல்லோர் உதவி செய்வார்கள் என்ற முறை உண்டு. அகில பூமண்டலத்திலும் உள்ள பெரியோர்களில் நீங்கள் மிகச் சிறந்தவர்; மதிப்பிற்குரியவர். ஆகவே, நீங்கள் எனக்குத்தான் உதவி புரியவேண்டும்" என்றான். பகவான் கூறினார்— "நீங்கள்தான் முதலில் வந்தீர்கள். இதில் ஸந்தேஹம் இல்லை. ஆனால் நான் அர்ஜுனனைத்தான் முதலில் பார்த்தேன். ஆகவே நான் இருவருக்கும் உதவி செய்வேன். ஆனால் சாஸ்த்ர முறைப்படி சிறுவர்களின் விருப்பத்தை முதலில் நிறைவேற்றுவதுதான் உசிதம்.

ஆகவே முதலில் அர்ஜுனன் விருப்பத்தைத்தான் நிறைவேற்ற வேண்டும். நான் இரண்டுவிதமாக உதவி செய்வேன். ஒரு பக்கம் என்னுடைய வலிமைமிக்க நாராயணீ ஸேனை சேரும். மறுபக்கம் யுத்தம் செய்யமாட்டேன் என்ற சபதத்துடன் நான் தனியாகச் சேர்வேன், ஆயுதம் எடுக்கமாட்டேன். அர்ஜுன! தர்மப்படி உன் விருப்பத்திற்கு முன்னுரிமை உண்டு ஆகவே உனக்கு எது விருப்பமோ, அதைக் கேள்." உடனே அர்ஜுனன், பகைவர்களை அழிக்கும் நாராயணனான பகவான் ஸ்ரீக்ருஷ்ணனையே யாசித்தார். பிறகு துர்யோதனன் நாராயணீ ஸேனையைக் கேட்டான். அதை ஏற்றுக் கொண்டு, அவன் த்ருப்தியுடன் ஹஸ்தினாபுரம் திரும்பிச் சென்றான்.

இதற்குப் பிறகு பகவான் அர்ஜுனனைப் பார்த்து "அர்ஜுன! நான் யுத்தமே செய்யமாட்டேன் என்றபோதும், எந்த நோக்கத்தில் நாராயணீ ஸேனையை விரும்பாமல், என்னை மட்டும் விரும்பினாய்?" என்று வினவினார்

அர்ஜுனன் கூறினார்— "பகவானே! நீங்கள் தனியாகவே அனைவரையும் அழிக்க வல்லவர். நான் வெறும் படையை வைத்துக் கொண்டு என்ன செய்யப் போகிறேன்? தவிரப் பல நாட்களாக எனக்குள் ஓர் ஆசை – நீங்கள் எனக்குத் தேரோட்டியாக வேண்டும் என்று. இந்தப் பெரும் போரில் நீங்கள் என் விருப்பத்தைக் கட்டாயம் பூர்த்தி செய்யவேண்டும்" பக்தவத்ஸலனான பகவான், அர்ஜுனன் விருப்பப்படி அவருடைய ரதத்தின் குதிரைகளை ஓட்டும் பணியை ஏற்றார். இவ்விதம் பகவான் ஸ்ரீக்ருஷ்ணன் அர்ஜுனனுடைய தேரோட்டியானார். யுத்த ஆரம்பத்தில் குருக்ஷேத்ரத்தில் அவருக்கு கீதையின் மூலம் திவ்ய உபதேசம் செய்தார். நிற்க.

துர்யோதனனும், அர்ஜுனனும் த்வாரகையிலிருந்து திரும்பிய பிறகு இருபடைகளும் அவரவரிடத்தில் கூடின. அப்போது ஸ்ரீக்ருஷ்ணன் தாமே ஹஸ்தினாபுரம் சென்று துர்யோதனனுக்குப் பலவிதமாக அறிவுரை கூற முனைந்தார். துர்யோதனன் தெளிவாகக் கூறிவிட்டான்— 'நான் உயிரோடு இருக்கும்வரை பாண்டவர்கள் அரசைப் பெறமுடியாது; ஊசிமுனை அளவு நிலம்கூடப் பாண்டவர்களுக்குக் கொடுக்கமாட்டேன்' (மஹாபாரதம், உத்யோக பர்வம் 127/22-25). அப்போது தமக்கு நியாயமாகக் கிடைக்கவேண்டிய சொத்தை அடைவதற்காக, தாயார் குந்தியின் ஆணையுடனும், பகவான் ஸ்ரீக்ருஷ்ணனின் தூண்டுதலினாலும், 'யுத்தம் செய்வது தர்மம்தான்' என்று தீர்மானித்துப் பாண்டவர்கள் போர் செய்யத் துணிந்தனர்.

இருபடைகளும் யுத்தத்திற்குத் தயார் ஆகிவிட்டன. பகவான் வேதவ்யாஸர் த்ருதராஷ்ட்ராரிடம் சென்று— 'நீ கொடிய யுத்தத்தைப் பார்க்க விரும்பினால், உனக்கு தெய்விகக் கண்கள் தருகிறேன்' என்று கூறினார். "ப்ரம்மரிஷிகளில் சிறந்தவரே! என் கண்களால் குலம் இவ்வாறு அழிவதைக் காண நான் விரும்பவில்லை. ஆயினும் யுத்தத்தின் முழு நிகழ்ச்சிகளையும் நன்கு கேட்க விரும்புகிறேன்" என்று த்ருதராஷ்ட்ரர் கூறினார்.

பிறகு மஹரிஷி வேதவ்யாஸர் ஸஞ்ஜயனுக்கு தெய்விகப் பார்வை அளித்துவிட்டு, த்ருதராஷ்ட்ராரிடம்— "இந்த ஸஞ்ஜயன் உனக்கு யுத்தச் செய்திகளனைத்தையும் கூறுவார். யுத்தத்தில் நடக்கும் எல்லா நிகழ்ச்சிகளையும்

நேரில் பார்க்கவும், கேட்கவும், அறியவும் ஸஞ்ஜயனால் முடியும். முன்னும்-பின்னும், பகலிலும்-இரவிலும், மறைவாகவோ-வெளிப்படையாகவோ, அவரவர்கள் மனதில் வகுக்கும் திட்டங்களானாலும் சரி, செயல்களானாலும் சரி, எதையும் இவரிடமிருந்து மறைக்க முடியாது. அவற்றை அவ்வப்பொழுதே உள்ளது உள்ளவாறே அறிந்து கொள்வார். இவரது உடலை எந்த ஆயுதமும் தாக்காது. இவருக்குச் சிறிதும் களைப்பே தோன்றாது. எது நிகழ வேண்டுமோ, அது நிகழத்தான் போகிறது. இப்படி அனைத்தும் அழிவதை யாராலும் தடுக்க முடியாது. இறுதியில் தர்மமே வெல்லும்" என்று கூறியருளினார்.

வேதவ்யாஸ மஹரிஷி சென்ற பிறகு த்ருதராஷ்ட்ரர் ஸஞ்ஜயனை வினவினார். ஸஞ்ஜயன் பூமியின் பற்பல தீவுகளைப் பற்றிய செய்திகளையெல்லாம் கூறினார். அதனிடையே பாரத வர்ஷத்தைப் பற்றியும் வர்ணித்தார். கௌரவர்—பாண்டவர்களிடையே போர் மூண்டது, தொடர்ந்து பத்து நாட்கள் வரை யுத்தம் நடந்தது. பாட்டனார் பீஷ்மர் போர்க்களத்தில் ரதத்திலிருந்து வீழ்த்தப்பட்டார். எதிர்பாராதவிதமாக பீஷ்மர் அடிபட்டு வீழ்ந்த செய்தியை ஸஞ்ஜயன் கூறக் கேட்ட த்ருதராஷ்ட்ரர் மிகவும் வருந்தினார் (மஹா. பீஷ்ம. 13). யுத்தத்தில் நடந்தவற்றையெல்லாம் மிக விரிவாகக் கூறும்படி ஸஞ்ஜயனைக் கேட்டார். ஸஞ்ஜயன், இருபுறத்துப் படைகளும் வ்யூஹம் வகுத்து நின்ற விவரமனைத்தும் கூறினார். பிறகு த்ருதராஷ்ட்ரர் 'ஆரம்பத்திலிருந்து இதுவரை நடந்த எல்லாவற்றையும் விளக்கமாகச் சொல்' என்றார். இங்குதான் பகவத் கீதையின் முதல் அத்யாயம் துவங்குகிறது. மஹாபாரதம் பீஷ்ம பர்வத்தில் இது இருபத்தைந்தாவது அத்யாயம். இதன் ஆரம்பத்தில் த்ருதராஷ்ட்ரர் ஸஞ்ஜயனைக் கேட்கிறார்—

धृतराष्ट्र उवाच

धर्मक्षेत्रे कुरुक्षेत्रे समवेता युयुत्सवः।
मामकाः पाण्डवाश्चैव किमकुर्वत सञ्जय॥ १॥

த்ருதராஷ்ட்ர உவாச

தர்மக்ஷேத்ரே குருக்ஷேத்ரே ஸமவேதா யுயுத்ஸவ:।
மாமகா: பாண்டவாஶ்சைவ கிமகுர்வத ஸஞ்ஜய॥ 1॥

த்ருதராஷ்ட்ர உவாச – த்ருதராஷ்ட்ரர் சொன்னார்: **ஸஞ்ஜய** – ஸஞ்ஜய! **தர்மக்ஷேத்ரே** – தர்மபூமியான, **குருக்ஷேத்ரே** – குருக்ஷேத்ரத்தில், **ஸமவேதா:** – ஒருங்கே கூடியிருந்தவர்களும், **யுயுத்ஸவ:** – யுத்தம் செய்ய விரும்பியவர்களுமான, **மாமகா:** – என்னுடையவர்களும், **பாண்டவா: ச ஏவ** – பாண்டுவின் புதல்வர்களும், **கிம்** – என்ன, **அகுர்வத** – செய்தார்கள்?

த்ருதராஷ்ட்ரர் சொன்னார்: ஸஞ்ஜய! தர்மபூமியான குருக்ஷேத்ரத்தில் ஒருங்கே கூடியிருந்தவர்களும், யுத்தம் செய்ய விரும்பியவர்களுமான என்னுடையவர்களும், பாண்டுவின் புதல்வர்களும் என்ன செய்தார்கள்?'

கேள்வி: குருக்ஷேத்ரம் என்று எந்த இடத்திற்குப் பெயர்? அதை தர்மக்ஷேத்ரம் என்று ஏன் சொல்ல வேண்டும்?

பதில்: மஹாபாரதம் வன பர்வம் 83வது அத்யாயத்திலும், சல்ய பர்வம் 53வது அத்யாயத்திலும் குருக்ஷேத்ரத்தின் பெருமை விசேஷமாக விளக்கப்படுகிறது. அது ஸரஸ்வதீ

நதியின் தென்புறத்திலும், த்ருஷத்வதீ நதியின் வடபுறத்திலும் உள்ள இடைப்பட்ட பகுதியில் இருக்கிறது என்று கூறப்படுகிறது. அதன் நீள, அகலம் ஐந்துக்கு ஐந்து யோஜனை தூரம் என்று கூறுகிறார்கள். இந்த இடம் அம்பாலாவுக்குத் தெற்கேயும், டில்லிக்கு வடக்கேயும் உள்ளது. இப்பொழுதும் குருக்ஷேத்ரம் என்ற இடம் அங்கே உள்ளது. இதற்கு மற்றொரு பெயர் ஸமந்தபஞ்சகம் என்பது. சதபதப்ராஹ்மணம் முதலிய நூல்களில், 'இங்கு அக்னி, இந்த்ரன், ப்ரம்மா முதலிய தேவர்கள் தவம் செய்தார்கள். குரு மஹாராஜனும் இங்கே உயரிய தவம் செய்தான். இங்கே இறப்பவர்கள் உத்தம கதியைப் பெறுகிறார்கள்' என்று கூறப்படுகிறது. இவை தவிர வேறு பல காரணங்களுக்காகவும் இது 'தர்மக்ஷேத்ரம்' என்றும், 'புண்யக்ஷேத்ரம்' என்றும் கூறப்படுகிறது.

கேள்வி: த்ருதராஷ்ட்ரர் 'மாமகா:' (என்னுடையவர்கள்) என்று யாரைக் குறிப்பிடுகிறார்? பாண்டவர்கள் என்று எவரைக் குறிப்பிடுகிறார்? அந்தச் சொற்களோடு, 'ஸமவேதா:' என்றும், 'யுயுத்ஸவ:' என்றும் அடைமொழிகளோடு 'கிம் அகுர்வத' என்று கேட்கிறார். அதன் கருத்து என்ன?

பதில்: 'மாமகா:' என்ற சொல்லினால் த்ருதராஷ்ட்ரர் தம் கட்சியைச் சார்ந்த அனைத்து யுத்த வீரர்களையும் துர்யோதனன் முதலான தம் நூற்றொரு குமாரர் களையும் சேர்த்துக் குறிப்பிடுகிறார். பாண்டவர் என்ற சொல்லினால் யுதிஷ்டிரர் கட்சியைச் சார்ந்த அனைத்து வீரர்களையும், யுதிஷ்டிரர் முதலான ஐந்து ஸஹோதரர்களையும் குறிப்பிடுகிறார். 'ஸமவேதா:', 'யுயுத்ஸவ:' என்ற உரிச்சொற்களோடு 'கிம் அகுர்வத' என்ற கேள்வியினால், த்ருதராஷ்ட்ரர், சென்ற பத்து நாட்களில் நடந்த பயங்கரமான போரின் முழு விவரத்தையும் தெரிந்து கொள்ள விரும்பினார். 'யுத்தத்திற்காக ஒன்றுகூடிய அனைவரும் போரை எவ்விதம் தொடங்கினார்கள்? யார் யாரோடு பொருதனர்? யார், யாரால், எவ்விதம், எவ்வாறு, எப்பொழுது அடிபட்டு மடிந்தனர்?' முதலான கேள்விகளைக் கேட்டார்.

பாட்டனார் பீஷ்மரின் வீழ்ச்சி வரை நடந்தவற்றை முன்பே த்ருதராஷ்ட்ரர் கேட்டு அறிந்து கொண்டுவிட்டார். ஆகவே, தர்மக்ஷேத்ரத்தின் மஹிமையினால் என் குமாரர்களுக்கு அறிவு திருந்தி இருக்குமோ? அவர்கள் பாண்டவர்களுக்கு உரியதைக் கொடுத்து, யுத்தம் செய்யாமல் இருந்திருப்பார்களோ அல்லது தர்ம புத்ரரே தர்மக்ஷேத்ர மஹிமையினால் உந்தப்பட்டு யுத்தத்திலிருந்து விலகி இருப்பாரோ? இதுவரை இரண்டு படைகளும் நின்று கொண்டுதான் இருக்கின்றனவா? யுத்தம் நடக்கவே இல்லையா? யுத்தம் நடந்திருந்தால் அதன் விளைவு என்ன என்று கேட்கும் அவருக்கு யுத்தச் செய்திகள் எவையும் தெரியா என்பது இந்தக் கேள்விக்குப் பொருளன்று.

பொருத்தம்: த்ருதராஷ்ட்ரர் வினவியதும் ஸஞ்ஜயன் கூறுகிறார்—

सञ्जय उवाच

दृष्ट्वा तु पाण्डवानीकं व्यूढं दुर्योधनस्तदा।
आचार्यमुपसङ्गम्य राजा वचनमब्रवीत्॥ २॥

ஸஞ்ஜய உவாச

த்3ருஷ்ட்வா து பாண்ட3வானீகம் வ்யூட4ம் து3ர்யோத4நஸ்ததா3 ।
ஆசார்யமுபஸங்க3ம்ய ராஜா வசநமப்3ரவீத் ॥ 2 ॥

ஸஞ்ஜய உவாச – ஸஞ்ஜயன் சொன்னார்: **ததா3** – அப்பொழுது, **ராஜா துர்யோத4ந:** – ராஜா துர்யோதனன், **வ்யூட4ம்** – அணி வகுத்து நிறுத்தப்பட்டிருந்த, **பாண்ட3வானீகம்** – பாண்டவர் படையை, **த்3ருஷ்ட்வா து** – பார்த்ததும், **ஆசார்யம்** – த்ரோணாசார்யரை, **உபஸங்க3ம்ய** – அணுகி, **வசநம்** – (இந்த) வார்த்தையை, **அப்3ரவீத்** – கூறலானான்.

ஸஞ்ஜயன் சொன்னார்: "அப்பொழுது ராஜா துர்யோதனன் அணிவகுத்து நிறுத்தப் பட்டிருந்த பாண்டவர் படையைப் பார்த்ததும் குருவாகிய த்ரோணாசார்யரை அணுகி இந்த வார்த்தையைக் கூறலானான்."

கேள்வி: துர்யோதனனை 'ராஜா' என்று கூறுவதன் கருத்து என்ன?

பதில்: துர்யோதனனை 'ராஜா' என்று ஸஞ்ஜயன் கூறுவதற்குப் பல கருத்துக்கள் இருக்கலாம்.

அ. துர்யோதனன் மாவீரன்; அரசியல் அறிவு நிறைந்தவன்; அரசாட்சியில் அனைத்தையும் அவனே செய்து வந்தான்.

ஆ. ஸாதுக்கள் அனைவருக்கும் மரியாதை கொடுப்பார்கள். ஸஞ்ஜயனும் ஸாது ஸ்வபாவம் படைத்தவர்.

இ. தம்முடைய மகன் மரியாதை தரும் அடைமொழிகளால் குறிப்பிடப்படுவதைக் கேட்டு, தந்தையான த்ருதராஷ்ட்ரர் மகிழ்ச்சி அடையலாம்.

கேள்வி: 'அணிவகுத்து நிறுத்தப்பட்டிருந்த பாண்டவர் படையைக் கண்ட துர்யோதனன், த்ரோணாசார்யரை அணுகினான்' – இதற்கு என்ன பொருள்?

பதில்: பாண்டவரின் அணிவகுப்பு அவ்வளவு விசித்திரமான முறையில் அமைந்திருந்தது. அதைப் பார்த்து துர்யோதனன் வியப்படைந்தான். அதைர்யமடைந்த அவன், அதை எடுத்துக் கூறுவதற்காக த்ரோணரிடம் ஓடினான். பாண்டவர் படையின் அணிவகுப்பைப் பார்த்து, அதைப் பற்றிக் கேள்விப்பட்டு தனுர் வேதத்தில் சிறந்த அறிவு பெற்ற குருதேவர் த்ரோணர் அதைக்காட்டிலும் மேன்மையாகத் தம் படையை விசித்திரமான முறையில் அணிவகுக்கும்படி பாட்டனாருக்கு எடுத்துக் கூறுவார் என்று துர்யோதனன் எண்ணினான்.

கேள்வி: அரசனான துர்யோதனன் ஏன் படைத்தலைவரிடம் தானே சென்றான்? படைத்தலைவரைத் தன்னிடம் அழைத்து அனைத்துச் செய்திகளையும் சொல்லி அறிவுறுத்தியிருக்கலாமே?

பதில்: பாட்டனார் பீஷ்மர்தான் கௌரவப் படைக்கு ப்ரதானமான படைத்தலைவர். ஆனாலும் கௌரவப் படையில் குருவான த்ரோணாசார்யருக்கு உயர்ந்த ஸ்தானம் உண்டு. மிகுந்த பொறுப்பும் உண்டு. படை அணிவகுப்பில் எந்தப் படைத்தலைவருக்கு எந்த இடம் அளிக்கப்பட்டிருக்கிறதோ, அவரை அங்கிருந்து அழைப்பதோ, அகற்றுவதோ முறையன்று. அணிவகுப்பில் குழப்பம் ஏற்படும். ஆகவே த்ரோணாசார்யரை அவருக்கு அளிக்கப்பட்ட பகுதியிலிருந்து அகற்றாமல் தானே அங்கு போவதுதான் உசிதம் என்று துர்யோதனன் நினைத்தான். மேலும் த்ரோணாசார்யர் வயதிலும், அறிவிலும் மூத்தவர்; தனக்கு ஆசார்யர்; மதிப்பிற்குரியவர்; தற்சமயம் அவரால் கார்யம் ஆகவேண்டும். ஆகவே அவரைப் பெருமைப்படுத்தி, அவருடைய அன்பைப் பெறுவதுதான் தனக்கு நல்லது என்று நினைத்தான். மிகச்சிறந்த அறநெறிப்படி எல்லோருக்கும் மதிப்புக் கொடுத்துப் பணிவுடன் நடந்து கொள்வதுதான் முறை. அரசியலில் புத்திசாலியானவன் தன் கார்யம் நிறைவேறுவதற்காகப் பிறரைப் பெருமைப்படுத்தத்தான் வேண்டும். இத்தனையையும் கவனித்தால் துர்யோதனன் த்ரோணரிடம் சென்றது முறையானதுதான் என்பது தெளிவாகும்.

பொருத்தம்: த்ரோணாசார்யரிடம் துர்யோதனன் கூறியதை இனி கூறுகிறார்—

पश्यैतां पाण्डुपुत्राणामाचार्य महतीं चमूम्।
व्यूढां द्रुपदपुत्रेण तव शिष्येण धीमता॥ ३॥

பஶ்யைதாம் பாண்டு3புத்ராணாமாசார்ய மஹதீம் சமூம் ।
வ்யூடா4ம் த்3ருபத3புத்ரேண தவ ஶிஷ்யேண தீ4மதா ॥ 3 ॥

ஆசார்ய – ஆசார்யரே! **தவ** – உங்களுடைய, **தீ$_4$மதா** – புத்திசாலியான, **ஶிஷ்யேண** – சிஷ்யனான, **த்$_3$ருபத$_3$ புத்ரேண** – த்ருபதனின் குமாரன் த்ருஷ்டத்யும்னனால், **வ்யூட$_4$ாம்** – அணி வகுக்கப்பட்ட, **பாண்டு$_3$புத்ராணாம்** – பாண்டு புத்ரர்களின், **ஏதாம்** – இந்த, **மஹதீம்** – மிகப்பெரிய, **சமூம்** – படையை, **பஶ்ய** – பாருங்கள்.

ஆசார்யரே! உங்களுடைய புத்திசாலி சிஷ்யனான த்ருபதனின் குமாரன் த்ருஷ்டத்யும்னனால் அணிவகுக்கப்பட்ட பாண்டு புத்ரர்களின் இந்த மிகப்பெரிய படையைப் பாருங்கள்.

கேள்வி: 'த்ருஷ்டத்யும்னன் த்ருபதரின் குமாரன். உங்கள் சிஷ்யன். புத்திசாலி' என்று துர்யோதனன் என்ன அபிப்ராயத்தோடு கூறினான்?

பதில்: துர்யோதனன் அரசியல் சூழ்ச்சியில் மிகவும் கெட்டிக்காரன். த்ருஷ்டத்யும்னன் மீது பழிவாங்கும் எண்ணத்தையும், பாண்டவர்களைப் பற்றிய கெட்ட எண்ணத்தையும் த்ரோணரிடம் ஏற்படுத்தி, அவரை மிகவும் வெறி கொள்ளச் செய்வதற்காக, த்ருஷ்டத்யும்னனை த்ருபத புத்ரன் என்றும், புத்திசாலியான உங்கள் சிஷ்யன் என்றும் குறிப்பிட்டான். இந்தச் சொற்களின் மூலம் அவன் அவருக்கு இப்படியும் அறிவுறுத்தினான்: "பாருங்கள்! த்ருபதன் உங்களிடம் முன்பு தவறாக நடந்து கொண்டான். பிறகு உங்களை வதம் செய்வதற்காகவே யாகம் செய்து த்ருஷ்டத்யும்னனை மகனாகப் பெற்றான். த்ருஷ்டத்யும்னனுக்குச் சூழ்ச்சிகள் எல்லாம் தெரிகின்றன. நீங்களோ இவ்வளவு எளிமையாக இருக்கிறீர்கள். உங்களைக் கொல்வதற்காகவே பிறந்தவன். உங்களிடமே வில்வித்தை கற்றிருக்கிறான். அது மட்டுமன்று; அவனுடைய புத்திசாலித்தனத்தைப் பாருங்கள்! உங்கள் எல்லோரையும் திணற வைக்கும்படியான அழகான அணிவகுப்பு ஒன்றைச் செய்திருக்கிறான். இத்தகையவனைப் பாண்டவர்கள் தலைமை ஸேனாதிபதியாகப் பட்டம் கட்டியிருக்கிறார்கள். இப்பொழுது நாம் வெற்றிபெற என்ன செய்ய வேண்டுமென்று நீங்களே யோசித்துப் பாருங்கள்!"

கேள்வி: கௌரவ ஸேனை பதினொன்று அக்ஷௌஹிணீ என்றும், பாண்டவ ஸேனை வெறும் ஏழு அக்ஷௌஹிணீ என்றும் இருக்கும்போது துர்யோதனன் எதிர்ப்படையை ஏன் மிகப் பெரியது (மஹதீ) என்று சொல்கிறான்? அதைப் பாருங்கள் – என்று ஆசார்யரை ஏன் வற்புறுத்துகிறான்?

பதில்: எண்ணிக்கையில் குறைந்ததாக இருந்தாலும் வஜ்ர வ்யூஹ அமைப்பினால் அது பெரியதாகத் தெரிகிறது. மற்றொரு விஷயமும் உண்டு. எண்ணிக்கையில் அது குறைந்ததாக இருந்தாலும் அது கட்டுப்பாடு நிறைந்ததாக இருக்கிறது. ஆகவே, அது மிகுந்த சக்தி வாய்ந்ததாகக் கருதப்படுகிறது. இதனால் துர்யோதனன் 'இத்தகைய அணிவகுப்பில் கட்டுப்பாட்டுடன் விளங்கும் பெரிய படையைப் பாருங்கள். நாம் எப்படி வெற்றி பெறுவோமோ, அதற்குத்தக்க உபாயத்தைச் சிந்தியுங்கள்' என்று கூறுகிறான்.

பொருத்தம்: பாண்டவ ஸேனையின் அணிவகுப்பைக் காட்டிவிட்டு, துர்யோதனன் அடுத்த மூன்று ச்லோகங்களில் பாண்டவர் படையில் உள்ள சிறந்த மஹாரதிகளின் பெயர்களைக் கூறுகிறான்—

अत्र शूरा महेष्वासा भीमार्जुनसमा युधि।
युयुधानो विराटश्च द्रुपदश्च महारथः ॥ ४ ॥

धृष्टकेतुश्चेकितानः काशिराजश्च वीर्यवान्।
पुरुजित्कुन्तिभोजश्च शैब्यश्च नरपुङ्गवः ॥ ५ ॥

युधामन्युश्च विक्रान्त उत्तमौजाश्च वीर्यवान्।
सौभद्रो द्रौपदेयाश्च सर्व एव महारथाः ॥ ६ ॥

அத்ர ஶூரா மஹேஷ்வாஸா பீ4மார்ஜுநஸமா யுதி4 ।
யுயுத4ாநோ விராடஶ்ச த்3ருபத3ஶ்ச மஹாரத2: ॥ 4 ॥
த்4ருஷ்டகேதுஶ்சேகிதாந: காஶிராஜஶ்ச வீர்யவாந் ।
புருஜித்குந்திபோ4ஜஶ்ச ஶைப்3யஶ்ச நரபுங்க3வ: ॥ 5 ॥
யுத4ாமந்யுஶ்ச விக்ராந்த உத்தமௌஜாஶ்ச வீர்யவாந் ।
ஸௌப4த்3ரோ த்3ரௌபதே3யாஶ்ச ஸர்வ ஏவ மஹாரத2ா: ॥ 6 ॥

அத்ர – இந்தப் படையில், **மஹேஷ்வாஸா:** – பெரிய பெரிய வில்லாளிகள், **யுதி4** – யுத்தத்தில், **பீ4ம அர்ஜுநஸமா:** – பீமனுக்கும், அர்ஜுனனுக்கும் ஈடான, **ஶூரா:** – வீரர்கள், **யுயுத4ாந:** – ஸாத்யகியும், **விராட: ச** – விராடனும், **மஹாரத2:** – மஹாரதியான, **த்3ருபத3: ச** – ராஜா த்ருபதனும், **த்4ருஷ்டகேது:** – த்ருஷ்டகேதுவும், **சேகிதாந: ச** – சேகிதானனும், **வீர்யவாந்** – பலசாலியான, **காஶிராஜ:** – காசிராஜனும், **புருஜித்** – புருஜித்தும், **குந்திபோ4ஜ: ச** – குந்திபோஜனும், **நரபுங்க3வ:** – மனிதர்களிற்சிறந்த, **ஶைப்3ய: ச** – சைப்யனும், **விக்ராந்த:** – பராக்ரமம் மிகுந்த, **யுத4ாமன்யு: ச** – யுதாமன்யுவும், **வீர்யவாந்** – பலசாலியான, **உத்தமௌஜா: ச** – உத்தமௌஜாவும், **ஸௌப4த்3ர:** – ஸுபத்ரையின் குமாரன் அபிமன்யுவும், **ச** – அவ்வாறே, **த்3ரௌபதே3யா:** – த்ரௌபதியின் ஐந்து புதல்வர்களும், **ஸர்வே ஏவ** – அவர்கள் எல்லோருமே, **மஹாரத2ா:** – மஹாரதிகளாக, **(ஸந்தி** – இருக்கிறார்கள்).

இந்தப் படையில் பெரிய பெரிய வில்லாளிகள் யுத்தத்தில் பீமனுக்கும், அர்ஜுனனுக்கும் ஈடான வீரர்கள் ஸாத்யகியும், விராடனும், மஹாரதியான ராஜா த்ருபதனும், த்ருஷ்டகேதுவும், சேகிதானனும், பலசாலியான காசிராஜனும், புருஜித்தும், குந்திபோஜனும், மனிதர்களிற் சிறந்த சைப்யனும், பராக்ரமம் மிகுந்த யுதாமன்யுவும், பலசாலியான உத்தமௌஜாவும், ஸுபத்ரையின் குமாரன் அபிமன்யுவும் அவ்வாறே த்ரௌபதியின் ஐந்து புதல்வர்களும் – அவர்கள் எல்லோருமே மஹாரதிகளாக இருக்கிறார்கள்.

கேள்வி: 'அத்ர' என்ற சொல் எந்தப் பொருளில் இங்கு உபயோகப்படுத்தப்படுகிறது?

பதில்: 'அத்ர' என்ற சொல் பாண்டவர் படை என்ற பொருளில் கூறப்படுகிறது.

கேள்வி: 'யுதி' என்ற சொல், 'அத்ர' என்பதுடன் அல்லாமல், 'பீமார்ஜுநஸமா:' என்பதுடன் ஏன் சேர்க்கப்பட்டிருக்கிறது?

பதில்: யுத்தம் இன்னும் ஆரம்பிக்கவில்லை. ஆகவே 'அத்ர', 'யுதி' – 'இந்த யுத்தத்தில்' என்று சொல்ல முடியாது. இதற்கு முன் பாண்டவர் ஸேனை பற்றித்தான் பேசப்படுகிறது. ஆகவே 'அத்ர' (இந்த) என்று அதைத்தான் குறிப்பிட முடியும். ஆகவே 'படையில்' என்று சேர்ப்பதற்கு அவசியமில்லை. 'யுத்தத்தில்' என்ற சொல்லை 'பீமார்ஜுநஸமா:' – 'பீமன், அர்ஜுனனுக்கு ஸமானமானவர்கள்' என்ற சொல்லோடு சேர்த்தால்தான் இங்கே குறிப்பிட்ட பெயர்களுக்கு உரியவர்கள் வீரத்திலும், போர் முறையிலும் பீம–அர்ஜுனர்களுக்கு ஸமானமானவர்கள் – என்பது பொருத்தமாக இருக்கிறது.

கேள்வி: யுயுதானன், விராடன், த்ருபதன், த்ருஷ்டகேது, சேகிதானன், காஶிராஜன், புருஜித், குந்திபோஜன், ஶைப்யன், யுதாமன்யு, உத்தமௌஜா இவர்கள் யார்?

பதில்: யுயுதானன் – அர்ஜுனனுடைய சிஷ்யன். ஸாத்யகிக்கு யுயுதானன் என்றும் பெயர் உண்டு (மஹா. உத்யோக பர்வம் *81/5–8*). இவன் யாதவ வம்சத்து அரசன் 'ஶினி' என்பவரின் மகன் (மஹா. த்ரோண பர்வம் *144/17–19*); **ஶ்ரீ**க்ருஷ்ணனைச் சார்ந்தவன்; பலம்

மிகுந்தவன்; அதிரதி. இவன் மஹாபாரத யுத்தத்தில் இறக்கவில்லை. யாதவர்களுக்குள் ஏற்பட்ட யுத்தத்தில் அடிபட்டு இறந்தான். யுயுதானன் என்ற பெயர் கொண்ட வேறு ஒரு யாதவ வம்சத்து வீரனும் உண்டு (மஹா. உத்யோக பர்வம் 152/6).

விராடன் — மத்ஸ்ய தேசத்து அறவழி ஒழுகிய அரசர். பாண்டவர்கள் ஓராண்டு இவரது மாளிகையில் மறைந்து வாழ்ந்தார்கள். இவருடைய பெண் உத்தரையை அர்ஜுனனுடைய மகன் அபிமன்யு மணந்தான். மஹாபாரத யுத்தத்தில் இவரும், உத்தரன், ச்வேதன், சங்கன் என்ற இவருடைய மூன்று மகன்களும் அடிபட்டு இறந்தனர்.

த்ருபதன் — இவர் பாஞ்சால தேசத்து அரசர். 'ப்ருஷத்' என்பவரின் குமாரர். ப்ருஷத்தும், பரத்வாஜ முனிவரும் நண்பர்கள். இளமையில் த்ருபதனும் பரத்வாஜ முனிவரின் ஆசிரமத்தில் இருந்தார். அதனால் பரத்வாஜருடைய குமாரர் த்ரோணருடன் இவருக்கு நட்பு உண்டாயிற்று. ப்ருஷத் பரலோகம் போனபிறகு த்ருபதன் அரசர் ஆனார். அப்பொழுது ஒரு நாள் த்ரோணர் அவரிடம் சென்று நட்புரிமை கொண்டாடினார். த்ருபதனுக்கு அது பிடிக்கவில்லை. த்ரோணர் வேதனையுற்றுத் திரும்பினார். த்ரோணர் கௌரவர்களுக்கும், பாண்டவர்களுக்கும் வில்வித்தை கற்பித்த பிறகு குருதக்ஷிணை என்ற முறையில் அர்ஜுனனைக் கொண்டு த்ருபதனை வென்று, தமக்கு ஏற்பட்ட அவமானத்தைத் தீர்த்துக் கொண்டார். த்ருபதனுடைய பாதி ராஜ்யத்தை எடுத்துக் கொண்டார். த்ருபதன் மேலெழுந்தவாரியாக த்ரோணருடன் அன்பு காட்டினார். மனதிற்குள் கொந்தளிப்பு இருந்தது. யாஜர், உபயாஜர் என்ற ரிஷிகளைக் கொண்டு த்ரோணரைக் கொல்லக்கூடிய மகனை அடைய வேண்டுமென்று யாகம் செய்வித்தார் த்ருபதன். அந்த யாகவேதியிலிருந்து த்ருஷ்டத்யும்னனும், க்ருஷ்ணையும் தோன்றினார்கள். இந்த க்ருஷ்ணைதான் 'த்ரௌபதி', 'யாஜ்ஞஸேனீ' என்று புகழ் பெற்றாள். சுயம்வரத்தில் வெற்றி பெற்றுப் பாண்டவர்கள் அவளை மணந்தார்கள். த்ருபத ராஜர் பெரிய சூரவீரர்; மஹாரதி. மஹாபாரத யுத்தத்தில் த்ரோணர் கையால் இவருக்கு மரணம் ஏற்பட்டது (மஹா. த்ரோண பர்வம் 186).

த்ருஷ்டகேது — சேதி நாட்டு அரசன்; ஶிஶுபாலனின் மகன். மஹாபாரத யுத்தத்தில் இவனை த்ரோணர் வதைத்தார் (மஹா. த்ரோண பர்வம் 125).

சேகிதானன் — வ்ருஷ்ணி வம்சத்தைச் சேர்ந்த யாதவன் (மஹா. பீஷ்ம பர்வம் 84/20); சூரவீரன்; மஹாரதி. பாண்டவர்களின் ஏழு அக்ஷௌஹிணீ படைக்குரிய ஏழு ஸேனாபதிகளில் ஒருவன் (மஹா. உத்யோக பர்வம் 151). இவனை மஹாபாரத யுத்தத்தில் துர்யோதனன் கொன்றான் (மஹா. சல்ய பர்வம் 12).

காஶிராஜன் — காசிக்கு அரசன்; பெரிய வீரன்; மஹாரதி. இவன் பெயர் சரியாகத் தெரியவில்லை. மஹாபாரதம், உத்யோக பர்வம் 171ல் காசிராஜனின் பெயர் 'ஸேனாபிந்து' என்றும், 'க்ரோதஹந்தா' என்றும் கூறப்படுகிறது. கர்ண பர்வம் 6வது அத்யாயத்தில் காசிராஜனின் மரணம் கூறப்படுகிறது. அங்கு அவன் பெயர் 'அபிபூ' என்று கூறப்படுகிறது.

புருஜித், குந்திபோஜன் — இருவரும் குந்தியின் ஸஹோதரர்கள். யுதிஷ்டிரர் முதலானவர்களுக்கு அம்மான்கள். இருவரையும் மஹாபாரத யுத்தத்தில் த்ரோணர் கொன்றார் (மஹா. கர்ண பர்வம் 6/22,23).

ஶைப்யன் — இவர் யுதிஷ்டிரரின் மாமனார். இவர் பெண் தேவிகாவை யுதிஷ்டிரர் மணந்தார் (மஹா. ஆதி பர்வம் 95); மனிதர்களில் சிறந்தவர்; பெரிய யுத்த வீரர். அதனால் 'நரபுங்கவர்' என்று கூறப்படுகிறார்.

யுதாமன்யு, உத்தமௌஜா — இருவரும் ஸஹோதரர்கள். பாஞ்சால தேசத்து ராஜகுமாரர்கள் (மஹா. த்ரோண பர்வம் 130). முதலில் அர்ஜுனனின் ரதத்திற்கு சக்ரக்காப்பாளர்களாக நியமிக்கப்பட்டார்கள் (மஹா. பீஷ்ம பர்வம் 15/19). இவர்கள் சிறந்த வீரர்கள்; பலம் மிகுந்தவர்கள். ஆகவே, இவர்களுக்கு 'விக்ராந்த' என்றும், 'வீர்யவான்' என்றும் முறையே அடைமொழிகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இரவில் இவர்கள் உறங்கிக்

கொண்டிருந்தபோது இவர்களை அஶ்வத்தாமா கொன்றுவிட்டான். (மஹா. ஸௌப்திக பர்வம் 8/34-37).

கேள்வி: அபிமன்யு யார்?

பதில்: அர்ஜுனன், பகவான் க்ருஷ்ணனுடைய ஸஹோதரி ஸுபத்ரையை மணந்தார். அவள் கர்பத்தில் அபிமன்யு பிறந்தான். மத்ஸ்ய நாட்டு அரசன் விராடனுடைய பெண் உத்தரையை அபிமன்யு மணந்தான். தன் தகப்பனாரான அர்ஜுனனிடமும், அம்மான் மகன் ப்ரத்யும்னனிடமும் வில்வித்தை கற்றான். நிகரற்ற வீரன். மஹாபாரத யுத்தத்தில் த்ரோணர் ஒரு நாள் சக்ரவ்யூஹம் அமைத்தார். பாண்டவர் அணியைச் சேர்ந்த யுதிஷ்டிரர், பீமன், நகுலன், ஸஹதேவன், விராடன், த்ருபதன், த்ருஷ்டத்யும்னன் முதலிய எவரும் உள்ளே நுழைய முடியாதவாறு அவ்வளவு திறமையாக அந்த சக்ரவ்யூஹம் அமைந்திருந்தது. ஜயத்ரதன் எல்லோரையும் விரட்டிவிட்டான். அர்ஜுனன் வேறோரிடத்தில் யுத்தத்தில் முனைந்திருந்தார். அன்று வீர இளைஞனான அபிமன்யு தனியாக அந்த வ்யூஹத்தை உடைத்துக் கொண்டு உள்ளே நுழைந்துவிட்டான். எண்ணற்ற வீரர்களைக் கொன்று குவித்தான். தன் நிகரற்ற வீரத்தைக் காண்பித்தான். த்ரோணர், க்ருபாசார்யர், கர்ணன், அஶ்வத்தாமா, ப்ருஹத்பலன், க்ருதவர்மா என்ற ஆறு மஹாரதிகள் சேர்ந்து அந்யாயமாக அவனைச் சூழ்ந்து கொண்டார்கள். அந்த நிலையிலும் தனியாக நின்று அபிமன்யு பல வீரர்களைக் கொன்றான். முடிவில் துச்சாஸனனின் மகன் கதாயுதத்தால் அபிமன்யுவின் தலையில் ஓங்கி அடித்தான். அதனால் அவன் மரணம் அடைந்தான் (மஹா. த்ரோண பர்வம் 49). 'பாகூஷித்' மஹாராஜன் அபிமன்யுவின் புதல்வன்.

கேள்வி: த்ரௌபதியின் ஐந்து குமாரர்கள் யார் யார்?

பதில்: ப்ரதிவிந்த்யன், ஸுதஸோமன், ஶ்ருதகர்மா, ஶதானீகன், ஶ்ருதஸேனன் — இவர்கள் ஐவரும் முறையே யுதிஷ்டிரர், பீமஸேனன், அர்ஜுனன், நகுலன், ஸஹதேவன் இவர்களுக்கு த்ரௌபதியிடம் பிறந்தவர்கள் (மஹா. ஆதி பர்வம் 220/79,80). இரவில் தூங்கும்போது இவர்களை அஶ்வத்தாமா கொன்றுவிட்டான் (மஹா. ஸௌப்திக பர்வம் 8).

கேள்வி: 'ஸர்வ ஏவ மஹாரதா:' என்று கூறுவதன் கருத்து என்ன?

பதில்: சாஸ்த்ரங்களிலும், சஸ்த்ர (வில்) வித்தையிலும் தேர்ந்த நிபுணர்களை, நிகரற்றவர்களை மஹாரதீ என்று கூறுவார்கள். இவர்கள் தனியாகப் பதினாயிரம் வில்லாளி வீரர்களை யுத்தத்தில் நடத்திச் செல்வார்கள்.

ஏகோ த$_{3}$ஶஸஹஸ்ராணி யோத$_{4}$யேத்$_{3}$யஸ்து த$_{4}$ந்விநாம் ।
ஶஸ்த்ரஶாஸ்த்ரப்ரவீணஶ்ச மஹாரத$_{2}$ இதி ஸ்ம்ருத: ॥

துர்யோதனன் யார் யாரைப் பெயர் குறிப்பிட்டு இங்கே கூறினானோ, அவர்கள் அனைவரும் மஹாரதிகள். மஹாபாரதம் உத்யோக பர்வம் 169–172 அத்யாயங்களில் இந்த எல்லா வீரர்களுடைய பராக்ரமமும் தனித்தனியாக, விரிவாக வர்ணிக்கப்படுகிறது. அங்கும் இவர்கள் அதிரதி என்றும், மஹாரதி என்றும் கூறப்படுகின்றனர். இவர்களைத் தவிரப் பாண்டவர் படையில் இன்னும் பல மஹாரதிகள் இருந்தனர். அவர்களுடைய பெயர்களும் அங்கே கூறப்படுகின்றன. இங்கு 'ஸர்வே' என்ற சொல்லினால் துர்யோதனன் அவர்களையும் குறிப்பிடுவதாகக் கொள்ளவேண்டும்.

பொருத்தம்: பாண்டவர் படையின் ப்ரதான யுத்த வீரர்களின் பெயர்களைக் கூறிவிட்டு, துர்யோதனன் த்ரோணாசார்யரிடம் தன் படையில் கூடியிருக்கும் ப்ரதான வீரர்களை அறிந்து கொள்ளும்படி வேண்டுகிறான்—

अस्माकं तु विशिष्टा ये तान्निबोध द्विजोत्तम।
नायका मम सैन्यस्य संज्ञार्थं तान्ब्रवीमि ते॥ ७॥

அஸ்மாகம் து விஶிஷ்டா யே தாந்நிபோ³த⁴ த்³விஜோத்தம ।
நாயகா மம ஸைந்யஸ்ய ஸம்ஜ்ஞார்த²ம் தாந்ப்³ரவீமி தே ॥ 7 ॥

த்³விஜோத்தம – அந்தணர்களிற்சிறந்தவரே! **அஸ்மாகம்** – நமது அணியில், **து** – கூட, **யே விஶிஷ்டா:** – எந்த ப்ரதான யுத்த வீரர்கள், **(ஸந்தி** – இருக்கிறார்களோ), **தாந்** – அவர்களை, **நிபோ³த⁴** – தெரிந்து கொள்ளுங்கள். **மம** – என்னுடைய, **ஸைந்யஸ்ய** – படையின், **நாயகா:** – படைத்தலைவர்களான, **தாந்** – அவர்களைப் பற்றி, **தே** – உங்களுடைய, **ஸம்ஜ்ஞார்த²ம்** – கவனத்திற்காக, **ப்³ரவீமி** – சொல்கிறேன்.

அந்தணர்களிற் சிறந்தவரே! நமது அணியில்கூட ப்ரதான யுத்த வீரர்கள் யார் யார் இருக்கிறார்களோ அவர்களைத் தெரிந்து கொள்ளுங்கள். என்னுடைய படையின் தலைவர்களான அவர்களைப் பற்றி நீங்கள் தெரிந்து கொள்வதற்காகச் சொல்கிறேன்.

கேள்வி: 'து' என்ற சொல்லை 'அஸ்மாகம்' என்ற சொல்லுடன் இணைத்துக் கூறுவதன் பொருள் என்ன?

பதில்: 'து' என்றால் 'கூட' என்று பொருள். பாண்டவர் படையில் மட்டுமல்ல; நம்முடைய படையிலும்கூடப் பெரிய பெரிய வீரர்கள் இருக்கிறார்கள் என்று துர்யோதனன் எடுத்துக்காட்ட விரும்புகிறான்.

கேள்வி: 'விஶிஷ்டா:' என்பது யாரைக் குறிக்கும்? 'நிபோத' என்று கூறுவதன் கருத்து என்ன?

பதில்: நம்முடைய படையிலும் அனைவரையும்விடச் சிறந்த வீரர், தீரர், பலமுள்ளவர், புத்திசாலி, ஸாஹஸம் புரிபவர், பராக்ரமம் உள்ளவர், ஒளிமிக்கவர், வில்வித்தையில் தேர்ந்தவர்கள் இருக்கிறார்கள் என்பதை 'விஶிஷ்டா:' என்ற சொல்லினால் துர்யோதனன் குறிப்பிடுகிறான். நம்முடைய படையிலும் மிகச் சிறந்த சூரவீரர்களுக்குக் குறைவில்லை. அவர்களில் சிலரைக் குறிப்பிட்டுச் சொல்கிறேன். நீங்கள் அவர்களை நன்றாகத் தெரிந்து கொள்ளவேண்டும் என்று 'நிபோத' – 'என் வாயிலாகக் கேளுங்கள்' என்று கூறுகிறான்.

பொருத்தம்: இப்பொழுது இரு ச்லோகங்களில் துர்யோதனன் தன் அணியில் உள்ள ப்ரதான வீரர்களின் பெயர்களைக் குறிப்பிட்டு மற்ற வீரர்களோடு சேர்த்து அவர்களைப் புகழ்கிறான்—

भवान्भीष्मश्च कर्णश्च कृपश्च समितिञ्जय:।
अश्वत्थामा विकर्णश्च सौमदत्तिस्तथैव च॥८॥

ப⁴வாந்பீ⁴ஷ்மஶ்ச கர்ணஶ்ச க்ருபஶ்ச ஸமிதிஞ்ஜய: ।
அஶ்வத்த²மா விகர்ணஶ்ச ஸௌமத³த்திஸ்ததை²வ ச ॥ 8 ॥

ப⁴வாந் ச – தாங்களும் (த்ரோணாசார்யர்), **பீ⁴ஷ்ம: ச** – பாட்டனார் பீஷ்மரும், **கர்ண: ச** – கர்ணனும், **ஸமிதிஞ்ஜய:** – யுத்தங்களில் வெற்றியே பெறுகின்ற, **க்ருப: ச** – க்ருபாசார்யரும், **ததா² ஏவ** – அவ்வாறே, **அஶ்வத்த²மா** – அஶ்வத்தாமாவும், **விகர்ண: ச** – விகர்ணனும், **ஸௌமத³த்தி:** – ஸோமதத்தனின் மகன் பூரிஶ்ரவஸ்ஸும்,

தாங்களும் (த்ரோணாசார்யர்), பாட்டனார் பீஷ்மரும், கர்ணனும், யுத்தங்களில் வெற்றியே பெறுகின்ற க்ருபாசார்யரும், அவ்வாறே அஶ்வத்தாமாவும், விகர்ணனும், ஸோமதத்தனின் மகன் பூரிஶ்ரவஸ்ஸும்,

கேள்வி: த்ரோணாசார்யர் யார்? துர்யோதனன் அனைத்து வீரர்களுக்கும் முன்னால் அவரை 'நீங்கள்' என்று குறிப்பிட்டு அவர் பெயரை எதற்காகக் கூறினான்?

பதில்: த்ரோணாசார்யர் பரத்வாஜ மஹரிஷியின் புதல்வர். இவர் அக்னிவேம்ய மஹரிஷியிடமும், ஸ்ரீபரஶுராமரிடமும் எல்லா அஸ்த்ர-ஶஸ்த்ரங்களுடைய ரஹஸ்யங்களையும், ப்ரயோகங்களையும் கற்றார். அவர் வேதங்கள், வேதாங்கங்களை முற்றிலும் அறிந்தவர்; பெரிய தவசீலர்; முழுமையாக தனுர்வேதம், அஸ்த்ர-ஶஸ்த்ர வித்யைகளின் மர்மம் அறிந்தவர்; அனுபவம் உள்ளவர்; யுத்தக்கலையில் சிறந்த நிபுணர்; ஸாஹஸம் நிறைந்தவர்; அதிரதியான வீரர்; ப்ரம்மாஸ்த்ரம், ஆக்னேய அஸ்த்ரம் முதலிய விசித்ரமான அஸ்த்ரங்களின் ப்ரயோகத்தை நன்கு அறிந்தவர். யுத்தகளத்தில் அவர் தம் பூரண சக்தியோடு முனைந்து நிற்குங்கால் அவரை யாராலும் வெல்ல முடியாது. இவர் 'ஶரத்வான்' என்ற மஹரிஷியின் பெண் 'க்ருபி'யை மணந்து கொண்டார். இவளிடம் பிறந்தவன்தான் அஶ்வத்தாமா. த்ரோணர் த்ருபதராஜனின் பால்ய கால நண்பர். ஒரு சமயம் இவர் த்ருபதனிடம் சென்று, 'ப்ரிய நண்பனே!' என்று அழைத்தார். அவர் செல்வச் செருக்கினால் த்ரோணரை அவமதித்துவிட்டார். 'என்னைப் போன்ற செல்வம் படைத்த அரசனுக்கு உன்னைப் போன்ற செல்வமற்ற தரித்திரனுடைய நட்பு எவ்விதமும் இருக்க முடியாது' என்றார். த்ருபதன் இவ்வாறு தம்மை அவமதித்ததால் த்ரோணருடைய உள்ளத்தில் மிகுந்த வேதனை ஏற்பட்டது. அவர் ஹஸ்தினாபுரம் சென்று தம் மைத்துனர் க்ருபாசார்யருடன் தங்க ஆரம்பித்தார். அங்கு இவருக்குப் பாட்டனார் பீஷ்மருடைய அறிமுகம் ஏற்பட்டது. அவர் கௌரவ, பாண்டவ குமாரர்களுக்குக் கல்வி அளிக்கும்படி த்ரோணரை நியமித்தார். கல்வி அளித்து முடித்தபிறகு குருதக்ஷிணை என்ற முறையில் த்ரோணர் த்ருபத ராஜனைப் பிடித்துக் கொண்டு வருமாறு சிஷ்யர்களைப் பணித்தார். மஹாத்மாவான அர்ஜுனனால்தான் குருவின் இந்த ஆணையை நிறைவேற்ற முடிந்தது. த்ருபதனை யுத்தகளத்தில் தோற்கடித்து மந்திரிகளுடன்கூட அவரைப் பிடித்துக் கொண்டு வந்தார். த்ரோணர் அவரை உயிரோடு விட்டுவிட்டார். ஆனால், அவருடைய ராஜ்யத்தில் கங்கையின் வடபுறப் பகுதியை எடுத்துக் கொண்டார். த்ரோணர் மஹாபாரத யுத்தத்தில் ஐந்து நாட்கள் ஸேனாபதியாக இருந்தார். பயங்கரமான யுத்தம் புரிந்தார். முடிவில் தம் குமாரன் அஶ்வத்தாமா இறந்துவிட்டான் என்ற தவறான செய்தியைக் கேட்டு ஆயுதங்களை த்யாகம் செய்து, ஸமாதியில் அமர்ந்து பகவானை த்யானம் செய்தார். இவர் தாமே உயிர் த்யாகம் செய்தவுடன் இவருடைய ஜ்யோதிமய ஸ்வரூபம் ஒளி மிகுந்து ஆகாயமெங்கும் பரவி நிறைந்தது. இந்த நிலையில் த்ருஷ்டத்யும்னன் கூரான வாளினால் அவருடைய தலையைக் கொய்தான்.

துர்யோதனன் இங்கு 'நீங்கள்' என்று முதலில் இவரைக் குறிப்பிட்டுச் சொன்னது, த்ரோணர் த்ருப்திப்படட்டும் என்ற எண்ணத்தினால். அதனால், தன் அணியில் மேலும் உற்சாகத்தோடு யுத்தம் புரிவார் என்ற எண்ணத்தினாலும், தனக்குக் கல்வி கற்பித்தவர் என்ற மரியாதையாலும் அனைவருக்கும் முதலில் அவரை 'நீங்கள்' என்று குறிப்பிட்டுச் சொன்னது முறையானதுதான்.

கேள்வி: பீஷ்மர் யார்?

பதில்: பீஷ்மர் ஶந்தனு மஹாராஜனின் குமாரர். பாகீரதியான கங்கையிடம் பிறந்தவர். இவர் 'த்யோ' — என்ற பெயர் கொண்ட ஒன்பதாவது வஸுவின் அவதாரம் (மஹா. ஶாந்தி பர்வம் 50/26). இவருடைய முதல் பெயர் 'தேவவ்ரதர்'. தம் தந்தைக்கு ஸத்யவதியைத் திருமணம் செய்விப்பதற்காக அவளுடைய வளர்ப்புத் தந்தையின் ஆணைக்குக் கட்டுப்பட்டுப் பொங்கும் காளைப்பருவத்தில் 'உயிருள்ளவரை நான் திருமணம் செய்து கொள்ள மாட்டேன்; அரச பதவியையும் த்யாகம் செய்வேன்' என்று பீஷண (பயங்கர) ப்ரதிக்ஞை செய்தார். இந்த பீஷண ப்ரதிக்ஞையின் காரணமாக இவருக்கு 'பீஷ்மர்' என்ற பெயர் வந்தது. ஸாதாரணமாக மனித வர்க்கத்திற்கே மிகவும் பிடித்தமான ஸ்த்ரீ ஸுகத்தையும், ராஜ்ய ஸுகத்தையும் தந்தையின் ஸுகத்திற்காக இவர் அடியோடு த்யாகம் செய்தார். இதனால் மிகவும் த்ருப்தி அடைந்த இவருடைய தந்தை 'உன்னுடைய விருப்பமில்லாமல் ம்ருத்யு (மரணம்) உன்னை அண்டாது' என்று வரமளித்தார். இவர் இளமையிலிருந்தே ப்ரம்மசாரி; மிகவும் பொலிவு உள்ளவர்; அஸ்த்ரங்கள், சாஸ்த்ரங்கள் இரண்டிலும் கரை கண்டவர்; அனுபவம் உள்ளவர்;

பழுத்த ஞானி; பெரிய வீரர்; உறுதியான தீர்மானம் உடைய மஹாபுருஷர். இவரிடம் சூரத்தனம், வீரத்தனம், த்யாகம், ஸஹிப்புத்தன்மை, பொறுமை, தயவு, புலனடக்கம், மனவடக்கம், ஸத்யம், அஹிம்ஸை, ஸந்தோஷம், அமைதி, பலம், பொலிவு, ந்யாயத்தில் நேயம், பணிவு, உதார மனப்பான்மை, அனைவரின் அன்பையும் பெறுவது, தெளிவாகப் பேசுவது, ஸாஹஸம், ப்ரம்மசர்யம், வைராக்யம், ஞானம், விஞ்ஞானம், தாய்-தந்தையரிடம் பக்தி, ஆசார்ய பக்தி முதலிய எல்லா நற்பண்புகளும் முழுமையாக மலர்ந்திருந்தன. பகவானுடைய பக்தியே அவருடைய வாழ்க்கையில் நிறைந்திருந்தது. இவர் பகவான் **ஸ்ரீ**க்ருஷ்ணனுடைய ஸ்வரூபத்தையும், தத்வத்தையும் நன்கு அறிந்தவர்; **ஸ்ரீ**க்ருஷ்ணன் ஒருவரிடமே ஈடுபாடு உள்ளவர்; ச்ரத்தையும், பரம ப்ரேமையும் கொண்டவர்; பக்தர். மஹாபாரத யுத்தத்தில் இவருக்கு ஈடு கொடுக்கும்படியான மற்றொரு வீரரே கிடையாது. இவர் துர்யோதனனின் முன்னிலையில் ஒரு ப்ரதிக்ஞை செய்தார்: 'நான் ஐந்து பாண்டவர்களையும் ஒருபோதும் கொல்ல மாட்டேன். எனினும் ஒவ்வொரு நாளும் பதினாயிரம் வீரர்களை யுத்தத்தில் வதம் செய்வேன்' (மஹா. உத்யோக பர்வம் *156/21*). இவர் கௌரவர் கட்சியில் ப்ரதான ஸேனாபதியாகப் பத்து நாட்கள் பதவி வகித்து கோர யுத்தம் புரிந்தார். அதற்குப் பிறகு அம்புப்படுக்கையில் வீழ்ந்திருந்தபடியே எல்லோருக்கும் அரிய ஞான உபதேசம் செய்தார். உத்தராயணம் வந்த பிறகு தம் இச்சைப்படி உடலை நீத்தார்.

கேள்வி: கர்ணன் யார்?

பதில்: கர்ணன் குந்தியின் மகன். சூரியதேவருடைய அருளினால் குந்தி கன்னியாக இருந்தபோதே அவள் வயிற்றில் பிறந்தவன். குந்தி இவனைப் பெட்டியில் வைத்து நதியில் விட்டுவிட்டாள். ஆனால், பாக்யவசமாக இவன் இறக்கவில்லை. தண்ணீரில் மிதந்து கொண்டே அந்தப் பெட்டி ஹஸ்தினாபுரம் சேர்ந்தது. 'அதிரதன்' என்ற பெயர் கொண்ட தேரோட்டி இவனைத் தன் வீட்டிற்கு எடுத்துச் சென்றான். அவன் மனைவி ராதை இவனை வளர்த்தாள். கர்ணன் இவர்களின் மகனென்றே அனைவரும் நினைத்தனர். கவசம், குண்டலம் என்ற உயர்ந்த அணிகளை அணிந்து கொண்டே இவன் பிறந்தான். ஆகவே அதிரதன் இவனுக்கு 'வஸுஷேணன்' (செல்வத்தோடு கூடியவன்; ஆபரணங்களோடு கூடியவன்) என்று பெயர் வைத்தான். இவன் த்ரோணாசார்யரிடமும், பரஶுராமரிடமும் அஸ்த்ர, சஸ்த்ர வித்தைகளைப் பயின்றான். சாஸ்த்ரம், சஸ்த்ரம் என்ற இரண்டிலும் தேர்ச்சி பெற்ற பெரிய பண்டிதனாகவும், அனுபவம் பெற்றவனாகவும் இருந்தான். சஸ்த்ர வித்தையிலும், யுத்தக் கலையிலும் இவன் அர்ஜுனனுக்கு நிகராக விளங்கினான்.

துர்யோதனனுடன் இவனுக்கு நெருங்கிய நட்பு ஏற்பட்டது. அவன், இவனை அங்க தேசத்திற்கு அரசனாக்கினான். உடல், பொருள், மனம், ஆவிகளால் துர்யோதனனின் நன்மையிலேயே தன்னை ஈடுபடுத்திக் கொண்டான். அவனுக்கு ஹிதத்தையே மனதில் நினைத்தான். தாயார் குந்தியும், பகவான் க்ருஷ்ணனும் அவனுடைய பிறவி ரஹஸ்யத்தை எடுத்துச் சொன்ன பிறகுகூட இவன் துர்யோதனன் அணியை விட்டு விலகிப் பாண்டவர் அணியில் சேர இணங்கவில்லை. இவனுடைய கொடைத் தன்மைக்கு ஈடு இணை கிடையாது. தினந்தோறும் அவன் சூரியனையே உபாஸித்தான். அப்போது யார் எது கேட்டாலும், மகிழ்ச்சியோடு அவர்களுக்குக் கொடுப்பான். ஒரு நாள் தேவராஜன் இந்த்ரன் ஓர் அந்தணர் வேஷம் பூண்டு, அர்ஜுனனுடைய நன்மைக்காக இவனுடைய உடலுடன்கூடப் பிறவியிலேயே ஒட்டிக் கொண்டிருந்த கவச-குண்டலங்களைக் கேட்டான். கர்ணன் முழு மனதுடன் அதே கணம் கவச-குண்டலங்களைப் பிய்த்துக் கொடுத்தான். அதற்குப் பதிலாக இந்த்ரன் அவனுக்கு வீரர்களைக் கொல்லக்கூடிய வீண் போகாத சக்தி ஆயுதத்தைக் கொடுத்தான். மஹாபாரத யுத்தத்தின்போது கர்ணன் அதை ப்ரயோகம் செய்து பீமஸேனனின் வீரகுமாரனான கடோத்கசனைக் கொன்றான். த்ரோணாசார்யருக்குப் பிறகு கர்ணன் மஹாபாரத யுத்தத்தில் இரண்டு நாட்கள் ப்ரதானப் படைத்தலைவனாக இருந்தான். அர்ஜுனன் அவனைக் கொன்றார்.

கேள்வி: க்ருபாசார்யர் யார்?

பதில்: இவர் கௌதம வம்சத்தினரான 'ஶரத்வான்' என்ற மஹரிஷியின் புதல்வர்; வில்வித்தையில் கரைகண்டவர்; அனுபவம் உள்ளவர். இவருடைய ஸஹோதரியின் பெயர் க்ருபீ. சந்தனு மஹாராஜன் க்ருபையுடன் இவர்களை வளர்த்தார். அதனால், இவருக்கு 'க்ருபன்' என்றும், இவருடைய ஸஹோதரிக்கு 'க்ருபீ' என்றும் பெயர் வந்தது. இவர் வேத சாஸ்த்ரங்களை அறிந்தவர்; தர்மாத்மா; நற்பண்புகளும், நல்லொழுக்கமும் படைத்தவர். த்ரோணாசார்யர் வருவதற்கு முன்னால் இவர்தான் கௌரவ, பாண்டவ குமாரர்களுக்கும், யாதவர் முதலானவருக்கும் வில்வித்தைப் பயிற்சி அளித்தார். அனைத்து கௌரவப் படையும் அழிந்த பிறகும் இவர் ஜீவித்திருந்து பரீக்ஷித்துக்கு வில்வித்தைப் பயிற்சி அளித்தார். இவர் பெரும் வீரர்; எதிராளிகளை வெற்றி கொள்வதில் நிபுணர். இதனால் இவருக்கு 'ஸமிதிஞ்ஜயர்' என்ற அடைமொழி கொடுக்கப்பட்டது.

கேள்வி: அஶ்வத்தாமா யார்?

பதில்: அஶ்வத்தாமா த்ரோணரின் புத்ரன்; சஸ்த்ர, அஸ்த்ர வித்தைகளில் கைதேர்ந்தவன்; யுத்தக் கலையில் தேர்ச்சி பெற்றவன்; சூரவீரன்; மஹாரதி. இவன் தன் தந்தை த்ரோணாசார்யரிடமே யுத்தக் கல்வி பெற்றான்.

கேள்வி: விகர்ணன் யார்?

பதில்: த்ருதராஷ்ட்ரருடைய நூறு புதல்வர்களில் ஒருவன் விகர்ணன். இவன் பெரிய தர்மாத்மா; வீரன்; மஹாரதி. கௌரவர்களின் அரசவையில் கொடுமைப்படுத்தப்பட்ட த்ரௌபதி, அனைவரையும் பார்த்து, 'நான் தோற்றுவிட்டேனா? இல்லையா' என்று கேள்வி எழுப்பினபோது, விதுரரைத் தவிர மற்றவர் யாவரும் பேசாமல் இருந்தார்கள். விகர்ணன் ஒருவன் மட்டுமே எழுந்து நின்று ஆவேசமிக்க பேச்சினால் ந்யாயத்தையும், தர்மத்தையும் தெளிவாக எடுத்துச் சொல்லி, 'த்ரௌபதியின் கேள்விக்குப் பதில் சொல்லாமல் மௌனம் ஸாதிப்பது பெருத்த அந்யாயம். த்ரௌபதியை நாம் ஜயிக்கவில்லை என்று எனக்கு நன்றாகத் தெரிகிறது' என்று முழங்கினான் (மஹா. ஸபா பர்வம் 67/18–25).

கேள்வி: 'ஸௌமதத்தி' யார்?

பதில்: ஸோமதத்தனின் குமாரர் பூரிஶ்ரவஸ் என்பவர்தான் 'ஸௌமதத்தி'. ஶந்தனு மஹாராஜனின் மூத்த ஸஹோதரர் பாஹ்லீகரின் பேரர் பூரிஶ்ரவஸ்; மிகுந்த தர்மசீலர்; யுத்தக் கலையில் தேர்ச்சி பெற்றவர்; சூரவீரர்; மஹாரதி. நிறைய தக்ஷிணைகள் கொடுத்துப் பல யாகங்கள் செய்தவர். மஹாபாரத யுத்தத்தில் ஸாத்யகி இவரைக் கொன்றான்.

கேள்வி: 'ததா' என்றும், 'ஏவ' என்றும் கூறுவதன் பொருள் என்ன?

பதில்: அஶ்வத்தாமா, விகர்ணன், பூரிஶ்ரவஸ் இவர்கள் அனைவருமே க்ருபாசார்யரைப் போல யுத்தத்தில் வெற்றி பெறுபவர்கள் என்று பொருள்.

अन्ये च बहवः शूरा मदर्थे त्यक्तजीविताः।
नानाशस्त्रप्रहरणाः सर्वे युद्धविशारदाः॥ ९॥

அந்யே ச ப³ஹவ: ஶூரா மத³ர்தே² த்யக்தஜீவிதா: ।
நாநாஶஸ்த்ரப்ரஹரணா: ஸர்வே யுத்³த⁴விஶாரத³ா: ॥ 9 ॥

மத³ர்தே² – எனக்காக, **த்யக்தஜீவிதா:** – உயிராசையை விட்டவர்களான, **அந்யே** – வேறு, **ப³ஹவ:** – பல, **ஶூரா: ச** – சூரவீரர்களும், **நாநா ஶஸ்த்ர ப்ரஹரணா:** – பற்பல அஸ்த்ர-ஶஸ்த்ரங்களுடன் தயாராக நிற்கின்ற, **ஸர்வே** – அனைவருமே, **யுத்³த⁴ விஶாரத³ா:** – யுத்தத்தில் திறமை பெற்றவர்கள்.

எனக்காக உயிராசையை விட்டவர்களான வேறு பல சூரவீரர்களும், பற்பல அஸ்த்ர-சஸ்த்ரங்களுடன் தயாராக நிற்கின்ற அனைவருமே யுத்தத்தில் திறமைப் பெற்றவர்கள்.

கேள்வி: இந்த ச்லோகத்தின் கருத்து என்ன?

பதில்: இதற்கு முன்னால் சல்யன், பாஹ்லீகர், பகதத்தர், க்ருதவர்மா, ஜயத்ரதர் முதலான மஹாரதிகளைப் பற்றிச் சொல்லவில்லை. அவர்களை இவ்விதம் குறிப்புக்காட்டி துர்யோதனன் சொல்கிறான்: "நான் சொன்னவர்களைத் தவிர இன்னும் பல யுத்த வீரர்கள் உள்ளனர். அவர்கள் வாள், கதாயுதம், த்ரிசூலம் போன்ற கையில் பிடித்தபடி தாக்குதற்கான ஆயுதங்கள் தாங்கியவர்கள். அம்பு, தோமரம், சக்தி முதலிய வீசியெறியக் கூடிய அஸ்த்ரங்களையும் வைத்திருக்கிறார்கள். யுத்த முறையில் மிகவும் தேர்ச்சி பெற்ற மஹாரதிகள் அனைவரும் எனக்காக உயிரை விடுவதற்கும் துணிந்து விட்டவர்கள். ஆகவே, உயிர் போகும் கணம்வரை எனக்காகக் கடுமையாகப் போர் புரிவார்கள் என்பதை நீங்கள் நம்பலாம்."

பொருத்தம்: தன்னைச் சார்ந்த மஹாரதிகளான வீரர்களின் பெருமையைச் சொல்லிவிட்டுத் தற்போது துர்யோதனன் இரு படைகளையும் ஒப்பிட்டு, தன் படை பாண்டவர் படையைக் காட்டிலும் சக்தி மிகுந்தது, சிறந்தது என்று கூறுகிறான்—

अपर्याप्तं तदस्माकं बलं भीष्माभिरक्षितम्।
पर्याप्तं त्विदमेतेषां बलं भीमाभिरक्षितम्॥ १०॥

அபர்யாப்தம் ததஸ்மாகம் பலம் பீஷ்மாபிரக்ஷிதம் ।
பர்யாப்தம் த்விதமேதேஷாம் பலம் பீமாபிரக்ஷிதம் ॥ 10 ॥

பீஷ்மாபிரக்ஷிதம் – பாட்டனார் பீஷ்மரால் காக்கப்படும், **அஸ்மாகம்** – நமது, **தத்** – அந்த, **பலம்** – படை, **அபர்யாப்தம்** – எல்லாவிதங்களாலும் (எதிரிகளால்) வெல்ல இயலாதது. **து** – ஆனால், **பீமாபிரக்ஷிதம்** – பீமனால் கட்டிக் காக்கப்படும், **ஏதேஷாம்** – இவர்களுடைய, **இதம்** – இந்த, **பலம்** – படை, **பர்யாப்தம்** – (நம்மால்) எளிதில் வெல்லப்படக்கூடியது.

பாட்டனார் பீஷ்மரால் காக்கப்படும் நமது படை எல்லாவிதங்களிலும் எதிரிகளால் வெல்ல இயலாதது. ஆனால் பீமனால் கட்டிக் காக்கப்படும் இவர்களுடைய படை நம்மால் எளிதில் வெல்லப்படக்கூடியது.

கேள்வி: துர்யோதனன் தன் ஸேனை பாட்டனார் பீஷ்மரால் காக்கப்படுவதால் வெற்றி கொள்ள முடியாதது என்று என்ன கருத்தில் சொல்கிறான்?

பதில்: இவ்விதம் துர்யோதனன் காரணம் காட்டித் தன் படையின் பெருமையை நிரூபிக்கிறான். அவன் சொல்வது என்னவென்றால் தனது படை முன் சொன்ன மஹாரதிகள் நிரம்பியது என்பது மட்டுமன்று; பரசுராமர் போன்ற யுத்த வீரர்களைக்கூட எதிர்க்கக் கூடியவரும், பூமண்டத்திலேயே நிகரற்றவருமான பாட்டனார் பீஷ்மரால் காக்கப்படுகிறது. எண்ணிக்கையிலும் பாண்டவர் படையைக் காட்டிலும் நான்கு அக்ஷௌஹிணிகள் அதிகமானது. இத்தகைய படையை வெற்றி கொள்வது யாருக்கும் எளிதன்று. எல்லாவிதங்களிலும் அளவுக்கு அடங்காதது. தேவைக்கு மேலும் பல மடங்கு அதிகமான சக்தி படைத்தது. அதனால் எவ்விதத்திலும் வெல்ல முடியாதது. மஹாபாரதம் உத்யோக பர்வம் 55வது அத்யாயத்தில் துர்யோதனன் த்ருதராஷ்ட்ரரிடம் தன் படைபலத்தை வர்ணிக்கும் ஸந்தர்பத்திலும் இதே பெயர்களைக் குறிப்பிட்டு, இவர்கள் பீஷ்மருடைய பாதுகாப்பில் உள்ளனர் என்று பெருமையாகச் சொல்கிறான். மேலும் தெளிவாக விளக்குகிறான்—

குத்3ணஹீநம் பரேஷாஞ்ச பத்3ஹு பஶ்யாமி பா4ரத ।
குத்3ணோதத்3யம் பத்3ஹுகுத்3ணமாத்மநஶ்ச விஶாம்பதே ॥

(மஹா. உத்3யோக3 பர்வம் 55/67)

'பரத குலத்தரசனே! எதிரிகளின் படை பெரும்பாலும் திறமையற்றது என்று கணிக்கிறேன். நமது படை திறமைமிக்கது. மேலும், முடிவாக நமது நலனை வளர்க்கக் கூடியது என்று நினைக்கிறேன். ஆகவே, நான் தோற்றுப் போவதற்கு ஒரு காரணமுமில்லை.' இவ்விதமே பீஷ்ம பர்வத்தில் துர்யோதனன் த்ரோணாசார்யரிடம் மறுபடியும் தன் படையை வர்ணிக்கும்போது இது போன்ற ச்லோகத்தைச் சொல்லியிருக்கிறான் (மஹா. பீஷ்ம. 51/6). அதற்கு முன்ச்லோகத்தில் இவ்வாறு கூறுகிறான்—

ஏகைகஶ: ஸமர்தா2 ஹி யூயம் ஸர்வே மஹாரதா2: ।
பாண்டு3புத்ராந் ரணே ஹந்தும் ஸஸைந்யாந் கிமு ஸம்ஹதா: ॥

(மஹா. பீ4ஷ்ம பர்வம் 51/5)

"நீங்கள் அனைவரும் மஹாரதிகள். உங்களில் ஒவ்வொருவரும் தனித்தனியாகவே படையுடன் கூடிய பாண்டவர்களை அழிக்கக் கூடிய திறமையுடையவர்கள். நீங்கள் எல்லோரும் சேர்ந்தால், அவர்களை ஒழித்து விடுவீர்கள் என்பதைச் சொல்லவும் வேண்டுமா?"

ஆகவே, இங்கு 'அபர்யாப்தம்' (வெற்றி பெறுவது எளிதன்று) என்று தன் படையின் பெருமையை விளக்குகிறான். மேலே சொல்லப்பட்ட இடங்களிலும்கூடத் தன் அணியைச் சார்ந்த யுத்த வீரர்களுக்கு உற்சாகம் ஊட்டுவதற்காகச் சொன்னான் என்பதுதான் உசிதம்; ஸந்தர்பத்திற்கும் ஏற்றது.

கேள்வி: பாண்டவ ஸேனை பீமனால் காக்கப்படுகிறது என்றும், வெற்றி பெற எளிதானது என்றும் சொல்வதன் கருத்து என்ன?

பதில்: இதன் மூலம் துர்யோதனன் அது வலிமை குறைந்தது என்பதை உறுதிப்படுத்துகிறான். தங்களது படைக்கு பீஷ்மர் காப்பாளராக இருக்கிறார். அந்தப் படைக்கு பீமன் காப்பாளன். அவன் உடல் வலிமை பெற்றவனாயினும் பீஷ்மரோடு ஒப்பிட்டுப் பார்க்க முடியாதவன். யுத்த நெறிகளில் சிறந்து, சஸ்த்ர-சாஸ்த்ரங்களில் தேர்ச்சி பெற்று, மதிநுட்பம் நிறைந்த பீஷ்மர் எங்கே? தனுர்வித்தையில் தேர்ச்சியில்லாத ஸாமான்ய அறிவுள்ள பீமன் எங்கே? ஆகையால், அவனுடைய படை அளவுக்குட்பட்ட சக்தி படைத்ததுதான். அதை நாம் எளிதில் வெற்றி கொள்ளமுடியும்.

பொருத்தம்: இவ்விதம் பீஷ்மரால் காக்கப்படும் நமது படை வெற்றி கொள்ள முடியாதது என்று சொல்லி துர்யோதனன், எல்லாப் பக்கங்களிலும் பீஷ்மருக்குப் பாதுகாப்பு அளிக்கவேண்டும் என்று த்ரோணாசார்யர் முதலான எல்லா மஹாரதிகளையும் கேட்டுக் கொள்கிறான்—

अयनेषु च सर्वेषु यथाभागमवस्थिता: ।
भीष्ममेवाभिरक्षन्तु भवन्त: सर्व एव हि ॥ ११ ॥

அயநேஷு ச ஸர்வேஷு யதா2பா4க3மவஸ்தி2தா: ।
பீ4ஷ்மமேவாபி4ரக்ஷந்து ப4வந்த: ஸர்வ ஏவ ஹி ॥ 11 ॥

ஸர்வேஷு – அனைத்து, **அயநேஷு ச** – போர்முனைகளிலும், **யதா2பா4க3ம்** – தத்தம் இடத்தில், **அவஸ்தி2தா:** – இருந்தபடியே, **ப4வந்த:** – நீங்கள், **ஸர்வே ஏவ** – எல்லோருமே, **ஹி** – தவறாமல், **பீ4ஷ்மம் ஏவ** – பாட்டனார் பீஷ்மரையே, **அபி4ரக்ஷந்து** – (நாற்புறங்களிலும்) காப்பாற்றுங்கள்.

அனைத்துப் போர் முனைகளிலும் தத்தம் இடத்தில் இருந்தபடியே நீங்கள் எல்லோருமே தவறாமல் பாட்டனார் பீஷ்மரையே நாற்புறங்களிலும் காப்பாற்றுங்கள்."

கேள்வி: இந்த ச்லோகத்தின் கருத்து என்ன?

பதில்: பாட்டனார் பீஷ்மர் தம்மைத் தாமே காத்துக் கொள்வதில் திறமையுள்ளவர்தான். இது துர்யோதனனுக்கு நன்றாகத் தெரியும். ஆனால், "த்ருபத புத்ரனான சிகண்டி முதலில் பெண்ணாக இருந்தான். பிறகு ஆணாகி இருக்கிறான். பெண்ணாக அவன் பிறந்ததனால் அவனை இன்னும் நான் பெண்ணாகவே மதிக்கிறேன். பெண்ணின் மேல் வீரபுருஷர்கள் ஆயுதம் தொடுக்க மாட்டார்கள். அவன் என் எதிரில் வந்தால் நான் அவன்மீது ஆயுதம் செலுத்த மாட்டேன்" என்று பீஷ்மர் முதலிலேயே சொல்லிவிட்டார். ஆகவே, படைகள் அனைத்தும் ஒன்று திரண்ட பின்னர், முதலிலேயே துர்யோதனன் போர் வீரர் அனைவரிடமும், துச்சாஸனனிடமும் எச்சரிக்கை செய்து, வெகு விரிவாக இந்த விஷயத்தை எடுத்துச் சொல்லியிருக்கிறான் (மஹா. பீஷ்ம பர்வம் 15/14–20). இங்கும் அதே பயத்தை எதிர்நோக்கி துர்யோதனன் தன் அணியைச் சார்ந்த எல்லா மஹாரதிகளையும் வேண்டிக் கொள்கிறான்— "நீங்கள் எந்த வ்யூஹ முனையில் எவ்விடம் இடம் பெறுவீர்களோ, அனைவரும் அங்கேயே திடமாக நிலைத்து நில்லுங்கள். முழுக் கவனத்துடன் இருங்கள். நமது வ்யூஹத்தில் எந்த நுழைவாயில் மூலமாவது சிகண்டி புகுந்து பாட்டனார் பீஷ்மரின் எதிரில் வந்துவிடக் கூடாது. அப்படி வந்தால் உடனே சிகண்டியை அடித்து விரட்டுவதற்குத் தயாராக இருங்கள். நீங்கள் சிகண்டியிடமிருந்து பீஷ்மரைக் காப்பாற்றி விட்டால் நமக்கு வேறு எந்த பயமும் கிடையாது. மற்ற எல்லா மஹாரதிகளையும் தோல்வியடையச் செய்வது பீஷ்மருக்கு மிகவும் எளிதான கார்யம்" என்பது கருத்து.

பொருத்தம்: இவ்வாறு துர்யோதனன் தன் அணியைச் சேர்ந்த மஹாரதிகளின் பெருமைகளை – முக்யமாகப் பாட்டனார் பீஷ்மருடைய பெருமையை எடுத்துச் சொன்னதை த்ருதராஷ்ட்ரருக்குச் சொல்லிவிட்டு, ஸஞ்ஜயன் அடுத்து வரும் நிகழ்ச்சிகளைக் கூறுகிறார்—

तस्य सञ्जनयन्हर्षं कुरुवृद्धः पितामहः।
सिंहनादं विनद्योच्चैः शङ्खं दध्मौ प्रतापवान्॥ १२॥

தஸ்ய ஸஞ்ஜநயந்ஹர்ஷம் குருவ்ருத்₄: பிதாமஹ: ।
ஸிம்ஹநாத₃ம் விநத்₃யோச்சை: ஶங்க₂ம் த₃த்₄மௌ ப்ரதாபவாந் ॥ 12 ॥

குருவ்ருத்₄: – கௌரவர்களில் முதியவரானவரும், **ப்ரதாபவாந் –** மிக்க ப்ரதாப முடையவருமான, **பிதாமஹ: –** பாட்டனார் பீஷ்மர், **தஸ்ய –** துர்யோதனனின் (உள்ளத்தில்), **ஹர்ஷம் –** மகிழ்ச்சியை, **ஸஞ்ஜநயந் –** உண்டு பண்ணுகின்ற வகையில், **ஸிம்ஹநாத₃ம் –** சிங்க கர்ஜனையைப் போன்று, **உச்சை: –** உரக்க, **விநத்₃ய –** கர்ஜித்து, **ஶங்க₂ம் –** சங்கை, **த₃த்₄மௌ –** முழக்கினார்.

கௌரவர்களில் முதியவரானவரும் மிக்க ப்ரதாபமுடையவருமான பாட்டனார் பீஷ்மர் துர்யோதனனின் உள்ளத்தில் மகிழ்ச்சியை உண்டு பண்ணுகின்ற வகையில் சிங்க கர்ஜனையைப் போன்று உரக்கக் கர்ஜித்து சங்கை முழக்கினார்.

கேள்வி: இந்த ச்லோகத்தின் கருத்து என்ன?

பதில்: பாட்டனார் பீஷ்மர் குரு வம்சத்தில் பாஹ்லீகரைத் தவிர மற்றவர்களைக் காட்டிலும் பெரியவர். கௌரவர்களிடமும், பாண்டவர்களிடமும் ஒரேவிதமான உறவு உடையவர். பாட்டனார் என்ற முறையில் இரு அணியினருடைய வணக்கத்திற்கும் உரியவர். அதனால்தான் ஸஞ்ஜயன் அவரை 'குருவ்ருத்தர்' (குரு வம்சத்தில் முதியவர்), 'பிதாமஹர்'

(பாட்டனார்) என்று குறிப்பிடுகிறார். வயதில் முதியவரானாலும் பொலிவு, பலம், பராக்ரமம், வீர்யம், திறமைகளில் இளம் வாலிபர்களைக் காட்டிலும் சிறந்தவர். ஆகவே, அவரை 'ப்ரதாபவான்' என்று கூறுகிறார். பாட்டனார் பீஷ்மர், த்ரோணாசார்யரின் பக்கலில் துர்யோதனன் நின்று கொண்டு பாண்டவர் படையைக் கண்டு திகைத்துக் கவலைப்படுவதைப் பார்த்தார். "தன்னுடைய கவலையை மறைத்துக் கொண்டு யுத்த வீரர்களுக்கு உற்சாகமூட்டுவதற்காக, தன் படையைப் பற்றிப் பெருமையாகப் பேசுகிறான். த்ரோணாசார்யர் போன்ற மஹாரதிகள் பாட்டனாரைக் காப்பாற்ற வேண்டும் என்று வேண்டுகோள் விடுக்கிறான்" என்பதையும் உணர்ந்து கொண்டார். அப்போது தமது ப்ரபாவத்தை வெளிப்படுத்தி அவனை த்ருப்திப்படுத்த வேண்டும் என்ற எண்ணத்தாலும், ப்ரதான தளபதி என்ற முறையிலும், எல்லாப் படைகளுக்கும் யுத்த ஆரம்பத்தைப் பறைசாற்றும் முறையிலும் சங்கெடுத்து சிங்கநாதம் போன்று ஓங்கி முழக்கினார்.

ततः शङ्खाश्च भेर्यश्च पणवानकगोमुखाः।
सहसैवाभ्यहन्यन्त स शब्दस्तुमुलोऽभवत्॥ १३॥

ததः ஶங்க²ாஶ்ச பே⁴ர்யஶ்ச பணவாநககோ³முக²ாः ।

ஸஹஸைவாப்⁴யஹந்யந்த ஸ ஶப்³த³ஸ்துமுலோऽப⁴வத் ॥ 13 ॥

ததः – இதற்குப் பிறகு, **ஶங்க²ாः ச** – சங்குகளும், **பே⁴ர்யः ச** – பேரிகைகளும், **பணவ ஆநக கோ³முக²ாः** – தம்பட்டம், பறை, கொம்பு முதலிய வாத்யங்களும், **ஸஹஸா ஏவ** – ஒருங்கே, **அப்⁴யஹந்யந்த** – முழங்கின. **ஸः** – அந்த, **ஶப்³த³ः** – ஒலி, **துமுலः** – மிகவும் பயங்கரமாக, **அப⁴வத்** – இருந்தது.

இதற்குப் பிறகு சங்குகளும், பேரிகளும், தம்பட்டம், பறை, கொம்பு முதலிய வாத்யங்களும் ஒருங்கே முழங்கின. அந்த ஒலி மிகவும் பயங்கரமாக இருந்தது.

கேள்வி: இந்த ச்லோகத்தின் கருத்து என்ன?

பதில்: பாட்டனார் பீஷ்மர் சிங்க கர்ஜனை போல சங்கு முழங்கிப் போர்த் துவக்கத்தை கோஷித்தவுடன் நாற்புறமும் உற்சாகம் பரவியது. எல்லாப் படைகளிலும், எல்லாப் பக்கங்களிலிருந்தும் சங்கு முதலிய விதவிதமான போர் முரசுகள் முழங்கின. ஒரே சமயத்தில் அவை எழுப்பிய ஒலி பயங்கரமாக ஆகாயத்தில் எதிரொலித்தது.

பொருத்தம்: யுத்தத்திற்காகக் களத்தில் கூடியபிறகு 'என்னுடைய புதல்வர்களும், பாண்டுவினுடைய புதல்வர்களும் என்ன செய்தார்கள்?' என்று த்ருதராஷ்ட்ரர் கேட்டார் இதற்கு விடையாக ஸஞ்ஜயன் இதுகாறும் த்ருதராஷ்ட்ரருடைய படையினரின் செய்தியைக் கூறினார். பாண்டவர்கள் என்ன செய்தார்கள் என்பதை அடுத்த ஐந்து ச்லோகங்களில் கூறுகிறார்—

ततः श्वेतैर्हयैर्युक्ते महति स्यन्दने स्थितौ।
माधवः पाण्डवश्चैव दिव्यौ शङ्खौ प्रदध्मतुः॥ १४॥

ததः ஶ்வேதை²ர்ஹயைர்யுக்தே மஹதி ஸ்யந்த³நே ஸ்தி²தௌ ।

மாத⁴வः பாண்ட³வஶ்சைவ தி³வ்யௌ ஶங்கௌ² ப்ரத³த்⁴மது: ॥ 14 ॥

ததः – இதற்குப் பிறகு, **ஶ்வேதைः ஹயைः** – வெள்ளைக் குதிரைகள், **யுக்தே** – பூட்டப்பட்ட, **மஹதி** – உயர்ந்த, **ஸ்யந்த³நே** – தேரில் (ரதத்தில்), **ஸ்தி²தௌ** – அமர்ந்திருந்த, **மாத⁴வः** – ஸ்ரீக்ருஷ்ண பரமாத்மாவும், **பாண்ட³வः ச ஏவ** – அர்ஜுனனும், **தி³வ்யௌ** – தெய்விகமான, **ஶங்கௌ²** – சங்குகளை, **ப்ரத³த்⁴மது:** – முழக்கினார்கள்.

இதற்குப் பிறகு வெள்ளைக் குதிரைகள் பூட்டப்பட்ட உயர்ந்த தேரில் அமர்ந்திருந்த ஸ்ரீக்ருஷ்ண பரமாத்மாவும், அர்ஜுனனும் தெய்விகமான சங்குகளை முழக்கினார்கள்.

கேள்வி: இந்த ச்லோகத்தின் கருத்து என்ன?

பதில்: அர்ஜுனனுடைய ரதம் மிகவும் விசாலமானது; சிறந்தது. அது தங்கத்தால் வேயப்பட்டு பொலிவுடன் ப்ரகாசமாக பளபளவென்று உறுதியானதாகவும் பெரிதாகவும் மிகவும் அழகாகவும் இருந்தது. அதன் மேல் பல குஞ்சலங்களும் தொங்கும் தோரணக் கொடிகளும் பறந்தன. மிகவும் திடமான, விசாலமான சக்ரங்கள் அமைந்திருந்தன. உயரத்தில் கொடி மின்னல் போல மின்னியது. அதில் சந்த்ரன், நக்ஷத்ரங்கள் பொறிக்கப்பட்டிருந்தன. அதில் **ஸ்ரீ**ஹனுமான் வீற்றிருந்தார். கொடியைப் பற்றி ஸஞ்ஜயன் துர்யோதனனிடம் சொல்லியிருந்தார்: "அந்தக் கொடி குறுக்கும், நெடுக்குமாக ஒரு யோஜனை தூரம் பரவிப் பறந்தது. ஆகாயத்தில் வானவில் பலவித வர்ணங்களில் ஜ்வலிப்பது போல, அந்தக் கொடியிலும் வர்ண ஜாலங்கள் ஜ்வலித்தன. இவ்வளவு விசாலமாகப் பறந்தாலும் அதில் பளு கிடையாது. அதற்குத் தங்கு தடை கிடையாது. மரங்களின் மேல் அது கிளைகளினால் தடைபடாமல் செல்கின்றது. மரங்கள் அதைத் தொடக்கூட முடியவில்லை." மிக அழகான, நன்கு அலங்கரிக்கப்பட்ட, நன்கு பயிற்சி அளிக்கப்பட்ட, பலம் மிகுந்த, மிகவும் வேகமாக ஓடக்கூடிய, நான்கு வெள்ளை நிற தெய்விகக் குதிரைகள் பூட்டின ரதம். 'சித்ரரதன்' என்ற கந்தர்வன் தன்னிடமிருந்த நூறு திவ்ய குதிரைகளில் நான்கினை அர்ஜுனனுக்குக் கொடுத்தான். இவற்றில் எத்தனை கொலையுண்டாலும் எப்பொழுதும் நூறாகவே அவை இருக்கும்; குறைவதில்லை. பூமியிலும், வானிலும், ஸ்வர்கத்திலும் செல்லக்கூடியவை. அந்த ரதமும் அப்படிப்பட்டது (மஹா. உத்யோக பர்வம் 56). காண்டவ வனம் எரிந்தபோது அக்னிதேவன் த்ருப்தி அடைந்து அர்ஜுனனுக்கு இந்த ரதத்தை அளித்தான் (மஹா. ஆதி பர்வம் 225). இத்தகைய பெரிய ரதத்தில் விளங்கிய பகவான் **ஸ்ரீ**க்ருஷ்ணனும், வீரர்களில் சிறந்த அர்ஜுனனும், பாட்டனார் பீஷ்மரோடுகூட கௌரவப் படை முழங்கிய சங்கொலி, மற்ற யுத்த முரசுகள் இவற்றைக் கேட்டு, இவர்களும் யுத்த ஆரம்ப முழக்கம் செய்யும் நோக்கத்துடன் தம் சங்குகளை முழங்கினார்கள். பகவானுடைய, அர்ஜுனனுடைய சங்குகள் ஸாமான்யமானவை அல்ல; அற்புதமானவை; பொலிவு மிகுந்தவை; உலகியலுக்கு அப்பாற்பட்டவை. அதனால் தெய்விகமானவை என்று சொல்லப்படுகின்றன.

पाञ्चजन्यं हृषीकेशो देवदत्तं धनञ्जयः।
पौण्ड्रं दध्मौ महाशङ्खं भीमकर्मा वृकोदरः॥ १५॥

பாஞ்சஜந்யம் ஹ்ருஷீகேஶோ தே³வத³த்தம் த⁴னஞ்ஜ³யः ।
பௌண்ட்³ரம் த³த்⁴மௌ மஹாஶங்க²ம் பீ⁴மகர்மா வ்ருகோத³ரः ॥ 15 ॥

ஹ்ருஷீகேஶः – ஸ்ரீக்ருஷ்ண பகவான், **பாஞ்சஜந்யம்** – பாஞ்சஜன்யம் என்ற பெயர் கொண்ட, **(ஶங்க²ம்** – சங்கை), **த³த்⁴மௌ** – முழக்கினார். **த⁴னஞ்ஜ³யः** – அர்ஜுனன், **தே³வத³த்தம்** – தேவதத்தம் என்ற பெயர் கொண்ட, **(ஶங்க²ம் த³த்⁴மௌ** – சங்கை முழக்கினார்). **பீ⁴மகர்மா** – பயங்கரச் செயல் புரியும், **வ்ருகோத³ரः** – பீமஸேனன், **பௌண்ட்³ரம்** – பௌண்ட்ரம் என்று பெயருள்ள, **மஹாஶங்க²ம்** – பெரிய சங்கை (முழக்கினார்).

ஸ்ரீக்ருஷ்ண பகவான் பாஞ்சஜன்யம் என்ற பெயர் கொண்ட சங்கை முழக்கினார். அர்ஜுனன் தேவதத்தம் என்ற பெயர் கொண்ட சங்கை முழக்கினார். பயங்கரச் செயல் புரியும் பீமஸேனன் பௌண்ட்ரம் என்று பெயருள்ள பெரிய சங்கை முழக்கினார்.

கேள்வி: பகவானுடைய 'ஹ்ருஷீகேஶன்' என்ற பெயருக்கு என்ன பொருள்? அவருக்கு 'பாஞ்சஜன்யம்' என்ற சங்கு எங்கிருந்து கிடைத்தது?

பதில்: 'ஹ்ருஷீகம்' என்றால் புலன்கள். அவற்றை ஆள்பவன் ஹ்ருஷீகேஶன்.‡ மேலும் மகிழ்ச்சி, ஸுகம், ஸுகமயமான ஐசுவர்யங்கள் இவற்றுக்கு இருப்பிடமானவரையும் ஹ்ருஷீகேஶன் என்று சொல்வார்கள்.§ பகவான் புலன்களை ஆள்பவனாகவும் இருக்கிறார். மகிழ்ச்சி, ஸுகம், பரமைசுவர்யத்தின் கருவூலமாகவும் உள்ளார். ஆகவே, அவர் 'ஹ்ருஷீகேஶன்' என்று பெயர் பெறுகிறார். 'பஞ்சஜனன்' என்ற பெயருடன் சங்கு உருவத்தில் இருந்த ஒரு தைத்யனைக் கொன்று பகவான் அவனைச் சங்கு உருவத்தில் தம்மிடம் சேர்த்துக் கொண்டார். அதனால், அந்த சங்குக்கு 'பாஞ்சஜன்யம்' என்ற பெயர் வந்தது (ஹரிவம்சம் *2/33/17*).

கேள்வி: அர்ஜுனனுக்கு 'தனஞ்ஜயன்' என்று எப்படிப் பெயர் வந்தது? அவர் 'தேவதத்தம்' என்ற சங்கை எங்கிருந்து பெற்றார்?

பதில்: ராஜஸூய யாகம் நடந்தபோது அர்ஜுனன் பல அரசர்களை ஜயித்து அளவற்ற செல்வத்தைக் கொண்டு வந்தார். அதனால் அவருக்கு 'தனஞ்ஜயன்' என்ற ஒரு பெயர் வந்தது. அவர் நிவாதகவசர் முதலிய தைத்யர்களுடன் போரிட்டபோது, இந்த்ரன் 'தேவதத்தம்' என்ற சங்கை அர்ஜுனனுக்கு அளித்தார் (மஹா. வன பர்வம் *174/5*). அந்த சங்கத்தின் பயங்கர நாதம் எதிரிப் படைகளை நடுங்க வைப்பதாக இருந்தது.

கேள்வி: பீமஸேனனுக்கு 'பீமகர்மா' என்றும், 'வ்ருகோதரன்' (ஓநாயின் வயிற்றைப் போன்ற வயிற்றை உடையவன்) என்றும் எப்படிப் பெயர் வந்தது? அவருடைய 'பௌண்ட்ரம்' என்ற சங்கு 'மஹாஶங்கம்' என்று ஏன் கூறப்பட்டுள்ளது?

பதில்: பீமஸேனன் மிகுந்த பலவான். அவருடைய செயல்கள் பார்ப்பவர், கேட்பவர்களுடைய மனதில் பயத்தை உண்டாக்கின. அதனால், அவர் 'பீமகர்மா' என்று பெயர் பெற்றார். அவர் அதிகமாக உணவு உண்பவர். அத்தனையும் ஜீரணிக்கும் சக்தியும் அவருக்கு இருந்தது. அதனால், அவருக்கு 'வ்ருகோதரன்' என்ற பெயரும் ஏற்பட்டது. அவருடைய சங்கு மிகப் பெரியது. அதன் ஓசையும் அதிகம். ஆகவே, அது 'மஹாஶங்கம்' என்று கூறப்பட்டுள்ளது.

अनन्तविजयं राजा कुन्तीपुत्रो युधिष्ठिरः ।
नकुलः सहदेवश्च सुघोषमणिपुष्पकौ ॥ १६ ॥

அநந்தவிஜயம் ராஜா குந்தீபுத்ரோ யுதி₄ஷ்டி₂ரः ।
நகுலः ஸஹதே₃வஶ்ச ஸுகோ₄ஷமணிபுஷ்பகௌ ॥ 16 ॥

குந்தீபுத்ரः – குந்தியின் மகனான, **ராஜா யுதி₄ஷ்டி₂ரः** – அரசர் யுதிஷ்டிரர், **அநந்தவிஜயம்** – அநந்தவிஜயம் என்று பெயர் கொண்ட சங்கையும், **நகுலः ஸஹதே₃வः**

---

‡ ஹ்ருஷீகாணீந்த்₃ரியாண்யாஹுஸ்தேஷாமீஶோ யதோ ப₄வாந் ।
ஹ்ருஷீகேஶஸ்ததோ விஷ்ணோ க்₂யாதோ தே₃வேஷு கேஶவ ॥
(ஹரிவம்ஶம் *279/46*)

விஷ்ணுவே! ஹ்ருஷீகம் என்றால் புலன்கள் ஆகும். நீங்கள் அவற்றிற்கு ஈசன். ஆள்பவன். ஆகவே கேசவ! நீங்கள் தேவர்களுக்குள் ஹ்ருஷீகேசன் என்ற புகழ் பெற்றிருக்கிறீர்கள்

§ ஹர்ஷாத் ஸுக₂ாத் ஸுகை₂ஶ்வர்யாத் ஹ்ருஷீகேஶத்வமஶ்நுதே ॥
(மஹா. உத்₃யோக₃ பர்வம் *70/9*)

ஹர்ஷ (ஹ்ருஷீ), ஸுக (க), ஸுகமய ஐஶ்வர்ய (ஈச) – என்ற காரணத்தால் ஶ்ரீக்ருஷ்ணன் ஹ்ருஷீகேசன் என்ற பெயர் பெற்றுள்ளார்.

ச – நகுலனும், ஸஹதேவனும், **ஸுகோ₄ஷ மணிபுஷ்பகௌ** – ஸுகோஷம், மணிபுஷ்பகம் என்று பெயர் கொண்ட சங்குகளையும் (முழக்கினார்கள்).

குந்தியின் மகனான அரசர் யுதிஷ்டிரர் அநந்த விஜயம் என்று பெயர் கொண்ட சங்கையும், நகுலனும், சகதேவனும், ஸுகோஷம், மணிபுஷ்பகம் என்று பெயர் கொண்ட சங்குகளையும் முழக்கினார்கள்.

கேள்வி: யுதிஷ்டிரரைக் குந்திபுத்ரர் என்றும், அரசர் என்றும் கூறுவதன் கருத்து என்ன?

பதில்: மஹாராஜா பாண்டுவின் ஐந்து புத்ரர்களில் யுதிஷ்டிரர், பீமன், அர்ஜுனன் மூவரும் குந்தியிடம் பிறந்தவர்கள். நகுலனும், ஸஹதேவனும் மாத்ரியிடம் பிறந்தவர்கள். இந்த ச்லோகத்தில் நகுல–ஸஹதேவர்களின் பெயர்களும் வருகின்றன. யுதிஷ்டிரருக்கும், நகுல–ஸஹதேவர்களுக்கும் தாய்மார் வேறு என்று தெரிவிப்பதற்காக யுதிஷ்டிரரைக் குந்திபுத்ரன் என்று குறிப்பிட்டார். தற்சமயம் ராஜ்யம் இழந்து இருந்தபோதிலும் முன்பு யுதிஷ்டிரர் ராஜஸூய யாகத்தின்போது, எல்லா அரசர்களையும் வென்று சக்ரவர்த்தி ஆகி ஸாம்ராஜ்யத்தை நிறுவியவர். மேலே, மறுபடியும் அவரே அரசராவார் என்ற நம்பிக்கை ஸஞ்ஜயனுக்கு உண்டு. அவருடைய உடலில் அரசச் சின்னங்கள் உள்ளன. இக்காரணங்களால் அவரை அரசர் என்று சொன்னார்.

काश्यश्च परमेष्वासः शिखण्डी च महारथः।
धृष्टद्युम्नो विराटश्च सात्यकिश्चापराजितः॥ १७॥
द्रुपदो द्रौपदेयाश्च सर्वशः पृथिवीपते।
सौभद्रश्च महाबाहुः शङ्खान्दध्मुः पृथक् पृथक्॥ १८॥

காஶ்யஶ்ச பரமேஷ்வாஸ: ஶிக₂ண்டீ₃ ச மஹாரத₂: ।
த்₄ருஷ்டத்₃யும்நோ விராடஶ்ச ஸாத்யகிஶ்சாபராஜித: ॥ 17 ॥
த்₃ருபதே₃யா த்₃ரௌபதே₃யாஶ்ச ஸர்வஶ: ப்ருதி₂வீபதே ।
ஸௌப₄த்₃ரஶ்ச மஹாபா₃ஹோ: ஶங்கா₂ந்த₃த்₄மு: ப்ருத₂க் ப்ருத₂க் ॥ 18 ॥

ப்ருதி₂வீபதே – அரசனே! **பரமேஷ்வாஸ:** – சிறந்த வில்லாளியான, **காஶ்ய: ச** – காசிராஜனும், **மஹாரத₂:** – மஹாரதியான, **ஶிக₂ண்டீ₃ ச** – சிகண்டியும், **த்₄ருஷ்டத்₃யும்ந: ச** – த்ருஷ்டத்யும்னனும், **விராட: ச** – விராட மன்னனும், **அபராஜித:** – தோல்வி காணாத, **ஸாத்யகி:** – ஸாத்யகியும், **த்₃ருபத₃: ச** – த்ருபதராஜனும், **த்₃ரௌபதே₃யா: ச** – த்ரௌபதியின் ஐந்து புதல்வர்களும், **மஹாபா₃ஹோ:** – நீண்ட புஜங்கள் உடைய, **ஸௌப₄த்₃ர:** – ஸுபத்ரையின் குமாரன் அபிமன்யுவும் (இவர்கள் எல்லோரும்), **ஸர்வஶ:** – எல்லாப் பக்கங்களிலிருந்தும், **ப்ருத₂க் ப்ருத₂க்** – தனித்தனியாக, **ஶங்கா₂ந்** – சங்குகளை, **த₄த்₄மு:** – முழக்கினார்கள்.

அரசனே! சிறந்த வில்லாளியான காசிராஜனும், மஹாரதியான சிகண்டியும், த்ருஷ்டத்யும்னனும், விராட மன்னனும், தோல்வி காணாத ஸாத்யகியும், த்ருபத ராஜனும், த்ரௌபதியின் ஐந்து புதல்வர்களும், நீண்ட புஜங்கள் உடைய ஸுபத்ரையின் குமாரன் அபிமன்யுவும் இவர்கள் எல்லோரும் எல்லாப் பக்கங்களிலிருந்தும் தனித்தனியாக சங்குகளை முழக்கினார்கள்.

கேள்வி: காஶிராஜன், த்ருஷ்டத்யும்னன், விராடன், ஸாத்யகி, த்ருபதன், த்ரௌபதியின் ஐந்து குமாரர்கள், அபிமன்யு இவர்களைப் பற்றி முன் ஸந்தர்பத்தில் அறிமுகம் ஆயிற்று. சிகண்டி யார்? அவன் எப்படிப் பிறந்தான்?

பதில்: சிகண்டி, த்ருஷ்டத்யும்னன் இருவரும் த்ருபத ராஜனின் குமாரர்கள், சிகண்டி மூத்தவன்; த்ருஷ்டத்யும்னன் இளையவன். ராஜா த்ருபதனுக்கு மக்கட்செல்வம் இல்லாதிருந்தபோது, குழந்தையை அடைய வேண்டி விரைவில் த்ருப்தி அடையும் சிவபிரானை வழிபட்டார். சிவபிரான் ப்ரஸன்னமானார். அரசர் குழந்தை வேண்டுமென்று வேண்டினார். சிவபிரான் சொன்னார்: 'உனக்கு ஒரு பெண் பிறக்கும்.' த்ருபதராஜன் சொன்னார்: 'ஸ்வாமி! எனக்குப் பெண் வேண்டாம். மகன்தான் எனக்கு வேண்டும்.' அதன்பேரில் சிவபிரான்: 'அந்தப் பெண்ணே பின்னால் ஆண்மகனாக ஆவாள்' என்று அருள் புரிந்தார். இந்த வரத்தின் பயனாக அரசன் த்ருபதனுக்கு ஒரு பெண் பிறந்தாள். அரசனுக்குச் சிவபெருமான் சொல்லில் பூரண நம்பிக்கை இருந்தது. ஆகவே அரசன், 'தனக்கு மகன் பிறந்திருக்கிறான்' என்ற செய்தியையே பரவச் செய்தார். ராணியும் பெண் என்ற செய்தியை மறைத்து, உண்மை எவருக்கும் தெரியாதவாறு செய்தாள். அவளுக்கு சிகண்டி என்று ஆணின் பெயரையே வைத்தார்கள். அவளுக்கு அரசகுமாரன் போல அலங்காரம் செய்து, ஆடை ஆபரணங்கள் அணிவித்தார்கள். கல்வியும் புகட்டப்பட்டது. தக்க வயதில் தசார்ண தேசத்து அரசன் ஹிரண்யவர்மாவின் பெண்ணுடன் அவளுக்கு விவாஹமும் நடந்தது. ஹிரண்யவர்மாவின் பெண் புக்ககம் வந்த பிறகுதான் அவளுக்குத் தன் கணவன் சிகண்டி புருஷன் அல்லன், பெண் என்பது தெரிந்தது. மிகவும் வருத்தமடைந்தாள். தன் பணிப்பெண்கள் வாயிலாகத் தன் தந்தைக்குச் செய்தி அனுப்பினாள். ஹிரண்யவர்ம ராஜனுக்கு மிகுந்த கோபம் உண்டாயிற்று. த்ருபத நாட்டை முற்றுகையிட்டு அவரைக் கொல்வது என்று தீர்மானித்தான். இதைக் கேள்விப்பட்டு த்ருபத ராஜன் யுத்தத்திலிருந்து தப்புவதற்காக ஈசுவர பூஜை செய்ய ஆரம்பித்தார். ஆண்வேடம் பூண்ட அந்தப் பெண்ணுக்குத் தன் காரணமாகத் தகப்பனாருக்கு இவ்வளவு பெரிய பயங்கரமான ஆபத்து வந்துவிட்டதே என்று மிகவும் வருத்தம் ஏற்பட்டது. ப்ராண த்யாகம் செய்து கொள்வது என்ற முடிவுடன் வீட்டை விட்டுக் கிளம்பிக் காட்டை அடைந்தாள். 'ஸ்தூணாகர்ணன்' என்ற தெய்விக சக்தி படைத்த யக்ஷனை அங்குச் சந்தித்தாள். யக்ஷன் மனது உருகிச் சில நாட்களுக்கு மட்டும் தன் ஆண்மையை அவளுக்கு அளித்து, பதிலாக அவளது பெண்மையை ஏற்றான். இவ்விதமாக சிகண்டி ஆணாக ஆகி வீடு திரும்பினாள். தாய்-தந்தையருக்கு ஆறுதல் அளித்தாள். மாமனார் ஹிரண்யவர்மாவுக்குத் தன் ஆண்மையை நிரூபித்து, ஸமாதானப்படுத்தினாள். குபேரனுடைய சாபத்தினால் ஸ்தூணாகர்ணனுக்கு வாழ்நாள் முழுவதும் பெண்ணாகவே இருக்கும்படி ஆயிற்று. அதனால் சிகண்டிக்கு ஆண்மையை யக்ஷனுக்குத் திருப்பித் தரும்படியான அவசியம் ஏற்படவில்லை. அவள் புருஷனாகவே ஆகிவிட்டாள். பாட்டனார் பீஷ்மருக்கு இந்த வ்ருத்தாந்தம் தெரியும். அதனால்தான் அவர் அவன் மீது ஆயுதம் தொடுக்க மாட்டேன் என்றார். சிகண்டி சூரன், வீரன், மஹாரதி. இவனை முன் வைத்துத்தான் அர்ஜுனன் பீஷ்மரை அடித்து வீழ்த்தினார்.

கேள்வி: இவர்கள் எல்லோரும் தனித்தனியாக சங்கு முழக்கினார்கள் என்று சொல்வதில் ஏதாவது முக்யக் கருத்து உண்டா?

பதில்: 'ஸர்வஶ:' (எல்லோரும்) என்று சொல்வதன் மூலம் **ஸ்ரீ**க்ருஷ்ணன், ஐந்து பாண்டவர்கள், காசிராஜன் முதலிய இங்கே குறிக்கப்பட்ட ப்ரதான யுத்த வீரர்களைத் தவிர, பாண்டவர் படையில் உள்ள ரதிகள், மஹாரதிகள், அதிரதிகளான வீரர்கள் அனைவரும் தங்கள் சங்குகளை முழக்கினர் என்பதுதான் இங்கு முக்யக் கருத்து.

பொருத்தம்: பகவானான ஸ்ரீக்ருஷ்ணனும், அர்ஜுனனும், பிறகு பாண்டவப் படையின் மற்ற சூரவீரர்களும் தங்கள் சங்குகளை முழக்கினார்கள். அந்த சங்கு முழக்கத்தைப் பற்றிச் சொல்லிவிட்டு, அந்த சங்கு முழக்கத்தின் விளைவு என்ன என்பதை ஸஞ்ஜயன் சொல்கிறார்—

स घोषो धार्तराष्ट्राणां हृदयानि व्यदारयत्।
नभश्च पृथिवीं चैव तुमुलो व्यनुनादयन्॥ १९॥

ஸ கே₄ஷோ த₄ார்தராஷ்ட்ராணாம் ஹ்ருத₃யாநி வ்யத₃ாரயத் ।
நப₄ஶ்ச ப்ருதி₂வீம் சைவ துமுலோ வ்யநுநாத₃யந் ॥ 19 ॥

ச – மேலும், **ஸः** – அந்த, **துமுலः** – பயங்கர, **கே₄ஷः** – ஒலி, **நப₄ः** – ஆகாயத்தையும், **ப்ருதி₂வீம் ச ஏவ** – பூமியையும், **வ்யநுநாத₃யந்** – எதிரொலிக்கச் செய்து, **த₄ார்தராஷ்ட்ராணாம்** – த்ருதராஷ்ட்ரரின் (அதாவது உங்கள்) அணியினரின், **ஹ்ருத₃யாநி** – இதயங்களை, **வ்யத₃ாரயத்** – பிளக்கச் செய்தது.

மேலும், அந்த பயங்கர ஒலி ஆகாயத்தையும் பூமியையும் எதிரொலிக்கச் செய்து, த்ருதராஷ்ட்ரரின் (அதாவது உங்கள்) அணியினரின் இதயங்களைப் பிளக்கச் செய்தது.

கேள்வி: இந்த ச்லோகத்தின் கருத்து என்ன?

பதில்: பாண்டவப் படையின் எல்லா வீரர்களும் ஒரே நேரத்தில் சங்குகளை முழக்கவே, அந்தப் பேரொலி எங்கும் பரவியது; தேய்வுறாமல் கனமாக இருந்தது; ஒங்கி இருந்தது; அச்சமூட்டுவதாக இருந்தது; ஆகாயமும், பூமியும் அளாவி இருந்தது. இவ்விதம் நாற்புறமும் அந்த கோரமான பேரொலி சூழ்ந்திருந்ததால், எங்கும் எதிரொலி ஏற்பட்டது. அந்த எதிரொலி ஆகாயத்தையும், பூமியையும் முட்டிற்று. இதைக் கேட்டவுடனேயே துர்யோதனன் முதலான த்ருதராஷ்ட்ர புத்ரர்கள், அவர்களுடைய அணியைச் சார்ந்த மற்றவர்கள் இதயங்களில் மிகவும் பயம் உண்டாயிற்று. அவர்கள் இதயத்திரைகளே கிழிந்துவிடும் போல ஆகிவிட்டது.

பொருத்தம்: பாண்டவர்களுடைய சங்கு முழக்கத்தினால் கௌரவ வீரர்கள் கலங்கிவிட்டார்கள் என்று வர்ணித்துவிட்டு, மேலே நான்கு ச்லோகங்களில் பகவான் ஸ்ரீக்ருஷ்ணனைப் பார்த்து அர்ஜுனன் உற்சாகத்துடன் பேசியதை வர்ணிக்கிறார்—

अथ व्यवस्थितान्दृष्ट्वा धार्तराष्ट्रान् कपिध्वजः ।
प्रवृत्ते शस्त्रसम्पाते धनुरुद्यम्य पाण्डवः ॥ २० ॥
हृषीकेशं तदा वाक्यमिदमाह महीपते ।
अर्जुन उवाच
सेनयोरुभयोर्मध्ये रथं स्थापय मेऽच्युत ॥ २१ ॥

அத₂ வ்யவஸ்தி₂தாந்த்₃ருஷ்ட்வா த₄ார்தராஷ்ட்ராந் கபித்₄வஜः ।
ப்ரவ்ருத்தே ஶஸ்த்ரஸம்பாதே த₄நுருத்₃யம்ய பாண்ட₃வः ॥ 20 ॥
ஹ்ருஷீகேஶம் ததா₃ வாக்யமித₃மாஹ மஹீபதே ।
அர்ஜுந உவாச
ஸேநயோருப₄யோர்மத்₄யே ரத₂ம் ஸ்தா₂பய மேऽச்யுத ॥ 21 ॥

மஹீபதே – அரசே! **அத₂** – இதன் பின்னர், **கபித்₄வஜः** – ஹனுமக்கொடியை உடைய, **பாண்ட₃வः** – அர்ஜுனன், **வ்யவஸ்தி₂தாந்** – அணிவகுத்துப் போர் புரியத் தயாராய் நிற்கின்ற, **த₄ார்தராஷ்ட்ராந்** – த்ருதராஷ்ட்ர குமாரர்களையும், அவர்களைச் சார்ந்தவர்களையும், **த்₃ருஷ்ட்வா** – பார்த்து, **ததா₃** – அப்பொழுது, **ஶஸ்த்ரஸம்பாதே ப்ரவ்ருத்தே** – ஆயுதங்களை விடுக்க முனைகின்றபோது, **த₄நுः** – வில்லை, **உத்₃யம்ய** – நிமிர்த்திக் கொண்டு, **ஹ்ருஷீகேஶம்** – ஹ்ருஷீகேசனான பகவான் ஸ்ரீக்ருஷ்ணனிடம், **இத₃ம்** – இந்த, **வாக்யம்** – வசனத்தை, **ஆஹ** – கூறினார். **அர்ஜுந உவாச** – அர்ஜுனன் சொன்னார்: **அச்யுத** – அச்யுத! **மே** – என்னுடைய, **ரத₂ம்** – ரதத்தை, **உப₄யோः** – இரண்டு, **ஸேநயோः** – படைகளுக்கும், **மத்₄யே** – நடுவில், **ஸ்தா₂பய** – நிறுத்துங்கள்.

कृपासिन्धु भगवान् श्रीकृष्ण

Lord Kṛṣṇa, the ocean of grace

धृतराष्ट्र-सञ्जय

Dhṛtarāṣṭra and Sañjaya

अर्जुनको उपदेश

Prescript to Arjuna



प्रजापतिकी शिक्षा

Preachings of Prajāpati



सूर्यको उपदेश

Precept of Sun



समदर्शिता

Impartiality



अनन्य चिन्तनका फल

Undivided devotion fructified

ध्रुवपर अनुग्रह

Shower of grace of Dhruva

அரசே! இதன் பின்னர், ஹனுமக்கொடியை உடைய அர்ஜுனன் அணிவகுத்துப் போர் புரியத் தயாராய் நிற்கின்ற த்ருதராஷ்ட்ர குமாரர்களையும், அவர்களைச் சார்ந்தவர்களையும் பார்த்து, அப்பொழுது ஆயுதங்களை விடுக்க முனைகின்றபோது வில்லை நிமிர்த்திக் கொண்டு ஹ்ருஷீகேசனான பகவான் ஸ்ரீக்ருஷ்ணனிடம் இந்த வசனத்தைக் கூறினார். "அச்யுத! என்னுடைய ரதத்தை இரண்டு படைகளுக்கும் நடுவில் நிறுத்துங்கள்."

கேள்வி: அர்ஜுனனை 'கபித்வஜன்' என்று ஏன் சொல்கிறார்?

பதில்: மஹாவீரனான ஹனுமான் பீமஸேனனுக்கு வாக்குக் கொடுத்திருந்தார் (மஹா. வன பர்வம் 151/17–18). அதனால், அவர் அர்ஜுனனுடைய விசாலமான கொடியில் விளங்கினார். யுத்தத்தில் அவ்வப்பொழுது பயங்கரமாக கர்ஜனை புரிந்தார் (மஹா. பீஷ்ம பர்வம் 52/18). இதை த்ருதராஷ்ட்ரருக்கு நினைவூட்டுவதற்காகவே ஸஞ்ஜயன் அர்ஜுனனுக்கு 'கபித்வஜன்' என்ற அடைமொழி கொடுக்கிறார்.

கேள்வி: அர்ஜுனன் அணிவகுத்து நிற்கின்ற த்ருதராஷ்ட்ரரின் தரப்பைச் சார்ந்த வீரர்களைப் பார்த்து ஆயுத ப்ரயோகம் செய்யத் தயாராக இருக்கும்போது வில்லை நிமிர்த்தினான் – என்று கூறுவதை விளக்க வேண்டும்.

பதில்: துர்யோதனன் முதலான ஸஹோதரர்களும், கௌரவர் அணியைச் சார்ந்த அனைத்து வீரர்களும் யுத்தத்திற்காக வீறு கொண்டு நிற்பதையும், ஆயுதம் எய்வதற்காக முழுவதும் தயாராக இருப்பதையும் பார்த்து, அர்ஜுனனுக்கும் உள்ளத்தில் வீர உணர்ச்சி பொங்கி எழுந்தது. உடனே தனது காண்டீவத்தை நிமிர்த்தினான்.

கேள்வி: ஸஞ்ஜயன் ஏன் இங்கே மறுபடியும் 'ஹ்ருஷீகேசன்' என்று பகவானைக் குறிப்பிடுகிறார்?

பதில்: புலன்களை ஆட்டிப்படைக்கும் ஸாக்ஷாத் பரமேசுவரனாகிய க்ருஷ்ணன் அர்ஜுனனுடைய ரதத்தில் தேரோட்டியாக அமர்ந்து இருக்கிறாரே, அவருடன் போர் புரிந்து நீங்கள் வெற்றி பெறலாம் என நினைக்கிறீர்களே, எவ்வளவு அறியாமை உங்களுக்கு – என்று த்ருதராஷ்ட்ரரிடம் குறிப்பிட்டுக் காட்டுவதற்காக பகவானை 'ஹ்ருஷீகேசன்' என்று ஸஞ்ஜயன் சொல்கிறார்.

கேள்வி: 'என்னுடைய ரதத்தை இரு படைகளுக்கும் நடுவில் கொண்டு நிறுத்துங்கள்' – என்று சொல்லும்போது அர்ஜுனன் பகவானை 'அச்யுத' என்ற பெயரால் அழைக்கிறாரே, அதற்கு என்ன காரணம்?

பதில்: எவருக்கு எந்த நேரத்திலும், எந்த நிகழ்ச்சியிலும் தோல்வி–வீழ்ச்சி என்பது கிடையாதோ, எவர் தமது ஸ்வரூபத்திலிருந்தும், சக்தியிலிருந்தும், பெருமையிலிருந்தும் எப்பொழுதும் வழுவாதவரோ, அவரை 'அச்யுதன்' என்ற பொருளுள்ள பெயரால் அழைக்கிறார்கள். இந்தப் பெயரைச் சொல்லி அழைக்கும் அர்ஜுனன், பகவானுடைய பெருமையையும், ஸ்வரூபத்தையும் பற்றி நான் அறிந்திருக்கிறேன் என்று வெளியிடுகிறார். அவர் சொல்கிறார்: 'நீங்கள் இப்பொழுது ரதம் ஓட்டினால் என்ன? உண்மையில் நீங்கள் எந்த நிலையிலும் ஸாக்ஷாத் பரமேசுவரன்தான்!'

यावदेतान्निरीक्षेऽहं योद्धुकामानवस्थितान्।
कैर्मया सह योद्धव्यमस्मिन्रणसमुद्यमे ॥ २२ ॥

यावदेतान्निरीक्षेऽहम् योद्धुकामानवस्थितान् ।
कैर्मया सह योद्धव्यमस्मिन्रणसमुद्यमे ॥ 22 ॥

அஸ்மிந் – இந்த, **ரணஸமுத்யமே** – போர் முயற்சியில், **மயா** – என்னால், **கை:** **ஸஹ** – எவரெவருடன், **யோத்தவ்யம்** – போரிட நேருமோ (அந்த), **யோத்து**

காமாந் – யுத்தம் செய்யும் ஆசையுடன், **அவஸ்தி²தாந்** – அணிவகுத்து நிற்கும், **ஏதாந்** – இந்த எதிரிப்படை வீரர்களை, **யாவத்** – எவ்வளவு நேரம், **அஹம்** – நான், **நிரீக்ஷே** – பார்ப்பேனோ (அவ்வளவு நேரம் ரதத்தை நிறுத்தி வையுங்கள்).

இந்தப் போர் முயற்சியில் என்னால் எவரெவருடன் போரிட நேருமோ, யுத்தம் செய்யும் ஆசையுடன் அணிவகுத்து நிற்கும் இந்த எதிரிப்படை வீரர்களை எவ்வளவு நேரம் நான் பார்ப்பேனோ, அவ்வளவு நேரம் ரதத்தை நிறுத்தி வையுங்கள்.

கேள்வி: இந்த ச்லோகத்தை விளக்க வேண்டும்.

பதில்: அர்ஜுனன் பகவான் **ஸ்ரீ**க்ருஷ்ணனைப் பார்த்துச் சொல்கிறார்: "நீங்கள் ரதத்தை இரு படைகளுக்கும் நடுவில் ஓரிடத்தில் கொண்டு நிறுத்துங்கள். நான் எங்கிருந்து பார்த்தால் என்னை எதிர்த்து வீறு கொண்டு நிற்கும் எல்லா வீரர்களையும் நன்கு பார்க்க முடியுமோ, அதற்கு எவ்வளவு நேரமாகுமோ, அதுவரை நிறுத்துங்கள். இந்த யுத்தம் என்ற இக்கட்டான தருணத்தில் நானே எந்தெந்த வீரர்களுடன் போரிட நேரும் என்பதை அறிய விரும்புகிறேன்."

योत्स्यमानानवेक्षेऽहं य एतेऽत्र समागता:।
धार्तराष्ट्रस्य दुर्बुद्धेर्युद्धे प्रियचिकीर्षव: ॥ २३ ॥

யோத்ஸ்யமாநாநவேக்ஷேऽஹம் ய ஏதேऽத்ர ஸமாக³தா: ।

த⁴ார்தராஷ்ட்ரஸ்ய து³ர்பு³த்³தே⁴ர்யுத்³தே⁴ ப்ரியசிகீர்ஷவ: ॥ 23 ॥

து³ர்பு³த்³தே⁴: – தீய புத்தியுடைய, **த⁴ார்தராஷ்ட்ரஸ்ய** – துர்யோதனனுக்கு, **யுத்³தே⁴** – யுத்தத்தில், **ப்ரியசிகீர்ஷவ:** – நலனைச் செய்ய விரும்பி, **யே** – எந்தெந்த, **ஏதே** – அரசர்கள், **அத்ர** – இந்தப் படையில், **ஸமாக³தா:** – வந்து கூடியிருக்கிறார்களோ (அந்த), **யோத்ஸ்யமாநாந்** – போர்புரியப் போகிறவர்களை, **அஹம்** – நான், **அவேக்ஷே** – பார்க்கிறேன்.

தீய புத்தியுடைய துர்யோதனனுக்கு யுத்தத்தில் நலனைச் செய்ய விரும்பி எந்தெந்த அரசர்கள் இந்தப் படையில் வந்து கூடியிருக்கிறார்களோ போர் புரியப் போகிற அவர்களை நான் பார்க்கிறேன்."

கேள்வி: அர்ஜுனன் துர்யோதனனைத் தீய புத்தியுள்ளவன் என்று ஏன் சொல்கிறார்?

பதில்: பன்னிரண்டு ஆண்டுகள் வனவாசமும், ஓராண்டு அஞ்ஞாதவாசமும் (மறைந்து வாழ்தல்) ஆகப் பதின்மூன்று வருஷங்கள் கழிந்த பிறகு ராஜ்யத்தைப் பாண்டவர்களுக்குத் திருப்பிக் கொடுத்துவிடுவது என்பது முன்பே முடிவான விஷயம். அதுவரை கௌரவர்கள் கையில் காப்பீடாக ராஜ்யம் வைக்கப்பட்டிருந்தது. துர்யோதனன் அதை விழுங்கிவிடலாம் என்ற அந்யாய நோக்கத்துடன் திருப்பிக் கொடுக்க மறுத்துவிட்டான். இது தவிர துர்யோதனன் பாண்டவர்களுக்குப் பல அந்யாயங்களும், அட்டூழியங்களும் செய்திருக்கிறான். ஆனால் கடைசியாக இது பொறுக்கவே முடியாததாகிவிட்டது. துர்யோதனனுடைய இந்தக் கொடிய எண்ணத்தை நினைத்துத்தான் அவனைத் தீய புத்தியுடையவன் என்று அர்ஜுனன் கூறுகிறார்.

கேள்வி: 'இந்தப் போரில் துர்யோதனனுடைய நலனை விரும்பி அரசர்கள் கூடியிருக்கிறார்கள். அப்படிப் போரிடக் கூடியவர்களை எல்லாம் நான் பார்க்கிறேன்' என்று அர்ஜுனன் கூறுவதன் கருத்து என்ன?

பதில்: தீய புத்தியுள்ள துர்யோதனனுடைய அந்யாயங்களையும், கொடிய செயல்களையும் உலகமே அறியும். அப்படி இருந்தும்கூட அவனுக்கு உதவி செய்ய

வந்திருக்கிறார்களே அரசர்கள், அவர்களுடைய புத்தியும் கெட்டுப் போய்விட்டது என்று அர்ஜுனன் நினைக்கிறார். அதனாலேயே இவர்கள் வெளிப்படையாகவே துர்யோதனனுடைய அந்யாயங்களை ஆமோதிக்கும் வகையில் இங்கே கூடியுள்ளனர். தம்முடைய தற்பெருமையைக் காட்டி அவன் முதுகைத் தட்டிக் கொடுத்துப் புகழ்கிறார்கள். இப்படி உதவி செய்ய முன் வந்திருப்பவர்கள் அவனுக்குத் தீங்கே இழைக்கிறார்கள். தம்மைப் பெரிய வீரர்களாக நினைத்துக் கொண்டு இந்தப் போருக்காக உற்சாகமாக வந்து நிற்கிறார்களே அவர்கள் யார், எவர் என்று நான் தெரிந்து கொள்கிறேன். பிறகு, யுத்தகளத்தில், அந்யாயத்திற்கும், அதர்மத்திற்கும் துணை போவதனால் ஏற்படும் விளைவைச் சுவைக்க வைக்கிறேன்.

பொருத்தம்: இவ்விதம் அர்ஜுனன் பேசியவுடன் கண்ணபிரான் என்ன செய்தார் என்பதை மேலே இரண்டு ச்லோகங்களால் ஸஞ்ஜயன் வர்ணிக்கிறார்—

सञ्जय उवाच

एवमुक्तो हृषीकेशो गुडाकेशेन भारत।
सेनयोरुभयोर्मध्ये स्थापयित्वा रथोत्तमम्॥ २४॥

भीष्मद्रोणप्रमुखतः सर्वेषां च महीक्षिताम्।
उवाच पार्थ पश्यैतान्समवेतान्कुरूनिति॥ २५॥

ஸஞ்ஜய உவாச

ஏவமுக்தோ ஹ்ருஷீகேஶோ கு3டா3கேஶேந ப4ாரத ।
ஸேநயோருப4யோர்மத்4யே ஸ்தா2பயித்வா ரதே2ாத்தமம் ॥ 24 ॥

பீ4ஷ்மத்3ரோணப்ரமுக2த: ஸர்வேஷாம் ச மஹீக்ஷிதாம் ।
உவாச பார்த2 பஶ்யைதாந் ஸமவேதாந்குரூநிதி ॥ 25 ॥

ஸஞ்ஜய உவாச – ஸஞ்ஜயன் கூறினார்: **ப4ாரத** – த்ருதராஷ்ட்ரரே! **கு3டா3கேஶேந** – அர்ஜுனனால், **ஏவம்** – இப்படி, **உக்த:** – சொல்லப்பட்ட, **ஹ்ருஷீகேஶ:** – ஸ்ரீக்ருஷ்ணன், **உப4யோ:** – இரண்டு, **ஸேநயோ:** – படைகளுக்கும், **மத்4யே** – இடையில், **பீ4ஷ்ம த்3ரோண ப்ரமுக2த:** – பீஷ்மருக்கும், த்ரோணருக்கும் முன்பும், **ஸர்வேஷாம்** – அனைத்து, **மஹீக்ஷிதாம் ச** – அரசர்களுக்கு முன்பாகவும், **ரதோத்தமம்** – உயர்ந்த ரதத்தை, **ஸ்தா2பயித்வா** – கொண்டு நிறுத்தி, **பார்த2** – பார்த்தனே! **ஸமவேதாந்** – (யுத்தத்திற்காக) ஒருங்கே கூடியிருக்கும், **ஏதாந்** – இந்த, **குரூந்** – கௌரவர்களை, **பஶ்ய** – பார், **இதி** – என்று, **உவாச** – கூறினார்.

ஸஞ்ஜயன் கூறினார்: "த்ருதராஷ்ட்ரரே! அர்ஜுனனால் இப்படிச் சொல்லப்பட்ட ஸ்ரீக்ருஷ்ணன் இரண்டு படைகளுக்கும் இடையில் பீஷ்மருக்கும் த்ரோணருக்கும் முன்பும், அனைத்து அரசர்களுக்கு முன்பாகவும் உயர்ந்த ரதத்தைக் கொண்டு நிறுத்தி, 'பார்த்த! யுத்தத்திற்காக ஒருங்கே கூடியிருக்கும் இந்த கௌரவர்களைப் பார்' என்று கூறினார்.

கேள்வி: 'குடாகேஶன்' என்றால் என்ன பொருள்? இங்கு அர்ஜுனனை குடாகேசன் என்று ஸஞ்ஜயன் ஏன் கூறுகிறார்?

பதில்: 'குடாகா' – தூக்கம். தூக்கத்தை ஜயித்தவன், அதன்மீது தன் அதிகாரத்தை நிலைநாட்டுபவன் 'குடாகேஶன்'. அர்ஜுனன் தூக்கத்தை ஜயித்தவர். அவரால் தூங்காமல் இருந்துவிட முடியும். தூக்கம் அவரைத் துன்புறுத்துவதில்லை. அர்ஜுனன் ஒருபொழுதும் சோம்பலுக்கு ஆட்படுவதில்லை; கவனமாகவும், விழிப்புடனும் இருக்கிறார் என்று சொல்லிக்

காட்டி, 'உமது புத்ரர்கள் அவரை எப்படி வெற்றி கொள்வார்கள்?' என்று த்ருதராஷ்ட்ரருக்கு ஸஞ்ஜயன் உணர்த்துகிறார்.

கேள்வி: 'யுத்தத்திற்காகக் கூடியிருக்கும் இந்த கௌரவர்களைப் பார்' என்று பகவான் கூறுவதன் கருத்து என்ன?

பதில்: "அர்ஜுன! 'எல்லோரையும் நான் நன்றாகப் பார்க்கும் வரையில் ரதத்தை அங்கேயே நிறுத்தி வையுங்கள்' என்று நீ சொன்னபடியே எங்கிருந்து எல்லோரையும் நன்றாகப் பார்க்க முடியுமோ, அந்த இடத்தில் கொண்டு வந்து நான் ரதத்தை நிறுத்திவிட்டேன். ரதம் அசையாமல் நிற்கும். எவ்வளவு நேரம் பார்க்க வேண்டுமோ, அவ்வளவு நேரம் நீ நன்றாகப் பார்" என்பது கருத்து.

'கௌரவர்களைப் பார். எல்லோரும் உன்னுடைய உறவினர்கள். நன்கு பார்த்துக் கொள்!' என்று சொல்லி, பகவான் அர்ஜுனனுடைய உள்ளத்தில் மறைந்திருந்த பந்தபாசத்தை எழுப்பி விடுகிறார். அர்ஜுனன் பந்தபாசத்தை நினைத்துத் தமது பலவீனத்தைக் கருணையுடன் வெளிப்படுத்துவதற்கு இந்தச் சொல் வித்துப் போல் ஆகிவிட்டது. அர்ஜுனனை நிமித்தமாக வைத்துக் கொண்டு உலக நன்மைக்காகவே பகவான், தாமே இந்தச் சொற்களால் அர்ஜுனனுடைய உள்ளத்தில் இப்படி ஓர் எண்ணத்தை உண்டு பண்ணி, அவரை யுத்தம் செய்ய மறுக்கும்படி செய்கிறார். அதன் விளைவாக ஸாக்ஷாத் பகவானுடைய முகத்தாமரையிலிருந்து மூவுலகையும் புனிதமாக்கும் திவ்யமான கீதை என்ற அமுதத்தின் இனிய பெருக்கு வெளிப்பட்டது. எல்லையில்லாக் காலம்வரை அது மக்களுக்குக் கணக்கற்ற பரம மங்களத்தைக் கொடுத்துக் கொண்டே இருக்கும்.

பொருத்தம்: பகவான் ஸ்ரீக்ருஷ்ணனுடைய ஆணையைக் கேட்டு அர்ஜுனன் என்ன செய்தார் என்பதை அடுத்துக் கூறுகிறார்—

तत्रापश्यत्स्थितान् पार्थः पितॄनथ पितामहान्।
आचार्यान्मातुलान्भ्रातॄन्पुत्रान्पौत्रान्सखींस्तथा ॥ २६ ॥
श्वशुरान्सुहृदश्चैव सेनयोरुभयोरपि।

தத்ராபஶ்யத்ஸ்தி₂தாந் பார்த₂: பித்ரூநத₂ பிதாமஹாந் ।
ஆசார்யாந்மாதுலாந்ப்₄ராத்ரூந்புத்ராந்பௌத்ராந்ஸகீ₂ம்ஸ்ததா₂ ॥ 26 ॥
ஶ்வஶுராந் ஸுஹ்ருத₃ஶ்சைவ ஸேநயோருப₄யோரபி ।

அத₂ – இதற்குப் பிறகு, **பார்த₂:** – ப்ருதையின் குமாரனான அர்ஜுனன், **தத்ர** – அங்கு, **உப₄யோ:** – இரண்டு, **ஸேநயோ: ஏவ** – படைகளிலேயும், **ஸ்தி₂தாந்** – நிற்கின்ற, **பித்ரூந்** – பெரியப்பா மற்றும் சிற்றப்பாக்களையும், **பிதாமஹாந்** – தாத்தா, முப்பாட்டனார்களையும், **ஆசார்யாந்** – குருநாதர்களையும், **மாதுலாந்** – அம்மான்களையும், **ப்₄ராத்ரூந்** – ஸஹோதரர்களையும், **புத்ராந்** – புதல்வர்களையும், **பௌத்ராந்** – பேரன்களையும், **ததா₂** – மற்றும், **ஸகீ₂ந்** – நண்பர்களையும், **ஶ்வஶுராந் ச** – மாமனார்களையும், **ஸுஹ்ருத₃: அபி** – அன்பர்களையும், **அபஶ்யத்** – பார்த்தார்.

இதற்குப் பிறகு ப்ருதையின் (குந்தியின்) குமாரனான அர்ஜுனன் அங்கு இரண்டு படைகளிலேயும் நிற்கின்ற பெரியப்பா சிற்றப்பாக்களையும், தாத்தா முப்பாட்டனார்களையும், குருநாதர்களையும், அம்மான்களையும், ஸஹோதரர்களையும், புதல்வர்களையும், பேரன்களையும் மற்றும் நண்பர்களையும், மாமனார்களையும், அன்பர்களையும் பார்த்தார்.

கேள்வி: இந்த ஒன்றரை ச்லோகத்தை விளக்க வேண்டும்.

பதில்: பகவானுடைய ஆணை பெற்ற அர்ஜுனன் இரண்டு படைகளிலும் இருந்த எல்லா உறவினர்களையும் பார்த்தார். அங்கே தந்தையைப் போன்றே மதிக்கத்தக்க பூரிஸ்ரவஸ் போன்ற தந்தையின் ஸஹோதரர்கள் இருந்தார்கள். பீஷ்மர், ஸோமதத்தர், பாஹ்லீகர் ஆகிய பாட்டனார், முப்பாட்டனார்கள்; த்ரோணாசார்யர், க்ருபாசார்யர் போன்ற குருநாதர்கள்; புருஜித், குந்திபோஜன், சல்யன் போன்ற அம்மான்கள்; அபிமன்யு, ப்ரதிவிந்த்யன், கடோத்கசன், லக்ஷ்மணன் ஆகிய தம்முடைய, தம் ஸஹோதரர்களுடைய புத்ரர்கள்; லக்ஷ்மணனுடைய குமாரர்களான தமது பேரர்கள்; தம்முடன் விளையாடின பல மித்ரர்கள்; த்ருபதன், சைப்யன் போன்ற மாமன்னர்கள் ஆகியவர்களும் இருந்தனர். ப்ரதி உபகாரத்தை எதிர்பாராது உதவி செய்ய வந்திருக்கும் அன்பர்கள் பலரும் இருந்தார்கள்.

பொருத்தம்: இப்படி எல்லோரும் கூடியிருப்பதைப் பார்த்த அர்ஜுனன் என்ன செய்தார்? அதைச் சொல்கிறார்—

तान्समीक्ष्य स कौन्तेयः सर्वान्बन्धूनवस्थितान्॥ २७॥
कृपया परयाविष्टो विषीदन्निदमब्रवीत्।

தாந்ஸமீக்ஷ்ய ஸ கௌந்தேயः ஸர்வாந்ப³ந்தூ⁴நவஸ்தி²தாந் ॥ 27 ॥
க்ருபயா பரயாவிஷ்டோ விஷீத³ந்நித³மப்³ரவீத் ।

அவஸ்தி²தாந் – கூடியிருந்த, **தாந்** – அந்த, **ஸர்வாந்** – அனைத்து, **ப³ந்தூ⁴ந்** – உறவினர்களையும், **ஸமீக்ஷ்ய** – நன்கு பார்த்து, **ஸः** – அந்த, **கௌந்தேயः** – குந்தியின் மகனான அர்ஜுனன், **பரயா** – மிகுந்த, **க்ருபயா** – இரக்கத்தோடு, **ஆவிஷ்டः** – கூடியவனாக, **விஷீத³ந்** – வருத்தம் கொண்டு, **இத³ம்** – இதை, **அப்³ரவீத்** – பேசலுற்றார்.

கூடியிருந்த அந்த அனைத்து உறவினர்களையும் நன்கு பார்த்த அந்தக் குந்தியின் மகனான அர்ஜுனன் மிகுந்த இரக்கத்தோடு கூடியவனாக வருத்தம் கொண்டு இதைப் பேசலுற்றார்.

கேள்வி: 'கூடியிருந்த அனைத்து உறவினர்களையும்' என்று யாரைக் குறிப்பிடுகிறார் அர்ஜுனன்?

பதில்: முன் ஒன்றரை ச்லோகங்களில் அர்ஜுனன் தம் தந்தை, பாட்டனார் முதலிய பெரியோர்களைப் பார்த்தார் என்று சொல்லி முடித்துவிட்டார். அவர்களைத் தவிரத் தெளிவாக உறவுமுறை சொல்லப்படாத மற்றவர்கள் த்ருஷ்டத்யும்னன், சிகண்டி, ஸுரதன் முதலிய மைத்துனர்கள், ஜயத்ரதன் போன்ற ஸஹோதரி புருஷர்கள், இன்னும் மற்ற உறவினர்கள் இரண்டு படைகளிலும் கூடியிருக்கிறார்கள் என்பதை ஸஞ்ஜயன் சுட்டிக் காட்டுகிறார்.

கேள்வி: 'அர்ஜுனன் மிகுந்த கருணையோடு கூடியிருந்தார்' என்றால் என்ன கருத்து?

பதில்: அர்ஜுனன் நாற்புறமும் சூழ்ந்திருந்த உறவினர்களைப் பார்த்து இவர்கள் எல்லோருக்கும் இந்தப் போரில் மரணம் ஸம்பவிக்குமே என்று நினைத்தார். உறவினர்களின் மீது இருந்த பற்றின் காரணமாக அவர் உள்ளம் நடுங்கியது. அவர் உள்ளத்தில் போருக்கு எதிராக ஒருவிதமான கருணையோடுகூடிய கோழைத்தனம் மிகவும் பலமாக எழுந்தது. இதைத்தான் 'மிகுந்த கருணை' என்று ஸஞ்ஜயன் கூறுகிறார். இந்தக் கோழைத்தனம் மேலிட்டதனால் அர்ஜுனன் க்ஷத்ரியனுக்குரிய வீர ஸ்வபாவத்தை மறந்து மிகுந்த குழப்பத்தை அடைந்தார். இதுதான் அவர் கருணைக்கு ஆட்பட்டார் என்பதன் பொருள்.

கேள்வி: 'இதம்' என்று அர்ஜுனனுடைய எந்தச் சொல்லை எடுத்துக் கொள்வது?

பதில்: அடுத்து வரும் ச்லோகம் முதல் 46வது ச்லோகம் வரை அவர் சொல்லப் போவதையெல்லாம் 'இதம்' என்ற சொல் குறிக்கிறது.

பொருத்தம்: பந்தபாசத்தினால் அர்ஜுனனுக்கு என்ன நிலை ஏற்பட்டதோ, அதை இனிவரும் இரண்டரை ச்லோகங்களில் வர்ணிக்கிறார்—

अर्जुन उवाच

दृष्ट्वेमं स्वजनं कृष्ण युयुत्सुं समुपस्थितम्॥ २८॥
सीदन्ति मम गात्राणि मुखं च परिशुष्यति।
वेपथुश्च शरीरे मे रोमहर्षश्च जायते॥ २९॥

அர்ஜுந உவாச

த்₃ருஷ்ட்வேமம் ஸ்வஜநம் க்ருஷ்ண யுயுத்ஸும் ஸமுபஸ்தி₂தம் ॥ 28 ॥
ஸீத₃ந்தி மம கா₃த்ராணி முக₂ம் ச பரிஶுஷ்யதி ।
வேபது₂ஶ்ச ஶரீரே மே ரோமஹர்ஷஶ்ச ஜாயதே ॥ 29 ॥

அர்ஜுந உவாச – அர்ஜுனன் சொன்னார்: **க்ருஷ்ண** – க்ருஷ்ண! **ஸமுபஸ்தி₂தம்** – (போர்க்களத்தில்) ஒருங்கு கூடி நின்று, **யுயுத்ஸும்** – போர் புரிய விரும்புகின்ற, **இமம்** – இந்த, **ஸ்வஜநம்** – உறவினரின் கூட்டத்தை, **த்₃ருஷ்ட்வா** – பார்த்து, **மம** – என், **கா₃த்ராணி** – அங்கங்கள், **ஸீத₃ந்தி** – சோர்வு அடைகின்றன. **முக₂ம் ச** – வாயும், **பரிஶுஷ்யதி** – உலர்கிறது. **ச** – அவ்வாறே, **மே** – என், **ஶரீரே** – உடலில், **வேபது₂:** – நடுக்கம், **ஜாயதே** – ஏற்படுகின்றது. **ரோமஹர்ஷ: ச** – மயிர்ச்சிலிர்ப்பும், **(ஜாயதே** – ஏற்படுகின்றது).

அர்ஜுனன் சொன்னார்: "க்ருஷ்ண! போர்க்களத்தில் ஒருங்கு கூடி நின்று போர் புரிய விரும்புகின்ற இந்த உறவினரின் கூட்டத்தைப் பார்த்து என் அங்கங்கள் சோர்வடைகின்றன. வாயும் உலர்கிறது. அவ்வாறே என் உடலில் நடுக்கம் ஏற்படுகின்றது. மயிர்ச்சிலிர்ப்பும் ஏற்படுகின்றது.

கேள்வி: அர்ஜுனன் இப்படிச் சொல்வதன் கருத்து என்ன?

பதில்: இந்தப் பெரிய போரின் விளைவு பயங்கரமாக இருக்கும். இங்குள்ள நெருங்கிய, தூரத்து, உற்றார்-உறவினர், மிக வேண்டிய நண்பர்கள் என் கண்ணெதிரே நிற்கிறார்களே. இவர்கள் மரணத்தின் வாயில் நுழைந்து விடுவார்கள். இதை நினைத்தால் உயிர்நிலையான இடங்களில் வேதனை ஏற்படுகிறது. என் உள்ளத்தில் பயங்கரமான தாபமும், பயமும் உண்டாகி வேதனைப்படுகிறேன். அதனால் உடலுக்கு இந்த அவலநிலை ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது.

गाण्डीवं स्रंसते हस्तात्त्वक्चैव परिदह्यते।
न च शक्नोम्यवस्थातुं भ्रमतीव च मे मनः॥ ३०॥

கா₃ண்டீ₃வம் ஸ்ரம்ஸதே ஹஸ்தாத்த்வக்சைவ பரித₃ஹ்யதே ।
ந ச ஶக்நோம்யவஸ்தா₂தும் ப்₄ரமதீவ ச மே மந: ॥ 30 ॥

ஹஸ்தாத் – கையிலிருந்து, **கா₃ண்டீ₃வம்** – காண்டீவ வில், **ஸ்ரம்ஸதே** – நழுவிக் கொண்டிருக்கிறது. **ச** – மேலும், **த்வக் ஏவ** – சருமத்திலும், **பரித₃ஹ்யதே** – மிகவும் எரிச்சல் உண்டாகிறது. **மே** – என்னுடைய, **மந: ச** – மனமும், **ப்₄ரமதி இவ** – குழப்பம் அடைவது போல் உள்ளது. **(அத:** – ஆகவே நான்), **அவஸ்தா₂தும் ச** – நிற்பதற்கும் கூட, **ந ஶக்நோமி** – இயலாதவனாக இருக்கிறேன்.

கையிலிருந்து காண்டீவ வில் நழுவிக் கொண்டிருக்கிறது. மேலும் சருமத்திலும் மிகவும் எரிச்சல் உண்டாகிறது. என்னுடைய மனதும் குழப்பம் அடைவதுபோல் உள்ளது. ஆகவே நான் நிற்பதற்குக்கூட இயலாதவனாக இருக்கிறேன்.

கேள்வி: இந்த ச்லோகத்தின் கருத்து என்ன?

பதில்: கருணையினால் உண்டான கோழைத்தனத்தால் அர்ஜுனன் வருந்தத்தக்க நிலையை அடைந்தார். அதை வெளியிட்டுச் சொல்கிறார்: "என்னுடைய அங்கங்கள் எல்லாம் தளர்கின்றன. காண்டீவத்தைத் தூக்குவதற்குக்கூடக் கையில் வலுவே இல்லை. அதில் நாணேற்றி அம்பைப் பூட்டுவது எங்கே? அதை என்னால் தாங்கி நிற்கக்கூட முடியவில்லையே! அது கையைவிட்டு நழுவுகிறதே! போரின் விளைவை நினைத்தால் என் மனம் கொதிக்கிறது. என் சருமத்தில் எரிச்சல்போல இருக்கிறது. மனதில் உள்ள தீவிரமான வேதனையினால் எந்த விஷயத்திலும் நிலைத்து ஆலோசிக்க முடியவில்லை. என் மூளை குழம்புகிறது. அப்படியே மயக்கமடைந்து விழுந்து விடுவேனோ என்று தோன்றுகிறது."

கேள்வி: அர்ஜுனனுடைய காண்டீவம் எத்தகையது? அது அவருக்கு எப்படிக் கிடைத்தது?

பதில்: அர்ஜுனனுடைய காண்டீவம் தெய்விகமானது. அதன் உயரம் பனைமரத்தளவுள்ளது (மஹா. உத்யோக. 161). உத்தரகுமாரனுக்கு காண்டீவத்தைப் பற்றி அறிமுகம் செய்து வைக்கும்போது ப்ருஹன்னளை உருவத்தில் இருந்த அர்ஜுனன் பின்வருமாறு சொல்லியிருக்கிறார்: "இது அர்ஜுனனுடைய உலகப் புகழ்பெற்ற வில். இதற்குத் தங்கக்கவசம் உண்டு. இது எல்லா ஆயுதங்களைக் காட்டிலும் சிறந்தது. லக்ஷம் ஆயுதங்களுக்கு ஸமமான சக்தி உடையது. இந்த வில்லின் உதவியால்தான் அர்ஜுனன் தேவர்களையும், மனிதர்களையும் வென்றார். இது விசித்ரமானது; பல வர்ணங்கள் கொண்டது; அற்புதமானது; ம்ருதுவானது; மிகப் பெரியது. இதை தேவர்கள், தானவர்கள், கந்தர்வர்கள் வெகுகாலம் பூஜித்திருக்கிறார்கள். இந்தச் சிறப்பான, தெய்விகமான வில்லை ப்ரம்மதேவன் ஆயிரம் வருஷங்களும், ப்ரஜாபதி ஐநூற்று மூன்று வருஷங்களும், இந்த்ரன் எண்பத்தைந்து வருஷங்களும், சந்த்ரன் ஐநூறு வருஷங்களும், வருணதேவன் நூறு வருஷங்களும் வைத்துக் கொண்டிருந்தார்கள் (மஹா. விராட. 43). அர்ஜுனன் காண்டவவனத்தை எரித்து அக்னிதேவருக்கு ஸமர்ப்பித்தபோது அக்னி பகவான், வருணன் மூலம் அர்ஜுனனுக்கு இந்த வில்லைக் கொடுக்கச் செய்தார் (மஹா. ஆதி. 225)."

பொருத்தம்: தமது வருத்தமுற்ற நிலையைச் சொல்லிவிட்டு, தமது கருத்துப்படி போர் செய்வது உசிதமன்று என்பதை அர்ஜுனன் உறுதிபடச் சொல்கிறார்—

निमित्तानि च पश्यामि विपरीतानि केशव।
न च श्रेयोऽनुपश्यामि हत्वा स्वजनमाहवे॥ ३१॥

நிமித்தாநி ச பஶ்யாமி விபரீதாநி கேஶவ।
ந ச ஶ்ரேயோऽநுபஶ்யாமி ஹத்வா ஸ்வஜநமாஹவே॥ 31॥

கேஶவ – கேசவ! **விபரீதாநி** – கெடுதல்களை விளைவிக்கக்கூடிய, **நிமித்தாநி ச** – சகுனங்களையும், **பஶ்யாமி** – காண்கிறேன். **ஆஹவே** – போரில், **ஸ்வஜநம்** – நம் உறவினர்களை, **ஹத்வா** – கொன்று (கொல்வதால்), **ஶ்ரேய: ச** – (எந்த) மேன்மையையும், **ந அநுபஶ்யாமி** – (நான்) காணவில்லை.

கேசவ! கெடுதல்களை விளைவிக்கக்கூடிய சகுனங்களையும் காண்கிறேன். போரில் நம் உறவினர்களைக் கொன்று எந்த மேன்மையையும் நான் காணவில்லை.

கேள்வி: 'நான் கெடுதல்களை விளைவிக்கக்கூடிய அறிகுறிகளைக் காண்கிறேன்' என்றால் என்ன கருத்து?

பதில்: எந்தச் செயலுக்கும் விளைவு எவ்வாறு அமையும் என்பது பற்றிக் குறிப்புக் காட்டும் சகுனம் முதலியவற்றை லக்ஷணம் – அறிகுறி என்று சொல்வார்கள். ச்லோகத்தில் வரும் 'நிமித்தானி' என்ற சொல்லுக்கு இதுதான் பொருள். ஏற்படக் கூடாத நேரத்தில் க்ரஹணம் உண்டாவது, பூமியில் நடுக்கம் ஏற்படுவது, ஆகாயத்திலிருந்து நக்ஷத்ரங்கள் உதிர்வது ஆகிய கெட்ட சகுனங்கள் தோன்றுவதிலிருந்து இந்தப் போரின் முடிவு நன்மையாக இருக்காது என்று தெரிகிறது. ஆகையால், எனக்குத் தெரிந்தவரை போர் புரியாமல் இருப்பதுதான் நல்லது என்று அர்ஜுனன் தெரிவிக்கிறார்.

கேள்வி: 'போரில் நம் உறவினரைக் கொல்வதால் எந்த மேன்மையும் உண்டாகாது' என்று சொல்வதன் கருத்து என்ன?

பதில்: நம் கூடப் பிறந்தவர்களையும், உறவினர்களையும் போரில் கொல்வதால் எந்தவிதமான நன்மையும் உண்டாகும் என்று தோன்றவில்லை. ஏனெனில் முதலில் நம் மக்களைக் கொல்வதால் மனதில் பச்சாதாபம் ஏற்படும்; மனம் கலங்கும். அடுத்தபடியாக, அந்த உறவினர் இல்லையே என்ற துயரம் வாழ்க்கை முழுவதும் தொடரும். மூன்றாவதாக அவர்களைக் கொல்வதால் கொடிய பாவம் உண்டாகும். இந்நோக்குகளிலே பார்க்கும் போது நமக்கு இவ்வுலகிலும் நன்மை இல்லை; பரலோகத்திலும் நன்மை இல்லை. ஆகவே தம் கருத்துப்படி யுத்தம் செய்வது எவ்விதத்திலும் உசிதமில்லை என்று அர்ஜுனன் நினைக்கிறார்.

பொருத்தம்: தம் உற்றாரைக் கொல்வதால் எவ்விதத்திலும் நன்மையில்லை என்று சொன்னதற்கு மேலும் வலிவு ஊட்டுகிறார் அர்ஜுனன்.

न काङ्क्षे विजयं कृष्ण न च राज्यं सुखानि च।
किं नो राज्येन गोविन्द किं भोगैर्जीवितेन वा॥ ३२॥

ந காங்க்ஷே விஜயம் க்ருஷ்ண ந ச ராஜ்யம் ஸுகா₄நி ச ।
கிம் நோ ராஜ்யேந கோ₂விந்த₃ கிம் போ₄கை₃ர்ஜீவிதேந வா ॥ 32 ॥

க்ருஷ்ண – க்ருஷ்ண! (நான்), **விஜயம்** – வெற்றியை, **ந காங்க்ஷே** – விரும்பவில்லை. **ராஜ்யம் ச** – ராஜ்யத்தையும், **ந (காங்க்ஷே)** – விரும்பவில்லை. **ஸுகா₄நி ச** – ஸுகங்களையும், **(ந காங்க்ஷே** – விரும்பவில்லை). **கோ₂விந்த₃** – கோவிந்த! **நः** – நமக்கு (இத்தகைய), **ராஜ்யேந** – ராஜ்யத்தினால், **கிம்** – என்ன பயன்? **வா** – அல்லது (இத்தகைய), **போ₄கை₃ः** – ஸுக போகங்களாலோ, **ஜீவிதேந** – உயிரோடு வாழ்வதாலோ கூட, **கிம்** – என்ன (பயன்)?

க்ருஷ்ண! நான் வெற்றியை விரும்பவில்லை. ராஜ்யத்தையும் விரும்பவில்லை. ஸுகங்களையும் விரும்பவில்லை. கோவிந்த! நமக்கு இத்தகைய ராஜ்யத்தினால் என்ன பயன்? அல்லது இத்தகைய ஸுகபோகங்களாலோ உயிரோடு வாழ்வதாலோகூட என்ன பயன்?

கேள்வி: அர்ஜுனன் இப்படிச் சொல்வதை விளக்கவேண்டும்.

பதில்: அர்ஜுனன் தம் மனநிலையைச் சித்திரம்போல வரைந்து காட்டுகிறார் – "க்ருஷ்ண! நம்முடைய உறவினர்களைக் கொன்ற பிறகு கிடைக்கும் வெற்றியோ, ராஜ்யமோ, ஸுகமோ எனக்குச் சிறிதுகூடப் பிடிக்கவில்லை. இவர்களைக் கொன்றால் நமக்கு இவ்வுலகிலோ, பரலோகத்திலோ தாபம்தான் உண்டாகும் என்று தோன்றுகிறது. பிறகு ஏன் யுத்தம் செய்ய வேண்டும்? ஏன் இவர்களைக் கொல்ல வேண்டும்? இந்த ராஜ்யத்தினாலும், ஸுகபோகங்களாலும் என்ன கிடைக்கப் போகிறது? என் எண்ணத்தில் இவர்களைக் கொன்றுவிட்டு உயிரோடு வாழ்வதுகூட லாபமில்லை."

பொருத்தம்: தம் உறவினர்களைக் கொன்று அதன்மூலம் கிடைக்கும் ராஜ்யம், போகம் முதலியவற்றை விரும்பாததற்கு அர்ஜுனன் காரணம் கூறுகிறார்—

येषामर्थे काङ्क्षितं नो राज्यं भोगाः सुखानि च।
त इमेऽवस्थिता युद्धे प्राणांस्त्यक्त्वा धनानि च॥ ३३॥

யேஷாமர்தே₃ காங்க்ஷிதம் நோ ராஜ்யம் போ₄கா₃: ஸுகா₂நி ச ।
த இமேऽவஸ்தி₂தா யுத்₃தே₄ ப்ராணாம்ஸ்த்யக்த்வா த₄நாநி ச ॥ 33 ॥

நः – நமக்கு, **யேஷாம் அர்தே₂** – எவர்களுக்காக, **ராஜ்யம்** – அரசும், **போ₄கா₃:** **ச** – போகங்களும், **ஸுகா₂நி** – ஸுகங்களும், **காங்க்ஷிதம்** – விரும்பத்தக்கனவோ, **தே இமே** – அத்தகைய இவர்களே, **த₄நாநி** – செல்வத்தையும், **ப்ராணாந் ச** – உயிர் மேலுள்ள ஆசையையும், **த்யக்த்வா** – துறந்து, **யுத்₃தே₄** – யுத்தத்தில், **அவஸ்தி₂தா:** – நிற்கிறார்கள்.

நமக்கு, எவர்களுக்காக அரசும் போகங்களும் ஸுகங்களும் விரும்பத்தக்கனவோ அத்தகைய இவர்களே செல்வத்தையும் உயிர் மேலுள்ள ஆசையையும் துறந்து யுத்தத்தில் நிற்கிறார்கள்.

கேள்வி: அர்ஜுனன் இப்படிச் சொல்வதன் கருத்து என்ன?

பதில்: அர்ஜுனன் சொல்கிறார்: "என் சொந்த நுகர்ச்சிக்காக ராஜ்யமோ, போகமோ, ஸுகங்களோ தேவையில்லை. இவற்றால் நிலையான ஆனந்தம் கிடையாது என்றும் எனக்குத் தெரியும். இவை நிலைத்து நிற்பவையும் அல்ல. ஸஹோதரர், உறவினர் முதலியவர்களுக்காகத்தான் நான் ராஜ்யம் முதலியவற்றை விரும்பினேன். ஆனால் அவர்களோ போரில் உயிரை த்யாகம் செய்யத் தயாராகக் கூடி நிற்கிறார்கள் என்பதைப் பார்க்கிறேன். இவர்கள் எல்லோரும் இறந்துவிட்டால் பிறகு கிடைக்கும் ராஜ்யமோ, போகமோ, ஸுகமோ யாருக்கு வேண்டும்? ஆகவே, எவ்விதத்திலும் யுத்தம் செய்வது உசிதமன்று."

பொருத்தம்: இவ்விதம் யுத்தம் செய்வது உசிதமன்று என்று நிரூபித்துவிட்டு, மேலே, யுத்தத்தில் உயிரை விடுவதற்காகத் தயாராகக் கூடியிருக்கும் தம் உறவினர்கள் யார் யார் என்பதைச் சுருக்கமாக வர்ணிக்கிறார்—

आचार्याः पितरः पुत्रास्तथैव च पितामहाः।
मातुलाः श्वशुराः पौत्राः श्याला: सम्बन्धिनस्तथा॥ ३४॥

ஆசார்யா: பிதர: புத்ராஸ்ததை₂வ ச பிதாமஹா: ।
மாதுலா: ஸ்வஸுரா: பௌத்ரா: ஸ்யாலா: ஸம்ப₃ந்தி₄நஸ்ததா₂ ॥ 34 ॥

ஆசார்யா: – ஆசார்யர்கள், **பிதர:** – பெரியப்பா, சிற்றப்பாக்கள், **புத்ரா:** – மகன்கள், **ததா₂ ஏவ ச** – அவ்விதமே, **பிதாமஹா:** – பாட்டனார்கள், **மாதுலா:** – அம்மான்கள், **ஸ்வஸுரா:** – மாமனார்கள், **பௌத்ரா:** – பேரர்கள், **ஸ்யாலா:** – மைத்துனர்கள், **ததா₂** – மற்றும், **ஸம்ப₃ந்தி₄ந:** – உறவினர்கள் (இங்கே கூடியிருக்கிறார்கள்).

ஆசார்யர்கள், பெரியப்பா சிற்றப்பாக்கள், மகன்கள், அவ்விதமே பாட்டனார்கள், அம்மான்கள், மாமனார்கள், பேரர்கள், மைத்துனர்கள் மற்றும் உறவினர்கள் இங்கே கூடியிருக்கிறார்கள்.

கேள்வி: அர்ஜுனன், இப்படி உறவினர்களின் பெயரைக் கூறி, என்ன சொல்ல விரும்புகிறார்?

பதில்: ஆசார்யர், சிற்றப்பா, பெரியப்பா, உறவினர்கள் பற்றிச் சுருக்கமாக முன்னே சொல்லியாகிவிட்டது. இங்கு மைத்துனர்களான த்ருஷ்டத்யும்னன், சிகண்டி, ஸூரதன் முதலியவர்களையும், உறவினர்களான ஜயத்ரதன் முதலானோரையும் குறிப்பிட்டு, "உலகியலில் அன்புள்ள உறவினர்களுக்காகவே ஸுகபோகப் பொருட்களைச் சேர்ப்பது வழக்கம். அவர்களையே கொன்றுவிட்ட பிறகு ராஜ்ய போகங்களை அடைவதால் என்னதான் பயன்? இந்த ராஜ்ய போகங்கள் துக்கத்திற்கே காரணமாகும்" என்று கூற விரும்புகிறார் அர்ஜுனன்.

பொருத்தம்: படையில் எதிரில் நிற்கும் சூரவீரர்களுடன் தம் உறவைக் கூறிவிட்டு, எக்காரணம் கொண்டும் அவர்களைக் கொல்வதில் தமக்கு விருப்பமில்லை என்பதை அர்ஜுனன் வெளிப்படுத்துகிறார்—

एतान्न हन्तुमिच्छामि घ्नतोऽपि मधुसूदन।
अपि त्रैलोक्यराज्यस्य हेतोः किं नु महीकृते॥ ३५॥

ஏதாந்ந ஹந்துமிச்ச²ாமி க்⁴நதோ(அ)பி மது⁴ஸூத³ந ।
அபி த்ரைலோக்யராஜ்யஸ்ய ஹேதோ: கிம் நு மஹீக்ருதே ॥ 35 ॥

மது⁴ஸூத³ந – மதுஸூதன! **க்⁴நத: அபி** – என்னைக் கொன்றாலும், **த்ரைலோக்ய ராஜ்யஸ்ய ஹேதோ: அபி** – மூவுலகங்களிலும் உள்ள ராஜ்யங்களின் அரசாட்சி என்ற காரணத்திற்காகக் கூட (நான்), **ஏதாந்** – இவர்கள் எல்லோரையும், **ஹந்தும்** – கொல்ல, **ந இச்ச²ாமி** – விரும்பவில்லை. (பிறகு), **மஹீக்ருதே** – பூவுலகுக்காக, **கிம் நு** – (கொல்ல விரும்பவில்லை என்பதைச்) சொல்லவும் வேண்டுமா?

மதுஸூதன! என்னைக் கொன்றாலும் மூவுலகங்களிலும் உள்ள ராஜ்யங்களின் அரசாட்சி என்ற காரணத்திற்காகக்கூட நான் இவர்கள் எல்லோரையும் கொல்ல விரும்பவில்லை. பிறகு இப்பூவுலகுக்காகக் கொல்ல விரும்பவில்லை என்பதைச் சொல்லவும் வேண்டுமா?

கேள்வி: இருதரப்புப் படைகளிலுமுள்ள உறவினர்களில் அர்ஜுனன் தரப்பில் உள்ளவர்கள் அவரைக் கொல்வார்கள் என்று கற்பனைகூடச் செய்ய முடியாதே! அப்படியிருக்க 'இவர்கள் என்னைக் கொன்றாலும்கூட நான் இவர்களைக் கொல்ல விரும்பவில்லை' என்று அர்ஜுனன் ஏன் கூறுகிறார்?

பதில்: இவ்வாறு அர்ஜுனன் கூறுவதன் கருத்து என்னவெனில்:- என் தரப்பில் உள்ளவர்களைப் பற்றிக் கேட்கவே வேண்டாம். ஆனால் எதிர்த்தரப்பில் உள்ள உறவினர்கள் நான் போரிலிருந்து விலகினால் என்னைக் கொல்ல விரும்பாமல் இருக்கலாம். ஏனெனில் அவர்கள் ஆட்சி பீடத்தின் பேராசையாலல்லவா போர் புரிய முனைந்துள்ளனர். நாமே அரசு ஆசையைத் துறந்து போரிலிருந்து விலகுவோமானால், அப்பொழுது அவர்கள் யாரையும் கொல்ல எக்காரணமும் இருக்க முடியாது. ஆனால் அப்படியிருந்தும் ஒருகால் அவர்களில் யாராவது என்னைக் கொல்ல விரும்புவாரேயாகில், அப்படி என்னைக் கொல்ல வருபவர்களையும் நான் கொல்ல மாட்டேன்.

கேள்வி: 'மூவுலக அரசாட்சிக்காகக்கூட அல்ல என்றால் இந்தப் பூவுலக அரசாட்சி பற்றி என்ன' என்பதன் கருத்து என்ன?

பதில்: பூவுலக அரசாட்சி, அது வழங்கும் ஸுகம் – இருக்கட்டும். இவர்களைக் கொல்வதால் மூவுலக அரசாட்சி ஒருவித இடையூறுமில்லாமல் கிடைக்குமானால்கூட,

அதற்காக இந்த ஆசார்யர் முதலானோரை – உறவினரைக் கொல்ல விரும்பவில்லை என்பது கருத்து.

பொருத்தம்: ஏன் மூவுலக அரசாட்சிக்காகக்கூட அவர்களை நீ கொல்ல விரும்பவில்லை என்று கேட்டால், அதற்குப் பதிலாகத் தம் உறவினர்களைக் கொல்வதால் லாபமில்லை; பாவமும் உண்டாகும் என்று கூறித் தம் கருத்துக்கு ந்யாயம் கற்பிக்கிறார்—

निहत्य धार्तराष्ट्रान्नः का प्रीतिः स्याज्जनार्दन।
पापमेवाश्रयेदस्मान्हत्वैतानाततायिनः ॥ ३६ ॥

நிஹத்ய தா4ர்தராஷ்ட்ராந்ந: கா ப்ரீதி: ஸ்யாஜ்ஜநார்தா3ந ।
பாபமேவாஶ்ரயேத3ஸ்மாந்ஹத்வைதாநாததாயிந: ॥ 36 ॥

ஜநார்தா3ந – ஜனார்தன! **தா4ர்தராஷ்ட்ராந்** – த்ருதராஷ்ட்ர குமாரர்களை, **நிஹத்ய** – கொன்று, **ந:** – நமக்கு, **கா** – என்ன, **ப்ரீதி:** – மகிழ்ச்சி, **ஸ்யாத்** – ஏற்படப் போகிறது? **ஏதாந்** – இந்த, **ஆததாயிந:** – படுபாவிகளை, **ஹத்வா** – கொன்றால், **அஸ்மாந்** – நம்மை, **பாபம் ஏவ** – பாவம்தான், **ஆஶ்ரயேத்** – வந்தடையும்.

ஜனார்தன! த்ருதராஷ்ட்ர குமாரர்களைக் கொன்று நமக்கு என்ன மகிழ்ச்சி ஏற்படப் போகிறது? இந்தப் படுபாவிகளைக் கொன்றால் நம்மைப் பாவம்தான் வந்தடையும்.

கேள்வி: 'த்ருதராஷ்ட்ர புத்ரர்களைக் கொன்றால் நமக்கு என்ன மகிழ்ச்சி ஏற்படும்' என்று கேட்பதன் பொருள் என்ன?

பதில்: அர்ஜுனன் சொல்கிறார்: "எதிரணியில் நிற்கும் த்ருதராஷ்ட்ர புத்ரர்களையும், அவர்களுடைய கூட்டாளிகளையும் கொல்வதால் இவ்வுலகிலோ, பரலோகத்திலோ நமக்கு எவ்விதமான இஷ்ட ஸித்தியும் ஏற்படாது. விரும்பிய பொருள் கிடைக்காதபோது மகிழ்ச்சி என்பது எப்படி ஏற்படும்? ஆகவே, எந்த நோக்கில் பார்த்தாலும் இவர்களைக் கொல்ல நான் விரும்பவில்லை."

கேள்வி: ஸ்ம்ருதி நூலோர் தெளிவான சொற்களில் இவ்விதம் சொல்கிறார்கள்—

ஆததாயிநமாயாந்நம் ஹந்யாதே3வாவிசாரயந் ।
நாததாயிவதே4 தே3ாஷோ ஹந்துர்ப4வதி கஶ்சந ।

(மநுஸ்ம்ருதி 8/350,351)

தனக்குக் கெடுதி செய்ய வேண்டும் என்ற நோக்கத்தோடு எதிரே வரும் ஆததாயியை ஆலோசியாமல் கொன்றுவிட வேண்டும். ஆததாயியைக் கொல்வதால் கொல்பவனுக்கு ஒரு குற்றமும் ஏற்படாது.

வஸிஷ்ட ஸ்ம்ருதி ஆததாயியின் இலக்கணத்தைப் பின்வருமாறு கூறுகிறது—

அக்3நிதே3ா க3ரத3ஶ்சைவ ஶஸ்த்ரபாணிர்த4நாபஹ: ।
க்ஷேத்ரத3ாராபஹர்தா4 ச ஷடே3தே ஹ்யாததாயிந: ॥

(3/19)

(1) தீ வைப்பவன், *(2)* விஷம் கொடுப்பவன், *(3)* ஆயுதமெடுத்துக் கொல்ல வருபவன், *(4)* செல்வத்தைப் பறித்துக் கொள்பவன், *(5)* நிலத்தைப் பறித்துக் கொள்பவன், *(6)* மனைவியைப் பறிப்பவன் – இந்த ஆறு பேர்களும் ஆததாயி எனப்படுவர்.

துர்யோதனாதிகளுக்கு இந்த ஆததாயியின் இலக்கணங்கள் முற்றும் பொருந்துகின்றன. அரக்கு மாளிகையில் நெருப்பு வைத்துப் பாண்டவர்களை உயிரோடு கொளுத்த முயன்றார்கள். பீமஸேனனின் உணவில் விஷத்தைக் கலந்தார்கள். கையில் ஆயுதம் எடுத்துக்

கொல்லத் தயாராக இருக்கிறார்கள். சூதாட்டத்தில் வஞ்சனை புரிந்து பாண்டவர்களின் அனைத்துச் செல்வத்தையும், முழு ராஜ்யத்தையும் பறித்துக் கொண்டார்கள். அந்யாயமாக த்ரௌபதியை ஸபையில் இழுத்து வந்து பெரும் அவமானத்தைச் செய்தார்கள். மேலும் ஜயத்ரதன் அவளை அபகரித்துக் கொண்டு போனான். மேலே சொல்லப்பட்ட அத்தனை குற்றங்களையும் செய்துள்ள படுபாவிகளைக் கொன்றால் பாவமே ஸம்பவிக்கும் – என்று அர்ஜுனன் ஏன் சொல்கிறார்?

பதில்: ஸ்ம்ருதி எழுதியவர்கள் கருத்துப்படி படுபாவிகளைக் கொல்வது பாவமாகாது. இதில் ஸந்தேஹமே இல்லை. துர்யோதனாதியர் படுபாவிகள்தாம் என்பதும் கருத்து வேற்றுமை இல்லாத உண்மைதான். ஆனால் வேறு ஒரு இடத்தில் ஸ்ம்ருதிபடைத்தோர் இப்படியும் சொல்லி இருக்கிறார்கள்.

ஸ ஏவ பாபிஷ்ட₂தமோ ய: குர்யாத் குலநாஶநம் ।

'எவன் தன் குலத்தை அழிக்கிறானோ, அவன் எல்லோரைக் காட்டிலும் மிக மிகக் கொடிய பாவி.'

முன் சொன்ன பொதுவான வாக்கியத்தைக் காட்டிலும் இந்த வாக்கியம் உயர்ந்த தர்மத்தைச் சொல்கிறது என்று அறிந்து அர்ஜுனன் சொல்கிறார்: "த்ருதராஷ்ட்ர புத்ரர்கள் படுபாவிகள் ஆனாலும் நம் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். ஆகவே, இவர்களைக் கொல்வது நமக்குப் பாவம்தான். ஒருவிதமான லாபமுமில்லை. இந்த நிலையில் இவர்களை நான் கொல்ல விரும்பவில்லை." அர்ஜுனன் இந்த அத்யாயத்தின் முடிவு வரை இதே கருத்தைத் தெளிவுபடுத்துகிறார்.

பொருத்தம்: உற்றாரைக் கொல்வது எவ்விதத்திலும் கேடுதான் என்று சொல்லி, அர்ஜுனன் தம் முடிவை வெளிப்படுத்துகிறார்—

तस्मान्नार्हा वयं हन्तुं धार्तराष्ट्रान्स्वबान्धवान्।
स्वजनं हि कथं हत्वा सुखिनः स्याम माधव॥ ३७॥

தஸ்மாந்நார்ஹா வயம் ஹந்தும் தா₄ர்தராஷ்ட்ராந் ஸ்வப₃ாந்த₄வாந் ।
ஸ்வஜநம் ஹி கத₂ம் ஹத்வா ஸுகி₂ந: ஸ்யாம மாத₄வ ॥ 37 ॥

தஸ்மாத் – ஆகவே, **மாத₄வ** – மாதவ! **ஸ்வப₃ாந்த₄வாந்** – நம் உறவினர்களான, **தா₄ர்தராஷ்ட்ராந்** – த்ருதராஷ்ட்ர குமாரர்களை, **ஹந்தும்** – கொல்வதற்கு, **வயம் ந அர்ஹா:** – நாம் தக்கவரல்லர். (நாம் அவர்களைக் கொல்வது சரியன்று). **ஹி** – ஏனெனில், **ஸ்வஜநம்** – நம் உறவினர்களை, **ஹத்வா** – கொன்று (நாம்), **கத₂ம்** – எப்படி, **ஸுகி₂ந:** – ஸுகமுள்ளவர்களாக, **ஸ்யாம** – இருப்போம்?

ஆகவே மாதவ! நம் உறவினர்களான த்ருதராஷ்ட்ர குமாரர்களைக் கொல்வதற்கு நாம் தக்கவரல்லர். நாம் அவர்களைக் கொல்வது சரியன்று. ஏனெனில் நம் குடும்பத்தினரைக் கொன்று நாம் எப்படி ஸுகமுள்ளவர்களாக இருப்போம்?

கேள்வி: இந்த ச்லோகத்தின் கருத்து என்ன?

பதில்: இந்த ச்லோகத்தில் 'தஸ்மாத்' என்று கூறுவதன் மூலம் அர்ஜுனன் ஒன்றைத் தெளிவுபடுத்துகிறார்: "என் மனநிலையைப் பொறுத்தும் இவ்விதம் தோன்றுகிறது. யுத்தம் செய்ய வேண்டாம் என்பது இதுவரை சொன்ன காரணங்களாலும், மேலும் எனக்குத் தோன்றும் கருத்துக்களாலும் உறுதியாகிறது. துர்யோதனன் முதலான சுற்றத்தாரைக் கொல்வது முற்றிலும் முறையற்றது. குடும்பத்தினரைக் கொன்று இவ்வுலகிலோ, பரலோகத்திலோ எவ்வித நன்மையையும் பெற முடியும் என்ற நம்பிக்கையே இல்லை. ஆகவே, நான் யுத்தம் செய்ய விரும்பவில்லை."

பொருத்தம்: குலநாசத்தால் ஏற்படும் குற்றம் என்பது இரு அணியினர்க்கும் ஸமானம்தான். இந்தப் பாவத்தை நினைத்து துர்யோதனன் முதலானோர் யுத்தத்திலிருந்து விலகாமல் இருக்கும்போது, உனக்கு மட்டும் ஏன் இவ்வளவு கவலை என்ற கேள்விக்கு அர்ஜுனன் இரண்டு ச்லோகங்களின் மூலம் பதில் சொல்கிறார்—

यद्यप्येते न पश्यन्ति लोभोपहतचेतसः।
कुलक्षयकृतं दोषं मित्रद्रोहे च पातकम्॥ ३८॥

कथं न ज्ञेयमस्माभिः पापादस्मान्निवर्तितुम्।
कुलक्षयकृतं दोषं प्रपश्यद्भिर्जनार्दन॥ ३९॥

यத்3யப்யேதே ந பஶ்யந்தி லோபே4பஹதசேதஸ:।
குலக்ஷயக்ருதம் தோ3ஷம் மித்ரத்3ரோஹே ச பாதகம் ॥ 38 ॥

கத2ம் ந ஜ்ஞேயமஸ்மாபி4: பாபாத3ஸ்மாந்நிவர்திதும்।
குலக்ஷயக்ருதம் தோ3ஷம் ப்ரபஶ்யத்3பி4ர்ஜநார்த3ந ॥ 39 ॥

லோப உபஹத சேதஸ: – பேராசையால் மதியிழந்த, **ஏதே** – இவர்கள், **குலக்ஷய க்ருதம்** – குலநாசத்தினால் ஏற்படும், **தோ3ஷம்** – குற்றத்தை(யும்), **மித்ரத்3ரோஹே** – நண்பர்களுக்குக் கெடுதல் செய்வதால் ஏற்படும், **பாதகம் ச** – பாவத்தையும், **யத்3யபி ந பஶ்யந்தி** – பார்ப்பதில்லையாயினும் (அறிந்து கொள்ளாவிடினும்), **ஜநார்த3ந** – ஜனார்தன! **குலக்ஷயக்ருதம்** – குலநாசத்தினால் ஏற்படும், **தோ3ஷம்** – குற்றத்தை, **ப்ரபஶ்யத்3பி4:** – நன்கு உணர்கின்ற, **அஸ்மாபி4:** – நம்மால் (நாம்), **அஸ்மாத்** – இந்த, **பாபாத்** – பாவச் செயலிலிருந்து, **நிவர்திதும்** – விலகுவது பற்றி, **கத2ம்** – ஏன், **ந ஜ்ஞேயம்** – ஆலோசிக்காமல் இருக்கவேண்டும்? (ஆலோசிக்கவே வேண்டும்).

பேராசையால் மதியிழந்த இவர்கள் குலநாசத்தினால் ஏற்படும் குற்றத்தையும் நண்பர்களுக்குக் கெடுதல் செய்வதால் ஏற்படும் பாவத்தையும் பார்ப்பதில்லையாயினும், ஜனார்தன! குலநாசத்தினால் ஏற்படும் குற்றத்தை நன்கு உணர்கின்ற நாம் இந்தப் பாவச் செயலிலிருந்து விலகுவது பற்றி ஏன் ஆலோசிக்காமல் இருக்கவேண்டும்? (ஆலோசிக்கவே வேண்டும்).

கேள்வி: இந்த இரண்டு ச்லோகங்களின் தெளிவான கருத்து என்ன?

பதில்: நிச்சயமாக துர்யோதனாதியர் செய்வது மிகவும் முறையற்றதுதான். ஆனால், அவர்களுக்கு இது பெரிய விஷயம் அன்று. பேராசை பிடித்தவர்களுக்கு மனதில் விவேகம் அழிந்துவிடும். அதனால், இவர்கள் குலநாசத்தினால் என்னவெல்லாம் தீங்குகள்-தீய விளைவுகள் ஏற்படும் என்று எண்ணிப் பார்க்க மாட்டார்கள். இரு படைகளிலும் ஒன்று கூடி இருக்கும் பந்துவர்க்கங்கள், நண்பர்கள், ஒருவருக்கொருவர் விரோதம் பாராட்டி ஒருவர் மற்றவரைக் கொல்வது எவ்வளவு பயங்கரமான பாவம்? என்பதை அவர்கள் சிந்திக்க மாட்டார்கள். ஆனால், நாம் பேராசையினால் விவேகத்தை இழக்கவில்லையே. குலநாசத்தினால் ஏற்படும் பாவம் நமக்கு நன்றாகத் தெரிகிறதே! நன்கு தெரிந்தும்கூடப் பாவச் செயலில் ஏன் இறங்க வேண்டும்? இதை எண்ணிப் பார்த்து நாம் போரிலிருந்து விலகத்தான் வேண்டும் என்பது கருத்து.

பொருத்தம்: குலநாசத்தினால் என்னென்ன குற்றங்கள் ஏற்படும் என்பதை அர்ஜுனன் கூறுகிறார்—

कुलक्षये प्रणश्यन्ति कुलधर्माः सनातनाः।
धर्मे नष्टे कुलं कृत्स्नमधर्मोऽभिभवत्युत ॥ ४० ॥

குலக்ஷயே ப்ரணஶ்யந்தி குலத4ர்மா: ஸநாதநா: ।
த4ர்மே நஷ்டே குலம் க்ருத்ஸ்நமத4ர்மோऽபி4ப4வத்யுத ॥ 40 ॥

குலக்ஷயே – குலநாசத்தினால், **ஸநாதநா:** – தொன்றுதொட்டு வருகின்ற, **குலத4ர்மா:** – குலதர்மங்கள், **ப்ரணஶ்யந்தி** – அழிந்துவிடுகின்றன. **த4ர்மே** – தர்மம், **நஷ்டே** – அழிந்த பிறகு, **க்ருத்ஸ்நம் குலம்** – குலம் முழுவதிலும், **அத4ர்ம: உத** – அதர்மமும், **அபி4ப4வதி** – வெகுவாகப் பரவுகிறது.

குலநாசத்தினால் தொன்றுதொட்டு வருகின்ற குலதர்மங்கள் அழிந்து விடுகின்றன. தர்மம் அழிந்த பிறகு குலம் முழுவதிலும் அதர்மமும் வெகுவாகப் பரவுகிறது.

கேள்வி: தொன்றுதொட்டு வருகிற குலதர்மங்கள் என்றால் எவை? குலநாசம் ஏற்படுவதால் அவை எப்படி அழியும்?

பதில்: அவரவர்கள் குலத்தில் தலைமுறை தலைமுறையாக நடைமுறையில் இருந்து வரும் மங்களமானதும், சிறந்ததுமான கட்டுப்பாடுகள் நல்ல நடத்தைகளைக் காப்பாற்றி வருகின்றன. அதனால் குலத்தில் உள்ள ஆண், பெண்களிடம் அதர்மம் நுழைவதில்லை. அந்த மங்களமான சிறந்த கட்டுப்பாடுகளைத்தான் தொன்றுதொட்டு வருகின்ற குலதர்மங்கள் என்று சொல்கிறார். குலம் அழிந்தால் இந்தக் குலதர்மத்தை அறிந்தவர்கள் – அடுத்த தலைமுறைக்கு எடுத்துக்காட்டும் பெரியோர்கள் இல்லாமல் போகிறார்கள். அப்போது எஞ்சியுள்ள சிறுவர்களிடமும், பெண்களிடமும் தர்மம் இயல்பாக அமையாது.

கேள்வி: 'தர்மம் அழிந்தால் குலம் முழுவதும் அதர்மமே வெகுவாகப் பரவிவிடும்' என்று சொல்வதன் கருத்து என்ன?

பதில்: மனிதன் அதர்மத்திலிருந்து தப்புவதற்கு ஐந்து காரணங்கள் உள்ளன. அவை தர்மத்தைக் காப்பாற்றிக் கொடுக்கும். *(1)* கடவுளிடம் உள்ள பயம், *(2)* சாஸ்த்ரத்தின் உத்தரவு, *(3)* குலப்பழக்கம் கெட்டுவிடுமே என்ற பயம், *(4)* அரசாங்கச் சட்டம், *(5)* உடலுக்கும், பொருளுக்கும் ஏற்படும் அழிவில் பயம். இவற்றில் கடவுளும், சாஸ்த்ரமும் உண்மைதான் என்றாலும் அவை ச்ரத்தையை (நம்பிக்கையை)ப் பொறுத்தவை. நேரிடைக் காரணங்கள் அல்ல. அரசாங்கச் சட்டம்தான் மக்களுக்கு முக்யமான காப்பாக உள்ளது. பொதுவாக, அதிகாரம் கையில் உள்ளவர்கள் தர்மத்தை மதிப்பதில்லை. உடலுக்கும், பொருளுக்கும் தீமை ஏற்படும் என்ற பயம்தான் பெரும்பாலும் தனிப்பட்டோருக்கு இருக்கிறது. ஆனால், குலக்கட்டுப்பாடு என்பது குலம் அனைத்துக்கும் ஒரு காப்பாக இருக்கிறது. எந்த ஸமுதாயத்திலோ, குலத்திலோ நெடுநாள் பழக்கமாக வந்திருக்கும் மங்களமானதும், சிறந்ததுமான கட்டுப்பாடுகள் குலைந்துவிட்டால், அந்த ஸமுதாயமும், குலமும் கடிவாளம் இல்லாத குதிரைகள்போலத் தத்தம் விருப்பப்படி போக ஆரம்பித்துவிடும். அப்புறம் ஒரு கட்டுப்பாட்டையும் ஏற்காததும், வெறிபிடித்ததுமான அந்த ஸமூஹத்தைச் சேர்ந்தவன் தறிகெட்டவன் ஆகிறான். எந்த ஸமுதாயத்தில், குலத்தில் மனிதர்களிடையே இப்படித் தறிகெட்டதன்மை முளைக்கிறதோ அந்த ஸமுதாயத்தில், குலத்தில் தானாகவே பாவம் பரவிவிடும்.

பொருத்தம்: **'இப்படி எங்கும் பாவம் பரவிவிட்டால் என்ன ஆகும்?' என்பதை அர்ஜுனன் மேலே சொல்கிறார்—**

अधर्माभिभवात्कृष्ण प्रदुष्यन्ति कुलस्त्रियः।
स्त्रीषु दुष्टासु वार्ष्णेय जायते वर्णसङ्करः ॥ ४१ ॥

அத4ர்மாபி4ப4வாத்க்ருஷ்ண ப்ரது3ஷ்யந்தி குலஸ்த்ரிய: ।
ஸ்த்ரீஷு து3ஷ்டாஸு வார்ஷ்ணேய ஜாயதே வர்ணஸங்கர: ॥ 41 ॥

க்ருஷ்ண – க்ருஷ்ண! **அத4ர்ம அபி4ப4வாத்** – அதர்மம் அதிகமாகப் பெருகுவதால், **குலஸ்த்ரிய:** – குலப்பெண்கள், **ப்ரது3ஷ்யந்தி** – நடத்தை கெட்டுப் போவார்கள். (மேலும்), **வார்ஷ்ணேய** – வார்ஷ்ணேய! **ஸ்த்ரீஷு** – பெண்கள், **து3ஷ்டாஸு** – நடத்தை கெட்டுப் போனால், **வர்ணஸங்கர:** – வர்ணக்கலப்பு, **ஜாயதே** – உண்டாகிவிடுகிறது.

க்ருஷ்ண! அதர்மம் அதிகமாகப் பெருகுவதால் குலப்பெண்கள் நடத்தை கெட்டுப் போவார்கள். மேலும் வார்ஷ்ணேய! பெண்கள் நடத்தை கெட்டுப் போனால் வர்ணக்கலப்பு உண்டாகிவிடுகிறது.

கேள்வி: இந்த ச்லோகத்திற்கு என்ன தாத்பர்யம்?

பதில்: குலதர்மம் அழிந்துவிட்டால் குலத்தில் உள்ள ஸ்த்ரீ-புருஷர்கள் குல மரியாதைக்கும், ஸமூஹ மரியாதைக்கும் கட்டுப்படாமல் நடத்தைக் கெட்டு விடுவார்கள். அவர்களுடைய எல்லாச் செயல்களிலும் அதர்மங்கள் நிறைந்தே இருக்கும். இதனால் பாவம் மேலும் வளர்ந்து ஸமுதாயம் முழுவதும் பரவிவிடும். எங்கும் பாவம் பரவிவிடுவதால் ஸமுதாயத்தில் உள்ள ஸ்த்ரீ புருஷர்களின் கருத்தில், எந்தக் கட்டுப்பாட்டிற்கும் மதிப்பு இருக்காது. அவற்றைப் பாதுகாப்பது இருக்கட்டும்; அவற்றை அறிவதற்குக்கூட முயற்சி செய்ய மாட்டார்கள். யாராவது எடுத்துச் சொன்னாலும், அவர்களைப் பரிஹாஸம் செய்வார்கள்; அல்லது வெறுப்பார்கள். இந்த நிலையில் ஸமுதாய தர்மத்தைக் காப்பாற்றுவதற்கு ஆதாரம் புனிதமான ஸதி தர்மம்தான். அதுவும் அழிந்துவிடும். ஸதி தர்மத்தின் பெருமையை இழந்த பிறகு பரிசுத்தமான குடும்பத்து ஸ்த்ரீகள் வெறுக்கத்தக்க விபசார தோஷத்திற்கு ஆளாவார்கள். பல வகுப்பினருடன் பழக்கம் ஏற்பட்டுவிடும். தாய்-தந்தையர் மாறுபட்ட வர்ணத்தினர் ஆவதால், அவர்களுக்குப் பிறக்கும் குழந்தைகள் குலக்கலப்புக்கு ஆளாகிவிடுகிறார்கள். இப்படிக் குலத்தின் பரம்பரையாக வந்த புனிதத்தன்மை முழுவதும் எளிதாக நாசமாகிவிடும்.

பொருத்தம்: குலக்கலப்பினால் குழந்தைகள் பிறப்பதால் உண்டாகும் தீமைகளை எடுத்துச் சொல்கிறார் அர்ஜுனன்—

सङ्करो नरकायैव कुलघ्नानां कुलस्य च।
पतन्ति पितरो ह्येषां लुप्तपिण्डोदकक्रियाः ॥ ४२ ॥

ஸங்கரோ நரகாயைவ குலக்4நானாம் குலஸ்ய ச ।
பதந்தி பிதரோ ஹ்யேஷாம் லுப்தபிண்டோ3த3க்ரியா: ॥ 42 ॥

ஸங்கர: – வர்ணக்கலப்பு, **குலக்4நானாம்** – குல நாசம் செய்தவர்களையும், **குலஸ்ய ச** – குலத்தையும், **நரகாய ஏவ** – நரகத்திற்கே அழைத்துச் செல்லக்கூடியது, **ஏஷாம்** – இவர்களுடைய, **பிதர: ஹி** – முன்னோர்கள் கூட, **லுப்த பிண்ட3 உத3க க்ரியா:** – பிண்டம், நீர்க்கடன் அதாவது ச்ராத்தம், தர்ப்பணம் இவற்றை இழந்து, **பதந்தி** – வீழ்ச்சியடைவார்கள்.

வர்ணக்கலப்பு குலநாசம் செய்தவர்களையும் குலத்தையும் நரகத்திற்கே அழைத்துச் செல்லக்கூடியது. இவர்களுடைய முன்னோர்கள் கூட பிண்டம், நீர்க்கடன் அதாவது ச்ராத்தம் தர்ப்பணம் இவற்றை இழந்து வீழ்ச்சியடைவார்கள்.

கேள்வி: 'குலக்ந:' யார்? 'குலஸ்ய ச' என்று சொல்வதன் கருத்து என்ன?

பதில்: யுத்தம் முதலியவற்றில் குலத்தை அழிப்பவர்கள் 'குலக்ந:' ஆவார்கள். 'குலஸ்ய ச' என்றதால், குலக்கலப்பில் பிறந்த ஸந்ததி அந்தக் குலத்தை அழித்தவர்களை மட்டுமின்றிக் குலம் முழுவதையுமே சேர்த்து நரகத்தில் கொண்டு விட்டுவிடும் என்பது கருத்து.

கேள்வி: 'ச்ராத்த-தர்ப்பணம் இழந்தவர்களாகப் பித்ருக்களும் வீழ்ச்சி அடைவார்கள்' என்றால் என்ன கருத்து?

பதில்: ச்ராத்தத்தில் பிண்டம் வைக்கப்படுவதும், பித்ருக்களை உத்தேசித்து அந்தணர்களுக்கு அன்னமிடுவதும்தான் 'பிண்டக்ரியா'. தர்ப்பணத்தில் எள்ளும், நீரும் விடுவதுதான் 'உதகக்ரியா'. இரண்டும் சேர்ந்து 'பிண்டோதகக்ரியா' – அதாவது ச்ராத்த-தர்ப்பணங்கள். சாஸ்த்ரம், குலக்கட்டுப்பாடு இவற்றை அறிந்து மதிப்பவர்கள் ச்ராத்த-தர்ப்பணங்களைச் செய்கிறார்கள். ஆனால் குலநாசம் செய்தவர்களின் குலங்களில் குலதர்மம் அழிந்துவிட்டால் குலக்கலப்பு ஏற்பட்டு விடுகிறது. இவ்வாறு அதர்மத்தில் பிறந்து அதர்மத்தினால் சூழப்பட்டதனால் முதலில், ச்ராத்த-தர்ப்பணங்கள் முதலிய செயல்களைச் செய்யத் தெரிந்தவர்கள் இருக்க மாட்டார்கள். யாராவது எடுத்துச் சொன்னால்கூட ச்ரத்தை ஏற்படாததால், அவர்கள் ச்ராத்தம் செய்வதில்லை என்பது மட்டுமன்று. அப்படிச் செய்தாலும் சாஸ்த்ர முறை மீறப்பட்டு விட்டபடியால், அது பித்ருக்களுக்குப் போய்ச் சேருவதில்லை. இவ்வாறு ஸந்ததிகள் மூலம் கிடைக்கவேண்டிய பிண்டம், ஜலம் ஆகியவை கிடைக்காததால் முன்னோர்கள் வீழ்கிறார்கள்.

பொருத்தம்: குலக்கலப்பிற்குக் காரணமான தோஷங்களால் என்ன தீமை என்பதை அடுத்துக் கூறுகிறார்—

दोषैरेतै: कुलघ्नानां वर्णसङ्करकारकै:।
उत्साद्यन्ते जातिधर्मा: कुलधर्माश्च शाश्वता:॥ ४३॥

தோ3ஷைரேதை: குலக்4நாநாம் வர்ணஸங்கரகாரகை: ।
உத்ஸாத்3யந்தே ஜாதித4ர்மா: குலத4ர்மாஶ்ச ஶாஶ்வதா: ॥ 43 ॥

குலக்4நாநாம் – குலநாசம் செய்பவர்களின், **ஏதை:** – இந்த, **வர்ண ஸங்கர காரகை:** – வர்ணக்கலப்பு ஏற்படுத்துகின்ற, **தோ3ஷை:** – குற்றங்களினால், **ஶாஶ்வதா:** – தொன்றுதொட்டு வருகின்ற, **குலத4ர்மா:** – குலதர்மங்களும், **ஜாதி த4ர்மா: ச** – ஜாதி தர்மங்களும், **உத்ஸாத்3யந்தே** – அழிந்து விடுகின்றன.

குலநாசம் செய்பவர்களின் இந்த வர்ணக்கலப்பு ஏற்படுத்துகின்ற குற்றங்களினால் தொன்றுதொட்டு வருகின்ற குலதர்மங்களும், ஜாதி தர்மங்களும் அழிந்து விடுகின்றன.

கேள்வி: 'இப்படி வர்ணக்கலப்புக்குக் காரணமான தோஷங்கள்' என்று எந்த தோஷங்களைக் குறிப்பிடுகிறார்?

பதில்: மேலே சொன்ன சொற்களில் அந்தக் குலக்கலப்புக்குக் காரணமான தோஷங்கள் பற்றிக் கூறப்பட்டது. அவையாவன: *(1)* குலநாசம், *(2)* குலநாசத்தினால் குலதர்ம நாசம், *(3)* பாவங்கள் அதிகமாவது, *(4)* பாவங்கள் அதிகமாவதால் குலப்பெண்கள் விபசாரம் முதலிய தோஷங்களுக்கு ஆளாவது – இந்த நான்கும்தான் குலக்கலப்புக்குக் காரணங்கள்.

கேள்வி: ஸநாதன குலதர்மம், ஜாதி தர்மம் இவற்றினிடையே என்ன வித்யாஸம்? மேலே சொன்ன தோஷங்களால் இவை எப்படி அழியும்?

பதில்: வம்ச பரம்பரையாக வழிவந்த நன்னடத்தைகளின் கட்டுப்பாடுகளே ஸநாதனமான குலதர்மங்கள். *40வது* ச்லோகத்தில் இவை 'ஸநாதநா:' என்று கூறப்பட்டிருக்கின்றன. இங்கே 'ஶாஶ்வதா:' (என்றுமுள்ளவை) என்று அவற்றைச்

சொல்கிறார். வேத சாஸ்த்ரங்களில் சொல்லப்பட்டவை வர்ணதர்மங்கள். அவையே ஜாதி தர்மங்கள். குலத்தினுடைய சிறந்த கட்டுப்பாடுகளை அறிந்து அவற்றின்படி நடப்பவர்களான பெரிய முதியோர்கள் இல்லாதபடியால், குலதர்மம் அழியும்போது குலக்கலப்புக்குக் காரணமான தோஷங்கள் வளர்கின்றன. அத்தகைய தோஷங்கள் பெருகிவிட்டால் ஜாதி தர்மங்களும் அழிந்துவிடுகின்றன. பிற வர்ணங்களின் கலப்பின் மூலம் உண்டான ஸந்ததிகளிடம் வர்ண தர்மங்கள் இரா. இப்படிக் குலக்கலப்புக்குக் காரணமான தோஷங்களால் இந்த தர்மங்கள் வேரற்றுப் போகின்றன.

பொருத்தம்: குலதர்மமும், ஜாதி தர்மமும் அழிந்தால் என்ன தீங்கு ஏற்படும் என்பதை அடுத்துச் சொல்கிறார்—

उत्सन्नकुलधर्माणां मनुष्याणां जनार्दन।
नरकेऽनियतं वासो भवतीत्यनुशुश्रुम॥ ४४॥

உத்ஸந்நகுலத4ர்மாணாம் மநுஷ்யாணாம் ஜநார்த3ந ।
நரகேऽநியதம் வாஸோ ப4வதீத்யநுஶுஶ்ரும ॥ 44 ॥

ஜநார்த3ந – ஜனார்தன! **உத்ஸந்ந குலத4ர்மாணாம்** – குலதர்மங்கள் அடியோடு அழிந்துவிட்டபின், **மநுஷ்யாணாம்** – மனிதர்களுக்கு, **அநியதம்** – அளவற்ற காலம் வரை, **நரகே வாஸ:** – நரக வாஸம், **ப4வதி** – ஏற்படுகிறது, **இதி** – என்று, **அநுஶுஶ்ரும** – (நாம்) கேள்விப்பட்டிருக்கிறோம்.

ஜனார்தன! குலதர்மங்கள் அடியோடு அழிந்துவிட்டபின் மனிதர்களுக்கு அளவற்ற காலம் வரை நரகவாஸம் ஏற்படுகிறது என்று நாம் கேள்விப்பட்டிருக்கிறோம்.

கேள்வி: இந்த ச்லோகத்தின் கருத்து என்ன?

பதில்: எவர்களுடைய குலதர்மமும், ஜாதிதர்மமும் அழிக்கப்பட்டுவிட்டனவோ, அதர்மத்தில் வீழ்ந்துவிட்ட அத்தகைய மனிதர்கள் பாவங்களின் பயனாக வெகுகாலம் கும்பீபாகம், ரௌரவம் ஆகிய பயங்கரமான நரகங்களில் வீழ்ந்து பற்பலவிதமான யமயாதனைகளை (யமதண்டனைகளை) அனுபவிக்க வேண்டியிருக்கும். இவ்வாறு நம்முடைய முன்னோர்கள் வாயிலாக அறிந்து உள்ளோம். ஆகவே, குலநாசத்திற்குரிய செயலை ஒருபொழுதும் செய்யக் கூடாது.

பொருத்தம்: இப்படித் தம் உறவினரைக் கொலை செய்வதால் ஏற்படும் கெடுதல்களை வர்ணித்துவிட்டு, மேலே அர்ஜுனன் யுத்த முயற்சி என்ற தம் செயல் பற்றிய வருத்தத்தை வெளியிடுகிறார்—

अहो बत महत्पापं कर्तुं व्यवसिता वयम्।
यद्राज्यसुखलोभेन हन्तुं स्वजनमुद्यता:॥ ४५॥

அஹோ ப3த மஹத்பாபம் கர்தும் வ்யவஸிதா வயம் ।
யத்3ராஜ்யஸுக2லோபே4ந ஹந்தும் ஸ்வஜநமுத்3யதா: ॥ 45 ॥

அஹோ – அந்தோ! **ப3த** – பாவம்! **வயம்** – நாம் (அறிவு பெற்றிருந்தும்), **மஹத்** – பெரும், **பாபம்** – பாவம், **கர்தும்** – செய்வதற்கு, **வ்யவஸிதா:** – முனைந்து இருக்கிறோம். **யத்** – ஏனெனில், **ராஜ்யஸுக2** **லோபே4ந** – ராஜ்யம், ஸுகம் இவற்றிற்கு ஆசைப்பட்டு, **ஸ்வஜநம்** – நம் உறவினர்களையே, **ஹந்தும்** – கொல்வதற்கு, **உத்3யதா:** – முனைந்து விட்டோம்.

அந்தோ பாவம்! நாம் அறிவு பெற்றிருந்தும் பெரும் பாவம் செய்வதற்கு முனைந்து இருக்கிறோம். ஏனெனில் ராஜ்யம், ஸுகம் இவற்றிற்கு ஆசைப்பட்டு நம் உறவினர்களையே கொல்வதற்கு முனைந்துவிட்டோம்.

கேள்வி: 'நாம் பெரும் பாவம் செய்யத் தயாராகிவிட்டோம்' என்று சொல்வதற்கு முன் 'அஹோ' என்றும், 'பத' என்றும் சொல்கிறாரே, அதற்கு என்ன பொருள்?

பதில்: 'அஹோ' என்றால் ஆச்சர்யம். 'பத' என்றால் மிகப் பெரிய துயரம். அந்தோ! தர்மாத்மாக்கள் என்றும், அறிவுடையோர் என்றும் கருதப்படும் நாம் கூட இத்தகைய பாவச் செயலில் முனைவது எவ்விதத்திலும் உசிதமாகாது. நாமே இத்தகைய பாவத்தைச் செய்ய நிச்சயித்துவிட்டோம். 'என்ன ஆச்சர்யம்! என்ன கஷ்டம்!' என்று அர்ஜுனன் கூறுகிறார்.

கேள்வி: 'ராஜ்யத்திற்காகவும், ஸுகபோகத்திற்காகவும் நம் உறவினரைக் கொல்லவும் முனைந்து விட்டோமே' என்று சொல்வதன் கருத்து என்ன?

பதில்: நாம் ராஜ்யத்திற்கும், ஸுகத்திற்கும் ஆசைப்பட்டு இவ்விதம் தயாரானது மிகப் பெரிய தவறு என்பதை அர்ஜுனன் சுட்டிக் காட்டுகிறார்.

பொருத்தம்: இப்படிப் பச்சாதாபம் அடைந்து அர்ஜுனன் தமது தீர்மானத்தை வெளியிடுகிறார்—

यदि मामप्रतीकारमशस्त्रं शस्त्रपाणयः।
धार्तराष्ट्रा रणे हन्युस्तन्मे क्षेमतरं भवेत्॥ ४६॥

यदि$_3$ मामप्रतीकारमशस्त्रं शस्त्रपाणयः ।
धृ$_4$र्तराष्ट्रा रणे हन्युस्तन्मे क्षेमतरं भ$_4$वेत् ॥ 46 ॥

அசஸ்த்ரம் – ஆயுதமின்றியும், **அப்ரதீகாரம்** – எதிர்த்துப் போரிடாமலும் (இருக்கின்ற), **மாம்** – என்னை, **சஸ்த்ரபாணயः** – கையில் ஆயுதம் தாங்கிய, **தா$_4$ர்தராஷ்ட்ராः** – த்ருதராஷ்ட்ர குமாரர்கள், **ரணே** – போரில், **யதி$_3$ ஹந்யுः** – கொன்றாலும், **தத்** – அது (கொல்லப்படுவதும்), **மே** – எனக்கு, **க்ஷேமதரம்** – அதிக நன்மை பயப்பதாகவே, **ப$_4$வேத்** – ஆகிவிடும்.

ஆயுதமின்றியும், எதிர்த்துப் போரிடாமலும் இருக்கின்ற என்னைக் கையில் ஆயுதம் தாங்கிய த்ருதராஷ்ட்ர குமாரர்கள் போரில் கொன்றாலும் அதுவும் எனக்கு அதிக நன்மை பயப்பதாகவே ஆகிவிடும்."

கேள்வி: இந்த ச்லோகத்திற்கு என்ன கருத்து?

பதில்: இப்படிப் போர் முழக்கம் செய்தபிறகுகூட நான் ஆயுதங்களை த்யாகம் செய்து விடுவேன். அவர்களின் எந்தச் செயலுக்கும் எதிராக நான் எதுவும் செய்ய மாட்டேன். அப்போது அவர்கள் அநேகமாக யுத்தம் செய்யாமல் இருக்கலாம். அதனால் நம்மவர் களுக்கெல்லாம் காப்பு ஏற்படலாம். அவர்கள் இவ்வாறு செய்யாமல், நான் ஆயுதமில்லாமல் யுத்தத்திலிருந்து விலகி இருப்பதை அறிந்து என்னைக் கொன்றாலும், அந்த மரணம்கூட எனக்கு நலனை அளிக்கும். ஏனெனில் இதனால் குலத்தை அழிக்கிற, கொடிய பாவத்திலிருந்து நான் மீண்டுவிடுவேன். அடுத்ததாக நம்முடைய உறவினர்கள், ஸம்பந்திகள் முதலியோருக்கும் காப்புக் கிடைக்கும். மூன்றாவதாக, குலத்தைக் காப்பாற்றுவது என்ற பெரிய புண்யத்தின் பயனாக பரமபதத்தை எளிதாக அடைவேன் என்பது கருத்து.

அர்ஜுனன் இவ்வாறு எதிர்த்துப் போரிடாமல் மேலே கூறியவாறு இறப்பதால் குலத்திற்குக் காப்பும், தமக்கு மங்களமும் நிச்சயம் என்று நினைக்கிறார். அதனால் அத்தகைய மரணம் போர் செய்வதைக் காட்டிலும் அதிக நலத்தை அளிப்பது (க்ஷேமதரம்) என்கிறார்.

பொருத்தம்: பகவான் ஸ்ரீக்ருஷ்ணனிடம் இவ்வளவும் சொல்லிவிட்டு அர்ஜுனன் என்ன செய்தார் என்ற கேள்விக்கு விடையாக, அர்ஜுனனுடைய நிலையை விவரித்து ஸஞ்ஜயன் சொல்கிறார்—

सञ्जय उवाच

एवमुक्त्वार्जुनः सङ्ख्ये रथोपस्थ उपाविशत्।
विसृज्य सशरं चापं शोकसंविग्नमानसः॥ ४७॥

ஸஞ்ஜய உவாச

ஏவமுக்த்வார்ஜுநः ஸங்க்²யே ரதே²ாபஸ்த² உபாவிஶத் ।
விஸ்ருஜ்ய ஸஶரம் சாபம் ஶோகஸம்விக்³நமாநஸः ॥ 47 ॥

ஸஞ்ஜய உவாச – ஸஞ்ஜயன் சொன்னார்: **ஸங்க்²யே** – போர்க்களத்தில், **ஶோக ஸம்விக்³ந மாநஸः** – சோகத்தினால் கலங்கிய மனதுடைய, **அர்ஜுநः** – அர்ஜுனன், **ஏவம்** – இவ்விதம், **உக்த்வா** – சொல்லி, **ஸஶரம்** – அம்புகளுடன், **சாபம்** – வில்லை, **விஸ்ருஜ்ய** – எறிந்துவிட்டு, **ரதே²ாபஸ்தே²** – தேர்த்தட்டில், **உபாவிஶத்** – உட்கார்ந்து விட்டார்.

ஸஞ்ஜயன் சொன்னார்: 'போர்க்களத்தில் சோகத்தினால் கலங்கிய மனதுடைய அர்ஜுனன் இவ்விதம் சொல்லி அம்புகளுடன் வில்லை எறிந்துவிட்டுத் தேர்த்தட்டில் உட்கார்ந்துவிட்டார்.'

கேள்வி: இந்த ச்லோகத்தில் ஸஞ்ஜயன் சொல்லும் கருத்து என்ன?

பதில்: சோகத்தில் ஆழ்ந்த அர்ஜுனன் பகவானிடம் இவ்வளவு செய்திகளையும் சொல்லிவிட்டு, காண்டீவ வில்லையும், அம்புகளையும் துறந்துவிட்டுத் தேர்த்தட்டில் பின்புறத்தில் சென்று மௌனமாக உட்கார்ந்துவிட்டார். பலவிதக் கவலைகளில் ஆழ்ந்தார். அவர் உள்ளத்தில் குலநாசம், அதனால் ஏற்படும் பயங்கரமான பாவங்கள், அந்தப் பாவங்களின் கொடூரமான விளைவுகளான சித்திரங்கள் தோன்றின. அவர் முகத்தில் துயரம் பரவியிருந்தது. கண்கள் சோகத்தினால் கலங்கின.

ॐ तत्सदिति श्रीमद्भगवद्गीतासूपनिषत्सु ब्रह्मविद्यायां योगशास्त्रे-
श्रीकृष्णार्जुन-संवादेऽर्जुनविषादयोगो नाम प्रथमोऽध्यायः॥ १॥

ஓம் தத்ஸதி³தி ஶ்ரீமத்³ப⁴க³வத்³கீ³தாஸூபநிஷத்ஸூ ப்³ரஹ்மவித்³யாயாம்
யோக³ஶாஸ்த்ரே ஶ்ரீக்ருஷ்ணார்ஜுநஸம்வாதே³
அர்ஜுநவிஷாத³யோகோ³ நாம ப்ரத²மோঽத்⁴யாயः ॥ 1 ॥

ஓம் தத் ஸத் – ப்ரம்ம வித்யை, யோக ஶாஸ்த்ரம், உபநிஷத்து
எனப்படும் ஸ்ரீமத்பகவத்கீதையாகிய ஸ்ரீக்ருஷ்ணனுக்கும் அர்ஜுனனுக்கும் இடையே
நிகழ்ந்த உரையாடலில் 'அர்ஜுந விஷாத யோகம்' எனப் பெயர் படைத்த
முதல் அத்யாயம் நிறைவுற்றது.

ஒவ்வொரு அத்யாயத்தின் முடிவிலும் மேலே சொன்னவாறு முத்தாய்ப்பு (புஷ்பிகா) வைக்கப்பட்டிருக்கிறது. இதில் **ஸ்ரீ**மத்பகவத்கீதையின் பெருமை, மஹிமை எல்லாம் வெளிப்படுகின்றன. ஓம் தத் ஸத் — என்பது பகவானுடைய ஸாரமான, பவித்ரமான திருநாமம் (17/23). பகவானே நேரிடையாக அவருடைய முகத்தாமரையிலிருந்து வெளியிட்டதால் **'ஸ்ரீமத்பகவத்கீதை'** என்று இதற்குப் பெயர். இதில் உபநிஷத்துக்களின்

ஸாரமான தத்வங்கள் தொகுத்துக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. மேலும், இதுவே ஓர் உபநிஷத் ஆகும். அதனால், இது உபநிஷத் என்று சொல்லப்பட்டிருக்கிறது. நிர்குண, நிராகாரமான பரமாத்மாவின் பரம தத்வத்தை நேரிடையாக அடையச் செய்வதால் 'ப்ரஹ்மவித்யா' எனப்படுகிறது. கர்மயோகம் என்று யோகத்தின் பெயருடன் சேர்த்துச் சொல்லப்படுகிற நிஷ்காம கர்மத்தைப் பற்றிச் சொல்வதால், இது யோக சாஸ்த்ரம் எனப்படும்; ஸாக்ஷாத் பரமபுருஷனான பகவான் **ஸ்ரீ**க்ருஷ்ணனுக்கும், சிறந்த பக்தனான அர்ஜுனனுக்கும் இடையே நடந்த உரையாடல் இது; இதன் ஒவ்வொரு அத்யாயத்திலும் ஜீவனைப் பரமாத்மாவிடம் சேர்க்கின்ற மார்க்கம் 'யோகம்' என்ற பெயரில் வர்ணிக்கப்படுகிறது; இந்த முதல் உரையாடல் 'அர்ஜுந விஷாத யோகம்' என்று கூறப்படுகிறது. இவ்வாறே ஒவ்வொரு அத்யாயத்தின் முடிவிலும் அத்யாயத்தின் பெயர் ஒரு யோகம் என்று குறிப்பிடப்படுகிறது.

* * * * *



ஓம் ஸ்ரீபரமாத்மநே நம:

அத₂ த்₃விதீயோऽத்₄யாய:

இரண்டாவது அத்யாயம்

ஸாங்க்யயோகம்

அத்யாயத்தின் பெயர்

இந்த அத்யாயத்தில் பகவானிடம் ஶரணமடைந்த அர்ஜுனன் தம் சோகம் தீர உள்ள ஒரே உபாயம் என்ன என்று அவரைக் கேட்கிறார். அதற்கு விடையாக முப்பதாவது ச்லோகம் வரை ஆத்ம தத்வத்தை பகவான் முதன்முதலாக விளக்குகிறார். ஸாங்க்யயோக ஸாதனையில் ஆத்ம தத்வம் பற்றிக் கேட்பதும், சிந்திப்பதும், த்யானம் செய்வதும் முக்யமானவை. இந்த அத்யாயத்தில் 30வது ச்லோகத்திற்கு மேல் ஸ்வதர்மத்தைப் பிறகு எடுத்துச் சொல்லிக் கர்மயோகத்தின் ஸ்வரூபத்தையும் விளக்குகிறார். ஆனாலும் உபதேசத்தின் ஆரம்பம் ஸாங்க்யயோகத்தில் நேர்வதாலும், மற்ற அத்யாயங்களைக் காட்டிலும் இந்த அத்யாயத்தில் ஆத்ம தத்வ உபதேசம் விளக்கமாகக் கூறப்பட்டிருப்பதாலும் இந்த அத்யாயத்திற்கு 'ஸாங்க்யயோகம்' என்ற பெயர் அமைந்தது.

அத்யாயச் சுருக்கம்

ச்லோகம் 1ல் ஸஞ்ஜயன் அர்ஜுனனுடைய துயரத்தை வர்ணிக்கிறார். 2, 3ல் பகவான் ஸ்ரீகிருஷ்ணன் அர்ஜுனனுடைய மோஹமும், கோழைத்தனமும் கலந்த துயரத்தை நிந்தித்து யுத்தம் செய்ய உற்சாகமூட்டுகிறார். 4, 5ல் பீஷ்மர், த்ரோணர் போன்ற பெரியோர்களைக் கொல்வதைக் காட்டிலும் பிச்சை எடுத்து வாழ்வது மேல் என்கிறார் அர்ஜுனன். 6ல் யுத்தம் செய்வதா, வேண்டாமா என்பதில் ஸந்தேஹமும் தெரிவிக்கிறார். 7ல் மோஹமும், கோழைத்தனமும் இவற்றின் குறைகளை வர்ணித்துவிட்டு பகவானை ஶரணமடைந்து, 'எனக்கு மேன்மை தரக்கூடிய உபதேசம் செய்யுங்கள்' என்று வேண்டுகிறார். 8ல் 'பகையற்ற மூவுலக அரசு என் சோகத்தைத் தீர்க்காது' என்று சொல்லி வைராக்யத்தை வெளியிடுகிறார். 9, 10ல் அர்ஜுனன் யுத்தம் செய்யமாட்டேன் என்று மௌனமாக இருப்பதையும், ஸ்ரீகிருஷ்ணன் புன்னகையுடன் பேச ஆரம்பித்ததையும் ஸஞ்ஜயன் கூறுகிறார். 11ல் பகவான் உபதேசம் செய்ய ஆரம்பிக்கிறார். 12, 13ல் ஆத்மா நித்யமானவன்; மாறுதலற்றவன் என்று நிரூபித்து, 14ல் எல்லா போகங்களும் அநித்யம், ஆகவே ஸுக-துக்கம் முதலான இரட்டைகளைப் பொறுத்துக் கொள்ளவேண்டும் என்கிறார். 15ல் இந்த ஸஹிப்புத் தன்மையே மோக்ஷமடையக் காரணமாக அமையும் என்கிறார். 16ல் ஸத்-அஸத் இவற்றின் இலக்கணத்தைக் கூறி, 17ல் ஸத்தின் ஸ்வரூபம், 18ல்

அஸத்தின் ஸ்வரூபம் இவற்றைக் கூறி, 'யுத்தம் செய்' என்று ஸ்ரீக்ருஷ்ணன் ஆணையிடுகிறார். 19ல் ஆத்மா இறப்பதாக நினைப்பதும், ஆத்மாவை ஒருவன் கொல்கிறான் என்று நினைப்பதும் அஞ்ஞானியின் இயல்பு என்று கூறி, 20ல் பிறப்பு முதலிய ஆறுவித விகாரங்கள் அற்றவன் ஆத்மா என்றும், 21ல் ஆத்மாவை அறிந்தவன் ஒருவரையும் கொல்வதுமில்லை, கொல்லச் செய்வதுமில்லை என்றும் கூறுகிறார். பிறகு, 22ல் மனிதன் உடை மாற்றுவதை உதாரணமாக எடுத்துக் காட்டி 'வேறு உடல் பெறுவதன் தத்வத்தை விளக்குகிறார். 23 முதல் 25 வரை ஆத்மா வெட்டுப்படாதது; எரிக்கப்படாதது; நனைக்கப்படாதது; உலர வைக்க முடியாதது; நித்யமானது; எங்கும் நிறைந்தது; நிலைத்து நிற்பது; அசையாதது; ஸநாதனமானது; வெளிப்படையாகத் தோன்றாதது; எண்ணத்திற்கு அப்பாற்பட்டது; மாறுதலற்றது. ஆத்மா உடலை மாற்றுவதற்காக வருந்துவது உசிதமன்று என்று தீர்மானமாகச் சொல்கிறார். 26, 27ல் ஆத்மா பிறந்து இறப்பதாக நினைத்தாலும்கூட, 28ல் அநித்யமான சரீரத்திற்காகக்கூட வருந்துவது உசிதமன்று என்று கூறுகிறார். 29ல் ஆத்ம தத்வத்தைப் பார்ப்பவன், சொல்பவன், கேட்பவன் அரிது என உறுதிபடக் கூறி, 30ல் ஆத்ம தத்வத்தை அழிக்க முடியாது, ஆகையால் எந்த ப்ராணிக்காகவும் வருந்துவது உசிதமன்று என்பதை நிலைநாட்டுகிறார். 31 முதல் 36 வரை க்ஷத்ரிய தர்மம் என்ற முறையிலும் யுத்தம் செய்வது அர்ஜுனனுடைய ஸ்வதர்மம் என்று சொல்லி, அதை விடுவது எவ்விதத்திலும் உசிதமன்று என்று நிரூபிக்கிறார். 37ல் யுத்தம் இவ்வுலகிலும், பரலோகத்திலும் நன்மை பயப்பது என்று கூறி, அர்ஜுனனை 'யுத்தத்திற்குத் தயார் ஆவாய்' என்று ஆணையிடுகிறார். 38ல் ஸமத்வம்தான் யுத்தம் முதலிய கர்மங்களில் பாவம் ஒட்டாமைக்குரிய உபாயம் என்று சொல்லி, 39ல் கர்மபந்தத்தை விலக்கும் கர்மயோக விஷயமான ஸமபுத்தியை வர்ணிக்கத் தொடங்குகிறார். 40ல் கர்மயோகத்தின் மஹிமையை எடுத்துக் கூறி, 41ல் தீர்மானமான புத்தி, தீர்மானமான எண்ணமில்லாமலும் விவேகமில்லாமலும் செயல்களின் பயனை விரும்புபவர்களுடைய புத்தி இவற்றின் வேறுபாட்டை எடுத்துச் சொல்லி, 42 முதல் 44 வரை ஸ்வர்கத்தை விரும்பி காம்ய கர்மம் செய்பவர்களின் இயல்பைக் கூறுகிறார். 45ல் அர்ஜுனனை 'காமமற்று, இன்ப-துன்பம் போன்ற இரட்டைகளற்று நித்யமான ஸத் என்கிற பரமாத்ம தத்வத்தில் நிலைபெற்று யோக க்ஷேமத்தில் மனம் வைக்காது புலன்களை அடக்கியவனாக இரு' என்று கூறுகிறார். 46ல் வேதங்களில் கூறப்பட்ட கர்மங்களின் பயனாகக் கிடைக்கக் கூடிய ஸுகபோகங்களால் ப்ரம்மஞானியான ப்ராம்மணனுக்கு எவ்வித ப்ரயோஜனமுமில்லை என்று கூறி, 47ல் கர்மயோகத்தின் ஸ்வரூபத்தை ஸூத்ர ரூபத்தில் எடுத்துக் கூறுகிறார். 48ல் யோகம் என்ற சொல்லை விளக்குவது ஸமத்வம்தான் என்று கூறி, 49ல் ஸமபுத்தியைக் காட்டிலும் காம்ய கர்மம் மிகவும் துச்சமானது, பயனைக் கருதுபவன் மிகவும் இரங்கத்தக்கவன் என்று கூறுகிறார். 50, 51ல் ஸமபுத்தியோடு கூடிய கர்மயோகியின் பெருமையைக் கூறி, அர்ஜுனனைக் கர்மயோகத்தில் ஈடுபடுமாறு ஆணையிடுகிறார். ஸமபாவனையின் பயன் எவ்விதக் குறையுமற்ற பதவியான பரமபதத்தைப் பெறுவதே என்கிறார். 52, 53ல் வைராக்யத்துடன் புத்தியைத் தூய்மையாகவும், தெளிவாகவும், அசைவற்றதாகவும் வைத்துக் கொண்டால் பரமாத்மாவை அடைந்துவிடலாம் என்கிறார். 54ல் அர்ஜுனன்

ஸ்திர புத்தியுள்ளவனைப் பற்றி நான்கு கேள்விகள் கேட்கிறார். 55ல் முதல் கேள்விக்கும், 56, 57ல் இரண்டாவது கேள்விக்கும், 58ல் மூன்றாவது கேள்விக்கும் சுருக்கமாகப் பதில் கூறி, 55 முதல் 58 வரை அனைத்து ஆசைகளையும் களைந்து வெளி ஸாதனைகளைக் கோராமல் ஆத்மாவிடமே எப்பொழுதும் ஒன்றியிருப்பது, துக்கங்களில் கலங்காமல் இருப்பது, ஸுகங்களில் ஆசை கொள்ளாமல் இருப்பது, பற்று, பயம், கோபம் , இவை முற்றிலும் அற்றிருப்பது, நல்லது-கெட்டது நேரும்போது மகிழ்ச்சி-துயரம், விருப்பு-வெறுப்பு இவற்றை அடையாதிருப்பது, எல்லாப் புலன்களையும் போகங்களிலிருந்து விலக்கித் தன்வசத்தில் வைத்துக் கொள்ளுவது முதலிய ஸ்திர புத்தியுள்ளவனின் இலக்கணங்களைக் கூறுகிறார். 59ல் புலன்கள் மூலம் போக நுகர்ச்சிப் பொருட்களை ஏற்காவிட்டாலும், அவற்றின்பாலுள்ள விருப்பம் விலகுவதில்லை; அது பரமாத்ம தர்சனம் ஏற்பட்டால்தான் விலகும் என்று கூறுகிறார். 60ல் புலன்கள் அதிக வலிமையுள்ளவை என்று கூறுகிறார். 61ல் மனதையும், புலன்களையும் அடக்கி பகவானிடம் சரணடைவதைப் பற்றிக் கூறி, புலன்களை வென்றவனுடைய பெருமையைக் கூறுகிறார். 62, 63ல் போக விஷயங்களை நினைப்பதால் படிப்படியாக வீழ்ச்சி அடைவதைப் பற்றிக் கூறுகிறார். 64, 65ல் விருப்பு-வெறுப்பின்றிக் கர்மங்களைச் செய்பவன் உள்ளத்தெளிவு பெறுகிறான்; அவனுடைய துயரங்கள் அழிகின்றன; விரைவில் அவனுடைய புத்தி உறுதிப்படுகிறது என்று கூறுகிறார். 66ல் அயுக்தன் (புலன்களை வசப்படுத்தாதவன்) சிறந்த புத்தி, பகவானுடைய நினைவு, அமைதி, ஸுகம் இவற்றைப் பெறமாட்டான் என்று கூறுகிறார். 67ல் காற்று, கப்பல் இவற்றின் உதாரணத்தைச் சொல்லி மனதோடு சேர்ந்த ஒவ்வொரு புலனும், புத்தியைத் தன்வசத்தில் கொண்டு போய் விடுகின்றன என்று கூறுகிறார். 68ல் புலன்கள் வசப்பட்டிருந்தால் அவன்தான் உண்மையில் ஸ்திர புத்தியுள்ளவன் என்று கூறிய பிறகு, 69ல் ஸாதாரண மனிதனுக்கு ப்ரம்மானந்தம் இரவு போன்றது; தத்வமறிந்த யோகிக்கு விஷய ஸுகம் இரவு போன்றது என்று கூறுகிறார். 70ல் கடலை உவமையாகக் கூறி ஞானியான மஹாபுருஷனின் பெருமையைக் கூறுகிறார். 71ல் காமம், பற்று, மமதை, அஹங்காரமின்றி நடமாடும் புருஷன் மேலான அமைதியைப் பெறுகிறான் என்று கூறுகிறார். 72ல் அந்த ப்ரம்ம நிலையின் பெருமையைக் கூறி அத்யாயத்தை முடிக்கிறார்.

முன் அத்யாயத்துடன் இவ்வத்யாயத்திற்குப் பொருத்தம்: முதல் அத்யாயத்தில் கீதா உபதேசத்திற்கு முன்னுரையாக, இரண்டு படைகளுடைய மஹாரதிகள் சங்குகளை முழக்கியதையும், அர்ஜுனன் இரு படைகளுக்குமிடையே தமது ரதத்தை நிறுத்தும்படிக் கூறியதையும், இரண்டு படைகளிலும் தம் உற்றார்-உறவினர்கள் கூடியிருப்பதைப் பார்த்து சோகம், மோஹம் அடைந்த அர்ஜுனன் யுத்தத்திலிருந்து விலகும் எண்ணத்துடன் ஆயுதங்களைக் கைவிட்டு, மிகுந்த கலக்கத்துடன் உட்கார்ந்து விட்டதையும் கூறி அந்த அத்யாயத்தை முடித்தார். இந்த நிலையில் பகவான் ஸ்ரீக்ருஷ்ணன் அர்ஜுனனிடம் என்ன கூறினார்? எவ்விதம் அவரை மறுபடியும் யுத்தம் செய்யத் தூண்டினார்? இவ்வளவையும் கூறுவதற்கு அவசியம் நேர்ந்தமையால் ஸஞ்ஜயன் அர்ஜுனனுடைய நிலையை எடுத்துக் கூறி இரண்டாவது அத்யாயத்தைத் தொடங்குகிறார்—

सञ्जय उवाच

तं तथा कृपयाविष्टमश्रुपूर्णाकुलेक्षणम्।
विषीदन्तमिदं वाक्यमुवाच मधुसूदनः॥ १॥

ஸஞ்ஜய உவாச

தம் ததா₂ க்ருபயாவிஷ்டமஶ்ருபூர்ணாகுலேக்ஷணம் ।
விஷீத₃ந்தமித₃ம் வாக்யமுவாச மது₄ஸூத₃நः ॥ 1 ॥

ஸஞ்ஜய உவாச – ஸஞ்ஜயன் கூறினார்: **ததா₂** – அவ்விதம், **க்ருபயா** – இரக்கத்துடன், **ஆவிஷ்டம்** – நிறைந்து, **அஶ்ருபூர்ண ஆகுல ஈக்ஷணம்** – நீர் நிரம்பிக் கலங்கிய கண்களுடன், **விஷீத₃ந்தம்** – சோகத்தோடு கூடிய, **தம்** – அந்த அர்ஜுனனிடம், **மது₄ஸூத₃நः** – பகவான் மதுஸூதனன், **இத₃ம்** – இந்த, **வாக்யம்** – வார்த்தையை, **உவாச** – கூறினார்.

ஸஞ்ஜயன் கூறினார்: "அவ்விதம் இரக்கம் நிறைந்து நீர் நிரம்பிக் கலங்கிய கண்களுடன் சோகத்தோடு கூடிய அந்த அர்ஜுனனிடம் பகவான் மதுஸூதனன் இவ்வாறு கூறினார்."

கேள்வி: 'தம்' என்று யாரைக் குறிப்பிடுகிறார்? 'க்ருபயாவிஷ்டம்', 'அஶ்ருபூர்ண ஆகுல ஈக்ஷணம்', 'விஷீதந்தம்' என்ற அடைமொழிகளின் கருத்து என்ன?

பதில்: முதல் அத்யாயத்தின் முடிவில் 'சோகத்தில் ஆழ்ந்து அர்ஜுனன் உட்கார்ந்து விட்டார்' என்று கூறப்பட்டது. 'அர்ஜுனனை'த்தான் இங்கே 'தம்' என்ற சொல் குறிக்கிறது. அடைமொழிகள் அவர் நிலையை விளக்குகின்றன. முதல் அத்யாயத்தில் விஸ்தாரமாகக் கூறப்பட்ட விஷயம்தான் இங்கு. உற்றார்-உறவினரிடம் உள்ள பரிவினால், மிகவும் கோழையாகிக் கண்களில் நீர் மல்கி உறவினர்களுக்கு நாசமேற்படுமே என்று கவலை அடைந்தும், அவர்களைக் கொன்றால் பயங்கரமான பாவம் ஏற்படுமே என்றும் சோகமடைந்துவிட்ட அர்ஜுனனைப் பார்த்து பகவான் பேசுகிறார்.

கேள்வி: இங்கு 'மதுஸூதனன்' என்று பகவானைக் கூறுவதன் பொருள் என்ன? 'இதம் வாக்யம்' என்றால் என்ன கருத்து?

பதில்: பகவானை 'மதுஸூதனன்' என்று கூறியும், 'வாக்யம்' என்பதற்கு 'இதம்' என்ற அடைமொழி கொடுத்தும் ஸஞ்ஜயன் த்ருதராஷ்ட்ரரை எச்சரிக்கிறார். பகவான் **ஶ்ரீ**க்ருஷ்ணன் முன்பு தேவர்களுக்கு இன்னல் விளைவித்த 'மது' என்ற அஸுரனைக் கொன்றுவிட்டார். அதனால் அவருக்கு 'மதுஸூதனன்' என்ற பெயர் வந்தது. அந்த பகவான், யுத்தத்திலிருந்து பின்வாங்கும் அர்ஜுனனுக்கு இனி கூறப்போகும் வாக்கியங்களால் யுத்தத்திற்காக உற்சாகமூட்டுகிறார். இந்த நிலையில் உங்கள் புதல்வர்களுக்கு எப்படி வெற்றி கிடைக்கும்? உங்கள் புதல்வர்கள் தர்மத்தை மீறுபவர்கள். தர்மத்தை மீறுபவர்களை அழிப்பதுதான் பகவானுடைய கார்யம். ஆகவே, உங்கள் புதல்வர்களுக்கு அறிவுரை கூறி, இப்பொழுதாவது ஸமாதானம் செய்து கொண்டீர்களானால், அவர்கள் அழிவதைத் தடுக்கலாம் என்று எச்சரிக்கிறார்.‡

श्रीभगवानुवाच

कुतस्त्वा कश्मलमिदं विषमे समुपस्थितम्।
अनार्यजुष्टमस्वर्ग्यमकीर्तिकरमर्जुन ॥ २॥

---

‡ இங்கு ஒன்றை நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். பத்து நாட்கள் யுத்தம் நடந்த பிறகு த்ருதராஷ்ட்ரருக்கு ஸஞ்ஜயன் இவ்விதம் கூறுகிறார்– 'இப்பொழுதாவது ஸமாதானம் செய்து கொள்ளுங்கள்.' அதாவது மீதியுள்ள குடும்பத்தைக் காப்பதற்காகவாவது இப்படிப் பத்து நாட்கள் கடந்த பிறகும்கூட ஸமாதானம் செய்து கொள்ளலாம். இதுதான் புத்திசாலித்தனம் என்பது அபிப்ராயம்.

ஸ்ரீப4க3வாநுவாச

குதஸ்த்வா கஶ்மலமித3ம் விஷமே ஸமுபஸ்தி2தம் ।

அநார்யஜுஷ்டமஸ்வர்க்3யமகீர்திகரமர்ஜுந ॥ 2 ॥

ஸ்ரீப4க3வாநுவாச – ஸ்ரீபகவான் கூறினார்: **அர்ஜுந** – அர்ஜுன! **த்வா** – உன்னை, **விஷமே** – தகாத சமயத்தில்; **இத3ம்** – இந்த, **கஶ்மலம்** – மோஹம், **குத:** – எந்தக் காரணத்தினால், **ஸமுபஸ்தி2தம்** – வந்தடைந்தது? **(யத:** – ஏனெனில்), **அநார்ய–ஜுஷ்டம்** – இது சான்றோர்களால் கடைப்பிடிக்கப்படாதது; **அஸ்வர்க்3யம்** – ஸ்வர்கத்தை அளிக்காதது; மேலும், **அகீர்திகரம்** – புகழையும் தரவல்லதன்று.

ஸ்ரீபகவான் கூறினார்: அர்ஜுன! தகாத சமயத்தில் இந்த மோஹம் எந்தக் காரணத்தினால் உன்னை வந்தடைந்தது? ஏனெனில் இது சான்றோர்களால் கடைப்பிடிக்கப்படாதது; ஸ்வர்கத்தை அளிக்காதது; மேலும் புகழையும் தரவல்லதன்று.

கேள்வி: 'இதம் கஶ்மலம்' என்பது எதைக் குறிப்பிடுகிறது? 'உனக்குத் தகாத சமயத்தில் இந்த மோஹம் எப்படி வந்தது' என்று கூறுவதன் கருத்து என்ன?

பதில்: 'இதம் கஶ்மலம்' என்பது அர்ஜுனனுக்கு மோஹத்தால் ஏற்பட்ட சோகத்தையும், கோழைத்தனத்தையும் குறிப்பிடுகிறது. இப்படி அதட்டிக் கொண்டு ஆச்சர்யத்துடன் அர்ஜுனனைப் பார்த்து பகவான் கேட்கிறார். இந்தத் தகாத சமயத்தில், அதாவது கோழைத்தனத்திற்கும், துயரத்திற்கும் ஒவ்வாத இந்த யுத்தகளத்தில் — சரியாக யுத்தம் ஆரம்பிக்கும் நேரத்தில் — பெரிய பெரிய மஹாரதிகளை எளிதாகத் தோற்கடிக்கக் கூடிய உன்னைப் போன்ற சூரவீரனுக்குக் கொஞ்சமும் இருக்கக் கூடாத இந்தக் கோழைத்தனம் எப்படி வந்தது?

கேள்வி: இந்தக் கோழைத்தனம் சான்றோர்களுக்கு உகந்ததன்று. 'அநார்யஜுஷ்டம்', 'அஸ்வர்க்யம்', 'அகீர்திகரம்' என்று கூறுவதன் கருத்து என்ன?

பதில்: தாம் ஆச்சர்யப்பட்டதை பகவான் இப்படி விளக்குகிறார். "உனக்கு இப்போது ஏற்பட்டிருக்கும் மனப்பாங்கு சான்றோர்களால் ஏற்கப்படாதது; ஸ்வர்கத்தையும் அளிக்காதது; புகழையும் தரவல்லதன்று; உனக்கு மோக்ஷமும் கிடைக்காது; தர்மமும் ஸித்திக்காது; பொருளும், போகமும் கிட்டா. புத்திசாலியான நீ இந்த நேரத்தில் இந்தக் கோழைத்தனத்தை எப்படி அடைந்தாய்?"

क्लैब्यं मा स्म गमः पार्थ नैतत्त्वय्युपपद्यते।
क्षुद्रं हृदयदौर्बल्यं त्यक्त्वोत्तिष्ठ परन्तप॥ २॥

க்லைப்3யம் மா ஸ்ம க3ம: பார்த2 நைதத்த்வய்யுபபத்3யதே ।

க்ஷுத்3ரம் ஹ்ருத3யதௌ3ர்ப3ல்யம் த்யக்த்வோத்திஷ்ட2 பரந்தப ॥ 3 ॥

பார்த2 – அர்ஜுன! **க்லைப்3யம்** – அலியின் தன்மையை, **மா ஸ்ம க3ம:** – அடையாதே. **த்வயி** – உனக்கு, **ஏதத்** – இது, **ந உபபத்3யதே** – பொருத்தமானதன்று. **பரந்தப** – பரந்தப! (எதிரிகளை வாட்டுபவனே), **க்ஷுத்3ரம்** – இழிந்த, **ஹ்ருத3ய தௌ3ர்ப3ல்யம்** – உள்ளத்தின் தளர்ச்சியை, **த்யக்த்வா** – விடுத்து, **உத்திஷ்ட2** – போருக்காக எழுந்து நில்.

'அர்ஜுன! அலியின் தன்மையை அடையாதே. உனக்கு இது பொருத்தமானதன்று. பரந்தப! (எதிரிகளை வாட்டுபவனே) இழிந்த உள்ளத்தின் தளர்ச்சியை விடுத்துப் போருக்காக எழுந்து நில்.'

கேள்வி: 'பார்த$_2$' என விளித்ததுடன், 'அலியின் தன்மையை அடையாதே. உனக்கு இது ஏற்புடையதன்று' என்று கூறுவதன் பொருள் என்ன?

பதில்: குந்திக்கு ப்ருதை என்று வேறொரு பெயர் உண்டு. குந்தி வீரத்தாய். கௌரவ-பாண்டவர்களுக்கு இடையே ஸமாதானம் செய்து வைப்பதற்காக **ஸ்ரீ**க்ருஷ்ணன் தூதனாக ஹஸ்தினாபுரம் சென்றிருந்தபோது, தம்முடைய அத்தை குந்தியைச் சந்தித்தார். அப்போது குந்திதேவி, **ஸ்ரீ**க்ருஷ்ணன் மூலமாக வீரமிக்க செய்தி சொல்லி அனுப்பினாள். அதன் மூலம் விதுலா, அவள் மகன் ஸஞ்ஜயன் இவர்களை உதாரணம் காட்டி அர்ஜுனனுக்கு யுத்தம் செய்ய உற்சாகம் ஊட்டினாள். இங்கு பகவான் அர்ஜுனனை, 'பார்த$_2$' (ப்ருதையின் மகனே) என்றழைத்து, தாயார் குந்திதேவி கூறிய க்ஷத்ரியருக்கு உசிதமான செய்தியை நினைவுறுத்தி, மேலே கூறிய இரு வாக்கியங்களின் மூலம் 'நீ வீரத்தாயின் வீரமகன்; உன் உள்ளத்தில் இந்தக் கோழைத்தனம் இருப்பது முற்றிலும் தவறு' என்று குறிப்பிடுகிறார். மாபெரும் மஹாரதிகளின் உள்ளங்களையெல்லாம் நிலைகுலையச் செய்யும் உன்னுடைய ஒப்பற்ற வீரம் எங்கே? இந்த வருந்தத்தக்க கோழைத்தனம் எங்கே? உன் உடலில் ரோமங்கள் சிலிர்க்கின்றன; உடல் நடுங்குகிறது; காண்டீவம் நழுவி விழுகிறது; மனம் துயரத்தில் ஆழ்ந்துவிட்டது; தலை சுற்றுகிறது. இத்தகைய கோழைத்தனம் உனக்கு எவ்விதத்திலும், எக்காலத்திலும் ஒவ்வாதது.

கேள்வி: 'பரந்தப' என்று அழைப்பதன் கருத்து என்ன?

பதில்: சத்ருக்களுக்குத் தாபத்தைக் கொடுப்பவன் 'பரந்தபன்'. "நீ சத்ருக்களுக்குத் தாபத்தை அளிப்பவன் என்பது ப்ரஸித்தமாயிற்றே! நிவாதகவசர் போன்ற எல்லையற்ற சக்தி பெற்ற தானவர்களை எளிதாகத் தோற்கடித்தவன் ஆயிற்றே! இன்று இப்படி உன்னுடைய க்ஷத்ரிய ஸ்வபாவத்திற்குப் புறம்பாக ஆண்மையற்றவர்களின் கோழைத்தனத்தை ஏற்றுக் கொண்டு எதிரிகளுக்கு மகிழ்ச்சியை உண்டாக்குகிறாயே!" என்கிறார் பகவான்.

கேள்வி: 'க்ஷுத்ரம்' என்ற அடைமொழியுடன் கூடிய 'ஹ்ருதயதௌர்பல்யம்' என்பதன் கருத்து என்ன? 'அதை விட்டுவிட்டு யுத்தத்திற்காக எழுந்திரு' என்று கூறுவதன் கருத்து என்ன?

பதில்: "போருக்கு அஞ்சும் கோழைகளுக்கே உரியதும், சூரர்கள் அறவே தவிர்க்க வேண்டியதுமாகிய இத்தகைய இழிந்த பலவீனம் உன்னையொத்த மாவீரனுடைய உள்ளத்தில் தலையெடுப்பது எவ்விதத்திலும் உகந்ததன்று. ஆகவே, உடனே இதை விட்டுவிட்டு யுத்தத்திற்காக நிமிர்ந்து எழுந்து நில்" என்று கூறுகிறார்.

பொருத்தம்: பகவான் இவ்வாறு கூறியதும், குருமார்களை எதிர்த்து யுத்தம் புரிவது உசிதமன்று என்று இரண்டு ச்லோகங்களில் தம் தீர்மானத்தை அர்ஜுனன் கூறுகிறார்—

अर्जुन उवाच

कथं भीष्ममहं सङ्ख्ये द्रोणं च मधुसूदन।
इषुभिः प्रति योत्स्यामि पूजार्हावरिसूदन॥ ४॥

அர்ஜுந உவாச

கத₃ம் பீ₄ஷ்மமஹம் ஸங்க்₂யே த்₃ரோணம் ச மது₄ஸூத₃ந ।
இஷுபி₄: ப்ரதி யோத்ஸ்யாமி பூஜார்ஹாவரிஸூத₃ந ॥ 4 ॥

அர்ஜுந உவாச – அர்ஜுனன் கூறினார்: **மது₄ஸூத₃ந** – மதுஸூதன! **அஹம்** – நான், **ஸங்க்₂யே** – போர்க்களத்தில், **கத₃ம்** – எவ்வாறு, **இஷுபி₄:** – அம்புகளினால், **பீ₄ஷ்மம்** – பாட்டனார் பீஷ்மரையும், **த்₃ரோணம் ச** – ஆசார்யர் த்ரோணரையும், **ப்ரதி**

யோத்ஸ்யாமி – எதிர்த்துப் போரிடுவேன்? **(யத:** – ஏனெனில்), **அரிஸூதந** – பகைவர்களை அழிப்பவனே! **(தௌ** – அவர்கள் இருவருமே), **பூஜார்ஹௌ** – பூஜிக்கத் தக்கவர்கள்.

அர்ஜுனன் கூறினார்: 'மதுஸூதன! நான் போர்க்களத்தில் எவ்வாறு அம்புகளினால் பாட்டனார் பீஷ்மரையும், ஆசார்யர் த்ரோணரையும் எதிர்த்துப் போரிடுவேன்? ஏனெனில் பகைவர்களை அழிப்பவனே! அவர்கள் இருவருமே பூஜிக்கத்தக்கவர்கள்.

கேள்வி: 'அரிஸூதந' என்றும், 'மதுஸூதந' என்றும் **ஸ்ரீ**க்ருஷ்ணனை அழைத்து 'கதம்' என்று கேட்பதன் பொருள் என்ன?

பதில்: 'மது' என்ற தைத்யனைக் கொன்றதனால் **ஸ்ரீ**க்ருஷ்ணனை மதுஸூதனன் என்பார்கள். சத்ருக்களை அழிப்பவராதலின் அரிஸூதனன் என்பார்கள். இந்த இரண்டு பெயர்களால் பகவானை விளித்து, 'கதம்' (எப்படி) என்ற சொல்லைப் பயன்படுத்தி, அர்ஜுனன் தம் ஆச்சர்ய உணர்ச்சியை வெளிப்படுத்துகிறார். "நீங்கள் பாட்டனாரான பீஷ்மருடனும், குருநாதர் த்ரோணருடனும் போர் புரியும்படி தூண்டுகிறீர்களே, அவர்கள் தைத்யர்களுமல்லர்; சத்ருக்களும் அல்லரே. மாறாக, அவர்கள் பூஜிக்கத்தக்கவர்கள். உங்கள் இயல்பான குணத்துக்கு விரோதமாக, 'இந்தப் பெரியோர்களை எதிர்த்து யுத்தம் செய்' என்று எப்படிக் கூறுகிறீர்கள்? இந்தக் கொடிய பாவத்தை நான் எப்படிச் செய்வேன்?" என்று கேட்கிறார் அர்ஜுனன்.

கேள்வி: 'இஷுபி:' என்று ஏன் கூறுகிறார்?

பதில்: 'இஷு' எனில் அம்பு. சொல்லால்கூடப் பெரியோர்களைத் துச்சமாகப் பேசுவது பாவம் என்று கூறப்படுகிறது. அவர்களின் மேல் கூரான அம்புகளை ஏவி எப்படி யுத்தம் புரிவேன்? நீங்கள் ஏன் இந்தக் கோரமான பாவச் செயலில் என்னை ஈடுபடுத்துகிறீர்கள்? – என்று அர்ஜுனன் கேட்கிறார்.

गुरूनहत्वा हि महानुभावान् श्रेयो भोक्तुं भैक्ष्यमपीह लोके।
हत्वार्थकामांस्तु गुरूनिहैव भुञ्जीय भोगान्रुधिरप्रदिग्धान्॥५॥

கு3ரூநஹத்வா ஹி மஹாநுபா4வாந்

ஸ்ரேயோ போ4க்தும் பை4க்ஷ்யமபீஹ லோகே ।

ஹத்வார்த2காமாம்ஸ்து கு3ரூநிஹைவ

பு4ஞ்ஜீய போ4கா3ந் ருதி4ரப்ரதி3க்3தா4ந் ॥ 5 ॥

மஹாநுபா4வாந் – மேன்மை பொருந்திய, **கு3ரூந்** – ஆசார்யர்களை, **அஹத்வா** – கொல்லாமல், **இஹ லோகே** – இவ்வுலகில், **பை4க்ஷ்யம் அபி** – பிச்சை எடுப்பதால் கிடைக்கும் அன்னத்தைக்கூட, **போ4க்தும்** – உண்பது, **ஸ்ரேய:** – மேன்மையைத் தரும். **ஹி** – ஏனெனில், **கு3ரூந்** – ஆசார்யர்களை, **ஹத்வா (அபி)** – கொன்றாலும், **இஹ** – இவ்வுலகில், **ருதி4ர ப்ரதி3க்3தா4ந்** – இரத்தம் கலந்த, **அர்த2 காமாந்** – செல்வம், காம்ய வஸ்துக்கள் இவற்றின் வடிவிலுள்ள, **போ4கா3ந் ஏவ து** – போகங்களைத்தான், **பு4ஞ்ஜீய** – அனுபவிக்கப் போகிறேன்.

மேன்மை பொருந்திய ஆசார்யர்களைக் கொல்வதைவிட, இவ்வுலகில் பிச்சை எடுப்பதால் கிடைக்கும் அன்னத்தைக்கூட உண்பது மேன்மையைத் தரும். ஏனெனில் ஆசார்யர்களைக் கொன்றாலும் இவ்வுலகில் இரத்தம் கலந்த செல்வம், காம்ய வஸ்துக்கள் இவற்றின் வடிவிலுள்ள போகங்களைத்தான் அனுபவிக்கப் போகிறேன்.

கேள்வி: 'மஹாநுபாவாந் குரூந்' என்று கூறுவதன் கருத்து என்ன?

பதில்: துர்யோதனனது படையில் த்ரோணாசார்யர், க்ருபாசார்யர் போன்ற அர்ஜுனனுடைய குருமார்கள், பாஹ்லீகர், பீஷ்மர், ஸோமதத்தர், பூரிஶ்ரவஸ், சல்யன் முதலிய உதார மனமுடைய பெரியோர்கள் இருக்கிறார்கள். மதிப்பிற்குரிய அவர்களுக்கு 'மஹாநுபாவாந்' என்ற அடைமொழி கொடுத்து, 'மஹாநுபாவாந் குரூந்' என்று குறிப்பிடுகிறார் அர்ஜுனன்.

கேள்வி: 'பைக்ஷ்யம் அபி' என்று கூறுவதன் கருத்து என்ன?

பதில்: க்ஷத்ரியர்கள் பிச்சை எடுக்கக் கூடாது. அதை உண்டு உடலை வளர்க்கக் கூடாது. அது நிந்திக்கத்தக்கது என்ற கட்டுப்பாடு இருந்தாலும்கூடப் பெரியோர்களைக் கொன்று ராஜ்ய போகத்தை அனுபவிப்பதைக் காட்டிலும், இந்த நிந்திக்கத்தக்க செயல்கூட நல்லதுதான் என்று அர்ஜுனன் கருதுகிறார்.

கேள்வி: 'அர்த்தகாமாந்', 'ருதிரப்ரதிக்தாந்', 'போகாந்' என்றும், இவற்றுடன் 'ஏவ' என்றும் சேர்த்துக் கூறுவதன் கருத்து என்ன?

பதில்: பெரியோர்களைக் கொல்வது என்பது முற்றிலும் முறையற்றது. அவ்வாறு அவர்களைக் கொன்றுகூட பெறப் போவது என்ன? மோக்ஷமன்று; தர்மமுமன்று. இவ்வுலகத்தில் பெறக்கூடிய செல்வமும், அற்ப காம வடிவான போகங்கள்தானே? இவற்றின் மதிப்பு பெரியோர்கள் உயிரோடு இருப்பதற்கு ஈடாகாது. அந்த போகங்கள்கூட பெரியோர்களைக் கொன்று பெறப்படுவதால், அவை ரத்தக்கறை படிந்தவை. ஆகவே, அந்த போகங்களைப் பெறுவதற்காகப் பெரியோரைக் கொல்வது ஒருபொழுதும் உசிதமன்று.

கேள்வி: 'அர்த்தகாமாந்' என்ற சொல்லை 'குரூந்' என்ற சொல்லுக்கு அடைமொழியாகக் கொண்டால் என்ன தவறு?

பதில்: 'குரூந்' என்ற சொல்லுக்கு 'மஹாநுபாவாந்' என்ற அடைமொழி கொடுக்கப்படாமலிருந்தால், 'அர்த்தகாமாந்' என்ற அடைமொழியைச் சேர்த்துக் கொள்ளலாம். ஆனால் இதே ச்லோகத்தில்தான் அவர்களை 'மேன்மை பொருந்திய ஆசார்யர்கள்' என்று அர்ஜுனன் கூறியிருக்கிறார். தொடர்ந்து, அவர்கள் 'அர்த்தகாமாந்' (பொருளில் ஆசையுள்ளவர்கள்) என்று கூறுவது எப்படிப் பொருந்தும்? இரண்டு அடைமொழிகளும் ஒன்றுக்கொன்று முரணாக அல்லவா அமையும்? ஆகவே, 'அர்த்தகாமாந்' என்ற சொல்லை, 'குரூந்' என்ற சொல்லுக்கு அடைமொழியாக ஏற்கக் கூடாது.

பொருத்தம்: இவ்விதம் தம் தீர்மானத்தை வெளியிட்ட பிறகும்கூட அர்ஜுனனுக்கு த்ருப்தி ஏற்படவில்லை. தம்முடைய தீர்மானத்தில் ஐயம் ஏற்பட்டுவிட்டது. ஆகவே மேலும் கூறுகிறார்—

न चैतद्विद्मः कतरन्नो गरीयो यद्वा जयेम यदि वा नो जयेयुः।
यानेव हत्वा न जिजीविषामस्तेऽवस्थिताः प्रमुखे धार्तराष्ट्राः॥ ६॥

न सैतद्विद्मः कतरन्नो गरीयो
यद्वा जयेम यदि वा नो जयेयुः।
यानेव हत्वा न जिजीविषामस्
तेऽवस्थिताः प्रमुखे धार्तराष्ट्राः॥ 6॥

नः – நமக்கு (போரிடுவதா, வேண்டாமா என்ற), **கதரத்** – இவ்விரண்டில் எது, **கரீயः** – சிறந்தது? **யத் வா ஜயேம** – அல்லது (நாம்) அவர்களை வெற்றி கொள்வோமா? **யதி வா** – அல்லது, **நः** – நம்மை, **ஜயேயுः** – (அவர்கள்) வென்று விடுவார்களா? **ஏதத் ச** – இதையும், **ந வித்மः** – அறியோம். **யாந்** – எவர்களை, **ஹத்வா** – கொன்று, **ந ஜிஜீவிஷாமः** – (நாம்) வாழக்கூட விரும்பவில்லையோ

(நம்மவர்களான), **தே** – அந்த, **தார்தராஷ்ட்ரா: ஏவ** – த்ருதராஷ்ட்ர குமாரர்களே, **ப்ரமுகே** – நம் முன்னே, **அவஸ்திதா:** – (நம்மை எதிர்த்து) நிற்கிறார்கள்.

போரிடுவதா, வேண்டாமா என்ற இவ்விரண்டில் நமக்கு எது சிறந்தது? அல்லது நாம் அவர்களை வெற்றி கொள்வோமா? அல்லது நம்மை அவர்கள் வென்று விடுவார்களா? இதையும் அறியோம். எவர்களைக் கொன்று நாம் வாழக்கூட விரும்பவில்லையோ நம்மவர்களான அந்த த்ருதராஷ்ட்ர குமாரர்களே நம் முன்னே நம்மை எதிர்த்து நிற்கிறார்கள்.

கேள்வி: 'யுத்தம் செய்வது சிறந்ததா, செய்யாமல் இருப்பது சிறந்ததா? இது நமக்குத் தெரியவில்லையே' என்று கூறுவதன் கருத்து என்ன?

பதில்: நாம் என்ன செய்தால் நன்மை அடைவோம் — யுத்தம் செய்வதா, யுத்தத்திலிருந்து விலகுவதா — இவ்விஷயத்தைத் தீர்மானிக்க முடியவில்லை. யுத்தம் செய்வதோ க்ஷத்ரிய தர்மம். ஆனால், அதன் பயனாக விளைவதோ குலநாசம். குலநாசம் பெரிய தோஷம் என்று கூறப்படுகிறது. என்ன செய்யலாம்?

கேள்வி: 'நாம் வெற்றி கொள்வோமா, அவர்கள் நம்மை வென்று விடுவார்களா' இந்த வாக்கியத்தின் பொருள் என்ன?

பதில்: 'யுத்தம் செய்வதே நல்லது என்று நாம் முடிவுக்கு வந்து யுத்தத்தில் இறங்கினாலும், நமக்கு வெற்றி கிடைக்குமா, அல்லது அவர்களுக்கு வெற்றி கிடைக்குமா? — என்பதும் புரியவில்லை' என்று அர்ஜுனன் நினைக்கிறார்.

கேள்வி: 'எவர்களைக் கொன்று நாம் உயிர் வாழக் கூட விரும்பவில்லையோ, நம்மவர்களான அந்த த்ருதராஷ்ட்ர புத்ரர்கள் அல்லவா எதிரே நிற்கிறார்கள்' என்று கூறுவதன் கருத்து என்ன?

பதில்: "யுத்தத்தில் நாமே ஜயிப்போம் என்று வைத்துக் கொண்டாலும்கூட, யுத்தம் செய்வது சரி என்று தோன்றவில்லை. எவர்களைக் கொன்று நாம் வாழ விரும்பவில்லையோ, அந்த நமது ஸஹோதரர்களான துர்யோதனாதியர் அல்லவா இறப்பதற்காக நம் முன்னே நிற்கிறார்கள்! ஆகவே, நாம் வெற்றி பெற்றாலும், அந்த வெற்றி இவர்களைக் கொன்றுதானே கிடைக்கும்? எனவே, நாம் எதைச் செய்தால் உசிதமாகும் என்பதை நிர்ணயிக்க முடியவில்லையே" என்று நினைக்கிறார் அர்ஜுனன்.

பொருத்தம்: செய்யவேண்டியது என்ன என்பதைத் தீர்மானிக்க முடியாத நிலையில் அர்ஜுனன் பகவானைச் சரணடைகிறார். 'நான் என்ன செய்யவேண்டும் என்பதை முடிவாகக் கூறுங்கள்' என்று கண்ணனிடம் ப்ரார்த்திக்கிறார்—

कार्पण्यदोषोपहतस्वभाव: पृच्छामि त्वां धर्मसम्मूढचेता:।
यच्छ्रेय: स्यान्निश्चितं ब्रूहि तन्मे शिष्यस्तेऽहं शाधि मां त्वां प्रपन्नम्॥ ७॥

கார்பண்யதோ³ஷோபஹதஸ்வப⁴ாவ:
ப்ருச்ச²ாமி த்வாம் த⁴ர்மஸம்மூட⁴சேதா:।
யச்ச்²ரேய: ஸ்யாந்நிஶ்சிதம் ப்³ரூஹி தந்மே
ஶிஷ்யஸ்தேऽஹம் ஶாதி⁴ மாம் த்வாம் ப்ரபந்நம் ॥ 7 ॥

கார்பண்ய தோ³ஷ உபஹத ஸ்வப⁴ாவ: – கோழைத்தனத்தினால் சீரழிந்த ஸ்வபாவம் கொண்டவனும், **த⁴ர்ம ஸம்மூட⁴ சேதா:** – தர்ம விஷயத்தில் குழம்பிய மனமுடையவனுமான (நான்), **த்வாம்** – உங்களிடம், **ப்ருச்ச²ாமி** – கேட்கிறேன். (கேட்பதென்னவென்றால்),

யத் – எந்த (ஸாதனை), **நிஶ்சிதம்** – உறுதியாக, **ஶ்ரேய: ஸ்யாத்** – மேன்மை பயக்கக் கூடுமோ, **தத்** – அதை, **மே** – எனக்கு, **ப்₃ரூஹி** – கூறுங்கள். (ஏனெனில்), **அஹம்** – நான், **தே** – உங்களுடைய, **ஶிஷ்ய:** – சீடன். (ஆகவே), **த்வாம்** – உங்களை, **ப்ரபந்நம்** – சரணடைந்த, **மாம்** – எனக்கு, **ஶாதி₄** – அறிவுரை கூறுங்கள்.

கோழைத்தனத்தினால் சீரழிந்த ஸ்வபாவம் கொண்டவனும் தர்ம விஷயத்தில் குழம்பிய மனதுடையவனுமான நான் உங்களிடம் கேட்பதென்னவென்றால் எந்த ஸாதனை உறுதியாக மேன்மை பயக்கக்கூடுமோ அதை எனக்குக் கூறுங்கள். நான் உங்களுடைய சீடன். ஆகவே உங்களைச் சரணடைந்த எனக்கு அறிவுரை கூறுங்கள்.

கேள்வி: கார்பண்யதோஷம் என்றால் என்ன? 'உபஹதஸ்வபாவ:' என்றால் என்ன?

பதில்: 'க்ருபண' என்ற சொல்லுக்குப் பல பொருள்கள் உண்டு.

(1) போதுமான செல்வ வசதி படைத்த ஒருவன் செல்வத்தில் மிகுந்த பற்றுக் கொண்டு பேராசையுடன் தானமளிக்கும் போதும், தானே ஸுகபோகங்களை அனுபவிக்கும்போதும் ந்யாயமாகச் செலவழிக்க மனமில்லாமல் ஒரு காசுகூடச் செலவழிப்பதில்லையோ, அந்தக் கருமியை க்ருபணன் என்பார்கள்.

(2) மனித வாழ்க்கையில் சாஸ்த்ர ஸம்மதமான — நல்லோர், பெரியோர்கள் ஏற்றுக் கொண்ட முக்யமான லக்ஷ்யம் — 'பகவானுடைய தத்வம் அறிந்து, அவரை அடைய முயற்சி செய்வது' என்பது. இந்த லக்ஷ்யத்தை மறந்து உலக ஸுகபோகங்களில் தன் வாழ்வை வீணடிக்கும் அறிவிலியை க்ருபணன் என்று சொல்வது உண்டு.

ப்ருஹதாரண்யக உபநிஷத் *3/8/10*ல் கூறப்படுகிறது—

யோ வா ஏதத₃க்ஷரம் க₃ார்க்₃யவிதி₃த்வாऽஸ்மால்லோகாத்ப்ரைதி ஸ க்ருபண: ।

"கார்கி! இந்த அழிவற்ற பரமாத்மாவை அறிந்து கொள்ளாமல் இவ்வுலகிலிருந்து இறந்து மறைபவன் க்ருபணன்."

போகத்திலும், அதற்கு வேண்டிய செல்வத்திலும், அதன் பயனிலும் ஈடுபாடுள்ளவர்களை 'க்ருபணன்' என்று பகவானும் கூறுகிறார் ('க்ருபணா: ப₂லஹேதவ:' *2/49*).

(3) ஸாதாரணமாக இரங்கத்தக்க நிலையில் உள்ளவனையும் 'க்ருபணன்' என்று கூறுவது உண்டு. ஆனால் அர்ஜுனனிடம் காணப்படும் க்ருபணத்தன்மை கருமித்தனமுமன்று, போகப் பற்றுமன்று. ஏனெனில், அர்ஜுனன் இயல்பாகவே மிகவும் உதார மனமுடையவர்; வாரி வாரிக் கொடுப்பவர்; புலன்களை அடக்கியவர். இங்கு "நான் எனக்காக வெற்றியையோ, அரசையோ, ஸுகபோகங்களையோ விரும்பவில்லை. யாருக்கு இவை வேண்டுமோ, அவர்கள் அனைவரும் நம் பந்துக்கள். அவர்கள் இங்கே யுத்தத்தில் உயிரை விடுவதற்குத் தயாராக வந்திருக்கிறார்களே. இந்த பூமி என்ன? மூவுலக அரசு கிடைப்பதாக இருந்தாலும் அதற்காக துர்யோதனாதியரை மாய்க்க விரும்பமாட்டேன்" *(1/32-35)* என்று வெளிப்படையாகக் கூறிவிட்டார். 'ஸமஸ்த பூமண்டலங்களின் அரசு பகையின்றிக் கிடைத்தாலும், தேவர்களுக்கே அதிபதியாக நான் ஆனாலும், என்னைத் துயரற்றவனாக ஆக்க முடியாது' *(2/8)* என்றும் கூறிவிட்டார். இவ்வளவு த்யாகம் செய்யத் தயாராகிவிட்டவர் கருமி அல்லர். போகப் பற்று உடையவரும் அல்லர். மேலும் இப்படிப் பொருள் கொள்வது இந்த ஸந்தர்பத்திற்குப் பொருந்தாது.

அர்ஜுனனுக்கு ஏற்பட்டிருக்கும் க்ருபணத்தனம் ஒருவிதமான இழிந்த நிலைதான். அது கருணையுடன் கூடிய கோழைத்தன வடிவிலும், சோக வடிவிலும் வெளிப்படுகிறது. ஸஞ்ஜயன் முதலாவது ச்லோகத்திலேயே, 'கருணைக்கு ஆட்பட்டு' என்று கூறி, இந்தக் கோழைத்தனத்தைச் சுட்டிக்காட்டி விட்டார். மூன்றாவது ச்லோகத்தில் பகவானும் 'அலித்தனம்' என்று கூறி இந்தக் கருத்தையே வலுப்படுத்தியிருக்கிறார். ஆகவே, இங்கு அர்ஜுனனுக்கு ஏற்பட்டிருக்கும் க்ருபணத்தனமென்பது உறவினர்களின்

அழிவு வருமே என்ற கருணையோடு கூடிய கோழைத்தனம்தான் என்பது நன்றாகப் புலப்படுகிறது.

அர்ஜுனன் ஒரு லக்ஷ்ய க்ஷத்ரியன். இயற்கையாகவே சூரன், வீரன். அவருக்குக் கோழைத்தனம் கிடையாது. எப்படியோ இப்பொழுது தாழ்வு மனநிலை உண்டாகிவிட்டது என்பதைத்தான் 'கோழைத்தனம்' என்ற தோஷம் அவர் இயல்பைத் தாக்கிவிட்டது என்கிறார்.

இந்த க்ருபணத்தனம் என்ற தோஷத்தினால் அவருடைய ஒப்பற்ற சூரத்தனம், வீரத்தனம், தைர்யம், சாதுர்யம், ஸாஹஸம், பராக்ரமம் முதலிய க்ஷத்ரிய இயல்புகள் அழிந்துவிட்டன போல ஆகிவிட்டன. அதனால்தான் அவர் அங்கங்கள் வெலவெலத்து விட்டன; வாய் உலர்ந்துவிட்டது; உடலில் எரிச்சலும், நடுக்கமும் ஏற்பட்டுவிட்டன; மனம் குழம்பிவிட்டது. கருணையுடன் கூடிய கோழைத்தனம் சூழ்ந்ததாலே அர்ஜுனன் தம்மிடம் இயற்கைக்கு விரோதமான இந்தக் குறிகளைக் கண்டு, 'க்ருபணத்தனத்தினால் என் இயல்பு பாதிக்கப்பட்டுவிட்டது' என்று கூறுகிறார்.

கேள்வி: 'தர்மஸம்மூடசேதா:' என்று தம்மைப் பற்றி அர்ஜுனன் ஏன் கூறிக் கொள்கிறார்?

பதில்: தர்மம் எது? அதர்மம் எது? செய்யவேண்டியது என்ன? செய்யத்தகாதது என்ன? இவற்றைப் பற்றிச் சரியான முடிவு செய்ய முடியாமல் தம் உள்ளம் மயங்குகிறது என்று கூறுகிறார் அர்ஜுனன். அர்ஜுனனுடைய உள்ளம் தற்போது பெரிய தர்ம ஸங்கடத்தில் ஆழ்ந்துவிட்டது. ஒருபுறம் குடிமக்களைக் காப்பது, சொத்துக்களைக் காப்பது என்ற நோக்கில் யுத்தம் செய்வது க்ஷத்ரிய தர்மம்தான். அதில் ஈடுபட வேண்டியது உசிதம்தான் என்றும் நினைக்கிறார். மறுபுறம் அவருடைய உள்ளத்தில் ஏற்பட்டிருக்கும் க்ருபணத்தன்மை யுத்தத்தின் பலவித பயங்கர விளைவுகளைக் காட்டி, பிச்சை எடுக்கலாமா, ஸந்யாஸம் கொள்ளலாமா, காட்டுக்கு ஓடிவிடலாமா என்றெல்லாம் நினைக்க வைக்கிறது. மனதிலே உள்ள அளவற்ற கருணை, புத்தியை ஒருவிதத் தீர்மானத்தையும் செய்யவிடாது, என்ன செய்வது என்று தீர்மானிக்க முடியாமல் திகைக்க வைக்கிறது.

கேள்வி: 'நிஶ்சிதம் ஶ்ரேய:' என்பதற்கு என்ன பொருள்?

பதில்: கௌரவர் தரப்புப் படையை பீஷ்மர், த்ரோணர், கர்ணன் போன்ற உலகப் புகழ்பெற்ற – வெல்ல முடியாத சூரவீரர்கள் கட்டிக் காக்கிறார்களே. தமது படையைக் காட்டிலும் எதிரிப்படை அளவில் பெரியதாயிற்றே. அதைக் கண்டு அர்ஜுனன் பயந்திருக்கலாம் என்றோ, போரில் தமக்கு வெற்றி கிடைக்காது என்று அர்ஜுனனுக்கு நிராசை ஏற்பட்டுவிட்டது என்றோ, தமக்கு யுத்தம் செய்தால் நன்மையா, செய்யாவிட்டால் நன்மையா என்றெல்லாம் யோசித்து இங்கு எது ச்ரேயஸ் (நன்மை) என்றும், தமது வெற்றி–தோல்விகளில் எது நிச்சயம் என்றும் அர்ஜுனன் பகவானிடம் கேட்கிறார் என்றோ இப்படி எவ்விதமும் சொல்வதற்கு இங்கே இடமில்லை. இந்நிலையில் அவருடைய உள்ளத்தில் பந்தபாசம் விழித்துக் கொண்டுவிட்டது. பந்துக்கள் அழிந்துவிடுவார்களே! பெரிய பாவம் ஏற்படுமே! இது நம்முடைய நன்மைக்குக் குந்தகம் ஆயிற்றே என்ற கலக்கம் ஒருபுறம். க்ஷத்ரியனுக்குரிய தர்மமான யுத்தத்தை த்யாகம் செய்யலாமா? அது அதர்மம் ஆகிவிடுமோ? அது என் மேன்மைக்கு ஊறு ஆகுமோ என்ற ஐயம் மறுபுறம். அதனால்தான் நிச்சயமான ச்ரேயஸ் என்ன என்று கேட்கிறார். இந்தக் கேள்வி வெற்றி–தோல்வியைப் பற்றியதன்று. அவருடைய லக்ஷ்யம் பகவானை அடைவது என்பதுதான். 'பகவானே! என்ன செய்ய வேண்டுமென்பதை என்னால் தீர்மானிக்க முடியவில்லை. நீங்களே தீர்மானித்துக் கூறுங்கள். எனக்கு உயர்ந்த ச்ரேயஸுக்கான ஸாதனம் எது?' என்று அர்ஜுனன் கேட்கிறார்.

கேள்வி: 'நான் உங்கள் சீடன். ஶரணமடைந்த எனக்கு புத்திமதி கூறுங்கள்' என்று கூறுவதன் கருத்து என்ன?

பதில்: அர்ஜுனன் பகவானுடைய ப்ரியமான நண்பர். ஆத்ம தத்வ விஷயமான பேச்சு வேறு. ஆனால் நடைமுறையில் அர்ஜுனனுக்கும், பகவானுக்கும் உள்ள பழக்கம் எல்லா

இடங்களிலும் ஸமானமானவர்களிடையே உள்ளது போன்றதாகும். உண்பது, அருந்துவது, உறங்குவது, போவது, வருவது எதிலும் பகவான் அவருடன் ஸமமாகத்தான் பழகுகிறார். பகவான் உயர்ந்தவர் என்று மனதில் நம்பிக்கையும், மரியாதையும் இருந்தாலும் அர்ஜுனன் பகவானுடன் ஸமமாகத்தான் பழகுகிறார். இன்று அர்ஜுனனுக்குத் தமது வருந்தத்தக்க நிலையை நினைத்துப் பார்த்தவுடன் பகவானை ஸமமாக நினைப்பதற்கான தகுதி தமக்கு இல்லை என்ற அனுபவம் ஏற்படுகிறது. ஸமமாகப் பழகினால் ஆலோசனை கிடைக்கலாம்; உபதேசம் கிடைக்காது. தூண்டுதல் பெறலாம்; 'இப்படிச் செய்' என்ற ஆணை கிடைக்காது. "எனக்கு அறிவுரையோ, தூண்டுதலோ போதாது. எனக்கு ஒரு குரு வேண்டும். அவர் உபதேசம் எனக்கு வேண்டும். அவர் 'இப்படிச் செய்' என்று ஆணையிட வேண்டும். 'இதுதான் உனக்கு ச்ரேயஸ்' என்று வழிகாட்டுபவர் வேண்டும். என்னுடைய சோக, மோஹங்களைக் களைந்து பரம மங்களமான நிலையை அடையச் செய்யவேண்டும். ஸ்ரீக்ருஷ்ணனைக் காட்டிலும் சிறந்த குருநாதர் எங்கே கிடைப்பார்? ஆனால், குருநாதன் உபதேசரூபமான அமுதமழை, சிஷ்யன் என்ற வயலில்தானே பொழியும்" என்று நினைக்கிறார். ஆகவே அர்ஜுனன் 'பகவானே! நான் உங்கள் சீடன்' என்று கூறுகிறார்.

சீடர்கள் பலவிதம். தன் குருவிடம் உபதேசமும் பெற்றுக் கொண்டு தன் திறமையில் செருக்குக் கொள்பவனுக்கோ, குருவைத் தவிர மற்றொருவரிடம் விசுவாஸம் கொள்பவனுக்கோ குரு க்ருபையின் உண்மையான லாபம் கிடைக்காது. இங்கு அர்ஜுனன், 'நான் உங்கள் சீடன்' என்று கூறுவதுடன் நிறுத்திக் கொள்ளவில்லை. 'வேறு புகல் எனக்குக் கிடையாது' என்ற மனதிடத்துடன் கூறுகிறார்: 'பகவானே! நான் உங்களுக்கு சிஷ்யன் மட்டுமல்ல. உங்களைச் சரணடைகிறேன்.' 'ப்ரபந்ந' என்று கூறுவதற்குப் பொருள் இதுதான். பகவான் எவ்விதத்திலும் உயர்ந்தவர், சக்தி படைத்தவர் என்று உணர்ந்து, அவரிடம் தன்னை முழுமையாக ஸமர்ப்பித்துக் கொள்வதைத்தான் 'ஶரணாகதி' என்றும், 'ஆத்மநிக்ஷேபம்' என்றும், 'ஆத்மஸமர்ப்பணம்' என்றும் கூறுவர். ஸர்வ வல்லமை படைத்தவர்; அனைத்துமறிந்தவர்; அனைவரது உள்ளத்திலும் உறைபவர்; அளவற்ற நற்குணங்களின் கரையற்ற கடல்; எல்லாவற்றிற்கும் அதிபதி; ஐசுவர்யம், இனிமை, தர்மம், சூரத்தனம், ஞானம், வைராக்யம் முதலியவற்றின் கொள்கலன்; க்லேசம், கர்மம், ஸந்தேஹம், கலக்கம் இவற்றை அழிப்பவர்; மிகவும் ப்ரேமை உடையவர்; உற்ற நண்பர்; நம்முடையவர்; குருநாதன்; பரமேசுவரன் என்று பகவானை நம்ப வேண்டும். தனக்குப் புகலிடமில்லை; பிடித்துக் கொள்பவர் இல்லை; தனக்கு புத்தி இல்லை; பலமில்லை; திண்மை இல்லை என்று தன்னைப் பற்றி நினைக்க வேண்டும். பகவானையே தாங்குபவராகவும், பிடிப்பாகவும், ஞானம், சக்தி, திண்மை, ஶரணாகதனிடம் ஒப்பற்ற அன்பு முதலியன உடையவராகவும், திடமாக வேறொன்றும் வேண்டாம் என்று பொறுப்பை ஒப்புவித்துத் தம்மை எப்பொழுதுமே அவருடைய திருவடிகளில் கிடத்திவிடுவது, கண்கொட்டாமல் அவருடைய அழகான நிலவு போன்ற முகத்தை தர்சனம் செய்வது, பொம்மலாட்டப் பொம்மைபோல எப்பொழுதும் அவர் ஆட்டுவித்தபடி ஆடுவது, அவரையே இடையறாது நினைத்துக் கொண்டிருப்பது – இவைதான் ப்ரபன்னன் ஆவது என்பது. பகவானிடம் இப்படி ப்ரபன்னன் ஆகிவிடுவோம் என்று அர்ஜுனன் விரும்புகிறார். இந்த பாவனையில் மூழ்கி அவர் கூறுகிறார்: 'பகவானே! நான் உங்கள் சீடன். உங்களைச் சரணடைந்தேன். எனக்கு புத்திமதி கூறுங்கள்.' 'தே' (உங்களுடைய), 'த்வாம்' (உங்களை) என்ற சொற்களைப் பயன்படுத்தி இதையே கூறுகிறார். எல்லாவற்றிலும் உயர்ந்த உண்மையான ஶரணாகதி என்ற பாவனை, 18/65, 18/66களில் பகவானுடைய மிகுந்த ரஹஸ்யமான உபதேசத்தின் விளைவாக ஏற்படப் போகிறது. அர்ஜுனன் அங்கே கூறுகிறபடி, 'நீங்கள் கூறியபடி கேட்கிறேன்' என்று சொல்வதுடன் கீதா உபதேசம் நிறைவு பெறுகிறது. உண்மையில் இந்த ச்லோகத்திலிருந்துதான் (2/7) கீதையின் ஸாதனை ஆரம்பம் ஆகிறது. உபதேசத்திற்கு இதுவே வித்து. 'ஸர்வதர்மாந் பரித்யஜ்ய' (18/66) என்ற ச்லோகம் இந்த ஸாதனைகள் முற்றிலும் ஸித்தியடையும் இடம்; அதுவே முடிவு.

பொருத்தம்: புத்திமதி கூறுங்கள் என்று ப்ரார்த்தனை செய்த அர்ஜுனன் இப்படி ப்ரார்த்தனை செய்ய நேர்ந்ததற்குக் காரணமான தம் மனநிலையை வெளிப்படுத்துகிறார்—

न हि प्रपश्यामि ममापनुद्याद् यच्छोकमुच्छोषणमिन्द्रियाणाम् ।
अवाप्य भूमावसपत्नमृद्धं राज्यं सुराणामपि चाधिपत्यम्॥ ८॥

ந ஹி ப்ரபஶ்யாமி மமாபநுத்₃யாத்₃
யச்சோ₂கமுச்சோ₂ஷணமிந்த்₃ரியாணாம் ।
அவாப்ய பூ₄மாவஸபத்நம்ருத்₃த₄ம்
ராஜ்யம் ஸுராணாமபி சாதி₄பத்யம் ॥ 8 ॥

ஹி – ஏனெனில், **பூ₄மௌ** – பூவுலகில், **அஸபத்நம்** – எதிரிகளற்ற, **ருத்₃த₄ம்** – தனதான்யங்கள் நிறைந்த, **ராஜ்யம் ச** – ராஜ்யத்தையும், **ஸுராணாம்** – தேவர்களுக்கு, **ஆதி₄பத்யம்** – அதிபதியாக இருப்பதையும், **அவாப்ய அபி** – அடைந்தாலும்கூட, **யத்** – எது, **மம** – என்னுடைய, **இந்த்₃ரியாணாம்** – புலன்களை, **உச்சோ₂ஷணம்** – வாட வைக்கின்ற, **ஶோகம்** – சோகத்தை, **அபநுத்₃யாத்** – போக்கடிக்குமோ, **(தத்** – அதை), **ந ப்ரபஶ்யாமி** – (நான்) காணவில்லை.

ஏனெனில் பூவுலகில் எதிரிகளற்ற தனதான்யங்கள் நிறைந்த ராஜ்யத்தையும், தேவர்களுக்கு அதிபதியாக இருப்பதையும் அடைந்தாலும்கூட எது என்னுடைய புலன்களை வாட வைக்கின்ற சோகத்தைப் போக்கடிக்குமோ அதை நான் காணவில்லை.'

கேள்வி: அர்ஜுனன் இந்த ச்லோகத்தில் என்ன கூறுகிறார்?

பதில்: முன் ச்லோகத்தில் அர்ஜுனன் 'புத்திமதி கூறுங்கள்' என்றார். "நீங்கள் முதலில், 'யுத்தம் செய்வாயாக' என்று கூறினீர்கள். அந்த யுத்தத்தினால் அதிக பட்சமாகக் கிடைக்கக் கூடியது வெற்றிதானே? அது கிடைத்தால் எதிரிகளின்றி அரசாளலாம். மேலும் ஆலோசித்துப் பார்த்ததில் தேவர்களின் ஆதிபத்யம் கிட்டினாலும்கூட என் புலன்களை வாட்டி வதைக்கும் சோகத்தை அது அழிக்கவல்லது அன்று என்று தெரிகிறது. ஆகவே, எனக்கு நிச்சயமான ஒரு உபாயம் கூறுங்கள். என்னுடைய புலன்களை வாட்டுகின்ற சோகத்தை விலக்கி, நான் எப்போதும் ஸுகமாக இருக்க வழி கூறுங்கள்" என்று அர்ஜுனன் கேட்கிறார்.

பொருத்தம்: இதற்குப் பிறகு அர்ஜுனன் என்ன செய்தார் என்பதை இனி ஸஞ்ஜயன் கூறுகிறார்—

सञ्जय उवाच
एवमुक्त्वा हृषीकेशं गुडाकेशः परन्तप।
न योत्स्य इति गोविन्दमुक्त्वा तूष्णीं बभूव ह॥ ९॥

ஸஞ்ஜய உவாச
ஏவமுக்த்வா ஹ்ருஷீகேஶம் கு₃ட₃ாகேஶ: பரந்தப ।
ந யோத்ஸ்ய இதி கோ₃விந்த₃முக்த்வா தூஷ்ணீம் ப₃பூ₄வ ஹ ॥ 9 ॥

ஸஞ்ஜய உவாச – ஸஞ்ஜயன் கூறினார்: **பரந்தப** – அரசே! **கு₃ட₃ாகேஶ:** – உறக்கத்தை வென்ற அர்ஜுனன், **ஹ்ருஷீகேஶம்** – அந்தர்யாமியான ஸ்ரீக்ருஷ்ண பரமாத்மாவிடம், **ஏவம்** – இவ்வாறு, **உக்த்வா** – கூறிவிட்டு (பின்), **கோ₃விந்த₃ம்** – ஸ்ரீகோவிந்தனிடம், **ந யோத்ஸ்யே** – போர்புரிய மாட்டேன், **இதி** – என்று, **ஹ** – தெளிவாக, **உக்த்வா** – கூறி, **தூஷ்ணீம்** – மௌனமாக, **ப₃பூ₄வ** – ஆகிவிட்டார்.